341

ாடத்திட்டம் - 2016

# தமிழ்மொழியும் இலக்கியமும்

## தரம் 7

பாட அலகுகளுக்கான விளக்கம், பயிற்சிகள், மொழித்திறன் வழிகாட்டி, மொழிவளம்.

கீதா கணேஷ் B.A (Hons)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Class No: 894.811
Acc No 3491

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

LENDING
ARASADY PUBLIC LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய பாடத்திட்டம் 2016

# தமிழ் மொழியும் இலக்கியமும்

# தரம் 7

**பாட அலகு விளக்கங்களுடன்**

**பயிற்சிகள் விடைகளுடன்**

**மொழித்திறன் வழிகாட்டி**

**மொழிவளம்**

Class No: 894.811
Acc No: 341

**கீதா கணேஷ்** B.A (Hons)

Arasady Public Library
Municipal Council.
Batticaloa.

விற்பனையாளர்:
லங்கா புத்தகசாலை (தனியார்) வரையறுக்கப்பட்டது
F.L.I. 14, டயஸ் பிளேஸ்,
குணசிங்கபுர,
கொழும்பு - 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் பதிப்பு விபரம்

நூலின் பெயர்: தமிழ்மொழியும் இலக்கியமும்

ஆசிரியர்: கீதா கணேஷ்

பதிப்புரிமை © : நூலாசிரியருக்கு

வெளியீடு: லங்கா புத்தகசாலை (தனியார்)
வரையறுக்கப்பட்டது
F.L.I. 14, டயஸ் பிளேஸ்,
குணசிங்கபுர, கொழும்பு - 12
தொ.பே: 0112341942

முதற்பதிப்பு: தை 2016

பக்கங்கள் : iv + 262



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

**அன்பு மாணவர்களே,**

**வணக்கம்**

தமிழ்மொழியும் இலக்கியமும் வழிகாட்டி நூல் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி. எமது தாய்மொழி ஆழங்காண முடியாதது. இது அமுதம் போன்ற இனிய மொழி. இதை ஒரு பயிற்சி நூலில் படித்து நிறைவு காண முடியாது. எனினும் தமிழ்க் கடலில் நீந்துவதற்கு சிறந்த ஆரம்பம், தேடல் என்பன அவசியமாகின்றன. அதற்கான வழிகாட்டியாக இந்நூல் அமையப்பெற்றுள்ளது.

உங்கள் தேடலுக்கு உதவும் வகையிலும் ஆசிரியர்கள் தம் கற்பித்தலுக்கு பயன்படுத்தக்கூடிய வகையிலும் பாட அலகுகளுக்கான விளக்கங்கள், மொழித்திறன் விருத்திசார் வழிகாட்டல்கள், மொழிவளம் என்பனவும் இணைக்கப் பட்டுள்ளன. இது உங்களின் தமிழ் ஆர்வத்தை மேலும் வலுப்படுத்துவதாக அமையும் என்பதில் ஐயமில்லை. இந்நூலாக்கத்திற்கு உதவிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் இந்நூலினை வெளியிட்டு வைக்கும் லங்கா புத்தகசாலை நிறுவனத்தினருக்கும் என்றும் என் நன்றிகள் உரித்து.

**- நூலாசிரியர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தாய் வாழ்த்து

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக்கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமதில்
தக்க சிறு பிறைநுதலும் தரித்தநறும் திலகமுமே
தெக்கணமும் அதில் சிறந்த திராவிடநற் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெரும் தமிழணங்கே!

பல் உயிரும் பல உலகும் படைத்து அளித்துடைக்கினும் ஓர்
எல்லை அறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதிரத்து எழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக்கு அழிந்து சிதையா உன்
சீர் இளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துவமே!

*மனோன்மணியம்*

*பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வானமளந்த தனைத்து மளந்திடும்
வண் மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினும் தண்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்க தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வான மறிந்த தனைத்து மறிந்து
வளர் மொழி வாழியவே!

– மகாகவி சுப்பிரமணிய பாரதியார் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| பாடம் | | பக்கம் |
|---|---|---|
| 1) | அந்தரே கதைகள் | 1 - 10 |
| 2) | ஆறு | 11 - 19 |
| 3) | கடமை | 20 - 28 |
| 4) | காட்டு விலங்குகளைக் காப்போம் | 29 - 37 |
| 5) | யாம் ஜவேம் | 38 - 45 |
| 6) | காந்தியடிகள் கடிதம் | 46 - 52 |
| 7) | தமிழ்த் தட்டச்சின் தந்தை | 53 - 62 |
| 8) | செந்தமிழ் போற்றிய சேரன் | 63 - 70 |
| 9) | சிலேடை | 71 - 75 |
| 10) | பென்சிலின் கதை | 76 - 85 |
| 11) | உயிர்காக்கப் பயிர்காப்போம் | 86 - 93 |
| 12) | ஈசன் உவக்கும் இன்மலர் | 94 - 98 |
| 13) | கடலும் கிணறும் | 99 - 103 |
| 14) | கருங்காற் குறிஞ்சி | 104 - 110 |
| 15) | படைப்பின் இரகசியம் | 111 - 127 |
| 16) | பொய் சொல்லாதே | 118 - 122 |
| 17) | வீழ்ந்த ஆலமரம் | 123 - 128 |
| 18) | பிள்ளை அழுத கண்ணீர் | 129 - 135 |
| 19) | வெண்ணிலாவே | 136 - 141 |
| 20) | ஒழுக்கமுடைமை | 142 - 146 |
| 21) | புதிய ஆத்திசூடி | 147 - 151 |
| | ஆத்திசூடி (ஔவையார் பாடியது) | 152 |
| | மொழித்திறன் விருத்தி | 153 - 174 |
| | மொழி வளம் | 175 - 234 |
| | விடைகள் | 235 - 262 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. அந்தரே கதைகள்

❖ அந்தரே கதைகள், அந்தரே என்ற நாடோடியின் கதைகளைக் கூறுகின்றன.

❖ அந்தரேயின் கதைகள் சிங்கள மொழியில் எழுதப்பட்டுள்ளன.

❖ அந்தரேயின் கதைகளை எச்.எம்.பி மொஹிதீன் தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.

❖ நாடோடிக் கதைகள் என்பது நாட்டுப்புற மக்களால் வாய்மொழியாக வழங்கப்பட்டும் வரும் கதைகளாகும்.

❖ நாடோடிக்கதைகள் ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு வகை -யில் வழங்கப்பட்டு வருகின்றன.

❖ நாடோடிக்கதைகள் வாய்மொழிக் கதைகள் எனவும் அழைக்கப்படுகின்றன.

❖ நாடோடிக் கதைகளில் தமிழ்நாட்டில் தென்னாலிராமனும், சீன நாட்டில் நஸ்ரூதீன் அவந்தியும், ருஷ்யநாட்டில் புருட்கோவும் புகழ்பெற்றவர்கள்.

❖ அந்தரேயின் மூன்று கதைகள் தரப்பட்டுள்ளன.

1. இரண்டும் மூன்றும்
2. மாட்டைப் போல்
3. சீனிரொட்டியும் அந்தரேயும்

## 1. இரண்டும் மூன்றும்

❖ அந்தரே சிறுவயதிலேயே புத்திசாலித்தனம் மிகுந்தவன்.

❖ தன் தந்தையை புத்திசாதுரியத்தால் வெல்ல நினைத்து கணி -தத்தில் கேள்வி கேட்டான்.

❖ அந்தரே கேட்ட வினா:-

இரண்டு பணியாரங்களைத் தன் இரு கைகளிலும் வைத்துக் கொண்டு, "அப்பா, என் கைகளில் இப்போது மூன்று பணி -யாரங்கள் உள்ளன. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ அந்தரேயின் கேலியைப் புரிந்த தந்தை, "நீ மூன்று பணியாரங்-கள் என்பதை நிரூபிக்க வேண்டும்" எனக் கேட்டார்.

❖ அந்தரே மூன்று பணியாரங்களை நிரூபித்துக் காட்டினான்.
பணியாரம் ஒன்று
பணியாரம் இரண்டு ஒன்றும் இரண்டும் மூன்று பணியாரம் எனக் கூறிச் சிரித்தான்.

❖ மகனின் சாமர்த்தியத்தை எண்ணிய தந்தை பின்வருமாறு கூறினார்.

"உனது கையில் மூன்று பணியாரங்கள் தான் உள்ளன. நான், நீ, உன் அம்மா மூவரும் இதைப் பகிர்ந்து உண்போம்" எனக் கூறினார்.

"இது உன் அம்மாவுக்கு, இது எனக்கு, மூன்றாவது பணியாரத்தை நீ உண்" எனக் கூறினார்.

❖ அந்தரே எதுவும் கூறமுடியாது தலைகுனிந்து நின்றான்.

## 2. மாட்டைப் போல்

❖ சிறுவயதில் அந்தரே துடிப்புள்ள சிறுவனாக இருந்தான்.

❖ அயல் வீட்டினரின் திருமண வைபவத்திற்கு அந்தரேயின் குடும்பத்தவரும் அழைக்கப்பட்டிருந்தனர்.

❖ அந்தரேயை அழைத்துச் செல்லமுன் அவனது தாயார் அறி-வுரை கூறினார்.

❖ "திருமணவீட்டில் மாடு போல் வாய் திறக்காமல் அமைதியாக இருக்க வேண்டும்" எனக் கூறினார்.

❖ அந்தரே, "நல்லது அப்படியே இருக்கிறேன்" என்றான்.

❖ திருமண விருந்தின் பின் கூடியிருந்த அனைவரும் ஒவ்வொரு-வராகக் கதை கூறினர்.

❖ அந்தரே தாயின் சொல்லை மீறமுடியாது அமைதியாக இருந்-தான். எனினும் இதனால் அவன் வேறொரு உத்தியைக் கை-யாண்டு மாடு போல் நிற்கலானான்.

❖ மாடு போல் நடந்தான். பின் அருகில் இருந்தவர்களை முட்டி-னான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ அந்தரேயின் செயலால் கோபமுற்ற தாய், "என்ன செய்கி -றாய்?" எனக் கேட்க, "நீதான் மாடுபோல் இருக்க வேண்டும் என்று கூறினாய்" எனப் பதிலளித்துச் சிரித்தான்.

❖ உடனே, அவன் பதிலுக்கேற்றபடி, "பொல்லாத்தனம் செய் -யும் மாட்டைக் கட்டவேண்டும்" எனக்கூறி அவனை நெருங்கினாள்.

❖ அந்தரே பயத்தினால் எழுந்து ஒழுக்கமாக அமர்ந்தான்.

## 3. சீனி ரொட்டியும் அந்தரேயும்

❖ அந்தரேயின் தாய் சீனி ரொட்டி செய்து மேஜை மேல் வைத்து வேலையாக பக்கத்துக் கிராமத்திற்குச் சென்றாள்.

❖ சீனி ரொட்டிகளைக் கண்ட அந்தரே மேஜை மேல் ஏறி ஒரு பகுதி ரொட்டியைச் சாப்பிட்டான்.

❖ இரவு உணவு முடிந்த பின் தாயார் மேலதிகமாக உண்பதற்கு ரொட்டித் தட்டைத் திறந்தபோது ஒரு பகுதி ரொட்டி குறைந் -திருந்தது.

❖ அந்தரேயில் சந்தேகப்பட்டு அவனிடம் கேட்டாள்.

❖ அந்தரே, "பசியோடிருந்த ஒரு பிள்ளைக்குப் பயன்படச் செய் -தேன்" எனக் கூறினான்.

❖ மகனின் பிறர்க்குதவும் மனப்பாங்கைப் பாராட்டிய அவனின் தாய் பசியோடிருந்த பிள்ளை யாரடா? எனக் கேட்டாள்.

❖ அந்தரே மிகுந்த மகிழ்ச்சியுடன், அந்தப்பிள்ளை நானேதான் எனக் கூறி வீட்டிலிருந்து நழுவினான்.

## ♦ அந்தரேயின் குணப்பண்புகள்

❖ அந்தரே மிகுந்த புத்திசாதுரியம் கொண்டவன்.

❖ குறும்புத் தனங்கள் நிறைந்தவன்.

❖ இவன் பொய் கூறாத நற்பண்பு கொண்டவன்.

தாயார் சீனிரொட்டி எங்கே எனக் கேட்டபோது, பசியோடி -ருந்த பிள்ளைக்குப் பயன்படச் செய்ததாகக் கூறினான். அப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-போது "நானே தான்" எனப் பதில் கூறியமை அவனது உண்மை கூறும் நற்பழக்கத்தை எடுத்துக் காட்டுகிறது.

❖ துடிப்பான சிறுவன்

## ♦ அந்தரேயின் குறும்புச் செயல்கள்

❖ தன் கைகளில் இரண்டு பணியாரங்களை வைத்துக்கொண்டு ஒன்று, இரண்டு என எண்ணி ஒன்றும் இரண்டும் மூன்று ஆகவே மூன்று பணியாரங்கள் உள்ளதாகக் கூறியமை.

❖ திருமணவீட்டில் அமைதியாக இருக்கவேண்டும் என்பதற்-காக மாடுபோல் வாய் திறக்காது அமைதியாக இருக்க வேண்-டும் எனத் தாய் கூறியதற்கமைய அமைதியாக இருந்தான். ஆனால் மாடு போன்ற தோற்றத்தில் நின்றமை.

❖ சீனிரொட்டியை உண்ட அவன், தாயார் கேட்டபோது பசி-யோடிருந்த பிள்ளைக்கு பயன்படச் செய்ததாகக் கூறியமை.

## மாணவர் செயற்பாடு

**01. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.**

1) "எனது கையில் மூன்று பணியாரங்கள் உள்ளன என்பது என் அபிப்பிராயம்". இங்கு அபிப்பிராயம் என்பதன் பொருள்

அ) கருத்து ஆ) கூற்று இ) உண்மை

2) அந்தரேயின் குறும்பைக் கட்டுப்படுத்துவது சிரமம் நிறைந்த காரி-யம். சிரமம் என்பதன் எதிர்ச்சொல்

அ) கடினம் ஆ) இலகு இ) சிறப்பு

3) தந்தை தன் சாமர்த்தியத்தைக் காட்ட முனைந்தார். முனைந்தார் என்பதன் பொருள்

அ) விரும்பினார் ஆ) முயற்சித்தார் இ) முறையிட்டார்

4) தமிழ்நாட்டில் நாடோடிக் கதைகளில் புகழ் பெற்றவன்

அ) நஸ்ருதீன் அவந்தி ஆ) அந்தரே இ) தெனாலிராமன்

5) அந்தரே பெற்றோருடன் கலந்துகொண்ட வைபவம்

அ) பிறந்தநாள் நிகழ்வு ஆ) திருமண நிகழ்வு

இ) விருந்துபசார நிகழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. பின்வரும் சொற்களுக்கான ஒத்தகருத்துச் சொற்களை எழுதுக.

1. தந்தை :- ..............................................
2. அபிப்பிராயம் :- ..............................................
3. எக்களிப்பு :- ..............................................
4. சாமர்த்தியம் :- ..............................................
5. சிரமம் :- ..............................................
6. கட்டளை :- ..............................................
7. புத்திமதி :- ..............................................
8. அனுதாபம் :- ..............................................
9. பரோபகாரம் :- ..............................................
10. மெச்சினார் :- ..............................................
11. சந்தேகம் :- ..............................................
12. அமைதி :- ..............................................
13. சாவதானம் :- ..............................................
14. கேலி :- ..............................................
15. தீனி - ..............................................

03. பொருத்தமானவற்றைத் தொடர்புபடுத்துங்கள்.

| | |
|---|---|
| 1. தமிழ்நாடு | அந்தரே |
| 2. சீனா | புருட்கோவ் |
| 3. ருஷ்யா | நஸ்ருதீன் அவந்தி |
| 4. இலங்கை | எச்.எம்.பி மொஹிதீன் |
| 5. அந்தரே கதைகள் | தென்னாலிராமன் |

04. இடைவெளிக்குப் பொருத்தமான சொற்களை எழுதி வாக்கியங்களைப் பூரணப்படுத்துவோம்.

1. அந்தரே தன் கைகளில் ............................ வைத்திருந்தான்.
(பனியாரம், பணியாரம், பணியாறம்)

2. அந்தரே தன் கூற்றை ............................ .
(நிருபித்தான், நி[illegible]ரபித்தான், நிரூபித்தான்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. தாய் அந்தரேயின் ........................ செயலைப் பாராட்டினார்.
(பரோபகார, பாரோபகர, பாரோபகார)

4. அந்தரே ............................ தாய்க்குப் பதில் கூறினான்.
(உற்ச்சாகமாக, உட்சாகமாக, உற்சாகமாக)

5. அந்தரே தன் செயலை எண்ணி ........................ உரத்துச் சிரித்தான்.
(எக்கழிப்போடு, எக்களிப்போடு, எக்கலிப்போடு)

**05. பின்வரும் வாக்கியங்களை உறுப்பமையப் பார்த்து எழுதுங்கள்.**

1. அந்தரே பிஞ்சில் பழுத்த பழம்.

..........................................................................................

2. அந்தரே துடிப்பான சிறுவன்.

..........................................................................................

3. ஏன் அம்மா தெரியாதா?

..........................................................................................

4. அந்தரேக்குக் குஷி வந்தது.

..........................................................................................

**06. கீழே தரப்பட்ட தொடரை ஒழுங்கமைத்து உறுப்பமைய எழுதுங்கள்.**

"ஓ, அதையா கேட்கிறீர்கள்! பசியோடிருந்த ஒரு பிள்ளைக் -குப் பயன்படச் செய்தேன்" என்றான் அந்தரே, முகத்தை அனு - தாபத் தோரணையில் சுளித்துக்கொண்டே.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

**07. அந்தரேயின் கதைகளை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. அந்தரேயின் கதைகளைத் தமிழிலில் எழுதியவர் யார்?

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அந்தரே தன்னிடம் மூன்று பணியாரங்கள் இருப்பதை எவ்வாறு நிரூபித்தான்?

..........................................................................................

3. அந்தரேயின் சாமர்த்தியத்தை தந்தை எவ்வாறு வெற்றி கொண்டார்?

..........................................................................................

4. திருமண நிகழ்விற்கு வருகை தந்தவர்கள் விருந்தின் பின் மகிழ்வோடு இருக்க யாது செய்தனர்?

..........................................................................................

5. திருமண வீட்டில் குறும்பு செய்த அந்தரேயை தாய் என்ன செய்யப்போவதாகக் கூறினாள்?

..........................................................................................

6. சீனிரொட்டிகளில் ஒரு பகுதியை உண்டது யார்?

..........................................................................................

7. அந்தரேயின் சுட்டித்தனங்களைத் தருக.

..........................................................................................

..........................................................................................

8. "அப்படியானால் பொல்லாத்தனம் செய்கிற மாட்டைக் கட்டிப்போட வேண்டியதுதான்"

அ) இக்கூற்றைக் கூறியவர் யார்?

..........................................................................................

ஆ) யாருக்குக் கூறினார்?

..........................................................................................

9. நாடோடிக் கதைகளில் புகழ்பெற்றவர்களைத் தருக.

..........................................................................................

..........................................................................................

10. அந்தரே பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதுங்கள்.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. அந்தரேயின் தாய் எத்தகைய குணங்களைக் கொண்டவர்?

................................................................................................

................................................................................................

................................................................................................

................................................................................................

**08. பின்வரும் சொற்களை வைத்துப் பொருள் விளங்க வாக்கியம் அமையுங்கள்.**

1. பரோபகாரம்:- ................................................................................

................................................................................................

2. சாமர்த்தியம்:- ................................................................................

................................................................................................

3. குறும்புத்தனம்:- ................................................................................

................................................................................................

4. நாடோடிக்கதைகள்: ................................................................................

................................................................................................

5. நிரூபித்தான்:- ................................................................................

................................................................................................

6. உத்தி:- ................................................................................

................................................................................................

7. விருந்து:- ................................................................................

................................................................................................

**09. பின்வரும் சொற்களுக்கான எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுங்கள்.**

1. கோபம் :- ........................................
2. பயம் :- ........................................
3. உற்சாகம் :- ........................................
4. ஆரம்பம் :- ........................................
5. பெருமை :- ........................................
6. அமைதி :- ........................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏற்றமிறைத்த திருடர்கள்

ஒரு சமயம் விஜயநகரத்தில் வறட்சிநிலை ஏற்பட்டது. பருவ மழை தவறி விட்டதால் குளம் குட்டைகள் எல்லாம் வறண்டு விட்டன. ராமன் வீட்டுத் தோட்டத்திலுள்ள கிணற்றிலும் நீர் குறைந்துவிட்டது.

கிணற்றில் ஏற்றம் இறைத்து செடி கொடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்ச தெனாலிராமன் மிகவும் துன்பப்பட்டான்.

அச்சமயத்தில் ஒருநாள் அவனுடைய தோட்டத்தில் நான்கு திருடர்கள் பதுங்கிக்கொண்டிருப்பதைக் கண்டான்.

உடனே வீட்டிற்குள் வந்து "அடியே! நம் நாட்டில் பருவமழை தவறிவிட்டதால் பஞ்சம் ஏற்பட்டு விட்டது. இதன் காரணமாக ஊரில் திருடர்கள் நிறையப் பேர் கிளம்பிவிட்டனர். என்றாவது ஒருநாள் திருடர்கள் நம் வீட்டில் உள்ளதை எல்லாம் திருடக்கூடும்" என்று மனைவியிடம் உரக்கக் கூறினான் தெனாலிராமன்.

"அதற்கு என்ன செய்யலாம்?" என்று தெனாலிராமனுடைய மனைவி கேட்டாள்.

"நீ போட்டிருக்கிற நகைநட்டு எல்லாவற்றையும் கழற்று ஒரு முடிப்பில் இந்தப் பெட்டியில் போடு விலை உயர்ந்த பெட்டியில் போடு. விலை உயர்ந்த பாத்திரங்களையும் அந்தப் பெட்டியில் போட்டு மூடு. இந்தப் பெட்டியை நாம் எடுத்துச் சென்று கிணற்றில் போட்டு விடுவோம். திருடர் பயம் குறைந்த பிறகு நாம் பெட்டியைக் கிணற்றிலிருந்து எடுத்துக்கொள்வோம்" என்று உரத்த குரலில் கூறினான் தெனாலிராமன்.

இது தோட்டத்திலிருந்த திருடர்கள் காதில் விழுந்தது. "அண்ணே கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது போல் இருக்கிறது. அநாவசியமாக தெனாலிராமனின் வீட்டிற்குள் புகுந்து திருட வேண்டாம். அவரே நகைப்பெட்டியை எடுத்து வந்து கிணற் -றில் போடுவார். அவர் போனபிறகு நாம் கிணற்றிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெட்டியை எடுத்துக்கொள்ளலாம்." என்றான் திருடர்களில் ஒருவன்.

மற்றவர்களும் இதற்குச் சம்மதம் தெரிவித்தனர்.

இதனிடையில் தெனாலிராமன் மனைவியிடம் திருடர்கள் வந்திருப்பதை இரகசியமாகக் கூறிவிட்டு பெட்டிக்குள் கற்களையும் ஓட்டை உடைசல்களையும் வைத்து மூடினான். பெட்டியைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வந்து கிணற்றில் போட்டான்.

தெனாலிராமன் வீட்டிற்குள் சென்றதும் திருடர்கள் கிணற்றரு -கில் வந்தனர். கிணறு ஆழமாக இருந்தது.

"அண்ணே! கிணற்றில் தண்ணீர் அதலபாதாளத்தில் இருக்கிறது. நாம் நால்வரும் ஏற்றம் இறைத்தால் தண்ணீர் வற்றிவிடும். பிறகு சுலபமாகக் கிணற்றுக்குள் இறங்கி பெட்டியை எடுத்துச் சென்று விடலாம்" என்றான் திருடர்களில் ஒருவன்.

அதன்படி திருடர்கள் ஏற்றம் இறைக்கலாயினர். சற்று நேரம் கழித்து தெனாலிராமன் வேறு வழியாகத் தோட்டத்திற்குச் சென்றான். பாத்திகளை வெட்டித் தண்ணீரை எல்லாச் செடி கொடிகளுக்கும் பாயுமாறு செய்துவிட்டான்.

பொழுது விடிந்துகொண்டிருந்தது. அப்பொழுது தான் அந்தத் திருடர்களும் அப்பெட்டியைத் தூக்கமுடியாமல் தூக்கிக் கரையேறி -னர்.

அப்போது தோட்டத்திலிருந்து வெளியே வந்த தெனாலிராமன், "போதும் நிறுத்துங்கடா தோட்டம் முழுவதும் தண்ணீர் பாய்ந்து விட்டது" என்று உரக்கக் கத்தினான். ஏமாந்து போன திருடர்கள் தெனாலிராமன் குரலைக் கேட்டு ஓட்டம் பிடித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. ஆறு



✶ ஆறு என்ற கவிதையின் ஆசிரியர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை ஆவார்.

✶ கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை இந்தியாவின் கன்னியா குமரி மாவட்டத்தின் தேரூரில் வாழ்ந்தவர்.

✶ தேசிக விநாயகம்பிள்ளையின் தந்தை சிவதாணுப்பிள்ளை, தாயார் ஆதிலெட்சுமி ஆவர்.

✶ இவர் 1876ஆம் ஆண்டு ஆடி மாதம் 27 ஆம் திகதி பிறந்தார்.

✶ இவர் எழுதிய நூல்கள்:-



- மலரும் மாலையும்
- உமர்கையாம் பாடல்கள்
- குழந்தைச் செல்வம்
- கவிமணியின் உரைமணிகள்
- ஆசியஜோதி

✶ சிறுவர்களுக்காக இவர் பல பாடல்களைப் பாடியுள்ளார்.

✶ மலரும் மாலையும் என்ற நூலில் குழந்தைகளுக்கான பல பாடல் -களைத் தந்துள்ளார். இவற்றுள்,

| | |
|---|---|
| கவிதை | சந்திரன் |
| தாலாட்டு | ஆறு |
| பசு | பசுவும் கன்றும் |

கடல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ ஆறு என்ற பாடல் மலரும் மாலையும் என்ற நூலில் இடம் பெற்றுள்ளது.

★ கவிமணியவர்கள் 1954ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26ஆம் திகதி இவ்வுலக வாழ்வை நீத்தார்.

★ ஆறு என்ற கவிதையில் ஆறானது தான் எங்கிருந்து வருவதாக -வும், தான் வரும்போது கண்ட காட்சிகள் எவை என்பதையும் கூறுகிறது.

★ ஆறு வந்த இடங்கள்

- கல்லும் மலையும் குதித்து வந்தது.
- காடும் செடியும் கடந்து வந்தது.
- பெரிய சமவெளிகளில் தவழ்ந்து வந்தது.
- கட்டும் அணைகளில் ஏறியும் அதன் சிறு இடைவெளிகளூ -டாகவும் வந்தது.
- மேட்டு நிலங்கள், வெளிகளில் சுற்றி வந்தது.
- நீரணையாகிய மடைகளில் மோதி வந்தது.

★ ஆறு வரும் வழிகளில் ஆற்றிய சேவைகள்

- வெயிலால் வரண்டிருந்த வெப்பத்தைப் போக்கியது.
- பயிர்களைக் குளிர்வித்தது.
- பூஞ்சோலை செய்து வந்தது.
- ஏரி, குளங்களை நிரப்பி வந்தது.
- நீர் ஊறாத ஊற்றுக்களில் உட்புகுந்தது.
- வெறும் தரிசு நிலத்திலும் நீரை இறைத்தது.
- பஞ்சை அரைத்து நூல் நூற்றது.
- நகரங்களில் குழாய் நீராகப் பயன்பட்டது.
- சீனிப்பாகு செய்வதற்குப் பயன்பட்டது.

★ ஆறு கொண்டுவந்தவையாகக் கூறுபவை

- மாங்கனியும் தேங்கனியும் வாரிவந்தது.
- வாசமலர்களை அள்ளிக்கொண்டு வந்தது.
- இனிய சுவையுடைய கரும்பைக் கொண்டுவந்தது.
- தேனும் தினையும் சேர்த்து வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ ஆறு தங்கள் இறைவனான கடலைக் காண வந்ததாகக் கூறுகின்றது.

★ தான் இன்னும் நீண்ட தூரம் செல்லவேண்டும் எனக் கூறி தொடர்ந்து ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது.

## மாணவர் செயற்பாடு

**01. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.**

1. சோலையில் ஆசை தீர விளையாடினேன். ஆசை என்பதன் ஒத்த சொல்

   1. விருப்பம் 2. நிராசை 3. வெறுப்பு

2. பெரும் காடும் செடியும் கடந்து வந்தேன். காடு என்பதன் ஒத்த சொல்

   1. நாடு 2. வனம் 3. கோட்டம்

3. உட்புகுந்தேன் என்பதன் எதிர்ச்சொல்

   1. உள் நுழைந்தேன் 2. வெளியேறினான் 3. வெளியேறினேன்

4. அல்லும் பகலும் என்பதில் அல் என்பதன் பொருள்

   1. காலை 2. மாலை 3. இரவு

5. நகரம் என்பதன் ஒத்தசொல்

   1. கிராமம் 2. மாவட்டம் 3. பட்டணம்

6. பின்வருவனவற்றுள் எழுத்துப்பிழையற்ற சொல்லைத் தெரிவு செய்க.

   1. மலர்ப்பொழிள் 2. மலர்ப்பொழில்
   3. மளர்பொளில் 4. மலர்ப்பொளில்

7. பின்வருவனவற்றுள் தொடர்பற்ற சொல்லாக அமைவது

   1. ஆழி 2. ஏரி 3. கயம் 4. திட்டு

8. தரப்பட்ட வாக்கியத்திற்குப் பொருத்தமான முடிக்கும் சொல் -லைத் தெரிவு செய்க.

   என்னோடு தம்பியும் தங்கையும்

   1. வந்தார்கள் 2. வந்தார் 3. வந்தோம் 4. வருவார்

9. வியப்புப் பொருளை உணர்த்துவதற்குப் பயன்படும் நிறுத்தக் குறியீடு

   1. காற்புள்ளி 2. (..) ற்றுப்புள்ளி 3. முக்காற்புள்ளி 4. வியப்புக்குறி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. வாக்கியத்தின் பொருள் நிறைவைக் காட்டுவதற்குப் பயன்படும் நிறுத்தக் குறியீட்டின் பெயர்

1. காற்புள்ளி 2. முற்றுப்புள்ளி
3. முக்காற்புள்ளி 4. வியப்புக்குறி

**02. பின்வரும் சொற்களுக்கான பொருளை எழுதுங்கள்.**

1. திட்டு :- ..........................................
2. நிலத்தழல் :- ..........................................
3. பொழில் :- ..........................................
4. ஆழி :- ..........................................
5. ஏரி :- ..........................................

**03. பின்வரும் சொற்களை வைத்துப் பொருள் விளங்க வாக்கியம் அமையுங்கள்.**

1. மலை:- ..........................................................................
..........................................................................
2. மழை:- ..........................................................................
..........................................................................
3. ஏரி:- ..........................................................................
..........................................................................
4. ஏறி:- ..........................................................................
..........................................................................
5. இறை:- ..........................................................................
..........................................................................
6. இரை:- ..........................................................................
..........................................................................
7. தினை:- ..........................................................................
..........................................................................
8. திணை:- ..........................................................................
..........................................................................
9. ஆழி:- ..........................................................................
..........................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

10. வழி:- ..........................................................................

11. வளி:- ..........................................................................

12. வலி:- ..........................................................................

**04. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. ஆறு என்ற கவிதையின் ஆசிரியர் யார்?
..........................................................................

2. இவர் எழுதிய நூல்கள் இரண்டு தருக.
..........................................................................

3. ஆறு எங்கே விளையாடியது?
..........................................................................

4. ஆறு கடந்து வந்த இடம் எது?
..........................................................................

5. ஆறு எவற்றுக்குப் பயன்பட்டது?
..........................................................................

6. குளிர்மையான பயிரை ஆறு எங்கு கண்டது?
..........................................................................

7. ஆறு வரும்போது எவற்றைக்கொண்டு வந்ததாகக் கூறுகிறது?
..........................................................................

8. ஆறு ஏன் வந்ததாகக் கூறுகின்றது?
..........................................................................

9. சிறுவர் பாடல்கள் பாடிய கவிஞர்கள் இருவரைக்குறிப்பிடுக.
..........................................................................

10. "தீங்கரும்பாயிரம்" என்பதன் பொருள் யாது?
..........................................................................

Class No: 894.811
Acc No 341



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

**05. 'அ' பகுதிக்குப் பொருத்தமானவற்றை 'ஆ' பகுதியிலிருந்து தெரிவு செய்து அவற்றின் எழுத்துக்களை எழுதுங்கள்.**

| அ | | ஆ |
|---|---|---|
| 1. காடும் மலையும் | | அ. நீர் இறைத்தது |
| 2. புன்செய் காட்டில் | | ஆ. சுற்றிப் பார்த்தது |
| 3. ஏரிகள் குளங்களை | | இ. விளையாடின |
| 4. நன்செய் நிலத்தை | | ஈ. குதித்து வந்தது |
| 5. மலர்ச்சோலையில் | | உ. நிரப்பி வந்தது |

**06. தொடர்புபடுத்துங்கள்.**

| | |
|---|---|
| 1. காற்புள்ளி | ? |
| 2. வியப்புக்குறி | ' |
| 3. வினாக்குறி | . |
| 4. முற்றுப்புள்ளி | : |
| 5. முக்காற்புள்ளி | ! |

**07. பின்வருவனவற்றுக்குப் பொருத்தமான நிறுத்தற்குறியீடுகளை இட்டு வாக்கியங்களை மீண்டும் எழுதுங்கள்.**

1. ஆகா ஆறு அழகாகப் பாய்ந்து வருகிறது

   ..............................................................................................

2. நீங்கள் சுற்றுலாச் செல்கிறீர்களா

   ..............................................................................................

3. இல 05
   முதலாம் குறுக்குத் தெரு
   கொழும்பு - 01

   ..............................................................................................

4. அன்புள்ள அம்மா நான் நலம் நீங்கள் சுகமாக இருக்கிறீர்களா

   ..............................................................................................

5. ஆற்றின் பயன் ஆறானது மக்களின் பல்வேறுபட்ட தேவைகளுக்கும் பயன்படுகின்றது

   ..............................................................................................

Class No. / Acc No



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. நிலம் நீர் காற்று ஆகாயம் போன்றவை இயற்கை வளங்கள் ஆகும்

.................................................................................................

7. மன்னன் வாழ்க

.................................................................................................

**08. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுங்கள்.**

1. தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துக்களின் எண்ணிக்கை யாது?

.................................................................................................

2. ஓரெழுத்தில் அமைந்த சொற்கள் இரண்டு தருக.

.................................................................................................

3. வினைச்சொற்கள் இரண்டு தருக.

.................................................................................................

4.ஆய்த எழுத்து எது?

.................................................................................................

5. ஊ, ஏ, கை, ஓ, தே இவற்றுள் உயிர்மெய் எழுத்துக்களை இனங்கண்டு எழுதுக.

.................................................................................................

6. நிறுத்தற்குறியீடுகள் இரண்டின் பெயர்களையும் அவற்றுக்கான குறியீடுகளையும் எழுதுங்கள்.

.................................................................................................

7. பெயர்ச்சொற்கள் 2 தருக.

.................................................................................................

8. தங்கத்தாத்தா என அழைக்கப்படும் புலவர் யார்?

.................................................................................................

9. ஐம்பூதங்கள் எவை?

.................................................................................................

10.தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள் பாடிய சிறுவர் பாடல்கள் இரண்டு தருக.

.................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**09. கீழே தரப்பட்டுள்ள பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக் களுக்கு விடையளிங்கள்.**

## கத்தரி வெருளி

கத்தரித் தோட்டத்து மத்தியில் நின்று
காவல் புரிகின்ற சேவகா! - நன்று
காவல் புரிகின்ற சேவகா!
மெத்தக் கவனமாய்க் கூலியும் வாங்காமல்
வேலை புரிபவன் வேறு யார்?

கண்ணுமிமையாமல் நித்திரை கொள்ளாமல்
காவல் புரிகின்ற சேவகா! - என்றும்
காவல் புரிகின்ற சேவகா!
எண்ணி உன்னைப்போல் இரவுபகலாக
ஏவல் புரிபவன் வேறுயார்? - என்றும்
ஏவல் புரிபவன் வேறுயார்?

வட்டமான பெரும் பூசணிக்காய் போல
மஞ்சள்நிற உறுமாலைப் பார்!
கட்டியிறுக்கிய சட்டையைப் பாரங்கே
கைகளில் அம்பொடு வில்லைப் பார்! - இரு
கைகளில் அம்பொடு வில்லைப் பார்!

சிங்கத்தின் தோலினால் போர்த்த கழுதைபோல்
தேசத்திலே பலர் உண்டுகாண் - இந்தத்
தேசத்திலே பலர் உண்டுகாண்
அங்கவர் தம்மைகண் டேமாந்து போகா
அறிவு படித்தனன் இன்றுதான் - உன்னில்
அறிவு படித்தனன் இன்றுதான்.

- நவாலியூர் சோமசுந்தரப் புலவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. கத்தரி வெருளி என்ற பாடலின் ஆசிரியர் யார்? இவரது சிறப்புப் பெயர் யாது?

..................................................................................................

2. கத்தரிவெருளி எவ்வாறு தன் கடமையைச் செய்கிறது?

..................................................................................................

..................................................................................................

3. கத்தரி வெருளி எவ்வாறு தோற்றமளிக்கிறது?

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

4. கத்தரிவெருளி எத்தகைய அறிவினை எமக்குத் தருகின்றது எனப் புலவர் பாடுகிறார்?

..................................................................................................

5. உறுமால் என்பது எதனைக் குறிக்கின்றது? இது எதற்கு ஒப்பி -டப்படுகிறது?

..................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. கடமை

* கடமை என்ற கட்டுரை இலக்கிய படகு என்ற நூலில் இடம் பெற்றுள்ளது.
* இக்கட்டுரையின் ஆசிரியர் திருலோக சீதாராம் ஆவார்.
* மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் உள்ள கடமைகள் பற்றி ஆசிரியர் இக்கட்டுரையில் கூறியுள்ளார்.
* நாம் பெற்றுக்கொண்ட இன்பத்திற்கு அல்லது நன்மைக்கு நாம் செலுத்தவேண்டிய விலையே கடமை.
* நாம் முதலில் எம்மைப் பெற்ற தாய் தந்தைக்கு உரிய கடமை -களைச் செய்ய வேண்டும். பின்னர் ஆசிரியர்களுக்கும் இறைவ -னுக்கும் கடமைகளைச் செய்ய வேண்டும்.
* மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற மகாவாக்கியம் இதனையே உணர்த்துகிறது.
* கடவுள்பற்றி இறுதியாக அறிந்துகொள்கின்றமையால் அவரை இறுதியாக குறிப்பிட்டுள்ளதாக கூறப்படுகிறது.
* மனிதர்கள் முழு உரிமையாகப் பெற்றுக்கொண்ட செல்வங்கள் மூன்று.

  அவையாவன:- உடல், உள்ளம், உயிர் என்பனவாகும்.
* எமது உடைமையாகிய இவற்றுக்கு உரிய கடமைகளைச் சரியாகச் செய்தல் வேண்டும்.
* உடலுக்கு நோய் வராது பாதுகாத்தல்.

  உள்ளம் வேதனைப்படாது மகிழ்ச்சியாக இருத்தல்.

  உயிரை நீண்ட காலம் பேணுதல்.
* நாம் இவ்வாறு எமது உடைமைகளைப் பாதுகாப்பது சுயநலம் எனக் கூறுவது தவறு. இவர்கள், பிறர் விடயமாக நாம் பட்டிருக் -கும் கடனையே கடமை என்கின்றனர்.
* நாம் பிறரிடம் வாங்கிய கடனை உரிய காலத்தில் உரியவாறு திருப்பிச் செலுத்தும்போது தான் எம்மீது அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ✶ சிலர் சிறிய தொகைப் பணத்தை உரிய காலத்தில் திருப்பிக் கொடுத்து தமது நாணயத்தை (நம்பிக்கையை) உறுதிப்படுத்திய பின் பெருந்தொகைப் பணத்தை வாங்கி ஏமாற்றி விடுவார்கள்.
- ✶ கடமையின் அடிப்படையில் சுயநலம் அடங்கியுள்ளது. அதாவது பிறரிடத்தில் ஒழுங்காக கடமைகளைச் செய்கிறவன் புகழும் மதிப்பும் பெறுகிறான். இதுவும் தான் சுகம் பெறுவதற்காகவே ஆற்றுகிறான்.
- ✶ சுயநலம் என்பதும் ஒரு கடமைதான். இதனால் சுயநலம் என்பது கீழ்த்தரமானதல்ல.
- ✶ பிறரது நலனுக்குத் தீங்கு ஏற்படாத வகையில் ஒவ்வொருவரும் தத்தமது நலனைப் பார்த்துக் கொண்டால் யாவரும் சிறப்பாக வாழலாம். இது எந்தவகையிலும் சுயநலமல்ல.
- ✶ மனிதன் முதலில் செய்யவேண்டிய கடமை

  நாங்கள் நலன் பெறுவதை பொறுத்துக் கொள்கின்ற நம்மைச் சார்ந்தவர்கள் யாரும் நன்மை அடைவதில் எமக்கு எந்த வகையிலும் எதிர்ப்பு இல்லை என்பதை சொல்லாலும் செயலாலும் உணர்த்திவிடுதல் வேண்டும்.
- ✶ பிறர் நலம் பேணுதலே மனிதனின் தலையாய கடமை ஆகும்.
  - தன்னைக் கட்டுப்படுத்துதல்
  - பிறர் துன்பத்தைத் தீர்த்தல்
  - இறைவனைப் போற்றுதல்
  - பிறர் நலம் வேண்டுதல்
- ✶ கடமையால் கிடைக்கும் நான்கு பயன்கள்

  அறம், பொருள், இன்பம், வீடு
- ✶ சுயநலம் விரும்புபவர்கள் பிறர்நலம் பேணுதல் வேண்டும்.
- ✶ இதனால் புகழும் சுகமும் வரும் அத்துடன் சுயநலம் பெருகும்.

## மாணவர் செயற்பாடு

**01. பின்வரும் சொற்களுக்கான பொருளை எழுதுங்கள்.**

*1.* வேதனை ..........................................

**2.** நாணயம் ..........................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. குந்தகம் ..............................
4. அச்சம் ..............................
5. காரியம் ..............................
6. அறம் ..............................

**02. இடைவெளி நிரப்புங்கள்.**

1. நாம் எப்போதும் .......................... (நாணயம், நானயம்) உள்ளவர்களாக வாழவேண்டும்.
2. கடமையைச் சரிவரச் செய்வதால் .......................... (புகழ், புகள்) கிடைக்கும்.
3. நாம் எமது .......................... (உடமைகளை, உடைமைகளைப்) பேண வேண்டும்.
4. பிறர் நலம் .......................... (பேனுதல், பேணுதல்) தலையாய .......................... (கடைமை, கடமை) ஆகும்.
5. எமது பாடசாலையில் .......................... (கண்காட்சி, கண்காட்ச்சி) நடைபெற்றது.

**03. பின்வரும் சொற்களுக்கான எதிர்க்கருத்துச் சொற்களை வைத்து கருத்துள்ள வாக்கியம் எழுதுங்கள்.**

1. தர்மம் :-..............................................................
..............................................................
2. புகழ் :-..............................................................
..............................................................
3. பகைவர் :-..............................................................
..............................................................
4. பிறர் :-..............................................................
..............................................................
5. ஆட்சேபனை:-..............................................................
..............................................................
6. அச்சம் :-..............................................................
..............................................................
7. சுயநலம் :-..............................................................
..............................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. சுலபம் :-.................................................................................

.....................................................................................................

9. அறம் :-.................................................................................

.....................................................................................................

10. வேதனை :-.................................................................................

.....................................................................................................

**04. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. கடமை என்ற கட்டுரையின் ஆசிரியர் யார்?

.....................................................................................................

2. மனிதர்கள் முழு உரிமையாகப் பெற்ற செல்வங்கள் எவை? அவற்றை எவ்வாறு பாதுகாக்க வேண்டும்?

.....................................................................................................

3. நாம் யார்யாருக்குக் கடமையாற்ற வேண்டும்?

.....................................................................................................

4. சுயநலம் பற்றிப் பிறர் கொண்டுள்ள தவறான அபிப்பிராயம் யாது?

.....................................................................................................

5. கடமை என்றால் என்ன?

.....................................................................................................

6. எம்மைப் பற்றி பிறரிடத்தில் நம்பிக்கை ஏற்பட யாது செய்ய வேண்டும் எனக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளது?

.....................................................................................................

7. "கொஞ்சம் கொஞ்சமாக நாணயத்தைப் பெருக்கிக் கொண்டு போய் இறுதியில் பெரிய நாமமாகப் போட்டுவிடுகின்ற சூரர் -களும் இருக்கிறார்கள்" இதன் மூலம் ஆசிரியர் உணர்த்தும் விடயம் யாது?

.....................................................................................................

8. சுயநலமும் ஒரு கடமைதான் என்பதை ஆசிரியர் எவ்வாறு நிரூபித்துள்ளார்?

.....................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. சுயநலம் என்பது மேலான தத்துவம் எனக் கூறுவதற்கான காரணம் யாது?

..........................................................................................

10. எமது நலனுக்கு எதிரான பகைவர் தோற்றம் பெறக் காரணம் யாது? இப்பகைமையைப் போக்க யாது செய்ய வேண்டும்?

..........................................................................................

11. மனிதனின் தலையாய கடமை யாது?

..........................................................................................

12. இவ்வுலகில் யாவருக்கும் பொதுவான கடமைகள் எவை?

..........................................................................................

13. நாற்பயன்களும் எவை?

..........................................................................................

14. பிறர் நலம் பேணுவதால் கிடைக்கும் அனுகூலங்கள் எவை?

..........................................................................................

15. "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும்" என்ற பழமொழியின்கருத்தினை எழுதுக.

..........................................................................................

..........................................................................................

**05. பின்வரும் சொற்களை வைத்துப் பொருள் விளங்க வாக்கியம் அமையுங்கள்.**

1. அலை :- ..........................................................................................

..........................................................................................

2. அளை :- ..........................................................................................

..........................................................................................

3. அழை :- ..........................................................................................

..........................................................................................

4. பறி :- ..........................................................................................

..........................................................................................

5. பரி :- ..........................................................................................

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. தண்மை :- ..........................................................................

..........................................................................

7. தன்மை :- ..........................................................................

..........................................................................

8. தரி :- ..........................................................................

..........................................................................

9. தறி :- ..........................................................................

..........................................................................

10. வலை: :- ..........................................................................

..........................................................................

11. வளை :- ..........................................................................

..........................................................................

12. அரி :- ..........................................................................

..........................................................................

13. அறி :- ..........................................................................

..........................................................................

14. வண்மை :- ..........................................................................

..........................................................................

15. வன்மை :- ..........................................................................

..........................................................................

16. கனம் :- ..........................................................................

..........................................................................

17. கணம்: :- ..........................................................................

..........................................................................

18. இலை: :- ..........................................................................

..........................................................................

19. இளை :- ..........................................................................

..........................................................................

20. இழை :- ..........................................................................

..........................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. கீழே தரப்பட்டுள்ள பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக் -களுக்கு விடை எழுதுங்கள்.

பறந்து பறந்தெங்கும் - திரியும்
பறவை வாழ்வினைப் போல்
சிறந்த வாழ்வேதும் - இந்தச்
செகத்தில் கண்டதுண்டோ?

சாதிச் சண்டையில்லை - ஓயாச்
சமயச் சண்டையில்லை
வேத சாத்திரங்கள் - கூறும்
விதி விலக்குமில்லை

உரைத்த உரையெல்லாம் - மாறி
உரைத்திடு வாரில்லை
துரைத்தனமுமில்லை - தொடரும்
துன்பங்களுமில்லை

இரப்ப வருமில்லை - சோம்பி
இருப்ப வருமில்லை
புரப்ப வருமில்லை - அவரைப்
புகழ வாருமில்லை

நமனை எண்ணியெண்ணி - உள்ளம்
நடுநடுங் கிடாமல்
அமைதி கண்டிடலாம் -நித்ய
ஆனந்தம் பெற்றிடலாம்

- கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை

1. இப்பாடலில் சிறந்த வாழ்வாகக் கூறப்படுவது எது?

..............................................................................................

2. இப்பாடலில் இடம்பெற்றுள்ள பறவைகளின் நற்பண்புகள் மூன்று தருக.

..............................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மனிதர்களிடம் எத்தகைய பண்புகள் இருப்பதாகக் கூறப்படுகி -றது?

.......................................................................................................

4. மனிதர்கள் யாரை எண்ணி அச்சமடைகின்றார்கள்? காரணம் யாது?

.......................................................................................................

5. "உரைத்த உரையெல்லாம் - மாறி
உரைத்திடுவாரில்லை" என்ற இத்தொடரில் ஆசிரியர் கூறும் விடயம் யாது?

.......................................................................................................

6. இப்பாடலின் மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட நற்கருத்துக்கள் மூன்று தருக.

.......................................................................................................

7. பின்வரும் சொற்களுக்கான எதிர்ச்சொற்களை எழுதுக.

1. புகழ் ..........................................
2. துன்பம் ..........................................
3. சண்டை ..........................................

8. பின்வரும் சொற்களுக்கான ஒத்தகருத்துச் சொல்லை பாடலி -லிருந்து தெரிவு செய்து எழுதுக.

1. உலகம் ..........................................
2. பட்சி ..........................................
3. அகம் ..........................................
4. மகிழ்ச்சி ..........................................

9. இரத்தல்
இறத்தல் ஆகிய சொற்களை வைத்துப் பொருள் விளங்க இரு வேறு வாக்கியங்கள் எழுதுங்கள்.

.......................................................................................................

.......................................................................................................

10. இப்பாடலின் ஆசிரியர் யார்?

.......................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**07. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களுக்குப் பொருத்தமான அடைமொழிகளை எழுதுங்கள்.**

தம்பி ஓடினான்

உ-ம்: குட்டித் தம்பி வேகமாக ஓடினான்.

1. நாய் பந்துடன் ஓடியது.

.....................................................................................................

2. எனது சட்டை கிழிந்தது.

.....................................................................................................

3. விமலன் கணக்குச் செய்தான்.

.....................................................................................................

**08. பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான செயற்படுபொருளை எழுதுங்கள்.**

1. மாணவர்கள் காலையில் எழுந்து ........................ வழிபட்டனர்.
2. அரசன் நாட்டு மக்களிடம் அவர்களது .............. கேட்டறிந்தான்.
3. யானை ........................ அடியோடு சாய்ந்தது.
4. பெண்கள் அழகிய பூக்களைக் கோர்த்து ...................... கட்டினர்.

**09. பின்வரும் வாக்கியங்களின் எழுவாய், பயனிலை, செயற்படுபொருள் என்பவற்றை இனங்கண்டு எழுதுங்கள்.**

1. அணில் மாம்பழத்தைச் சுவைத்துத் தின்றது.

.....................................................................................................

2. அம்மாவும் அப்பாவும் கடைக்குச் சென்று புத்தகங்கள் வாங்கி-னர்.

.....................................................................................................

3. குமார் தன் நண்பனுடன் விளையாடச் சென்றான்.

.....................................................................................................

4. தமிழ் மூதாட்டி ஔவையாரை மன்னன் அதியமான் ஆதரித்தான்.

.....................................................................................................

5. ஆசிரியரைச் சந்திக்கப் பெற்றோர் தனித்தனியே வந்தனர்

.....................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. காட்டு விலங்குகளைக் காப்போம்

* காடும் காடு சார்ந்த நிலமும் முல்லை நிலம் ஆகும்.
* இம்முல்லை நிலத்திலேயே பல விலங்குகள் வசித்து வருகின் -றன.
* காட்டில் மலர்களும் காய்களும் கனிகளும் அதிகமாகக் கிடைக் -கும்.
* கொடிய விலங்குகள் என நாம் கூறும் சிங்கம், புலி, யானை போன்றன எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு காரணமாக உள்ளன.
* விலங்குகளின் வசிப்பிடமான காடுகளும் மனிதர்களுக்குப் பல வகையில் பயன்படுகின்றன.
    - அதிகமான மழை வீழ்ச்சிக்கு உதவும்.
    - அடுப்பு எரிப்பதற்கு விறகும் வீடு கட்டுவதற்கு மரங்களும் கிடைக்கிறது.
    - மருந்துக்குப் பயன்படும் மூலிகைகளைப் பெறலாம்.
* யானையின் இயல்புகள்
    - நினைவாற்றல் மிகுதியாகப் பெற்றது.
    - தீங்கு இழைத்தவர்களைத் தண்டிக்கும்.
* யானையின் பயன்கள்
    - மரங்களைச் சுமந்தும் இழுத்தும் செல்வதற்குப் பயன்படும்.
    - யானையின் தந்தங்கள் ஆபரணம் செய்யப் பயன்படும்.
    - அலங்காரப் பொருட்கள் செய்வதற்கும் யானைத் தந்தம் பயன்படும்.
    - யானையானது உயிரோடு இருக்கும்போதும் பல தேவை களை நிறைவேற்றுகிறது. அவ்வாறே அது இறந்த பின்பும் பயன்படுகின்றது. இதனால்தான்,

      "யானை இருந்தாலும் ஆயிரம் பொன்,

      இறந்தாலும் ஆயிரம் பொன்" எனக் கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* மக்களின் பண்புகளைக் கூறுவதற்கு விலங்குகளை ஒப்பிட்டுக் கூறுகின்றனர்.
    - நாயைப் போன்று நன்றியுள்ளவன்.
    - சிம்மக் குரல் உடையவன்.
    - புலிபோலப் பாய்பவர்.
    - பசுபோல் சாதுவானவன்.
    - நரியைப் போல் தந்திரமானவன்.
* திருவள்ளுவர் அருளிய திருக்குறளிலும் விலங்குகளைத் தொடர்புபடுத்திப் பாடப்பட்ட பல குறட்பாக்களைக் காண -லாம்.

- **வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்**
  **புலியின் தோல் போர்த்து மேய்ந் தற்று**

  பொருள்:-
  மனதை அடக்கும் வல்லமை இல்லாதவன் மேற்கொண்ட வலிய தவக்கோலம் பசு புலியின் தோலைப் போர்த்திக் கொண்டு பயிரை மேய்ந்ததை ஒக்கும்.

- **விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்**
  **கற்றாரோடு ஏனையவர்**
  பொருள்:-
  அறிவு விளங்குவதற்குக் காரணமான நூல்களைக் கற்றவரோடு கல்லாதவர், மக்களோடு விலங்குகளுக்கு உள்ள வேற்றுமையை உடையவர்.

- **காலாழ் களரில் நரியடும் கண்ணஞ்சா**
  **வேலாள் முகத்த களிறு**
  பொருள்:-
  வேல் கொண்ட வீரரைக் கோத்தெடுத்த கொம்புடைய அஞ்சாத யானை, கால் புதையும் சேற்றில் அகப்பட்டால் அதனை எதிரிகள் கொன்றுவிடும்.

- **குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத் தொன்று**
  **உண்டாகச் செய்வான் வினை.**
  பொருள்:-
  தன்கையில் பொருள் ஒன்று வைத்துக்கொண்டு ஒருவன் செயல் செய்தல், மலையின் மேல் ஏறி யானைப் போரைப் பார்த்தல் போன்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ **கானமுய லெய்த அம்பினில் யானை**
**பிழைத்தவேல் ஏந்தல் இனிது**

பொருள்:-
காட்டில் ஓடிய முயல் மீது குறி தவறாமல் விட்ட அம்பைவிட யானை மீது எறிந்து குறி தவறிய வேல் சிறந்தது. அதேபோல வலிமை அற்றவரை வெல்வதை விட வலிமை உள்ளவரை எதிர்ப்பதே மேலானது.

♦ **கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்**
**மெய்வேல் பறியா நகும்**

பொருள்:-
கையில் இருந்த வேலை யானைமீது எறிந்து துரத்திவிட்டு வேறுவேல் தேடுபவன் தன் மார்பில் பட்டிருந்த பகைவரின் வேலைப் பிடுங்கி மகிழ்வான்.

✶ கட்டுரையில் கூறப்பட்டுள்ள காட்டு விலங்குகள்

| | | |
|---|---|---|
| யானை | கரடி | கீரிப்பிள்ளை |
| புலி | கழுதைப்புலி | பறக்கும் அணில் |
| காட்டுக்காளை | காட்டுப்பன்றி | மான்கள் |
| சிறுத்தை | காட்டுநாய் | காட்டுக்குதிரை |
| குரங்குகள் | கணநரி | காட்டுப்பூனை |

✶ விலங்குகளின் அழிவுக்கு மனிதர்கள் காரணமாக உள்ளனர்.

- தனது ஆசைகளுக்கும் உணவுத் தேவைகளுக்கும் விலங்கு -களை வேட்டையாடுகின்றனர்.
- மக்கள் தொகை அதிகரிப்பதனால் பயிர்ச்செய்கைக்கான நிலங்களைப் புதுப்பித்தல்.
- விலங்குகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாக்க அவற்றைக் கொல்கின்றனர்.
- வேட்டையாடும் சட்டங்களை எதிர்த்துக் கிளம்பிய வேட்டைக்காரர்கள் விலங்குகளை வேட்டையாடுதல்.
- காடுகளில் வசிக்கும் பழங்குடியினர் விலங்குகளைக் கொல்லுதல்.
- விரைவான பயணவசதி.

✶ பல விலங்குகள் அழிந்து விட்டன.

உதாரணம்:- மம்முத் யானை இனம்
டைனோசர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் செயற்பாடு

**01. பொருத்தமான விடையின்கீழ்க் கோடிடுக.**

1. தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துக்களின் எண்ணிக்கை
   1) 216 2) 247 3) 246 4) 218
2. பின்வருவனவற்றுள் ஆய்த எழுத்தாக அமைவது
   1) ஃ 2) ஷ 3) ஔ 4) க்
3. இடையின எழுத்துக்களைக் கொண்ட தொகுதி
   1) க், ங், ச், ட் 2) ல், வ், ழ், ள் 3) ய், ர், ல், ந் 4) க், ஞ், ண, ந்
4. பின்வருவனவற்றுள் கிரந்த எழுத்துக்களைக் கொண்ட சொல் அல்லாதது
   1) விஷம் 2) விஜயம் 3) பக்ஷி 4) கயம்
5. உயிர்மெய்க் குறில் எழுத்துக்களைக் கொண்ட தொகுதி
   1) லா, க, ட, சொ 2) தீ, ஞொ, வோ, ழை
   3) ரொ, ழோ, ணொ, தௌ 4) வி, தொ, மொ, வெ
6. பின்வருவனவற்றுள் சுட்டெழுத்தாக அமைவது
   1) ஊ 2) ஈ 3) எ 4) உ
7. தமிழ் நெடுங்கணக்கில் உள்ளடங்காத எழுத்து
   1) உயிர் எழுத்து 2) மெய் எழுத்து
   3) ஆய்த எழுத்து 4) கிரந்த எழுத்து
8. பின்வருவனவற்றுள் ஓரெழுத்துச் சொல்லாக அமைவது
   1) இ 2) ஹ 3) தௌ 4) கா
9. உயிர்மெய் நெடில், உயிர்மெய் குறில் எழுத்துக்களின் எண்ணிக்கை முறையே
   1) 126, 12 2) 7, 5 3) 126, 90 4) 90, 126
10. ஒலிக்கும்போது நீண்ட ஓசையைக் கொண்டு ஒலிக்கும் எழுத்துக்கள்
    1) நெடில் எழுத்துக்கள் 2) குறில் எழுத்துக்கள்
    3) சுட்டெழுத்துக்கள் 4) உயிர் எழுத்துக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**02. பின்வரும் சொற்களுக்கான ஒத்த கருத்தை எழுதுங்கள்.**

1. மாண்பு ..........................................
2. அற்பர் ..........................................
3. கனி ..........................................
4. தழைகள் ..........................................
5. களிறு ..........................................
6. காலாழ்களர் ..........................................
7. களிப்பு ..........................................
8. கோந்து ..........................................
9. பெற்றம் ..........................................
10. புகலிடம் ..........................................

**03. பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து எழுதுங்கள்.**

1. கர்நாடக .......................... (மாநிலத்தில், மானிலத்தில்) யானைகள் பல பணிகளைச் செய்கின்றன.
2. மணலும் மணல்சார்ந்த நிலமும் .......................... நிலம் எனப்படும். (பாளை, பாலை)
3. விலங்களுக்குத் தேவையான வாழிடங்களையும் ...................... காடுகள் கொடுக்கின்றன. (தளைகளையும், தழைகளையும்)
4. நற்பயிர்களோடு .......................... வளர்ந்தது. (களை, கழை)
5. வயலும் வயல்சார்ந்த நிலமும் ........................ ஆகும். (மருதம், மறுதம்)

**04. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. நால்வகை நிலங்களும் எவை?

..........................................................................................................

2. நால்வகை நிலங்களைப் பிரித்தவர் யார்?

..........................................................................................................

3. அற்பர்களுடனான நட்பு எவ்வாறு அமையும்?

..........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. காடுகள் மனிதனுக்கு எவ்வாறு பயன்படுகின்றன?

.................................................................................................

5. விலங்குகளுடன் ஒப்பிட்டு மக்கட் பண்பைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் தொடர்களை எழுதுங்கள்.

.................................................................................................

6. கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள காட்டு விலங்குகள் எவை?

.................................................................................................

7. விலங்குகள் அழிவுப்பாதையை நோக்கிச் செல்வதற்கான காரணங்கள் எவை என கட்டுரையில் கூறப்பட்டுள்ளது?

.................................................................................................

8. இக்கட்டுரையில் வலியுறுத்தப்படும் கருத்துக்கள் இரண்டினை எழுதுங்கள்.

.................................................................................................

**05. பின்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி பந்தியமைப்பில் எழுதுங்கள்.**

1. இவ்வாறு விவசாயத்துறையில் விஞ்ஞானத்தின் பங்கு அளப்பரி -யது.
2. மனித வாழ்வோடு விஞ்ஞானம் பின்னிப்பிணைந்துள்ளது.
3. பயிர் வளரத் தகுதியற்ற நிலங்கள்கூட பசுஞ்சோலைகளாக்கப் -படுகின்றன.
4. நகரத்தில் மட்டுமன்றி கிராமங்களிலும் இதன் தாக்கம் அதிகரித் -துள்ளது.
5. நிலத்தை உழுதல், மட்டப்படுத்தல், விதைத்தல், நீரிறைத்தல் என்பவற்றை எந்திரங்களே செய்கின்றன.

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. 1. மருத்துநீர் தேய்த்து நீராடினோம்.
2. பின்னர் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் வாழ்த்துக் -களையும் இனிப்புக்களையும் பகிர்ந்தோம்.
3. புத்தாடைகளை அணிந்து பெற்றோருடன் கோயிலுக்குச் சென்று வழிபட்டோம்.
4. சித்திரைப் புத்தாண்டை வரவேற்பதற்கு நாங்கள் மகிழ்ச்சி -யுடன் காத்திருந்தோம்.
5. அதிகாலையிலேயே நித்திரை விட்டு எழுந்தோம்.
6. மாலையில் கலாசார நிகழ்வுகளில் பங்குபற்றி மகிழ்ச்சியாக இருந்தோம்.

.................................................................................................
.................................................................................................
.................................................................................................
.................................................................................................
.................................................................................................
.................................................................................................
.................................................................................................

3. 1. "பருவத்தே பயிர் செய்"
2. மாணவர்கள் கல்வி கற்பதற்கு இளமைப் பருவமே உகந்தது.
3. இது உங்களுக்கு மட்டுமல்லாது யாவருக்கும் பொருத்தமானது.
4. நாம் எந்தவொரு விடயத்தையும் காலம் தாழ்த்தாது செய்தல் வேண்டும்.
5. இளமையில் கல் என்ற ஔவையார் வாக்கும் இதனையே உணர்த்துகின்றது.
6. இப்பருவம் கழிந்த பின் அதைப்பற்றிக் கவலைப்படுவது எவ் வகையிலும் பொருத்தமற்றது.

.................................................................................................
.................................................................................................
.................................................................................................
.................................................................................................
.................................................................................................
.................................................................................................
.................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. 1. அவன் எப்படியும் வாழலாம் என வாழமுடியாது.
   2. இது மனிதனுக்கு மிக அவசியமானது.
   3. உலகில் வாழும் உயிரினங்களுள் மனிதன் மட்டுமே பகுத்தறிவு கொண்டவன்.
   4. ஒழுக்க விழுமியங்களைக் கடைப்பிடித்து கட்டுக்கோப்பான வாழ்க்கை வாழவேண்டும்.
   5. திருவள்ளுவர் ஒழுக்கம் உயிரினும் மேலானது என உரைத்தார்.
   6. ஒழுக்கம் உள்ளவனுக்கு கல்வி, செல்வம் முதலியன தானாகவே வந்து சேரும்.

......................................................................................................

......................................................................................................

......................................................................................................

......................................................................................................

......................................................................................................

......................................................................................................

......................................................................................................

5. 1. கோவலனின் மனைவி கண்ணகி.
   2. இதனை அறிந்த கண்ணகி, துடிதுடித்து அழுதாள்.
   3. சிலப்பதிகாரம் கோவலன் கண்ணகி வரலாற்றைக் கூறுகிறது.
   4. பாண்டிய மன்னனின் அரசவைக்குச் சென்று தன் கணவன் கள்வனல்லன் என்பதை நிரூபித்தாள்.
   5. கோவலன் கள்வனாக குற்றஞ்சாட்டப்பட்டு கொலை செய்யப்பட்டான்.
   6. இன்றுவரை கண்ணகி கற்புக்கரசியாகவே போற்றப்படுகி-றாள்.
   7. கற்பின் திறத்தால் மதுரையை எரித்தாள்.

......................................................................................................

......................................................................................................

......................................................................................................

......................................................................................................

......................................................................................................

......................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. பின்வரும் அட்டவணையை நிரப்புக.

| எழுத்துக்கள் | எண்ணிக்கை | உதாரணம் |
|---|---|---|
| உயிர் எழுத்துக்கள் | | |
| மெய் எழுத்துக்கள் | | |
| உயிர்மெய் எழுத்துக்கள் | | |
| ஆய்த எழுத்து | | |

07. பொருத்தமான எழுத்துக்களை வெற்றிடத்தில் எழுதுங்கள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. யாம் ஐவேம்

★ யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறையிலிருந்து கீரிமலைக்குச் சென்று ஒருவர் எட்டு வயதுச் சிறுமியுடன் உரையாடியபோது இடம்பெற்ற சம்பவம் பாடலாகத் தரப்பட்டுள்ளது.

★ இப்பாடலை மொழிபெயர்ப்புச் செய்தவர் கவிஞர் அழகசுந்தர தேசிகர்.

★ இவர் எழுதிய நூல்கள்:-

இராமன் கதை

பாண்டவர் கதை

சந்திரகாசம்

மனோன்மணி நாடகம்

★ எட்டுவயதுச் சிறுமியின் அறிவுக்கூர்மையை இப்பாடல் எடுத்துரைக்கின்றது.

★ பாடநூலில் உள்ள பாடலைக் கதையாக வாசிப்போம்.

ஒருநாள் காங்கேசன்துறையிலிருந்து கீரிமலை செல்வதற்கு கடற்கரை ஓரமாக நான் நடந்து சென்றேன். அப்போது அழகிய சிறுமி ஒருத்தியைச் சந்தித்தேன்.

அவள் முகத்தில் சந்திரனில் உள்ள சிறு களங்கமும் இல்லை. எட்டு வயதுடைய அவளின் கரிய நிறக் கூந்தலில் சிறிது எட்டாம் நாள் போன்ற நெற்றியில் கிடந்தது. அவளின் இரண்டு புருவங்களும் வில்லிலும் சிறந்த அருச்சுனனின் காண்டீபம், இராமனின் கோதண்டம் போன்றவை. கண்ணிரண்டும் அமுதம் போன்றவை.

இத்தகைய அழகு பொருந்திய சிறுமியிடம், "தங்கச்சி உன் பேர் சொல் அஞ்சுசதம் தருவேன் எனவும் உனக்கு அப்பா, அம்மா, சகோதரர்கள் உண்டோ?" எனவும் கேட்டேன். அவளோ "என் பேர் வெறும் அஞ்சுசதத்திற்குத்தான் பெறுமதி -யானதோ? நாய் தின்னாத காசு இது" என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு, "என் பெயர் சுந்தரி, எனது அம்மாவும் அப்பாவும் வீட்டில் இருக்கின்றனர். எனது அண்ணா சம்பந்தர் கொழும்பில் படிக்கின்றார், எனது அக்கா சிவகாமி இறங்கூனில் உள்ளார், என் தங்கை கற்பகம் போன புரட்டாதி மாதம் நடராசர் பாதத்தைச் சேர்ந்தாள், தம்பி சிதம்பரநாதன் தவழும் குழந்தை.

எல்லோருமாக நாங்கள் ஐந்து பிள்ளைகள்.

நடராசர் அருளால் ஐந்து புலன்கள் போன்று ஐந்து பிள்ளைகள் எமக்கெனப் பெற்றோர் கூறுவர். ஐயா, நீங்கள் கேட்ட கேள்விக்கு விடை தந்தேன்" என்றாள்.

உடனே அவளிடம், "சுந்தரி, நீங்கள் ஐந்து பேர். உங்களில் ஒருத்தி நடராசர் பாதத்தைச் சேர்ந்துவிட்டாள். இப்போது நீங்கள் நான்கு பேர்தானே" எனக் கேட்டதும் சிறுமி, "நீங்கள் பேசுவது விந்தையிலும் விந்தை. நான் கூறுவதைப் பொறுமையுடன் கேளுங்கள்" எனக் கூறினாள்.

"என் அண்ணா கொழும்பில் உள்ளார் எனில் மூன்று எனக் கூறுவீர்கள். அக்கா சிவகாமி இறங்கூனில் என்றால் நீங்கள் மூவர் இல்லை இருவர்தான் என்பீர்கள். இப்போது பெற்றோருடன் நானும் தம்பியும்தான் உள்ளோம். யாழ்ப்பாணத்தை விட்டு மூவரே சென்றார்கள்" என எடுத்துரைத்தாள்.

எட்டு வயதுப் பிள்ளைக்கிருந்த அறிவினை வியந்து பாராட்டி, என் மயக்கம் தெளியப்பெற்றேன்.

✶ சிறுமியின் அறிவு புலப்பட்ட சந்தர்ப்பம்

ஐந்து பிள்ளைகளில் ஒருவர் இறைவனடி சேர்ந்தார் என சுந்தரி கூறியபோது, பெரியவர் ஐவரில் ஒருவர் போனால் நால்வர்தான் எனக் கூறினார். அதற்குச் சிறுமி அண்ணா கொழும்பில் இருக்கிறார். அக்கா இறங்கூனில் இருக்கிறார். அவ்வாறுதான் தங்கையும் இறைவனோடு இருக்கிறாள். நாங்கள் ஐவர் தான் எனப் பதிலுரைத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாணவர் செயற்பாடு**

**01. மிகப் பொருத்தமான விடையின் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுங்கள்.**

1. சுந்தரி அழகு நிறைந்த பெண் ஆவாள். இங்கு அழகு என்பதன் ஒத்த கருத்துச் சொல்

   1) பேதை 2) எழில் 3) அமுதம் 4) பண்பு ( )

2. பவளவிதழ் திறந்து நகை செய்தாள். இங்கு நகை என்பதன் ஒத்த கருத்துச் சொல்

   1) ஆபரணம் 2) கதை 3) புன்னகை 4) அழுகை ( )

3. புலனைந்து என்பதைப் பிரித்து எழுதியதன் சரியான வடிவம்

   1) புலன் +ஐந்து 2) புலன் +னைந்து

   3) புல +னைந்து 4) புலன் +அஞ்சு ( )

4. பின்வருவனவற்றுள் பெண்பாற் சொல்லாக அமைவது

   1. மக்கள் 2. ஒருத்தி 3. நீர் 4. சகோதரர் ( )

5. "பெண்ணரசி பவளவிதழ் திறந்து நகை செய்தாள்" அரசி என்பதன் எதிர்ப்பாற் சொல்,

   1. இளவரசி 2. மகன் 3. இளவரசன் 4. அரசன் ( )

6. பின்வருவனவற்றுள் வேறுபட்ட சொல்லாக அமைவது

   1. பேதை 2. இளையாள் 3. அப்பு 4. ஆச்சி ( )

7. இளையோர்கள் புத்திக்கூர்மையும் நினைவாற்றலும் கொண்டவர்கள். இளையோர் என்பதன் எதிர்ப்பொருள்

   1. முதியோர் 2. சிறுவர்கள் 3. மக்கள் 4. பெரியோர் ( )

8. யான் என்பதன் பன்மைச் சொல்

   1. நான் 2. நாம் 3. யாம் 4. நாங்கள் ( )

9. புன்னகை, ஆபரணம் என்ற இரு பொருள் தரும் ஒரு சொல்

   1. அமுதம் 2. நகை 3. களங்கம் 4. சிரிப்பு ( )

10. பின்வருவனவற்றுள் எழுத்துப் பிழையற்ற சொல்

    1. தவள்கின்றான் 2. தவழ்கின்ரான்

    3. தவழ்கின்றான் 4. தவள்கின்ரான் ( )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**02. பின்வரும் சொற்களுக்கான ஒத்தகருத்துச் சொல்லை எழுதுங்கள்.**

1. மதி :-..................................
2. களங்கம் :-..................................
3. பேதை :-..................................
4. கரிகுழல் :-..................................
5. கோதண்டம் :-..................................
6. காண்டீபம் :-..................................
7. கணை :-..................................
8. இதழ் :-..................................
9. நகை :-..................................
10. இளையாள் :-..................................
11. செப்பினாள் :-..................................
12. நண்ணுதல் :-..................................
13. மெய் :-..................................
14. இயம்புதல் :-..................................
15. பாதம் :-..................................
16. நவின்றாய் :-..................................
17. தவறு :-..................................

**03. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. யாம் ஐவேம் என்ற பாடலை மொழிபெயர்ப்புச் செய்தவர் யார்?

   ..........................................................................................

2. இவர் பாடிய நூல்கள் எவை?

   ..........................................................................................

3. இப்பாடலில் இடம்பெறும் பிரதான பாத்திரங்களைக் குறிப்பிடுக.

   ..........................................................................................

4. பெரியவர் எங்கே நடந்து சென்றார்?

   ..........................................................................................

5. சிறுமியின் அழகு எத்தகையது எனக் கூறப்படுகிறது?

   ..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. பின்வருவன எவற்றுடன் ஒப்பிடப்படுகின்றன?

1. நெற்றி:- ..........................................................

2. இருபுருவங்கள்:- ..........................................................

3. இதழ்:- ..........................................................

05. "என்னாய்ச்சி என்னப்பு" எனக் குறிப்பிடப்படுவோர் யாவர்?

..........................................................

06. பின்வரும் பேச்சு வழக்குச் சொற்களை எழுத்துவழக்கில் தருக.

1. அஞ்சுசதம்:- ..........................................................

2. பேர்:- ..........................................................

3. அஞ்சினிலொன்று போனல் நாலு:-

..........................................................

07. பிள்ளைகள் ஐவரையும் பெற்றோர் எதனுடன் ஒப்பிட்டுக் கூறியுள்ளனர்?

..........................................................

08. நாங்கள் ஐவர் எனச் சிறுமி கூறியபோது பெரியவர் கூறிய பதில் யாது?

..........................................................

09. "அஞ்சினிலொன்று போனால் நாலன்றோ?" எனப் பெரியவலட கூறியதன் பொருள் யாது?

..........................................................

10. பெரியவரின் பதிலை சுந்தரி எவ்வாறு மறுத்துரைத்தாள்?

..........................................................

11. சுந்தரியின் நற்பண்புகளை எழுதுக.

..........................................................

..........................................................

12. "ஐவரிலே ஒருத்தி நடராசர் பாதம் நண்ணின் பாக்கி பின்னர் நால்வர் உளீர்"

இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

..........................................................

13. "யாழ்ப்பாணந்தனை விட்டு மூவரவர் சென்றார்" இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

..........................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ **பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் அடையாமிடுங்கள்.**

14. யாம் ஐவேம் என்ற பாடல் எட்டு வயதுச் சிறுமியின் மதிநுட்பத்தை எடுத்துக் கூறுகிறது. [ ]

15. சிறுமியின் புருவங்கள் பிறைக்கு ஒப்பிடப்படுகிறது. [ ]

16. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன ஐம்புலன்களாகும். [ ]

17. சிறுமிக்கு தம்பி ஒருவரும் தங்கை ஒருவருமே உள்ளனர். [ ]

18. இராமனின் வில் கோதண்டம் ஆகும். [ ]

19. சுந்தரியின் இதழ் பவளம் போன்றது. [ ]

**I. பின்வரும் சொற்களுக்கு எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுங்கள்**

1. களங்கம்:- ..........................................
2. அமுதம்:- ..........................................
3. மெய்:- ..........................................
4. மயக்கம்:- ..........................................
5. சிறியோர்:- ..........................................
6. தவறு:- ..........................................
7. கேள்வி:- ..........................................
8. அடிமை:- ..........................................
9. அகங்கை:- ..........................................
10. இயற்கை:- ..........................................
11. ஒற்றுமை:- ..........................................
12. பண்டிதர்:- ..........................................
13. அண்மை:- ..........................................
14. ஈதல்:- ..........................................
15. பாலர்:- ..........................................
16. இரகசியம்:- ..........................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. வெற்றி:- ..............................................

18. இம்மை:- ..............................................

19. மேலோர்:- ..............................................

20. ஏழை:- ..............................................

**II. பின்வரும் சொற்களுக்கான எதிர்ப்பாற் சொற்களை எழுதுங்கள்.**

1. அப்பு:- ..............................................
2. தாய்:- ..............................................
3. இளையவள்:- ..............................................
4. அக்கா:- ..............................................
5. தம்பி:- ..............................................
6. சிறுவன்:- ..............................................
7. சகோதரன்:- ..............................................
8. பெண்:- ..............................................
9. மூதாட்டி:- ..............................................
10. ஒருத்தி:- ..............................................

**கதைப்பாடல்**

## தைரியமுள்ள சிறுவன்

அண்ணா! அண்ணா! அங்கே பார்
அதிகம் விரைவா யொருநாய் தான்
எண்ணி எம்மைக் கொல்வதற்கு
எதிர்த்து வருகிற தங்கேபார்

அச்சம் மிகவாய் வருகுதையோ
அண்ணா! என்னைக் காத்திடுவார்
எச்சங் கடமும் விளையாமல்
வேண்டிக் கடவுள் தனைத்துதிப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணே மணியே கலங்காதே
காப்பேன் உன்னை இரத்தினமே
எண்ணி எண்ணி என்மனந்தான்
புண்ணாய் நோவப் புலம்பாதே

என்று சொல்லிச் சட்டைதனை
எடுத்துக் கையிற் சுற்றியபின்
நன்று நன்று இனிவரினே
நானே கொல்வேன் நாயென்றான்

நாயுங் கிட்டச் சிறுமியுந்தான்
நடுங்கித் தமையன் பின் சென்று
பாயும் நாயைப் பாராமற்
பார்க்கும் கண்ணை மூடினளே.

அதனைக் கண்ட மனிதர்சிலர்
அந்தோ விசர்நாயதுவெனவே
அதனைக் கொல்வோம் நாமெனவே
எதிர்த்து வந்தார் தடியுடனே

சிறுவன் மீதிற் பாய்ந்த நாய்
சிக்கிச் சட்டைதனிக்கிடப்பத்
தறுகண் மனித ரதைத்தடியால்
தாக்கிக் கொன்று விட்டனரே

இவற்றை எல்லாஞ் சிறுமிசென்று
எடுத்துத் தாய்க்குச் சொல்லுதலும்
எவரும் மெச்சுந் தைரியவான்
என்றவன் முதுகிற் தட்டினளே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 06. காந்தியடிகள் கடிதம்



- ❖ மோகனதாஸ் கரம் சந்த் காந்தி அவர்கள் மகாத்மாவாகப் போற்றப்படுகின்றார்.
- ❖ காந்தியடிகளுக்கு மகாத்மா என்ற பட் -டத்தை வழங்கியவர் கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் ஆவார்.
- ❖ மகாத்மா காந்தி அவர்கள் இந்தியாவின் குஜராத் மாநிலத்தின் போர்ப்பந்தர் கிராமத் -தில் 1869ஆம் ஆண்டு 10ஆம் மாதம் 2ஆம் திகதி பிறந்தார்.
- ❖ இவரது தந்தையின் பெயர் மோகனதாஸ்.
- ❖ காந்தி அடிகள் அன்பால் எதையும் சாதிக்கலாம் என்பதற்கி ணங்க அஹிம்சை வழியில் வாழ்ந்தார்.
- ❖ ஆங்கிலேயர் இந்தியாவில் செய்த தகாத செயல்களை எதிர்த்து அஹிம்சை வழிப்போராட்டத்தை முன்னெடுத்து இந்திய நாட் -டிற்குச் சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுத்தார்.
- ❖ இவர் 1948ஆம் ஆண்டு விநாயகக் கோட்சே என்பவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- ❖ சத்தியசோதனை என்ற நூல் மகாத்மாகாந்தியால் எழுதப்பட்ட சுயசரிதை நூலாகும்.
- ❖ காந்தியவர்கள் 1922ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14ஆம் திகதி ஏரவாடாச் சிறையிலிருந்து ஹகீம் அலஜ்மல்கான் என்பவருக்கு கடிதம் எழுதினார்.
- ❖ பாடநூலில் தரப்பட்டுள்ள கடிதத்தின் முக்கிய விடயங்கள் இங்கு தரப்பட்டுகின்றது.
- ❖ மகாத்மாகாந்தி சிறைவாழ்க்கையைப் பயன்படுத்திய தன்மை கள்
    - சிறைவாழ்க்கையில் தனிமையாக இருந்தாலும் மகிழ்வோடு இருந்தார்.
    - அமைதியை மிகவும் விரும்பினார்.
    - படிப்பதற்கான அதிக சந்தர்ப்பம் கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ சிறை வாழ்க்கையில் காந்தி அவர்களின் தினசரிக் கடமைகள்

- காலை நான்கு மணிக்குப் பிரார்த்தனைக்காக எழும்புதல்.
- ஆறரை மணிக்குப் படிக்க ஆரம்பித்தல். விளக்கு வைக்க முடியாமையால் வெளிச்சத்தின் பின்பே படிக்க முடிந்தது. மாலை ஏழுமணிக்கு இருள் சூழ்ந்ததும் நிறைவு செய்தல்.
- இரவு எட்டு மணிக்குப் பிரார்த்தனையின் பின் நித்திரைக்குச் செல்லல்.
- தினமும் நான்கு மணிநேரம் இராட்டை சுற்றல், பஞ்சடித்தல் தொழிலில் ஈடுபடுதல்.
- தினமும் இரண்டு வேளை உணவு உண்ணல். இதனால் அன்றாட வேலைகளை இலகுவாக ஆற்றமுடிந்தது.

❖ காந்தியின் சிறை வாழ்க்கை

- சிறை அதிகாரி உணவு விடயத்தில் தாராள மனப்பாங்குடன் செயற்பட்டார்.

  மூன்று நாட்கள் ஆட்டுப்பாலும் வெண்ணெயும் வழங்கினார்.
- இவருக்கு இரண்டு கம்பளிகளும் ஒரு பாயும் இரண்டு துப்பட்டிகளும் (போர்வை) வழங்கப்பட்டன.
- ஒரு தலையணையும் பின்னர் வழங்கப்பட்டது.

  ஆனால் இது இன்றி புத்தகங்கள், துணிகளைச் சுருட்டி தலை -யணையாக வைத்திருந்தார்.
- இராஜகோபாலாச்சாரியாரின் செல்வாக்கால் தலையணை கிடைத்தது.
- காந்தியின் பயன்பாட்டிற்காக தனியொரு குளியலறையும் ஒதுக்கப்பட்டது.
- சுகாதார வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டது.

❖ காந்தியடிகளுக்குச் சிறைவாசம் பாடசாலையைப் போன்று இருந்தது.

❖ சிறைக்கு வெளியில் இருந்ததை விடவும் அதிகமான வேலையை சிறையினுள் ஆற்றினார்.

❖ சிறையில் எவ்வித அச்சமுமின்றித் துணிவுடன் இருந்தார்.

❖ காந்தியடிகள் நம்பிக்கை கொண்டுள்ள விடயம்

வெளியில் ஆடம்பரமாகத் தோன்றும் விடயங்களைவிட தூய் -மையான உள்ளத்திலிருந்து வெளிவரும் உண்மையான பிரார்த் -தனை சிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாணவர் செயற்பாடுகள்**

**01. மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. காந்தியடிகள் ஹகீம்ஜிக்குக் கடிதம் எழுதினார். இங்கு கடிதம் என்பதன் ஒத்தசொல்

 1) மடல் 2) கட்டுரை 3) பனுவல் 4) நூல்

2. "நான் அமைதியை விழைகிறேன்" இங்கு விழைகிறேன் என்பதன் பொருள்

 1) கூறுகிறேன் 2) உருவாக்குகிறேன்
 3) விதைக்கிறேன் 4) விரும்புகிறேன்

★ **கீழே தரப்பட்ட வாக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

3. சிறைவாசத்தை வரப்பிரசாதமாக மகாத்மா காந்தி எண்ணினார். இங்கு வரப்பிரசாதம் என்பதன் ஒத்த சொல்

 1) பிரசாதம் 2) வரம் 3) அருட்கொடை 4)உதவி

4. தரப்பட்ட வாக்கியத்தின் எழுவாய், செயற்படுபொருளாக அமை -வன

 1) சிறைவாசம், எண்ணினார்
 2) சிறைவாசம், மகாத்மாகாந்தி
 3) மகாத்மாகாந்தி, சிறைவாசம்
 4) வரப்பிரசாதம், சிறைவாசம்

5. பின்வருவனவற்றுள் வழுவற்ற சொல்லாக அமைவது

 1) நீர்வழங்கள் வடிகாலமைப்புச்சபை
 2) நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை
 3) நீர்வளங்கள் வடிகாலமைப்புச்சபை
 4) நீர் வளங்கள் வடிகாளமைப்புச்சபை

6. மதம், சந்தர்ப்பம் ஆகிய சொற்களைக் குறிக்கும் ஒருசொல்

 1) மார்க்கம் 2) சமயம் 3) தருணம் 4) அறவழி

7. நம்பிக்கை என்ற சொல் குறிக்கும் எதிர்ச்சொல்

 1) நம்பிக்கையீனம் 2) தன்னம்பிக்கை 3)அவநம்பிக்கை 4)திடம்

**இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து கோடிடுங்கள்.**

8. சிறைச்சாலையில் காந்தியடிகள் திறந்த வெளியில் படுப்பதற்கு ...................... வழங்கப்பட்டது.

 1) அனுமதி 2) கோரிக்கை 3) ஆலோசனை 4) உத்தரவாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. மகாத்மாகாந்தி ஹகீம்ஜிக்கு எழுதிய கடிதத்தின் வகை ............

1) தொழில்முறைக் கடிதம் 2) உறவுமுறைக் கடிதம்

3) வாழ்த்துமடல் 4) முறையீட்டுக் கடிதம்

10. காந்தியடிகளின் கடிதத்தில் அன்புள்ள ஹகீம்ஜி, என்பது கடித உறுப்புகளில் .................. ஐக் குறிக்கிறது.

1) தலைப்பு 2) சுகம் விசாரித்தல்

3) விளிப்பு 4) ஒப்பம்

11. கடிதத்தில் முகவரியுடன் .................... எழுதுதல் கட்டாயமானது

1) திகதி 2) விளிப்பு 3) செய்தி 4) ஒப்பம்

12. நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் நட்பு ரீதியில் எழுதப்படும் கடிதம்

1) உறவுமுறைக் கடிதம் 2) தொழில்முறைக் கடிதம்

3) முறைப்பாட்டுக் கடிதம் 4) அழைப்பிதழ்

13. சீமான் என்பதன் எதிர்ப்பாற் சொல்

1) சீமாள் 2) சீமாட்டி 3) சீமை 4) சீதை

14. காந்தியடிகள் எழுதிய கடிதத்தின் மையக்கருத்தாக அமையும் விடயம்

1) சிறைவாழ்க்கையின் துன்பம்

2) ஒழுக்க விழுமியம்

3) தினமும் சிறைவாழ்வில் செய்யப்படும் கருமங்கள்

4) சிறைச்சாலை வசதிகள்

15. பின்வரும் வாக்கியங்களின் மிகச் சரியான ஒழுங்கமைப்பைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.

அ) இவர் கருவிலேயே திருவுடையவராகப் பிறந்தார்.

ஆ) அதுமட்டுமன்றி குழந்தைப் பாடல்களையும் பாடினார்.

இ) உலக மகாகவிஞர்களுள் பாரதியும் ஒருவர்.

ஈ) இதனால் சிறுகுழந்தையும் பாரதியை அறிந்திருந்தது.

உ) இவர் பெரியார்களுக்காக அதிக கவிதைகளைப் பாடினார்.

1) அ, ஆ, ஈ, உ, இ 2) இ, அ, உ, ஆ, ஈ

3) இ, ஈ, உ, ஆ, அ 4) அ, இ, உ, ஆ, ஈ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**02. பின்வரும் சொற்களுக்கான ஒத்தகருத்துச் சொற்களை எழுதுங்கள்.**

1. நூல் :-..................................................
2. அஹிம்சை :-..................................................
3. விழைகிறேன் :-..................................................
4. பிரார்த்தனை :-..................................................
5. அனுகூலம் :-..................................................
6. சௌகரியம் :-..................................................
7. ஆகாரம் :-..................................................
8. உபயோகித்தார் :-..................................................
9. கவலை :-..................................................
10. மகிழ்ச்சி :-..................................................
11. நிர்மலம் :-..................................................
12. மனம் :-..................................................
13. ஆடம்பரம் :-..................................................
14. காரியம் :-..................................................

**03. பின்வரும் சொற்களை வைத்துப் பொருள் விளங்க வாக்கியம் அமையுங்கள்.**

1. சத்தியாக்கிரகம் :-..................................................
..................................................
2. இராட்டை :-..................................................
..................................................
3. வேலை :-..................................................
..................................................
4. வேளை :-..................................................
..................................................
5. துப்பட்டி :-..................................................
..................................................
6. நிர்மலமான :-..................................................
..................................................
7. பஞ்சடித்தல் :-..................................................
..................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. அனுகூலம் :-..............................................................................

..........................................................................................

9. பறவை :-..............................................................................

..........................................................................................

10. பரவை :-..............................................................................

..........................................................................................

**04. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. மகாத்மாகாந்தி எந்தச் சிறையிலிருந்து இக்கடிதத்தை எழுதினார்? யாருக்கு எழுதப்பட்டது?

..........................................................................................

2. மகாத்மாகாந்தியின் சிறைவாசம் எவ்வாறு அமைந்திருந்தது?

..........................................................................................

3. காந்தியடிகள் தினமும் செய்த கடமைகள் எவை?

..........................................................................................

4. அன்றாட வேலையை இலகுவாக்குவதற்கு காந்தியடிகள் மேற்கொண்ட நடவடிக்கை யாது?

..........................................................................................

5. காந்தியடிகளுக்கு சிறைச்சாலையில் செய்து கொடுக்கப்பட்ட வசதிகள் எவை?

..........................................................................................

6. சிறைவாழ்க்கை எதைப்போன்று இருப்பதாகக் காந்தி குறிப்பிடுகிறார்?

..........................................................................................

7. மகாத்மாகாந்தி நம்பிக்கை கொண்டுள்ள விடயம் எது?

..........................................................................................

8. மகாத்மா காந்தியின் கடிதத்தின் மூலம் நீங்கள் பெற்றுக் கொண்ட அறிவுரைகள் எவை?

..........................................................................................

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாத்மா காந்தி அவர்கள் பற்றி மகாகவி சுப்பிரமணிய பாரதியார் எழுதிய கவிதை

*வாழ்க நீ! எம்மான் இந்த*
*வையத்து நாட்டிலெல்லாம்*
*தாழ்வுற்று வறுமை மிஞ்சி*
*விடுதலை தவறிக்கெட்டுப்*
*பாழ்பட்டு நின்றதாமோர்*
*பாரததேசந் தன்னை*
*வாழ்விக்க வந்த காந்தி*
*மஹாத்ம! நீ வாழ்க! வாழ்க!*

*அடிமைவாழ் வகன்றிந் நாட்டார்*
*விடுதலை யார்ந்து செல்வம்,*
*குடிமையினுயர்வு, கல்வி*
*ஞானமும் கூடி யோங்கிப்*
*படிமிசைத் தலைமை யெய்தும்*
*படிக்கொரு சூழ்ச்சி செய்தாய்*
*முடிவிலாக் கீர்த்தி பெற்றாய்*
*புவிக்குள்ளே முதன்மை யுற்றாய்!*

- மகாகவி பாரதியார் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. தமிழ் தட்டச்சின் தந்தை

❖ தமிழ் தட்டச்சின் தந்தை என்ற கட்டுரை கா.மாணிக்கவாசகரால் 1959ஆம் ஆண்டில் எழுதப்பட்டது.

❖ இக்கட்டுரை சரஸ்வதி களஞ்சியம் என்ற இதழில் இருந்து எடுக்கப்பட்டது.

❖ ஆங்கிலேயர் அரசியல் நிர்வாகத்தில் சிறந்து விளங்குவதற்கும் ஆங்கிலமொழி உலகமொழியாக விளங்குவதற்கும் ஆங்கிலத் தட்டச்சு மிக முக்கிய காரணமாகும்.

❖ 1875ஆம் ஆண்டு ரெமிங்டன் தட்டச்சு வியாபாரத்திற்கு கொண்டுவரப்பட்டது.

❖ வர்த்தக நிறுவனங்கள் இவ்வியந்திரத்தை முதலில் வாங்கிய போதும் பின்னர் அரசினர், நிறுவனங்கள், தனிமனிதர்களும் விரும்பி வாங்கினர்.

❖ முன்னர் பயன்படுத்தப்பட்ட ஊற்றுப்பேனாவின் உபயோகம் குறைந்து தட்டச்சினைப் பயன்படுத்தத் தொடங்கினர்.

❖ தட்டச்சின் முக்கியமான பயன்பாடு

- எழுதுகோலால் எழுதும்போது வினாடி ஒன்றிற்கு இருபது சொற்களே எழுதமுடியும். ஆனால் தட்டச்சில் மிக விரைவாக தட்டச்சுச் செய்ய முடிவதால் எண்ணங்களை விரைவாகத் தட்டச்சு செய்யலாம்.

❖ ஆங்கிலத்தில் இருபத்தாறு எழுத்துக்களே உள்ளமையால் அவற்றை தட்டச்சில் அமைப்பது கடினமான ஒன்றல்ல.

❖ தமிழில் உள்ள 247 எழுத்துக்களையும் வடமொழி எழுத்துக்கள், தமிழ் எண்கள், குறியீடுகள் என்பவற்றையெல்லாம் தட்டச்சில் அமைப்பது மிகவும் கடினமான ஒன்று.

❖ தமிழ்மொழியைத் தட்டச்சில் அமைப்பதற்கு சவால்களை எதிர் கொள்ள வேண்டியிருந்தது.

- தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது.
- பணம் முதலிடுமளவிற்கு விற்பனை செய்யப்படுமோ என்ற ஐயம் நிலவியது.
- ஆங்கில மோகம் அதிகம் காணப்பட்டமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ தமிழ் தட்டச்சினை அமைப்பதற்கு யாழ்ப்பாணம் - சுண்டிக் -குளியைச் சேர்ந்த முத்தையா என்பவர் துணிவுடன் செயலாற்றி னார்.

❖ இவரின் தந்தையின் பெயர் இராமலிங்கம்.

❖ 1886ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இருபத்து நான்காம் திகதி பிறந்தார்.

❖ இறுதிமகனாகப் பிறந்த முத்தையா ஏழு வயதிலேயே தந்தையை இழந்தார்.

❖ தாயாரின் பராமரிப்பில் வளர்ந்து கலாசாலையில் கல்வி பயின் றார். சிறிது காலத்தில் தாயாரும் நோயினால் பீடிக்கப்பட்டார்.

❖ முத்தையாவை வெளிதேசத்திற்கு அனுப்பவேண்டும் எனத் தாயார் விரும்பினார். இதற்கமைய மலாயா நாட்டிற்கு 1907ஆம் ஆண்டு சென்றார்.

❖ சிங்கப்பூருக்குச் சென்ற முத்தையா போர்னியோவுக்கு செல்ல இருந்தார்.

❖ டானியல் என்ற போதகர் சிங்கப்பூரில் ரெயில்வே இலாகாவில் வேலை பெற்றுக் கொடுத்ததும் சிங்கப்பூரிலேயே தங்கினார்.

❖ சில நாட்களின் பின், அவ் வேலையை விட்டு ஜஸ்பெரி அன் கார்லன்ட் என்ற பிரபல வர்த்தக ஸ்தாபனத்தில் வேலை ஏற்றார்.

❖ இரண்டு வருடங்களின் பின் அந்நிறுவனத்தின் பிரதம எழுது வினைஞர் பதவியைப் பெற்றார்.

❖ 1930ஆம் ஆண்டு வரை பணி புரிந்த அவர், இக்காலத்திலேயே உயர்தர கணக்குப்பதிவு, பொருளாதாரம், தட்டச்சு அடித்தல், சுருக்கெழுத்து ஆகியவற்றையும் கற்றார்.

❖ 1913ஆம் ஆண்டில், நடைபெற்ற சிலோன் குப்ளோயன், சுருக்கெழுத்துப் போட்டியில் சர்வதேச வெள்ளிப்பதக்கத்தை -யும் பெற்றார்.

❖ முத்தையா ஆங்கில தமிழ் இலக்கியங்கள், கைத்தொழில் நூல் -கள், சமய நூல்கள் என்பவற்றையும் கற்றார்.

❖ சுயமுயற்சியில் அதிக நம்பிக்கை கொண்ட இவர் துணிந்த உள் -ளம் கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ தனக்குச் சரியெனப்பட்டதை துணிவுடன் சொல்வார்.

❖ இவர் கடமையாற்றிய ஸ்தாபனத்தின் ஒழுங்கும் நிர்வாகத் திறமையும் இவரைக் கவர்ந்தன. தமிழர்களும் இவ்வாறு மாற்றம் பெற வேண்டும் எனச் சிந்தித்தார்.

❖ தமிழில் தட்டச்சு இல்லாத குறையினை நீக்குவதற்கு அது தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபட்டார்.

❖ தமிழ் தட்டச்சு அமைப்பதற்கு மேற்கொண்ட முயற்சிகள்

- 247 எழுத்துக்களை ஒரு வடிவத்திலும் 46 விசைகளை மறுபக்கத்திலும் வைத்து அமைப்பது தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபட்டார்.
- தனது ஆங்கிலப் பொறியியல் நண்பர்களிடம் ஆலோசனை கேட்டார்.
- இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள தமிழ் நண்பர்களுடன் தொடர்புகொண்டு கருத்துக்களைக் கேட்டமை.
- 72இற்கு மேல் எழுத்துக்களைக் குறைக்க முடியவில்லை. இதனைக் கொண்டு தட்டச்சை நிறைவேற்றும் பணியை மேற்கொண்டார்.

❖ முத்தையா தான் வடிவமைத்த தட்டச்சிற்கு ஸ்டான்டர்ட் என்ற பெயரிட்டார்.

❖ ஸ்டான்டர்ட் தட்டச்சின் சிறப்பம்சங்கள்:-

- தமிழின் 247 எழுத்துக்களையும் 46 விசைகளில் அமைக்க முடியாது. இதற்காக சில எழுத்துக்களுக்குப் பொதுவாக உள்ள சில குறியீடுகளைத் தனித்தனி வகைகளில் அமைத்து அவற்றை தேவையான எழுத்துக்களுடன் இணைத்து அச்சடிக்கக் கூடியதாக விசைப்பலகை அமைக்கப்படல் வேண்டும்.

இரண்டு விசைகளை அழுத்திய பின்னரே அச்சை நகரச் செய்தல் வேண்டும். இதற்கான ஆய்வினை மேற்கொண்டு நகராவிசையைக் கண்டுபிடித்தார்.

உம்:- விசிறி ( ി) பொதுவான குறியீடுகளில் ஒன்று. தகரம் என்ற சொல்லை அடிக்கும்போது 'த்' அடித்த பின் அச்சு நகர்ந்ததும் 'க' எழுத்து தட்டச்சு செய்யப்படும். ஆனால் தி என்ற எழுத்தை அடிக்கும்போது இவ்வாறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர்ந்தால் த ி என்றே அமையும். இதற்காக விசிறியை அடிக்கும் போது அச்சு நகராதவாறும் எஞ்சியுள்ள 'த்' எழுத்தை அடித்தபின் நகரும் வகையிலும் விசைப் -பலகையைக் கண்டுபிடித்தார்.

❖ இன்றுவரை இவர் உருவாக்கிய நகராவிசையே தட்டச்சு உற்பத்தியாளர்களால் பயன்படுத்தப்படுகிறது.

❖ முன்னர் இருந்த தட்டச்சுக்களில் இருகை விரல்களுக்கும் சமமான வேலை கொடுக்கப்படுவதில்லை.

❖ முத்தையா அவர்கள் கண்டுபிடித்த தட்டச்சு இருகை விரல்களுக் -கும் சமமாக வேலை கொடுக்கும் வகையில் வடிவமைக்கப்பட் -டது.

❖ தமிழ் எழுத்துக்களில் ய, ள, க, ப, ர, ம, ட, ந, ச, வ, ல, ர, ன, டி ஆகிய எழுத்துக்கள் அதிகம் பயன்படுத்தப்படுகின்றமையை ஆய்வாளர்கள் கண்டறிந்தனர்.

❖ அரசினரின் விசைப்பலகையின் கீழ் இடத்தில் இவை அமைக் கப் பட்டிருக்கின்றது. முத்தையா அவர்களது விசைப்பலகை அமைப்பும் இத்தகைய அமைப்பிலேயே இருக்கின்றமை அவரது ஆராய்ச்சியை எடுத்துக்காட்டுகிறது.

❖ முத்தையா அவர்கள் முதலாம் உலகமகா யுத்தம் முடிந்த பின் தான், கண்டுபிடித்த விசைப்பலகையை ஜேர்மனியின் சைடல் அன் நௌமான் என்ற நிறுவனத்திடம் ஒப்படைத்து அச்சுக் -களை உருவாக்கினார்.

❖ அதிகளவில் இறக்குமதி செய்து விற்றார்.

❖ தொடர்ச்சியான முயற்சியால் தான் அமைத்த விசைப்பலகை யில் உள்ள சில குறைகளைக் கண்டறிந்தார்.

❖ அவற்றை நீக்கி "டீஜோ", "ஐடியல்" ஆகிய போர்ட்டபிள் தட்டச் -சுக்களை உருவாக்கினார்.

❖ இவைகளைப் பின்பற்றி "ஆர்.ஸி", "எரிகா", "யுரேனியா", "ஹல்டா" முதலிய தட்டச்சுக்கள் வெளியாகின.

❖ தமிழ் உலகமே தமிழ்த் தட்டச்சின் தந்தை முத்தையா அவர் -களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாணவர் செயற்பாடு**

**01. பின்வரும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து கோடிடுங்கள்.**

1. தட்டச்சினால் சிந்தனைகளை விரைவாகப் பொறிக்கலாம். சிந்தனை என்பதன் ஒத்தசொல்

   1. எண்ணம் 2. கற்பனை 3. ஞாபகம் 4. ஆற்றல்

2. தட்டச்சு இன்றியமையாத ஒரு சாதனம் ஆகும். சாதனம் என்பதற்குப் பொருத்தமற்ற சொல்

   1. விசைப்பலகை 2. கருவி
   3. பொறி 4. உபகரணம்

3. முத்தையா வெளிதேசம் செல்ல வேண்டும் என்பது தாயாரின் கோரிக்கையாக இருந்தது. கோரிக்கை என்பதன் ஒத்தகருத்துச் சொல்

   1. வேண்டுதல் 2. மன்றாட்டம் 3. விருப்பம் 4. ஆலோசனை

4. ஆங்கிலம் உலகமொழியாவதற்கு Type writer (ரைப் ரைட்டர்) முக்கிய காரணம். இங்கு Type writer என்ற சொல்லின் தமிழ்ப் பதம்

   1. விசைப்பலகை 2. பொறி
   3. தட்டச்சு 4. இலாகா

5. முத்தையா குமாஸ்தாவாக பதவி உயர்வு பெற்றார். குமாஸ்தா என்பது

   1. இலாகா 2. அதிகாரி
   3. எழுதுவினைஞர் 4. போதகர்

**இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து எழுதுங்கள்.**

6. முத்தையா தமிழ் தட்டச்சிற்காகப் பல ............ மேற்கொண்டார்.

   1. ஆராய்சிகளை 2. ஆறாய்ச்சிகளை
   3. ஆராட்சிகளை 4. ஆராய்ச்சிகளை

7. முத்தையா தான் கண்டுபிடித்த தட்டச்சிற்கு ...................... எனப் பெயரிட்டார்.

   1. யுரேனியா 2. ஸ்டான்டர்ட் 3. எரிகா 4. ஐடியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. முத்தையா அச்சுக்களை உருவாக்கியதுடன் நின்றுவிடாது தனது ஆய்வை தொடர்ந்தும் ..........................

1. முன்னெடுத்தார் 2. முன்னெடுக்கவில்லை
3. முன்னெடுத்தனர் 4. முயற்சி செய்தார்

9. பின்வருவனவற்றுள் வடமொழி எழுத்தாக அமைவது

1. ஜ 2. ஐ 3. ய 4. ஞ

10. ய ள க ம போன்ற எழுத்துக்கள் அதிகம் பயன்படுபவை. யளகம ஆகியவற்றுக்கிடையில் பயன்படுத்தக்கூடிய பொருத்தமான நிறுத்தற்குறியீடு

1. முற்றுப்புள்ளி 2. காற்புள்ளி
3. முக்காற்புள்ளி 4. மேற்கோட்குறி

**02. தொடர்புபடுத்துங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | தமிழ் தட்டச்சின் தந்தை | சைடல் அன் நெளமான் |
| 2. | தமிழ் தட்டச்சின் தந்தையின் கட்டுரை ஆசிரியர் | ரெமிங்டன் |
| 3. | முதல் தமிழ் தட்டச்சு | ஆர்.முத்தையா |
| 4. | அச்சு உருவாக்கம் | கா.மாணிக்கவாசகர் |
| 5. | ஆங்கில தட்டச்சு | ஸ்டான்டர்ட் |

**03. பின்வரும் சொற்களுக்கான ஒத்தகருத்துச் சொற்களை எழுதுக.**

1. மொழி :-..........................................
2. வியாபாரம் :-..........................................
3. உபயோகம் :-..........................................
4. எழுதுகோல் :-..........................................
5. விரைவாக :-..........................................
6. சிந்தனை :-..........................................
7. உதித்தல் :-..........................................
8. இன்றியமையாதது :-..........................................
9. சாதனம் :-..........................................
10. பொறி :-..........................................
11. சுலபம் :-..........................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. மோகம் :-..............................................
13. திறமை :-..............................................
14. கோரிக்கை :-..............................................
15. பணி :-..............................................
16. நூல் :-..............................................
17. சீடர் :-..............................................
18. அபிப்பிராயம் :-..............................................
19. யுத்தம் :-..............................................
20. நிரை :-..............................................

**04. பின்வரும் சொற்களுக்கான எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுக.**

1. சுலபம் ..............................................
2. குறை ..............................................
3. நண்பர் ..............................................
4. வெற்றி ..............................................
5. இறக்குமதி ..............................................

**05. பின்வரும் சொற்களை வைத்துப் பொருள் விளங்க வாக்கியம் அமையுங்கள்.**

1. பொறி :-..............................................
..............................................
2. பொரி :-..............................................
..............................................
3. சாதனம் :-..............................................
..............................................
4. சாதகம் :-..............................................
..............................................
5. நிரை :-..............................................
..............................................
6. நிறை :-..............................................
..............................................
7. தட்டச்சு :-..............................................
..............................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. இலாகா :-.................................................................................................

..........................................................................................................

9. குமாஸ்தா :-...........................................................................................

..........................................................................................................

10. பனி :-.................................................................................................

..........................................................................................................

11. பணி :-.................................................................................................

..........................................................................................................

12. விரல் :-...............................................................................................

..........................................................................................................

13. விறல் :-...............................................................................................

..........................................................................................................

**06. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. தமிழ் தட்டச்சின் தந்தை என்ற கட்டுரை இடம்பெற்ற இதழ் எது? இக்கட்டுரை யாரால் எழுதப்பட்டது?

..........................................................................................................

2. தட்டச்சுப் பொறியினால் ஆங்கிலமொழி பெற்ற சாதகங்கள் எவை?

..........................................................................................................

3. எழுதும்போது எழுதுகோலை விடவும் தட்டச்சினைப் பயன் படுத்துவது சிறப்பானது எனக் கூறப்படுவதன் காரணம் யாது?

..........................................................................................................

4. தட்டச்சு முதலில் எந்த மொழியில் உருவாக்கப்பட்டது?

..........................................................................................................

5. தமிழ் எழுத்துக்களை தட்டச்சில் உருவாக்குவதற்குக் கடினமாக இருந்தமைக்கான பிரதான காரணம் யாது?

..........................................................................................................

..........................................................................................................

6. இராமலிங்கம் என்பவர் யார்? இவரது குரு யார்?

..........................................................................................................

7. முத்தையா வர்த்தக ஸ்தாபனத்தில் பணியாற்றியபோது எவற்றைக் கற்றார்?

..........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. வியாபாரத்திற்குக் கொண்டுவரப்பட்ட முதலாவது ஆங்கிலத் தட்டச்சு எது? எத்தனையாம் ஆண்டு கொண்டுவரப்பட்டது?

..................................................................................................

9. முத்தையா உருவாக்கிய தட்டச்சிற்கு வழங்கப்பட்ட பெயர் யாது?

..................................................................................................

10. நகரா விசையைக் கண்டுபிடித்தவர் யார்? இதன் சிறப்பம்சம் யாது?

..................................................................................................

..................................................................................................

11. அரசினரின் விசைப்பலகையின் கீழ் இடத்தில் வைக்கப்பட்-டுள்ள எழுத்துக்கள் எவை? இவ்வாறு வைக்கப்பட்ட காரணம் யாது?

..................................................................................................

..................................................................................................

12. முத்தையா உருவாக்கிய விசைப்பலகையில் அச்சுக்களை உருவாக்கிய நிறுவனம் யாது?

..................................................................................................

13. முத்தையா குறைகளை நீக்கி உருவாக்கிய தட்டச்சுக்கள் எவை?

..................................................................................................

14. இவரின் முறையைப் பின்பற்றி உருவாக்கப்பட்ட தட்டச்சுக்கள் எவை?

..................................................................................................

**07. பின்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி பந்தியாக எழுதுங்கள்.**

1. இதன் உருவாக்கத்திற்கு முத்தையா பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டார்.
2. முதல் தட்டச்சு ஆங்கில எழுத்துக்களைக் கொண்டே உருவாக்கப்பட்டது.
3. நகராவிசை இதன் சிறப்பம்சமாகும்.
4. விளைவாக ஸ்டான்டர்ட் என்ற தட்டச்சு கண்டுபிடிக்கப்பட்-டது.
5. நாற்பது வருடங்களின் பின்பு தமிழ் தட்டச்சு உருவாக்கப்பட்டது.
6. பிஜோ, ஐடியல் ஆ ய தட்டச்சுக்களையும் உருவாக்கினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

2.

1. இதனால் பேனா, பென்சில் போன்ற எழுதுகருவிகளும் பிரபல மாயின.
2. இதற்குத் தீர்வாக தட்டச்சு கண்டுபிடிக்கப்பட்டது.
3. ஆரம்பகாலத்தில் ஓலைகளிலேயே மனிதன் தன் சிந்தனையைப் பொறித்தான்.
4. கடதாசிப் பாவனை முதன்மை பெற்றது.
5. சிந்தனை வேகத்திற்கு ஏற்ப எழுதுகோலால் எழுத முடியாதிருந் -தது.
6. இது இன்று கணினியில் தட்டச்சு செய்வது வரை வளர்ச்சி பெற் றுள்ளது.

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. செந்தமிழ் போற்றிய சேரன்



- மூவேந்தர்களாகச் சேரன், சோழன், பாண்டியன் ஆகியோர் விளங்குகின்றனர்.
- பெருஞ்சேரல் இரும்பொறை என்பவன் சேர மன்னன் ஆவான்.
- கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்னர் தமிழ்நாட்டின் வஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தான்.
- பெருஞ்சேரல் இரும்பொறை மன்னனின் சிறப்புகள்
    - வீரத்திலும் கொடையிலும் நியாயத்திலும் சிறந்தவன்.
    - நியாயமுரசு, வீரமுரசு, தியாகமுரசு எனும் மூன்று முரசங் களை உடையவன்.
    - புலவர்களைப் போற்றுபவன்.
    - செல்வந்தர்களை விடவும் கல்வியறிவுடையவர்களுக்கு மதிப் -பளிப்பவன்.
    - புலவர்கள் விரும்பி வரும் வகையில் சிறப்புப் பெற்றவன்.
    - தமிழ்மொழி மீது மிகுந்த பற்றுடையவன்.
- இரும்பொறை மன்னனின் அரசவைக்கு மோசிகீரனார் என்ற புலவர் வந்தார்.
- இவர் பாண்டிய நாட்டுப் புலவர்.
- புலவர் மன்னனை வாழ்த்தி அறிவுரை கூறினார்.
    - "உங்கள் அன்பைக் கண்டு அகமகிழ்கிறேன். அன்பு நிறைந்த ஆட்சியில் குடிமக்களுக்கு ஒரு குறையும் இருக்க மாட்டாது" எனப் போற்றினார்.
    - புலவர் கூறிய அறிவுரை

      குடிமக்களுக்கு நெல்லும் உயிரல்ல, நீரும் உயிரல்ல செங் -கோல் செலுத்துகின்ற அரசனே உயிராவான்.
- புலவரின் நுண்ணறிவைப் போற்றிய மன்னன் புலவருடன் நட்பு -ரிமை கொண்டு அவரை ஆதரித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ பிறிதொருநாள் அரசனைக் காணுவதற்கு வந்த மோசிகீரனார் அரசன் இல்லாமையால் அவைக்களத்திலேயே களைப்பு மிகுதி -யால், முரசுகட்டிலில் உறங்கினார்.

❖ வீர முரசம்

- இது மும்முரசங்களில் ஒன்று
- போர்க்களத்தில் போரை அறிவிப்பதற்கு முழங்கும்.
- வெற்றியை அறிவிக்க முழங்கும்.
- பலியிடும் காலங்களில் பூமியை அதிரவைக்கும்.
- மன்னர்கள் இம்முரசம் மீது பெரும் மதிப்புக் கொண்டிருந்த னர்.

❖ வீரமுரசின் அமைப்பு:-

- சுற்றியுள்ள விளிம்பு கருமரத்தால் செய்யப்பட்டு உறுதி உடை -யதாக இருக்கும்.
- வீரம் பொருந்திய எருதின் தோல் அதன்மேல் போர்த்தப்பட் டிருக்கும்.

❖ வீரமுரசினைப் போர்த்தியிருக்கும் எருதுத் தோலின் சிறப்பு:-

எருது ஒரு புலியுடன் போர் செய்து அதனைத் தன் கூர்மையான கொம்புகளால் குத்திக் கிழித்துக் கொன்றிருக்கும். இந்தக் காளை இறந்த பின்னர் அதன் தோலை உரித்து மயிர் சீவாமல் முரசைப் போர்த்து தக்கவார்களால் இழுத்து இறுகக் கட்டுவார்கள்.

❖ வீரமுரசத்தின் சிறப்பு:-

- மன்னர்களின் உயிர் போன்ற பொருளாக போற்றப்படுவது.
- வெற்றித் தெய்வமாக மன்னர்களால் போற்றப்படுவது.
- நீர்த்துறைக்குக் கொண்டுசென்று மரியாதையுடன் நீராட்டு வர்.
- மயில்தோகையும் உழிஞைத் தளிரும் சேர்த்துக் கட்டிய மாலையைச் சூடுவர்.
- வீரமொழிகள் கூறித் துதித்துப் பூசை செய்வர்.
- சிறப்பு வாய்ந்த முரசுகட்டிலில் வைத்து வணங்குவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ முரசு கட்டிலின் சிறப்பு:-

- அரசன் வீற்றிருக்கும் சிம்மாசனத்திற்கு ஒப்பானது.
- அரசன் பகையரசனை வென்ற பின் தோற்ற அரசனின் முரசு கட்டிலின் மேல் எவரேனும் ஒருவரை உட்காரச் செய்து தோற்ற அரசனை அவமானப்படுத்துவது வழக்கம்.
- முரசுகட்டிலின் மேல் எவரும் ஏறினால் அது அரசனுக்கு அவ -மானமாகக் கருதப்படும்.
- முரசுகட்டிலில் ஏறுவோர் வாளால் வெட்டி வீழ்த்தப்படுவர்.

❖ மேற்குறிப்பிட்ட சிறப்பு வாய்ந்த முரசுகட்டிலில் முரசு இல்லா -மையால் மோசிகீரனார் களைப்பு மிகுதியால் உறங்கினார்.

❖ ஆற்றிலிருந்து முரசம் கொண்டுவரப்படும் பொழுது சேரமன்னன் முன்னால் வந்தான்.

❖ முரசுகட்டிலில் யாரோ உறங்கிக்கொண்டிருப்பதைக் கண்டு கோபத்துடன் வாளை உருவினான்.

❖ விரைந்து கட்டிலுக்குச் சென்றவன் மோசிகீரனாரின் முகத்தைப் பார்த்ததும் கோபம் தணிந்தது. இரக்கத்துடன் இவர் உறக்கத் -திற்கு இடையூறு ஏற்படுத்தாது சாமரையால் அன்புடன் வீசி -னான்.

❖ தூக்கம் கலைந்து எழுந்த புலவர் அரசனின் செயலையும் வீரமுரசம் பரிவாரங்களுடன் இருப்பதையும் கண்டு பரபரப்பு டன் கட்டிலை விட்டிறங்கினார்.

❖ களைப்பு நீங்கி எழுந்தபோது தான் தாம் செய்த தவறை உணர்ந் தார்.

❖ இரும்பொறையின் தமிழ்ப்பற்று / மன்னன் செந்தமிழுக்குச் செய்த சிறப்பு:-

- தமிழ்ப் புலமை கொண்ட புலவர் வீரமுரசின் கட்டிலில் அறியாது தூங்கியமையால் அவர்மீது கோபம் தணிந்து சாமரை வீசியமை மன்னனின் தமிழ்ப் பற்றினை எடுத்துக் காட்டுகிறது.
- செய்யுள்கள் பாடும் புலவர்களை ஆதரித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாணவர் செயற்பாடு**

**01. கீழே தரப்பட்ட வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.**

1. தன்னிடம் வரும் புலவர்களைப் புரவலன் ஆதரித்தான். புரவலன் என்பதன் ஒத்த சொல்

   1. புலவர் 2. செல்வந்தர் 3. கோ 4. வள்ளல்

2. உங்கள் அன்பைக் கண்டு அகம் மகிழ்கிறேன். இங்கு அகம் என்பதன் ஒத்தசொல்

   1. புறம் 2. உள்ளம் 3. ஆனந்தம் 4. இதயம்

★ **கீழே தரப்பட்ட வாக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.**

புலவரின் இனிய உரைகளை மன்னன் ஆவலாகக் கேட்டான்.

3. இவ்வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள செயற்படுபொருள் அடைமொழி

   1. இனிய 2. உரைகளை 3. மன்னன் 4. ஆவலாக

4. மேலே தரப்பட்ட வாக்கியத்தின் எழுவாய்

   1. புலவர் 2. உரை 3. மன்னன் 4. இனிய

5. தரப்பட்ட வாக்கியத்தின் ஆவலாக என்பது

   1. செயற்படுபொருள் அடைமொழி 2. பெயர்ச்சொல்
   3. எழுவாய் அடைமொழி 4. பயனிலை அடைமொழி

6. புலவர் நீண்ட நேரம் தம்மை மறந்து தூங்கினார். இங்கு தம்மை என்பதன் எதிர்ப்பொருட் சொல்

   1. தன்னை 2. ஏனையோரை
   3. பிறரை 4. தங்களை

7. சேரனின் புகழ் நின்று நிலவுக. புகழ் என்பதன் எதிர்ச்சொல்

   1. போற்றல் 2. கீர்த்தி 3. இகழ் 4. பெருமை

8. வாக்கியத்திற்குப் பொருத்தமான நிறைவுப் பகுதியைத் தெரிவு செய்க.

   அரசன் முன்னே செல்ல அரச பரிவாரங்களுடன் வீரமுரசு ..........................................

   1. கொண்டு வரப்பட்டது. 2. கொண்டு வரப்பட்டன.
   3. கொண்டு வந்தான். 4. கொண்டு வந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. பிச்சை, சந்தேகம் என்ற இருபொருள் தரும் ஒரு சொல்
   1. ஈகை   2. ஜயம்   3. ஐயம்   4. மயக்கம்

10. இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை எழுதுங்கள்.
   அரசன் நாட்டு மக்களின் குறைநிறைகளை ஆராய்ந்து நீதிநெறி தவறாது ஆட்சி செய்வது ........................ ஆகும்.
   1. நல்லாட்சி   2. கொடுங்கோல் ஆட்சி
   3. அரசாட்சி   4. செங்கோல் ஆட்சி

**02. பின்வரும் சொற்களுக்குரிய ஒத்தகருத்துச் சொற்களை எழுதுங்கள்.**

1. அரசன் ........................................
2. திருவுடையார் ........................................
3. அறிவுடையோர் ........................................
4. அகம் ........................................
5. ஐயம் ........................................
6. ஆசனம் ........................................
7. உறக்கம் ........................................
8. உடம்பு ........................................
9. பார் ........................................
10. வியப்பு ........................................
11. தெய்வம் ........................................
12. தவறு ........................................
13. களிப்பு ........................................
14. சினம் ........................................
15. விளிம்பு ........................................

**03. பின்வரும் சொற்களுக்கான எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுக.**

1. அறிஞர் ........................................
2. அன்பு ........................................
3. ஐயம் ........................................
4. உறக்கம் ........................................
5. போற்றினார் ........................................
6. விரைவாக ........................................
7. அகம் ........................................
8. புகழ் ........................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04. பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுங்கள்.**

1. தேவருலகம் என்பதைப் பிரித்து எழுதுக.

........................................................................................................

2. வாள், வால் ஆகிய சொற்களை வைத்துப் பொருள் விளங்கும் வகையில் இரு வாக்கியங்கள் எழுதுங்கள்.

........................................................................................................

........................................................................................................

3. ஆசிரியரின் இனிய வார்த்தை கேட்டு அகம் மகிழ்ந்தான் விமலன்.

........................................................................................................

**இவ்வாக்கியத்தின் எழுவாய், பயனிலைகளை எழுதுக.**

4. "செந்தமிழ் போற்றிய சேரமன்னன்" என்ற கதையின் ஆசிரியர் யார்?

........................................................................................................

5. ஆசிரியன் என்ற சொல்லுக்குரிய வேறு பெயர்களைத் தருக.

........................................................................................................

6. சேரல் இரும்பொறையின் ஆட்சியில் தலைநகரமாக விளங்கிய நகர் எது?

........................................................................................................

7. மோசிகீரனார் எந்த நாட்டுப் புலவர்?

........................................................................................................

8. வீரமுரசின் விளிம்பு எதனால் செய்யப்பட்டது?

........................................................................................................

9. மும்முரசங்களும் எவை?

........................................................................................................

10. சேரமன்னனின் சிறப்புகள் 5 தருக.

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

11. களைப்புடன் வந்த மோசிகீரனார் எங்கு உறங்கினார்? இதன் முக்கியத்துவம் யாது?

........................................................................................................

........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. சேரல் இரும்பொறை தமிழ் மீது கொண்ட பற்றினை எடுத்துக் காட்டும் சந்தர்ப்பம் யாது?

..........................................................................................................

13. வீரமுரசு ஒலிக்கும் சந்தர்ப்பங்களைத் தருக.

..........................................................................................................

..........................................................................................................

14. மோசிகீரனார் மன்னனை எவ்வாறு வாழ்த்தினார்?

..........................................................................................................

15. "யான் உம்முடைய அன்பு வெள்ளத்தில் பல நாட்கள் நீந்தி மகிழ்ந்ததுண்டு. ஆனால் இன்று முழுகிக் களிக்கிறேன்."
இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

..........................................................................................................

16. வீரமுரசு நீராட்டிய பின் மேற்கொள்ளப்படும் சடங்குகள் எவை?

..........................................................................................................

17. முரசுகட்டிலில் யாரோ உறங்குவதைக் கண்ட அரசன் யாது செய் -தான்?

..........................................................................................................

18. அவன் உள்ளம் மாற்றமடையக் காரணம் யாது? அதன் பின் யாது செய்தான்?

..........................................................................................................

19. மோசிகீரனார் மன்னனிடம் மன்னிப்புக் கேட்காமைக்கான காரணம் யாது?

..........................................................................................................

20. மூவேந்தர்களின் கொடிகள் (முக்கொடிகள்) எவை?

..........................................................................................................

..........................................................................................................

**05. 'அ' பகுதிக்குப் பொருத்தமான விடையை 'ஆ' பகுதியிலிருந்து தெரிவுசெய்து எழுதுங்கள்.**

(அ)

1. கோ, வேந்தன், மன்னன், புரவலன் :-....................
2. ஓசை, ஒலி :-....................
3. குரவன், தேசிகன், உபாத்தியாயன், ஆசான் :-....................
4. கொண்டல், முகில், கார் :-....................
5. சிநேகம், நேயம், கேண்மை :-....................
6. கவி, கவிதை, செய் ள், பா :-....................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. அகம், உள்ளம், சித்தம், நெஞ்சு :-......................
8. துயில், அனந்தல், உறக்கம் :-......................
9. கீர்த்தி, இசை, சீர் :-......................
10. இடர், அல்லல், இடும்பை, இன்னல், இடுக்கண் :-......................

**(ஆ)**

நித்திரை, மேகம், ஆசிரியன், அரசன், புகழ், மனம், நட்பு, துன்பம், பாட்டு, சத்தம்

**06. பின்வரும் பல பொருளுக்குப் பொருத்தமான ஒரு சொல்லைத் தொடர்பு -படுத்துங்கள்.**

1. கடல், சக்கரம், மோதிரம் — வேலை
2. கழுத்து, ஆபத்து, துண்டு, பூமியின் பெரும்பிரிவு — தலை
3. சிரம், பக்கம், மேற்பகுதி — இதழ்
4. கடல், பணி, முடிக்க வேண்டிய காரியம் — ஆழி
5. உதடு, பூவிதழ், புத்தகத்தின் தாள் — கண்டம்

**07. பின்வரும் பல பொருளுக்கு உரிய ஒரு சொல் எழுதுக.**

1. முடிவு, அங்காடி, வாயில் :-......................
2. கரும்பு, நாணல், மூங்கில், யானை :-......................
3. வீடு, மனம், உள்ளம் :-......................
4. மேகம், அழகு, வலிமை, ஆபரணம் :-......................
5. சந்திரன், அறிவு, மாதம் :-......................

## மூவேந்தர்



சேரன் சோழன் பாண்டியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. சிலேடை

- ❖ சிலேடை என்பது அணிகளில் ஒன்று.
- ❖ சிலேடை, எதுகை, மோனை போன்றன சொல்லணிகள் ஆகும்.
- ❖ ஒரு சொல் அல்லது சொற்றொடர் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள் தரும் வகையில் அமைந்திருப்பது சிலேடை ஆகும்.
- ❖ செவிச்சுவையும் கருத்துச்சுவையும் நிறைந்த சிலேடை அணி இலக்கியத்தை அழகு செய்வது.
- ❖ பாடநூலில் இடம்பெற்றுள்ள சிலேடைகளின் இரு பொருளை -யும் நோக்குவோம்.

- அம்மாவாணை
  1. "அம்மாவாணை" - என சத்தியம் செய்தல்.
     அம்மா மீது ஆணை.
  2. அம்மாவாணை - அம்மா வாருங்கள் என அழைத்தல்.
- புத்தியில்லாதவன்
  1. புத்தி (அறிவு) இல்லாதவன்.
  2. புத்தியில் (அறிவில்) சூரியன் போன்று பிரகாசிப்பவன்.
- பழங்கள்
  1. கனிகள்
  2. பழைய கள்
     பழங்கள் பருகியவர் முகத்தைச் சுழித்தார்.
- படுக்கவா
  1. படுக்கவா? என வினாவாகக் கேட்டாள்.
  2. படுப்பதற்கு வா எனக் கூறுதல்.
- தாவரம்
  1. வரம் தரும்படி கேட்டல் - தா வரம்
  2. தாவரம் - பயிர் வகைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சில சிலேடை அணிகள்:-

- செவ்வாய் - சிவந்த வாய்
  - செவ்வாய்க் கிரகம்
  - கிழமைநாள்
- திருக்கை - அழகிய கை
  - மீன் வகைகளில் ஒன்று
  - சிவமணம் பொருந்திய கை
- வேங்கை - வேகின்ற கை
  - புலி
  - ஒரு மரம்
- பழங்கறி - பழைய கறி
  - பழமும் கறியும்
- மாதங்கள் - மாதுவின் அங்கம்
  - யானை
  - பெரிய பொன் (மா -பெரிய)
- பலகை - பலகை (மரம்)
  - அநேக கை
- காசாலேசா - பணமா சும்மாவா?
  - பணத்தால் இற
- ஆபத்து - விபரீதம்
  - பத்துப் பசு (ஆ - பசு)
- மாதுளம்பழம் - பழங்களில் ஒன்று
  - மாது உளம் பழம் (பெண்களின் உள்ளம் பழம் போன்றது)
- படிக்கவா - இதை நான் படிக்கவா? என வினாவாகக் கேட்டல்.
  - படிப்பதற்கு வா என அழைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாணவர் செயற்பாடு**

**01. பின்வரும் சொற்களுக்கான ஒத்தகருத்துச் சொற்களை எழுதுங்கள்.**

1. ஆணை :-..............................................
2. புத்தி :-..............................................
3. ஆதவன் :-..............................................
4. பழம் :-..............................................
5. வரம் :-..............................................

**02. எழுவாய், பயனிலை, செயற்படுபொருளையும் அவற்றுக்கான அடை -மொழிகளையும் இனங்கண்டு எழுதுங்கள்.**

1. காலையில் சின்னஞ்சிறு குருவி கூட்டைவிட்டு வேகமாகப் பறந் -தது.

..............................................................................................................

2. ஆசிரியர் மாணவர்களுக்கு அன்பான மொழிகளால் அறிவுரை கூறினார்.

..............................................................................................................

3. சொல்நயம் மிகுந்த கவிதைகளை தமிழ்க்கவி பாரதியார் அழகுற எடுத்தியம்பினார்.

..............................................................................................................

**03. கீழே தரப்பட்டுள்ள சிலேடை அணியின் பொருளை எழுதுங்கள்.**

1. முயலாமையால் தோற்றது.
   1. ..............................................................................................
   2. ..............................................................................................
2. பெருங்காயம்
   1. ..............................................................................................
   2. ..............................................................................................
3. தலைவிதிவசம்
   1. ..............................................................................................
   2. ..............................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04. தரப்பட்டுள்ள பாடலை அடிப்படையாகக் கொண்டு கீழுள்ள வினாக்க -ளுக்கு உரைநடையில் விடை எழுதுங்கள்.**

தாய்மொழி எங்கட்குச் செல்வம் - அது
தண்ணளி தரும் எலாம் வெல்வம்
ஓய்வின்றி அம்மொழி படிப்போம் - உயர்
ஞானப்பால் உவப்பாகக் குடிப்போம்

கம்பன் கலைகளிலே களிப்போம் - புகழ்
ஏந்தியின் கவிக்கடலிற் குளிப்போம்
செம்பியர் தேசத்தினைப் புகழ்வோம் - எங்களின்
செந்தமிழ் வாசத்தினிற் றிகழ்வோம்

வள்ளுவர் குறள்தன்னை வளர்ப்போம் - எங்கும்
உள்ள மொழிகளிலே பெயர்ப்போம்
தெள்ளு தமிழ்மறையிற் றிளைப்போம் - என்றும்
தென்மொழி வளர்ச்சியில் உழைப்போம்

- மா.பீதாம்பரம் -

1. இப்பாடல் எதனைச் சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளது?

..............................................................................................

2. வள்ளுவர் பாடிய நூல் எது? இதனை என்ன செய்ய வேண்டும் என ஆசிரியர் கூறுகிறார்?

..............................................................................................

3. "கம்பன் கலைகளிலே களிப்போம்" என்ற தொடரின் எழுவாய் பயனிலையை எழுதுக.

..............................................................................................

4. இப்பாடலில் கூறப்பட்டுள்ள புலவர்கள் மூவரையும் அவர்களது இலக்கியங்களையும் தருக.

..............................................................................................

5. செம்பியர் எனப்படுவோர் யார்?

..............................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. எமது செல்வம் எது எனக் கூறப்பட்டுள்ளது?

..........................................................................................

7. நாம் எதற்காக உழைக்க வேண்டும்?

..........................................................................................

8. பின்வரும் சொற்களுக்கான ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.

1. ஞானம் ..........................................................................

2. களிப்பு ..........................................................................

3. தண்ணளி ..........................................................................

9. உயர் ஞானப்பால் உவப்பாகக் குடிப்போம் என்ற தொடரில் இடம்பெற்றுள்ள அடைமொழிகளை எழுதுங்கள்.

..........................................................................................

..........................................................................................

10. இப்பாடலின் ஆசிரியர் யார்?

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. பென்சிலின் கதை

❖ பென்சில் செய்யப்படும் பொருட்கள் பற்றியும் பென்சில் செய்யப் -படும் முறைபற்றியும் இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

❖ பென்சிலுக்கான மரக்குற்றிகள் பைன் மரத்திலிருந்து பெறப்படு -கிறது.

❖ பென்சில் செய்வதற்குத் தேவையான பொருட்கள்:-

| | |
|---|---|
| பைன் மரக்குற்றி | சாயப்பொருள் |
| காரியம் | அலுமினியம் |
| களிமண் | பசை |
| கொழுப்பு | |

❖ பென்சிலுக்குத் தேவைப்படும் பைன் மரமானது சைபீரியாவில் பெறப்படுகின்றது. இது சைபீரிய சிதார் என்ற தாவர இனத்தைச் சேர்ந்தது.

❖ பைன் மரத்தின் சிறப்பு

- இது எடை குறைவானது.
- பைன் மரத்தின் மணம் பூச்சிகளுக்கு பிடிப்பதில்லை. இதனால் அலுமாரிகள் செய்வதற்கு இம்மரம் பயன்படுகிறது.
- பைன் மரத்தை வெட்டுவதும் சமப்படுத்துவதும் இலகுவா -னது.

❖ காரியம்

- பைன் மரக்குற்றியினுள் வைத்து எழுதுவதற்குப் பயன்படு -வது காரியம்.

❖ காரியம் சைபீரியாவில் கிடைக்கிறது.

- குறுகிய மலைப்பள்ளங்கள்
- காடுகளின் வழியாக வேகமாக ஓடிவரும் நதிப்பருக்கைக -ளில் சுத்தமான காரியம் கிடைக்கும்.
- சைபீரியாவில் போத்தோக்கோல் என்ற பகுதியில் பளபளக் -கும் காரியம் நிறைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ பைன் மரக்குற்றிகளும் காரியமும் சைபீரியாவிலிருந்து மாஸ் கோவிலுள்ள தொழிற்சாலைக்குக் கொண்டு செல்லப்படும்.

❖ பென்சில் செய்வதற்குக் களிமண்ணின் பயன்பாடு

- சாதாரண களிமண் இதற்குப் பயன்படுவதில்லை மிகச் சிறந்த களிமண் அவசியம்.
- இது உக்ரேனில் கிடைக்கிறது.
- கரியத்தை வலுவுள்ளதாக்குவதற்கு இது பயன்படுத்தப்படு -கிறது.

❖ பசையின் பயன்பாடு

- கரியத் துகள்களை ஒன்றாக இணைப்பதற்குப் பசை பயன் -படுகிறது.

❖ துகள்கள் எழுதும்போது தாளின்மீது இலகுவாகப் படிவதற்குக் கொழுப்பு பயன்படுகிறது.

❖ கொழுப்பு கலக்காதுவிடின் பென்சில் மங்கலாகவும் ஒழுங்கற் -றும் எழுதும்.

❖ சாயப்பொருள் பென்சிலுக்கு வண்ணம் தீட்டப் பயன்படும்.

❖ அலுமினியம் பென்சில்மீது எழுத்துக்களைப் பொறிப்பதற்குப் பயன்படும்.

❖ மனிதர்களின் உதவியுடனும் இயந்திரத்தின் உதவியுடனுமே கோடிக்கணக்கான பென்சில்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

❖ பென்சில் தொழிற்சாலையில் இருபத்து நான்கு மணிநேரத்தில் முப்பது இலட்சம் பென்சில்கள் உற்பத்தி செய்யப்படும்.

❖ பென்சில் செய்யப்படும் முறை:-

- களிமண்ணும் கரியமும் நன்கு அரைக்கப்பட வேண்டும். இதற்காக இரண்டையும் அரைத்து பசை சேர்க்கப்படும்.
- பின்னர் களிமண்ணும் கரியமும் தூளாக்கப்படும்.
- இத்தூளிலிருந்து பென்சில் கரியங்கள் தயாரிக்கப்படும்.

❖ துகள்களின் இடையே காற்றுக்குமிழ்களும் அழுக்குப் பொருட்க -ளும் இருப்பதால் கரியம் நொறுங்கும் தன்மையைப் பெறும். இத -னால் பென்சிலை அடிக்கடி சீவவேண்டி இருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- காற்றுக்குமிழியை நீக்குவதற்கு இயந்திரத்தின் மூலம் அதிக -மாக இத்தூள் உட்படுத்தப்படும்.
- இயந்திரத்தின் மூலம் அச்சுக்கள் எனப்படும் தடிப்பான கரிய உருளைகள் வெளிவரும்.

❖ அழுக்குகளை நீக்குவதற்காக இவ்வச்சுக்கள் நேர்த்தியான சல் -லடை மூலம் செலுத்தப்படும்.

❖ அழுக்குகள் பின்தங்க நுண்ணிய கரியத் துகள்கள் சல்லடையிலி -ருந்து சிறு இழைகளாக வெளிவரும். இவை காற்றுக்குமிழ்கள் நீங்கியவையாகக் காணப்படும். இதுவே கரியக் குச்சிகளாக மாற்றம் பெறுகின்றன.

❖ அச்சு சிறு துளையின் வழியாகச் செலுத்தப்படும்போது மிகவும் மெல்லிய குச்சியாகக் கிடைக்கிறது.

❖ பின்னர் சிறுசிறு துண்டுகளாக வெட்டப்படும். இவற்றை வலுவுள்ளவையாக மாற்றுவதற்கு உலை ஒன்றில் வைத்து சுட்டு உலர்த்திய பின் கொழுப்பில் ஊற வைக்கப்படும்.

❖ பைன் மரக்குற்றி

மரத்துண்டுகள் விரைவாக இயங்கும் இயந்திரங்கள் மூலம் சம அளவுள்ள சிறு பலகைகளாக வெட்டப்படும். ஒவ்வொரு பலகையிலும் ஆறு சிறு தவாளிப்புகள் உள்ளன.

❖ இவற்றின் மீது கரியக்குச்சிகள் வைக்கப்படும். சம அளவான தவாளிப்புடன் கூடிய பலகையை முதலில் உள்ள பலகையால் மூடுவதன் மூலம் பென்சில் உருவாக்கப்படுகிறது.

❖ உருவாக்கப்பட்ட பென்சிலை அழகுபடுத்துவதற்காக வார்னிஷ் பூசுவதற்கு வேறு இயந்திரங்களுக்கு அனுப்பப்படும். காகிதம் போன்ற அலுமினிய ரேக்கு சுற்றப்பட்டபின் முத்திரையையும் அடையாளக்குறியும் பொறிக்கப்படும்.

❖ மாணவர்கள் எழுதுவதற்கும் வரைவதற்கும் தமது திறமைகளை அர்ப்பணித்தவர்கள்

- சைபீரியாவின் மரம்வெட்டிகள்
- சுரங்கத் தொழிலாளர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உக்ரேனில் களிமண் எடுப்பவர்கள்
- மாஸ்கோ பென்சில் தொழிற்சாலையில் உள்ள தொழிலாளி -கள்
- ரயில் அலுவலர்கள்
- இயந்திரங்களை அமைத்தவர்கள்
- கொல்லர்கள்

❖ பென்சிலின் கண்டுபிடிப்பு

- ஆரம்ப காலத்தில் ஓவியர்கள் படம் வரைவதற்கு வெள்ளிக் குச்சிகளைப் பயன்படுத்தினர். இது தாளில் நன்றாகப் பசைக் -காது. இதனைப் பிடிப்பது கடினமாக இருந்தமையால் தோல் உறைகளில் இட்டு பயன்படுத்தினர்.
- குச்சியின் முனை மழுங்கியதும் அந்தத் தோலைக் கிழிக்கப் -பட வேண்டியிருந்தது.

❖ ஜேர்மனியில் இப்பொழுதும் பென்சில் "காரீயக்குச்சி" என்றே அழைக்கப்படுகிறது.

❖ எவரோ ஒருவர் கரியத்தைப் பயன்படுத்தும் முறையைக் கண்டு பிடித்தார்.

❖ பின்னர் கந்தகம் கலக்கப்பட்டது நொறுங்கும் தன்மை உடைய தாக இருந்தது. இதற்குத் தீர்வாக களிமண் கலக்கப்பட்டது.

❖ இக்கட்டுரையில் கூறப்படும் அறிவுரைகள்

- பென்சிலை கவனமாப் பேணவேண்டும்.
- சீவும்போது கனமாகச் சீவவேண்டும் அவசியமின்றிச் சீவக் கூடாது.
- பென்சிலின் கூரான முனையைப் பாதுகாக்கக் குப்பி (மூடி) ஒன்றை வைக்க வேண்டும்.
- அலட்சியமாக எறிதல் கூடாது.
- ஒரு பொருளின் உற்பத்திக்கு மனிதனின் கடின உழைப்பு மிக -வும் இன்றியமையாததாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாணவர் செயற்பாடு**

**01. பொருத்தமான சொற்களை எழுதி இடைவெளியைப் பூரணப்படுத் -துங்கள்.**

1. பென்சிலின் நண்பன் ............................... ஆகும்.
2. பென்சில் செய்யப் பயன்படும் பைன் மரம் ............................... தாவர இனத்தைச் சேர்ந்தது.
3. சைபீரியாவின் ............................... பகுதியில் பளபளக்கும் மிருதுவான கரியம் கிடைக்கும்.
4. கரியத் துகள்களை ஒன்றாக இணைப்பதற்கு ............................... பயன்படுகிறது.
5. கரியக் குச்சிகள் நன்றாக எழுதுவதற்கு ............................... அவசியம்.

**02. பொருத்தமானவற்றை இணையுங்கள்.**

| | |
|---|---|
| 1. மென்மையான பென்சில் | H |
| 2. கடினமான பென்சில் | வார்னிஷ் |
| 3. பென்சிலுக்கு அழகூட்டும் | தோல் உறை |
| 4. களிமண் | உக்ரேன் |
| 5. வெள்ளிக்குச்சி | B |

**03. பின்வரும் சொற்களை வைத்துப் பொருள் விளங்க வாக்கியம் அமையுங்கள்.**

1. உலை:- ...............................................................
2. உழை:- ...............................................................
3. அரி:- ...............................................................
4. அறி:- ...............................................................
5. கறை:- ...............................................................
6. கரை:- ...............................................................
7. நிறை:- ...............................................................
8. நிரை:- ...............................................................
9. இழை:- ...............................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. இலை:- ..................................................................................

11. கொல்லர்:- ..................................................................................

12. தோல்:- ..................................................................................

13. தோள்:- ..................................................................................

**04. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. பென்சிலின் நண்பனது நற்பண்புகள் 2 தருக.

..................................................................................

2. பென்சில் செய்வதற்குத் தேவையான பொருட்கள் எவை?

..................................................................................

3. பைன் மரத்தாலான அலுமாரிகள் பூச்சிகளால் அரிக்கப்படா மைக்குக் காரணம் யாது?

..................................................................................

4. கரியம் பெற்றுக்கொள்ளும் இடங்கள் எவை?

..................................................................................

5. பென்சில் உற்பத்தியில் பின்வருவனவற்றின் பயன்பாடுகளை எழுதுக.

   1. களிமண்:- ..................................................................................
   2. பசை:- ..................................................................................
   3. கொழுப்பு:- ..................................................................................

6. தொழிற்சாலையில் பென்சில் அடைந்த மாற்றங்களை எதன் மூலம் அறியலாம்?

..................................................................................

7. ஆரம்ப காலத்தில் வரைதலுக்குப் பயன்பட்ட கருவி எது? இது எவ்வாறு பாதுகாக்கப்பட்டது?

..................................................................................

8. பென்சிலின் கண்டுபிடிப்பு படிப்படியாக வளர்ச்சி பெற்ற -மையை எடுத்துக்காட்டுக.

..................................................................................

..................................................................................

..................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**05. பின்வரும் பந்தியை வாசித்துக் கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

ஆரம்பகாலத்தில் மனிதன் தனது சிந்தனைகளைக் கற்களிலும் ஓலைகளிலும் புற்களிலும் பதித்து வந்தான். பபைரஸ் என்னும் கோரைப்புல் பலநாடுகளிலும் எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்டது. கி.மு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எகிப்தியர் நைல் ஆற்றங்கரையில் விளையும் இப்புல்லில் நாணல் குச்சிகளால் எழுதினர். எகிப்தியர் மட்டுமன்றி கிரேக்கர், பினீஷியர், உரோமர் போன்ற பல நாட்டினரும் இப்புல்லையே பயன்படுத்தினர்.

பபைரஸ் சுருளைக் கிரேக்கர் பிப்லியன் என அழைத்தனர். பபைரஸ் என்ற சொல்லே பேப்பர் என்ற ஆங்கிலச் சொல்லுக்கும் மூலமாக அமைந்துள்ளது.

பபைரஸ் புற்களை விடவும் ஓலைகளையே பண்டைத் தமிழர்கள் பயன்படுத்தினர். ஓலை அனைத்து இடங்களிலும் இலகுவாகப் பெறக்கூடியதாக இருந்ததுடன் மிகப்பெரிய நூல்களையும் ஒரு தொகுதிக்குள் உள்ளடக்கக் கூடியதாக இருந்தது. அது மட்டுமன்றி எடுத்துச் செல்வதற்கும் பாதுகாப்பதற்கும் இலகுவாக இருந்தமையால் நம் முன்னோர் ஓலைகளை சுவடிகளாக வெட்டி அவற்றில் எழுத்துக்களைப் பொறித்தனர்.

ஓலைகள் மீது எவ்வாறு எழுதினர்?

எழுத்தாணி, கூரிய கல், தண்டு, நாணல், பறவைமுள், விலங்குகளின் எலும்பு போன்றவையே ஆரம்பகால எழுதுகருவிகள். ஓலைச்சுவடி கிழிந்து படாமல் எழுத்தாணியையே மிகுதியாகப் பயன்படுத்தினர். இதனை எழுத்தூசி என்றும் அழைத்தனர்.

இத்தகைய ஓலைச் சுவடியாலும் எழுத்தாணியாலும் எழுதிப் பாதுகாக்கப்பட்ட தொல்காப்பியம், திருக்குறள் போன்ற நம் பழந்தமிழ் இலக்கியங்களையே இன்றைய இணையத்தில் படிக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஆரம்ப கால மனிதர்கள் எழுதுவற்குப் பயன்படுத்திய பொருட்கள் எவை?

.......................................................................................................

2. எகிப்தியர் எழுது கருவியாக எதனைப் பயன்படுத்தினர், எவற்றில் எழுதினர்?

.......................................................................................................

.......................................................................................................

3. நம் முன்னோர் ஓலைச்சுவடிகளை எழுதுவதற்குப் பயன்படுத்திய காரணம் யாது?

.......................................................................................................

.......................................................................................................

4. ஆரம்பகால எழுது கருவிகள் எவை?

.......................................................................................................

5. எழுத்தாணிக்கு வழங்கப்பட்ட மறுபெயர் யாது?

.......................................................................................................

6. ஓலைச்சுவடியில் எழுதப்பட்ட இலக்கியங்கள் எவை?

.......................................................................................................

7. புல், புள் ஆகிய சொற்களை வைத்து இருவேறு வாக்கியங்கள் எழுதுக.

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**06. பின்வரும் கதையின் ஒரு பகுதியினைத் தொடர்ந்து கற்பனையில் சிறிய கதை ஒன்று எழுதுக.**

பாலன் கண்ணீர் சிந்தியபடி அறையின் மூலையில் இருக்கிறான். அவனுக்கு தான் செய்தது தவறு என்பதை இப்போது தான் அனுபவத்தில் காண்கிறான். இனிமேல் எதுவும் நடக்கப் போவதில்லை. இருந்தாலும் தாயின் அன்பு, பாசம், அரவணைப்பு யாவும் அவன் மனைவியும் மகனும் அவனை விட்டுப் பிரிந்த போதுதான் உணர்கிறான்.

மகன் சிவா வைத்தியராகி வெளிநாட்டிலேயே தங்கிவிட்ட பின் மனைவியும் தீராத நோயினால் உயிர்பிரிந்ததும் பாலனுக்கு வயோதிபர் மடத்தில் விட்ட தாயின் நினைவுகள் பற்றிக்கொண்டன.

அன்று வெள்ளிக்கிழமை எல்லாவற்றுக்கும் மன்னிப்புக் கேட்டு அம்மாவைத் தன்னுடன் அழைத்து வருவதற்காக முதியோர் இல்லம் நோக்கி விரைகிறான். அவன் எண்ணங்கள் சற்றுப் பின் நோக்கி நகர்ந்தன.

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. உயிர்காக்கப் பயிர் காப்போம்

❖ உயிர்காக்கப் பயிர் காப்போம் என்ற கட்டுரை "எல்லோரும் வாழ்வோம்" எனும் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

❖ நெ.நு.சந்திரவேலு என்பவர் இதனை எழுதினார்.

❖ பயிர்ச் செய்கையின் அவசியம் பற்றி ஆசிரியர் இதில் இலகுவான மொழிநடையில் எடுத்துரைக்கிறார்.

❖ உழவுத்தொழிலை மதித்து அதனை நாமனைவரும் பேண வேண்டும் என ஆசிரியர் கூறுகிறார்.

❖ மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் என்பவற்றுள் உணவே முதலில் தேவையானது.

❖ ஆதிமனிதன் உடைபற்றிச் சிந்திப்பதற்கு முன்பே உணவைத் தேட ஆரம்பித்தான். காரணம் உயிர் நிலைப்பதற்கு உணவு தேவை. உயிர் இருந்தால் தான் ஏனையவற்றைப் பெற முடியும்.

❖ உணவு இன்றி வறுமையில் வாடியிருப்பது தகாது என்ற உண்மை உரையை வள்ளுவர் குறட்பாவில் பாடியுள்ளார்.

❖ இலம் என்று அசைஇ இருப்பாரைக்காணின்
நிலம் என்னும் நல்லாள் நகும்

பொருள் இல்லை என்று வறுமையால் சோம்பி இருப்பவர்க-ளைக் கண்டால் அவனுடைய அறியாமையை நினைத்து நில-மகள் தன்னுள்ளே சிரிப்பாள்.

❖ தாயைவிடவும் தயாளகுணம் உடையது நிலம்.

❖ தன்னை அகழ்பவர்களையெல்லாம் பொறுமையுடன் தாங்கிக் கொள்ளும்.

❖ மனிதர்களுக்குத் தேவையான அனைத்துப் பயன்களையும் நில மகளே தருகின்றாள்.

❖ நிலத்தின் நற்பண்புகள்

- மனிதர்கள் எத்தகைய துன்பம் செய்தாலும் பொறுமையுடன் ஏற்றுக்கொள்வாள்.
- தன்னிடமுள்ளதெல்லாம் மனிதர்களுக்கே கொடுப்பவள்.
- பயிர் விளைவதற்கு உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ கட்டுரை ஆசிரியரின் வேண்டுதல்

- ஆண்டு முழுவதும் பயிர் செய்தல் நன்று. இல்லையேல் பகுதி நேரமாகவேனும் பயிர் செய்வோம்.
- மழைப்பருவத்திலாவது பயிர் செய்வோம்.
- கரும்பு, நெல், வாழை, தென்னை என்பவற்றையும் பயிரிட -லாம்.
- இவை இல்லாவிட்டால், இரண்டு மாதங்களில் பயிரிடக் கூடிய காய்கறித் தோட்டமும் செய்யலாம்.
- நீர்வளமுடைய மாதங்களிலாவது சிறு நிலத்திலும் கூட பயிர்ச் செய்கையை மேற்கொள்ளலாம்.

❖ முன்னைய கால சிற்றூர்களின் சிறப்பு

- சிற்றூர்கள், வீட்டின் பின்பக்கங்களில் பச்சைக் கொடிகள் படர்ந்திருக்கும்.
- பசுமையான செடிகள் பூத்தும் காய்த்தும் செழிப்பாகக் காணப்படும்.
- எல்லா வீடுகளிலும் சிறு குடிசைகளிலும் காய்கறித் தோட் -டம் செழித்து வளர்ந்திருக்கும்.
- சிறிய ஊர்கள் கூடி இவ்வாறு பயிர்ச்செய்கையால் பூரண வளம் பெறுவதனால் வறுமையால் அம்மக்கள் வாடாது சிறப்பாக வாழ்ந்தார்கள்.

❖ இன்றைய சிற்றூர்களின் நிலை

- காய்கறித் தோட்டங்கள், பச்சைக் கொடிகளைக் காண முடி -யாது.
- வீட்டின் பின்புறம் தரிசு நிலமாக வெறுமையாக உள்ளது.
- குடிசைகள் மீது படரும் பச்சைக் கொடிகளுக்குப் பதிலாகப் படரும் கொடிகளே உள்ளன.

❖ நாம் செய்ய வேண்டியது

- எமது சிந்தனையை பயிர் நாட்டுவதில் திருப்புதல்.
- புராதன மக்களைப் பின்பற்றி பயிர்ச் செய்கையை மேற் -கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வீட்டிலும், விடுதியிலும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளல்.
- பருவத்திற்கேற்ற வகையில் பயிரிட்டு உணவைப் பெறு -வோம்.

❖ ஒருவர் தமது சுயதேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவை யான பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும்போது அதனால் ஊர் தன்னிறைவடையும். பின்னர் முழுநாடும் தன்னிறைவடையும் என்ற கருத்தினை இக்கட்டுரையில் ஆசிரியர் வலியுறுத்துகிறார்.

**மாணவர் செயற்பாடு**

**01. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.**

1. மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் உணவு இன்றியமை யாதது. இங்கு உணவு என்பதற்கு பொருத்தமற்ற சொல்லாக அமைவது
   1) ஊன் 2) ஊண் 3) உண்டி 4) ஆகாரம்

2. தற்காலத்தில் சாலைஓரச் சிறுவர்களின் தொகை அதிகரிக்கின் றது. இங்கு சாலை என்பதன் ஒத்தசொல்
   1) வீதி 2) தொழிற்சாலை
   3) தரிசுநிலம் 4) மேட்டுநிலம்

3. பவனி, விவசாயம், வேவு ஆகிய பொருள்களைத் தரும் சொற்கள்
   1) உளவு, உலவு, உழவு 2) உளவு, உழவு, உலவு
   3) உலவு, உழவு, உளவு 4) உழவு, உளவு, உலவு

4. என்னருமைத் தம்பி, தங்காய்!
   தரப்பட்ட வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள நிறுத்தற் குறியீடுகள்
   1) வியப்புக்குறி, காற்புள்ளி
   2) காற்புள்ளி, வியப்புக்குறி
   3) முக்காற்புள்ளி, காற்புள்ளி
   4) முக்காற்புள்ளி, மெய்ப்பாட்டுக்குறி

5. "இலம் என்று அசையி இருப்பாரைக் காணின்
   நிலம் என்னும் நல்லாள் நகும்" என்ற மெய்யுரை இடம்பெறுவது
   1) திருமுறை 2) ஊக்கஉரை
   3) மலரும் மாலையும் 4) திருக்குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பின்வருவனவற்றுள் வழுவற்ற வாக்கியமாக அமைவது

1) அண்மை காலங்களில் சுற்றுலாத்துறை வளர்ச்சி பெற்றுள் -ளது.

2) அண்மைக்காலங்களில் சுற்றுலாத்துறை வளர்ச்சி பெற்றுள் ளது.

3) அன்மைக்காலங்களில் சுற்றுலாத்துரை வளர்ச்சி பெற்றுள் ளது.

4) அண்மைக்காளங்களில் சுற்றுலாத்துரை வளர்ச்சி பெற்றுள் ளது.

7. சிற்றூர் என்பதைப் பிரித்து எழுதும்போது பெறப்படும் திருத்தமான வடிவம்

1) சிறு + ஊர்    2) சிற் + றூர்

3) சிறிய + ஊர்    4) சிறுமை + ஊர்

8. பின்வருவனவற்றுள் பொருத்தமற்றதைத் தெரிவு செய்க.

1) ரௌத்திரம் பழகு என்றார் பாரதியார்.

2) கோபம் பாவத்தைத் தேடும் என்பது பழமொழி.

3) ஆறுவது சினம் என்றார் ஔவையார்.

4) ஔவியம் பேசேல் நற்பண்பு ஆகும்.

9. பட்டறிவை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன். இவ்வாக்கியத் தின் எழுவாய்

1) நான்    2) பட்டறிவு    3) உங்களோடு    4)பகிர்வு

10. திங்கள் என்ற ஒரு சொல் குறிக்கும் பல பொருள்

1) சூரியன், சந்திரன், மாதம்

2) விண்மீன், சூரியன், மாதம்

3) கிழமைநாள், சூரியன், உடு

4) கிழமைநாள், மாதம், சந்திரன்

**02. பின்வரும் சொற்களுக்கான ஒத்தகருத்துச் சொல்லை எழுதுங்கள்.**

1. வந்தனை ..........................................
2. உணவு ..........................................
3. உறையுள் ..........................................
4. ஐயம் ..........................................
5. நிபுணர் ..........................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. வையகம் ..........................................
7. மெய்யுரை ..........................................
8. துவளுதல் ..........................................
9. சிந்தனை ..........................................
10. திங்கள் ..........................................

**03. பின்வரும் சொற்களுக்கான எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுங்கள்.**

1. இழிந்தது ..........................................
2. சோர்வு ..........................................
3. நிறை ..........................................
4. மண்ணவர் ..........................................
5. போற்று ..........................................
6. ஈதல் ..........................................

**04. பின்வரும் சொற்களை வைத்து பொருள் புலப்படும் வாக்கியங்களை எழுதுங்கள்.**

1. உரி ..........................................................................
2. உறி ..........................................................................
3. கேளீர் ..........................................................................
4. கேளிர் ..........................................................................
5. அகல் ..........................................................................
6. அகழ் ..........................................................................

**05. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. சுட்டெழுத்துக்களைக் கொண்ட சொற்கள் எழுதுக.

..........................................................................

2. தமிழ் என்ற சொல்லில் இடம்பெற்றுள்ள மெய் எழுத்துக்களின் வகைகளைக் குறிப்பிடுக.

..........................................................................

03) சிறிய ஊர்கள் அழகிய பச்சைக் கொடிகள் படர்ந்து அழகாகக் காட்சியளித்தன. இவ்வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள எழுவாய், பயனிலை அடைமொழிகளை எழுதுக.

..........................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) ஐயோ பாவம் அது ஒரு சிறு பிராணி

................................................................................

★ தரப்பட்ட வாக்கியத்திற்குப் பொருத்தமான நிறுத்தற்குறியீடுகளை இட்டு வாக்கியத்தை மீண்டும் எழுதுக.

5) வாக்கியம் ஒன்றின் உறுப்புக்கள் எவை?

................................................................................

6) உயிர்காக்கப் பயிர்காப்போம் என்ற கட்டுரையின் ஆசிரியர் யார்? இக்கட்டுரை இடம்பெறும் நூல் எது?

................................................................................

7) ஆதிகால மனிதன் எவ்வாறு உணவைப் பெற்றுக் கொண்டான்?

................................................................................

8) நிலம் எதனால் நாணுவதாக வள்ளுவர் குறிப்பிடுகிறார்?

................................................................................

9) பாலைநிலம் என்பது யாது?

................................................................................

10. புராதனகால ஊர்களுக்கும் தற்கால ஊர்களுக்கும் இடையிலான வேறுபாடு யாது?

................................................................................

11. "பச்சையாக உண்டு உரம்பெற்று வந்தார்கள்" என்பதன் பொருள் யாது?

................................................................................

12. கட்டுரையின் இறுதியில் ஆசிரியர் கூறும் நல்லுரைகள் மூன்றினை எழுதுக.

................................................................................

13. தன்னிறைவு பெறுவதற்கு நாம் யாது செய்ய வேண்டும் என கட்டுரையாசிரியர் கூறுகிறார்?

................................................................................

**06. கீழே தரப்பட்டுள்ள தொடர்களைக் கொண்டு வாக்கியம் அமையுங்கள்.**

1. பகுதிநேரப் பணி

................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. புறக்கடை

................................................................................................

3. ஆலாய்பறத்தல்

................................................................................................

4. மரவுரி

................................................................................................

5. காய்கறித்தன்னிறைவு

................................................................................................

6. பட்டறிவு

................................................................................................

**07. பின்வரும் பாடலை வாசித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

நெற்றி வியர்வை நிலத்திற் சொட்ட
நித்த உழைப்பில் நின்று நிலைக்கும்
'உத்தி யோகம்' உழவன் அல்லால்
'எத் துரை' இங்கு ஏற்கும் ஏற்கும்?

தன்னைக் கசக்கிச் சாறு பிழிந்து
மண்ணுல கத்தை வாழ வைக்கும்
கன்னன் இவனே; கம்பன் கவிக்கும்
மன்னன் இவனே - வாழ்க உழவன்!

மண்ணைக் கிண்டி மணியாய்க் குவிக்கும்
விண்ணன், இந்த வீர உழவன்;
மண்ணை உழுது பயிராற் செழிக்கும்
வண்ணம், உதவ வாரும் செகத்தீர்!

மெத்தப் பழைய கால முறையில்
வித்திட் டிவனும் வீணில் உலைய
விட்டிங் கிருத்தல் மேன்மை அலவே;
வித்தை வல்லீர், விந்தை நல்கீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இப்பாடலில் சிறப்பித்துப் போற்றப்படுவனைச் சிறப்பிக்கும் தொடர்கள் இரண்டினை எழுதுக.

.......................................................................................................

2. இப்பாடலில் இடம்பெற்றுள்ள வள்ளல், புலவன் ஆகியோரின் பெயர்களைக் குறிப்பிடுக.

.......................................................................................................

3. உலக மக்களுக்காக உழவன் எத்தகைய துன்பங்களை அனுபவிக்கின்றான்?

.......................................................................................................

4. சிறப்பு, நுதல் என்பவற்றுக்கான ஒத்தகருத்துச் சொல்லினை பாடலிலிருந்து தெரிவுசெய்து எழுதுக.

.......................................................................................................

5. "உதவ வாரும் செகத்தீர்" இத்தொடரின் எழுவாய் பயனிலைகளை எழுதுக.

.......................................................................................................

6. செகத்தீர் என்பதன் பொருள் யாது?

.......................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. ஈசன் உவக்கும் இன்மலர்



- ஈசன் உவக்கும் இன்மலர்கள் மூன்று என்ற பாடலின் ஆசிரியர் சுவாமி விபுலாநந்த அடிகள் ஆவார்.
- இவர் இலங்கையின் மட்டக்களப்பு காரைதீவில் 1892ஆம் ஆண்டு மார்ச் 27 ஆம் திகதி பிறந்தார்.
- இவரது தந்தை பெயர் சின்னத்தம்பி. தாயார் பெயர் கண்ணம்மை.
- இவரது இயற்பெயர் மயில்வாகனம் ஆகும்.
- இவர் எழுதிய நூல்கள்
  - யாழ்நூல்
  - மதங்கசூளாமணி
  - கங்கையில் விடுத்த ஓலை
- இவர் 1947ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19ஆம் திகதி இறையடி எய்தினார்.
- ஈசன் உவக்கும் இன்மலர் என்ற பாடலில் இறைவன் விரும்பு வனவற்றைப் பூவாக உருவகப்படுத்திப் பாடியுள்ளார்.
- இறைவன் விரும்பும் இன்மலர் மூன்று
  - உள்ளமாகிய தாமரைப்பூ
  - கூப்பிய கைகளாகிய கார்த்திகைப்பூ
  - இறைவனை விரும்பி நோக்குகின்ற விழி

**வெள்ளைநிற மல்லிகையோ வெறெந்த மாமலரோ**
**வள்ளல் அடி யிணைக்கு வாய்த்த மலர் எதுவோ?**
**வெள்ளைநிறப் பூவும் அல்ல வேறெந்த மலருமல்ல**
**உள்ளக் கமலம்அடி உத்தமனார் வேண்டுவது.**

விளக்கம்:

வெள்ளைநிற மல்லிகையோ வேறு எந்த மலர்களோ இறைவ னின் பாதங்களுக்கு இணையானவை அல்ல. உள்ளமாகிய தாம -ரைப்பூவையே உத்தமனாகிய இறைவன் விரும்புகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காப்பவிழ்ந்த மாமலரோ கழுநீர்மலர்த் தொடையோ**
**மாப்பிள்ளையாய் வந்தவர்க்கு வாயத்தமலர் எதுவோ?**
**காப்பவிழ்ந்த மலரும் அல்ல கழுநீர்த்தொடையும் அல்ல**
**கூப்பியகைக் காந்தள் அடி கோமனார் வேண்டுவது.**

விளக்கம்:

இறைவன், மொட்டிலிருந்து விரிந்த பெரிய மலர்களையோ மலரால் தொடுக்கப்பட்ட மாலையையோ விரும்புவதில்லை. வணங்கிய கைகளாகிய காந்தள் மலரையே இறைவன் வேண்டுகிறார்.

**பாட்டளிசேர் கொன்றையோ பாரில்இல் லாக்கற்பகமோ**
**வாட்டமுறா தவர்க்கு வாய்த்தமலர் எதுவோ?**
**பாட்டாளிசேர் கொன்றைஅல்ல பாரில் இல்லாப் பூவும்அல்ல**
**நாட்டவிழி நெய்தல்அடி நாயகனார் வேண்டுவது.**

விளக்கம்:

இசை எழுப்புகின்ற வண்டுகள் கூடுகின்ற கொன்றை மல -ரையோ, பூமியில் இல்லாத தேவலோகத்து மரமாகிய கற்பகத் -தையோ இறைவன் விரும்புவதில்லை. சோர்வற்றவர்களுக்கு ஒன்றின்மீது நாட்டம் (விரும்பும்) கொள்கின்ற கண்களாகிய நெய்தலையே விரும்புகிறார்.

## மாணவர் செயற்பாடு

**01. பின்வரும் சொற்களுக்கான ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.**

1. வள்ளல் :-.................................................
2. உள்ளம் :-.................................................
3. கமலம் :-.................................................
4. உத்தமனார் :-.................................................
5. நாயகன் :-.................................................
6. மாமலர் :-.................................................
7. கழுநீர் :-.................................................
8. தொடை :-.................................................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. காந்தள் :-...............................................

10. கோமகன் :-...............................................

11. பாட்டு :-...............................................

12. அளி :-...............................................

13. பார் :-...............................................

14. கற்பகம் :-...............................................

**02. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. ஈசன் உவக்கும் இன்மலர் என்ற பாடலின் ஆசிரியர் யார்?

..........................................................................................................

2. விபுலானந்தர் பாடிய சிறந்த நூலாகக் கருதப்படுவது எது?

..........................................................................................................

3. விபுலானந்தர் பாடிய நூல்கள் 3 தருக.

..........................................................................................................

..........................................................................................................

4. ஈசன் உவக்கும் இன்மலர் என்பதன் கருத்து யாது?

..........................................................................................................

5. ஈசன் உவக்கும் இன்மலர்களாகக் குறிப்பிடப்படுபவை எவை?

..........................................................................................................

6. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அணி யாது? உதாரணம் தருக.

..........................................................................................................

..........................................................................................................

7. "பாட்டளிசேர் கொன்றை" என்பதைப் பிரித்து எழுதி அதன் பொருளை எழுதுக.

..........................................................................................................

..........................................................................................................

8. பார் என்ற சொல் பெயர்ச்சொல்லாகவும் வினைச்சொல்லாகவும் வரும் வகையில் இரு வேறு வாக்கியங்கள் எழுதுக.

..........................................................................................................

..........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. இப்பாடலில் இறைவனைச் சிறப்பிக்கும் பெயர்களை எழுதுக.

..........................................................................................................

10. வள்ளலாகிய இறைவனின் பாதம் எதனை வேண்டுகிறது?

..........................................................................................................

11. கழுநீர்த்தொடை என்பதன் பொருள் யாது?

..........................................................................................................

12. கற்பகத்தின் சிறப்பு யாது?

..........................................................................................................

**03. கீழே தரப்பட்டுள்ள 'அ' பகுதியை 'ஆ' பகுதியுடன் இணையுங்கள்.**

| அ | ஆ |
|---|---|
| 1. இலவுகாத்த கிளி போல | நடுநிலை |
| 2. அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல | பயன்தராச் செயல் |
| 3. விழலுக்கிறைத்த நீர்போல | மிகுந்த பொறுமை |
| 4. ஆகாயத்திற் கோட்டை கட்டுவது போல் | காத்திருந்து ஏமாறல் |
| 5. சமன்செய்து சீர்தூக்கும் தராசு போல் | இயலாத காரியம் |

**04. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களுக்குப் பொருத்தமான உவமைத் தொடர்களைத் தெரிவுசெய்து கோடிட்ட இடத்தில் எழுதுக.**

1. கமலாவும் விமலாவும் .............................................. நெருங்கிப் பழகினார்கள்.

2. மனித வாழ்க்கை .......................................... நிலையற்றதாகும்.

3. இளமைக் காலத்துக் கல்வி ...................................................... நன்றாகப் பதியும்.

4. .............................................. பார்வதியும் தன் சுற்றத்தினருடன் ஒற்றுமையாக வாழ்ந்தாள்.

5. ராஜா எல்லோருடனும் .......................................... பழகுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. தென்னாலிராமன் ........................................ யாவரையும் தன்பக்கம் ஈர்க்கும் வல்லமையுடையவன்.

| |
|---|
| ஓடும் புளியம்பழமும் போல, கல்மேல் எழுத்துப்போல, நீர்க்குமிழி போல, காந்தம் இரும்பை இழுப்பது போல, நகமும் சதையும் போல, காகம் உறவு கலந்துண்பது போல, |

**05. பின்வரும் உவமைத் தொடர்களை வைத்து பொருத்தமான வாக்கியம் அமைக்க.**

1. கீரியும் பாம்பும் போல

.............................................................................................................

2. வேலி பயிரை மேய்ந்தது போல

.............................................................................................................

3. பெட்டிப் பாம்பு போல

.............................................................................................................

4. கனியிருப்பக் காய்கவர்தல் போல

.............................................................................................................

5. கட்டுக்கடங்காக் காளை போல

.............................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13. கடலும் கிணறும்



- ❖ கிழவியின் தந்திரம் என்னும் நூலின் ஆசிரியர் கி.வா.ஜகந்நாதன் ஆவார்.
- ❖ கடலும் கிணறும் என்ற கதை கிழவியின் தந்திரம் எனும் நூலில் இடம்பெற்றுள்ளது.
- ❖ தம்மிடமுள்ள செல்வத்தை அறம் செய்து வாழ்ப -வர்களின் வாழ்க்கை பற்றியும் செல்வத்தைப் பெருக்கி வாழ்பவர்களின் வாழ்க்கையையும் கடலும் கிணறும் கதை கூறுகின்றது.
- ❖ மிகச் சிறிய ஊரில் பிறருக்கு உதவும் உள்ளம் கொண்டவர்களும் குறுகிய மனப்பாங்கு உடையவர்களும் வாழ்ந்து வந்தார்கள்.
- ❖ நல்லுள்ளம் படைத்த ஒருவர் தம்மால் இயன்றவரை பிறருக்கு அறம் செய்து வந்தார்.
- ❖ வேறு சிலர் பிறருக்கு உதவாது தமது செல்வத்தையே பெருக்கி வந்தனர்.
- ❖ அவ்விதத்தில் செல்வந்தர் பலர் வாழ்ந்தபோதிலும் பிறருக்கு உதவும் சிறிய குடித்தனக்காரர் ஒருவரால் அவ்வூர் புகழ்பெற்றது.
- ❖ இவரிடம் உதவி பெற்ற புலவர்கள் பலரும் அவரது புகழைப் பரப் -புவதால் அவர் புகழும் ஊரின் புகழ் எங்கும் பரவியது.
- ❖ பேருபகாரிக்குத் தமிழ் மொழியில் அதி விருப்பு இருந்தமையால் புலவர்களின் பாடல்களைக் கேட்டு இன்பமடைவது வழக்கம்.
- ❖ தமிழ் மூதாட்டி ஔவையாரும் இந்தப் பேருபகாரியின் புகழை அறிந்ததும் அவரை நேரில் சென்று பாராட்ட விரும்பினார்.
- ❖ ஊருக்கு நடந்து செல்லும் வழியில் பெரிய மாளிகைகளைக் கண்டு இத்தகைய மாளிகைகளில் ஒன்றில்தானே பேருபகாரி வாழ்கிறார் என்று கேட்டார்.
- ❖ ஔவையாருடன் வந்தவர்கள், பேருபகாரியை விடவும் பெருஞ் செல்வந்தர்கள் இதில் வசிக்கிறார்கள் என்று கூறினர்.
- ❖ ஔவையார் பேருபகாரியின் வீட்டிற்குச் சென்றதும் அவரை எதிர்கொண்டு வரவேற்று உபசரித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ விருந்துண்டு தாம்பூலம் போட்டுக்கொண்டிருந்த போது ஊரின் பெரியவர், ஒளவையார் போன்ற பெரியவர்கள் பேருபகாரி வாழ்வதனாலேயே இவ்வூருக்கு வருகின்றனர் எனப் புகழ்ந்த -னர்.

❖ அத்தகைய புண்ணியவானை ஆசீர்வாதம் செய்யும்படி ஒளவை யாரிடம் வேண்டினார்.

❖ பேருபகாரியின் நற்பண்பு

- ஊரில் பல செல்வந்தர்கள் வாழ்கிறார்கள் அதனால் நான் சிறியவன் எனப் பெருந்தன்மையற்ற குணமுடையவன்.
- சிறியோனாகிய என்னை மட்டுமன்றி செல்வந்தர்களையும் வாழ்த்த வேண்டும் என்ற பொதுநலப்பண்பு வாய்ந்தவன்.

❖ அமைதியாக இருந்த ஒளவையார், இந்த ஊரில் வேறு செல்வந்தர் களும் இருக்கிறார்கள் என்றார்கள். அவர்கள் இவரை விடப் பணக்காரர்களா? என்று கேட்டார்.

❖ பணக்காரர் தம்மிடம் பணம் சேர்வதால் வரும் துன்பங்களை தருமம் செய்து போக்கிக்கொள்ளலாம்.

செல்வத்தை வேறு யாராவது துன்புறுத்தி அடித்துக்கொண்டு போய்ச் செலவு செய்வார்கள். பரோபகாரியிடம் எந்தத் திருட னும் வரமாட்டார்கள், இவர் நீடூழிகாலம் வாழ்ந்தால் தர்மம் செய்து கொண்டிருப்பார் எனக் கூறினார்.

**மாணவர் செயற்பாடு**

**01. பொருத்தமான விடையின்கீழ்க் கோடிடுங்கள்.**

1. நாம் எம்மிடம் இருப்பதைக் கொண்டு அறம் செய்தல் வேண்டும். அறம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்

   1) அகிம்சை 2) தர்மம் 3) மறம் 4) அகம்

2. அந்தப் பேருபகாரியால் ஊர் புகழ்பெற்றது. இங்கு வந்துள்ள சுட் டுப்பெயர்

   1) அந்த 2) பேருபகாரி 3) ஊர் 4) புகழ்

3. இந்த ஊரில் பல செல்வந்தர்கள் வாழ்கிறார்கள். செல்வந்தர்கள் என்பதன் எதிர்க்கருத்து

   1) திருவுடையவர் 2) அறிஞர்
   3) நல்லவர்கள் 4) வறியவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. தமிழ் மூதாட்டி ஔவையார் ஆத்திசூடி பாடினார். மூதாட்டி என்பதன் எதிர்ப்பாற் சொல்

1) மூதாட்டன் 2) கிழவன் 3) மூதாளன் 4) தாத்தா

5. புண்ணியவான் என்பதன் எதிர்ப்பாற் சொல்

1) புண்ணியவாள் 2) புண்ணியவதி
3) புண்ணியவாதி 4) புண்ணியவாளி

6. தன்னை நாடி வருவோருக்கு இல்லையென்னாது ஈபவன்

1) செல்வந்தன் 2) உலாபி 3) வள்ளல் 4) பெரியவர்

7. ஊரில் வாழ்ந்த செல்வர்கள் தமது செல்வத்தைப் பிறருக்குக் கொடுக்காது ..................... வாழ்ந்தார்கள்.

1) நகமும் சதையும் போல
2) சூரியன் முன் மின்மினிபோல
3) காலத்திற் பெய்த மழைபோல
4) நடு ஊரில் நச்சுமரம் பழுத்தது போல

8. அவர்களைக்காட்டிலும் நான் மிகவும் சிறியவன். இவ்வாக்கியத்தின் எழுவாய், பயனிலையாக அமைவது

1) அவர்கள், சிறியவன் 2) நான், சிறியவன்
3) சிறியவன், நான் 4) காடு, சிறியவன்

9. பேருபகாரிக்கு பணத்தைச் செலவழிக்கத் தெரியுமே ஒழியச் சேகரிக்கத் .......................

1) தெரியாது 2) தெரியும்
3) நன்றாகத் தெரியும் 4) வேண்டும்

10. அப்பாவோடு கமலாவும் அதிகாலையில் ..................

1) நடப்பார்கள் 2) நடப்பாள்
3) நடந்தாள் 4) நடக்கிறார்கள்

**02. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1) விளம்பரம் செய்வதன் நோக்கம் 3 தருக.

..........................................................................................

..........................................................................................

2) விளம்பரம் செய்யப்படும் பொருட்கள் 4 தருக.

..........................................................................................

........................... ...........................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) கடலும் கிணறும் என்ற கதையின் ஆசிரியர் யார்? இக்கதை பெறப்பட்ட நூல் எது?

.......................................................................................................

4) சிறிய ஊர் புகழ்பெறக் காரணமானவர் யார்? அவர் செய்த நற் -செயல் யாது?

.......................................................................................................

5) பேருபகாரியிடம் காணப்பட்ட நற்பண்புகள் இரண்டு தருக.

.......................................................................................................

.......................................................................................................

6) ஔவையாரிடம் இருந்த நற்பண்பு யாது?

.......................................................................................................

7) பேருபகாரி நீண்டகாலம் வாழவேண்டும் என ஔவையார் கூறி -யதன் காரணம் யாது?

.......................................................................................................

8) கடலும் கிணறும் கதையின் மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட படிப்பினை யாது?

.......................................................................................................

9) i) இந்த மாளிகைகளில் ஒன்றில்தானே அந்தப் பெரியவர் வாழு -கிறார்?

யாரால்:- ..........................................................................

யாருக்கு:-..........................................................................

ii) "என்னிடமுள்ள அபிமானத்தால் அந்தப் பெரியவர் அவ்வாறு பேசுகிறார்"

யாரால்:- ..........................................................................

யாருக்கு:-..........................................................................

10) பணம் சேர்வதால் ஏற்படும் துன்பங்களை செல்வந்தர் எவ்வாறு போக்கலாம்?

.......................................................................................................

**08. இடைவெளி நிரப்புங்கள்.**

1. தாகத்தில் வந்த முதியவர் தண்ணீரை ........................ வென்று குடித்தார்.
2. சிறுவன் பதற்றத்தால் வீதியில் ..................... கொண்டு நின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கண்ணகி அரசனின் அரண்மனைக்கு ........................ வந்தாள்.
4. குளிர் அதிகரித்தமையால் பற்கள் ........................ என நடுங்கின.
5. குழந்தை ........................ என நடந்தது.

| |
|---|
| கிழக்கு, தட்டுத்தடுமாறி, குடுகுடு, மளமள, கண்ணீரும் கம்பலையும் |

**புயலும் மழையும்**

புயலும் மழையும் வந்ததடா,
துயரம் மிகவும் தந்ததடா;
இயலிசை நாடகத் தமிழியல்பாய்
இயற்கையின் கூத்தின் றெழுந்ததடா!

சுற்றி வளைந்தே புயலடிக்கச்
சோழகம் கச்சான் வாடை கொண்டல்
எற்றி யடிக்க உயிர் துடிக்க,
எங்கும் பாயுது வெள்ளமடா!

பலப்பரி சோதனை பாருமடா;
பலமரம் ஊதையில் பாறுதடா;
சலப்பிர வாக நீச்சலிலே,
சலித்தன பல்லுயிர்; மூச்சிலையே!

**04. தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு விடை எழுதுக.**

1. இயற்கையின் கூத்தாகக் கூறப்படுபவை எவை? அவற்றால் ஏற்பட்ட நிலைகள் இரண்டு எழுதுக.

.......................................................................................................

2. பாடலில் கூறப்பட்டுள்ள முத்தமிழும் எவை?

.......................................................................................................

3. பாடலில் இடம்பெற்றுள்ள காற்றின் பெயர்களைக் குறிப்பிடுக.

.......................................................................................................

4. ஊதை, துயரம் என்பவற்றின் ஒத்தகருத்தினை எழுதுக.

.......................................................................................................

5. 'இயலிசை' என்பதைப் பிரித்து எழுதுக.

.......................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. கருங்காற் குறிஞ்சி

- மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி நிலம் எனப்படும்.
- மலைப்பகுதியிலேயே குறிஞ்சிப் பூக்கள் பூக்கும்.
- குறிஞ்சி சிறு புதர்களாகவும் மரங்களாகவும் வளரும்.
- நீலகிரியிலிருந்து சயாதிரி மலைகள் வரை மலையின் சரிவுகளில் வளரும்.
- குறிஞ்சி தன் வாழ்க்கைக் காலத்தில் ஒரே ஒரு தடவை மட்டுமே பூக்கும். பூக்கும் காலம் முடிந்ததும் பட்டுப்போக அதே இடத்தில் பின்னர் புதிய செடி முளைக்கும்.
- குறிஞ்சியில் பல வகைகள் உள்ளது பற்றி ரொபெட்ரைட் மற்றும் பெடொம் ஆகியோர் குறிப்பிட்டனர்.
- Flora of Madras Presidency என்ற நூல் எழுதிய தாவரவியலாளர் கேம்பிள் நாற்பத்தியாறு வகைக் குறிஞ்சிச் செடிகள் உள்ளதாகக் குறிப்பிட்டார்.
- Flora of Madras Presidency என்ற நூல் தென்னிந்திய தாவரவியலின் பைபிள் எனப் போற்றப்படும்.
- தமிழின் ஆரம்பகால இலக்கியங்களான அகநானூறு புறநானூறு போன்ற சங்ககால இலக்கியங்களில் குறிஞ்சிமலர் பற்றிய குறிப்புகள் உள்ளன.
- சங்க இலக்கியத்தில் சுற்றுச் சூழல் ஐந்து திணைகளாகப் பிரிக்கப்பட்டு மலைப்பிரதேசத்திற்கு குறிஞ்சிச் செடியின் பெயர் சூட்டப்பட்டது.
- முருகன் வேட்டுவர்குலப் பெண்ணான வள்ளியைத் திருமணம் செய்தபோது குறிஞ்சிப் பூக்களால் தொடுக்கப்பட்ட மாலையே அணிவிக்கப்பட்டது.
- 1858ஆம் ஆண்டு முதல் குறிஞ்சிமலர் பூத்த வரலாறு குறிப்பிடப்பட்டுள்ளது.
- கோத்தகிரியில் வசித்த கோபன் என்ற ஆங்கிலேயரிடம் இக் குறிப்புகள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ கோபனின் பாட்டி குறிஞ்சி பன்னிரெண்டு வருடங்களுக்கு ஒரு முறை மலர்வதை மலைவாசிகள் மூலம் அறிந்து பதிவுசெய்தார். பாட்டி, மகன், அவரது மகன் கோபன் என மூன்று தலைமுறையினர் இதனைப் பதிவுசெய்துள்ளனர்.

❖ நீலக்குறிஞ்சி காணப்படும் இடங்கள்

- முக்குறுத்தி சரணாலயம்
- மாஞ்சூர் மலைகள்
- மணவூர்

❖ குறிஞ்சிமலர் பற்றிய ஆய்வுகள்

- பாண்டிச்சேரி சலீம்அலி சுற்றுச்சூழல் நிறுவனம் களஆய்வு மேற்கொள்கின்றது.
- இந்நிறுவனத்தின் மரியம் மாத்துலா என்ற பெண்ணும் இது தொடர்பான ஆய்வில் ஈடுபடுகிறார்.

❖ குறிஞ்சிச் செடியின் அமைப்பு

- ஏறக்குறைய ஒரு மீற்றர் உயரம் வளரும்.
- தண்டு சிவப்பு நிறம்.
- காம்புகளின் கணுக்கள் கறுப்பு நிறமாகக் காணப்படும். இதனைக் கருங்காற் குறிஞ்சி என மதுரைக்காஞ்சி குறிப்பிடும்.

❖ குறிஞ்சி பூக்கும் காலத்தில் மலைச்சரிவு நீலமாகக் காணப்படுவதால் நீலகிரி என்ற பெயர் வழங்கப்படுகிறது.

❖ குறிஞ்சிப்பூ மலரும் காலத்தில் அதனிலிருந்து வரும் தேன் ஏனையவற்றை விடவும் சிறந்ததாகப் போற்றப்படுகிறது.

❖ குறிஞ்சிப் பூவின் தேனை குறிஞ்சிநாடனின் நட்புக்கு ஒப்புவமையாகக் கூறப்பட்டுள்ளது.

❖ "கருங்காற் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந் தேனிழைக்கும் நாடனொடு நட்பே"

எனக் குறுந்தொகை குறிப்பிடுகின்றது.

நட்பு கருங்காற்குறிஞ்சிப் பூவிலிருந்து இனிய தேன் கிடைப்பதற்கு ஒப்பானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவமை அணி

உவமானம் :- கருங்காற் குறிஞ்சிப்பூவின் தேன்

உவமேயம் :- நாடனின் நட்பு

பொதுத்தன்மை :- மிகவும் இனிமையான தன்மை.

❖ இயற்கை வரலாற்றாசிரியர்களின் கருத்து

தமிழ் நாட்டில் மேற்குத் தொடர்ச்சி மலையில் பாலக்காட்டுக் கணவாய்க்குத் தெற்கே பழனி மலைத்தொடர் உண்டு. இங்கு மூணார் அருகேயுள்ள ஆனைமுடி என்ற சிகரத்தைச் சூழ்ந்த பகுதியில் குறிஞ்சி அதிகமாக வளர்கிறது.

**மாணவர் செயற்பாடு:-**

**01. ஒத்தகருத்து எழுதுக.**

1. கிரி :- ..........................................................
2. வனம் :-..........................................................
3. புதர் :-..........................................................
4. வருடம் :-..........................................................
5. தாய் :-..........................................................
6. துறவி :-..........................................................

**02. பொருத்தமானவற்றை இணையுங்கள்.**

| | |
|---|---|
| 1. தென்னிந்திய தாவரவியல் | Flora of Madras Presidency |
| 2. குறிஞ்சி | நாடனின் நட்பு |
| 3. நீலக்குறிஞ்சி | முக்குறுத்தி சரணாலயம் |
| 4. மதுரைக்காஞ்சி | Kunthianum phlebohy lum |
| 5. குறிஞ்சித்தேன் | கருங்காற்குறிஞ்சி |

**03. 'அ' பகுதிக்குப் பொருத்தமானவற்றை 'ஆ' பகுதியிலிருந்து தெரிவு செய்து எழுதுங்கள்.**

| அ | ஆ |
|---|---|
| 1. ஆற்று நீர் | களகள என ஓடியது |
| 2. புகையிரதம் | படபட என அடித்தது |
| 3. திருடனின் உள்ளம் | பளபளவென்றிருந்தது |
| 4. கண்ணிலிருந்து நீர் | கடகட எனச் சென்றது |
| 5. தங்கம் | சலசல என ஓடியது |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04. பின்வரும் இணைமொழிகளை வைத்து வாக்கியம் அமைக்க.**

1. ஆறஅமர

..........................................................................................................

2. ஈவிரக்கம்

..........................................................................................................

3. அக்கம்பக்கம்

..........................................................................................................

4. கரடுமுரடு

..........................................................................................................

5. ஏற்றத்தாழ்வு

..........................................................................................................

**05. தரப்பட்ட பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார் என நம் முன்னோர் கூறியது முற்றிலும் உண்மை. முயற்சியுடையவரே புகழ் பெறுவர். மதிப்புப் பெறுவர். தொடங்கிய கருமத்தை அல்லும் பகலும் இடைவிடாது முயற்சியுடன் உழைக்கும் போது வெற்றி பெறலாம்.

நவில் தொறும் நூல் நயம் பயப்பது போலவே வாழ்விலும் முயற்சியோடும் விருப்போடும் கருமமாற்றும்போது நற்பயன் பெற லாம். இதனால் பேரும் புகழும் கிடைக்கும். நீர்க்குமிழி போன்ற வாழ்க்கையில் நற்செயல்களை ஆற்றுவதன் மூலமாக எம் பெயரை நிலைக்கச் செய்யலாம். பொய்புரட்டு இன்றி நீதியுடன் முயற்சி செய்தல் நன்று.

1. தரப்பட்ட பந்தியில் வலியுறுத்தப்படும் கருத்து யாது?

..........................................................................................................

2. தரப்பட்ட பந்தியிலிருந்து பின்வருவனவற்றைத் தெரிவு செய்து எழுதுக.
   1) பழமொழி ..........................................................
   2) இணைமொழிகள் ..........................................................
   3) உவமைத்தொடர்கள் ..........................................................
3. நீர்க்குமிழி போன்ற வாழ்க்கை என்பதன் பொருள் யாது?

..........................................................................................................

4. எமது முயற்சி எத்தகையதாக இருக்க வேண்டும்?

..........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. அல்லும் பகலும் என்பதில் "அல்" என்பதன் பொருள் யாது?

.................................................................................................................

06. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

1. குறிஞ்சி மலர்களின் இரு நிறங்களும் எவை?

.................................................................................................................

2. குறிஞ்சிச் செடியின் சிறப்பு யாது?

.................................................................................................................

3. குறிஞ்சிச் செடியின் வகைகள் பற்றி முதன்முதலில் குறிப்பிட்ட பிரித்தானியர்கள் யாவர்?

.................................................................................................................

4. கட்டுரையில் இடம்பெற்றுள்ள சங்ககால நூல்கள் 4 தருக.

.................................................................................................................

.................................................................................................................

5. நீலகிரி என்ற பெயர் வழங்கப்படக் காரணம் யாது?

.................................................................................................................

6. கள ஆய்வு என்றால் என்ன? குறிஞ்சிமலர் பற்றிய ஆய்வை மேற் கொண்டுவரும் நிறுவனம் எது?

.................................................................................................................

7. "கண்ணுக்கெட்டிய தூரம் வரை மலையடுக்குகள் நீலநிறப் போர்வை ஒன்றால் போர்த்தியதுபோல் தோன்றியது." இங்கு இடம்பெற்றுள்ள அணி யாது?

.................................................................................................................

8. நாடனின் நட்பு எதனுடன் ஒப்பிடப்படுகிறது? இவ்வாறு ஒப்பி டும் நூல் எது?

.................................................................................................................

9. குறிஞ்சிச் செடி பற்றிய ஆய்வில் ஈடுபட்டவர்களின் பெயர்க ளைப் பட்டியல் படுத்துக.

.................................................................................................................

.................................................................................................................

10. கேம்பிள் என்பவர் குறிஞ்சி பற்றிக் கூறிய கருத்து யாது?

.................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**07. பின்வருவனவற்றைப் பூரணப்படுத்துங்கள்.**










**08. தரப்பட்ட வாக்கியத்தை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக் -களுக்கு விடையளிக்க.**

*மாலா தனது நண்பர்களுடன் சுற்றுலாச் சென்று விலங்குகளைப் பார்த்தாள்.*

1. *உயர்திணை ஒருமைச் சொல்* :-......................................
2. *பலர்பால்* :-......................................
3. *இறந்தகாலம்* :-......................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பலவின்பால் :-.............................................

5. பன்மைச்சொற்கள் :-.............................................

6. ஒருமைச்சொற்கள் :-.............................................

7. எழுவாய், பயனிலை, செயற்படுபொருள்:-..............................

8. உயர்திணை ஒருமை வினைச்சொல்:-.......................................

**09. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் 'சரி' எனவும் பிழையாயின் 'பிழை' எனவும் அடையாளமிடுங்கள்.**

1. ஒரு செயல் முற்றுப்பெற்றதை இறந்தகாலம் என்பர். ( )
2. நீவிர் என்பது முன்னிலை ஒருமை ஆகும். ( )
3. யான் என்பது வினாச் சொல் ஆகும். ( )
4. தென்னந்தோப்பு என்பது பன்மைச் சொல் அல்ல. ( )
5. மனிதனல்லாத ஏனையவையெல்லாம் அஃறிணை ஆகும்.( )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15. படைப்பின் இரகசியம்



❖ படைப்பின் இரகசியம் என்ற கதை மண்பாசம் என்ற நூலில் இடம்பெற்றுள்ளது.

❖ இதனை எழுதியவர் கழனியூரான் என்பவர் ஆவார்.

❖ உலகிலுள்ள ஒவ்வொரு பொருளையும் இறைவன் வேறு வேறு விதமாகப் படைத்தமைக்கான காரணத்தை இக்கதை விளக்கு -கின்றது.

❖ சிகாமணி என்பவருக்குப் படைப்புப் பற்றி ஏற்பட்ட ஐயத்திற்கு வழிப்போக்கர் மூலம் நடைமுறையான விளக்கம் கொடுக்கப் -பட்டுள்ளது.

❖ சிகாமணி வெளியூருக்குச் செல்லும்போது கண்ட காட்சிகள்

- மெல்லிய பூசணிக்கொடியில் பெரிய பூசணிக்காய் காய்த்தி -ருப்பதையும் பெரிய ஆலமரத்தில் மிகச் சிறிய பழங்கள் பழுத்திருப்பதையும் கண்டு இதற்குக் காரணத்தைக் கண்டறிய வேண்டும் என எண்ணினான்.

❖ வழிப்போக்கரிடம் தன் சந்தேகத்தைக் கேட்டபோது, உணவுண் -டபின் விளக்கமளிப்பதாகக் கூறினார்.

❖ இருவரும் கட்டுச் சோற்றினை உண்டு பசியாறி, நீரருந்திய பின் களைப்பு நீங்க சிறிது நேரம் ஆலமரத்தடியில் படுத்தனர்.

❖ சிறிது நேரத்தில் சிகாமணியின் மூக்கு நடுவில் ஆலம்பழம் விழுந்ததும் அலறிக்கொண்டு எழுந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ வழிப்போக்கர் சிகாமணியைப் பார்த்து பெரிய ஆலமரம் சிறிய காய் காய்ப்பதன் காரணத்தைக் கேட்டாயே இப்போது யோசித்துப்பார் பூசணிக்காய் போன்ற பெரிய பழம் பழுத்து உன் முகத்தில் விழுந்திருந்தால் உன் கதி என்னவாகியிருக்கும்?

❖ வழிப்போக்கரின் விளக்கத்துடன் சிகாமணிக்கும் படைப்பின் இரகசியம் புரிந்தது.

❖ படைப்பின் இரகசியம்

பெரிய ஆலமரம் மிகச் சிறிய ஆலம்விதைக்குள்ளிருந்து தான் தோன்றுகிறது. அதன் நிழல் நாடிப் பலரும் இளைப்பாறச் செல்வதால் பழங்கள் சிறிதாக உள்ளது. தென்னை மரத்தின் விதை மிகவும் பெரியதாக இருப்பதால் அதற்குப் பரந்த கிளைகள் இல்லை. அது மேல் நோக்கி உயர்ந்து வளர்கிறது.

❖ இயற்கையின் படைப்புகள் எல்லாவற்றிலும் இரகசியங்கள் உள்ளன.

❖ இயற்கையின் படைப்பை சந்தேகம் கொள்ளல் கூடாது.

❖ இயற்கையைக் கூர்ந்து கவனிப்பதிலும் அதுபற்றி ஏன்?, எதற்கு? என்று கேள்விகள் எழுப்பி விடைகளைத் தேடுவதிலும் தப்பில்லை. ஆனால் இயற்கையின் படைப்பின் மீது சந்தேகம் கொள்ளல் கூடாது என அறிவுரை கூறினார்.

❖ சிகாமணி பெரியவரைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிட்டுத் தன் உடைமைகளை எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

**மாணவர் செயற்பாடு**

**01. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. பெரியவர் புன்சிரிப்பை உதிர்த்தார். புன்சிரிப்பு என்பதன் ஒத்த சொல்

   1) சிரிப்பு 2) நகை 3) அழுகை 4) சினம்

2. உழவன் கழனிக்குச் சென்றான். கழனி என்பதன் ஒத்தகருத்துச் சொல்

   1) காணி 2) வீடு 3) வயல் 4) தோட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஐயா என்பதன் எதிர்ப்பாற் சொல்

1) ஐயை 2) அம்மணி 3) ஐயந்தி 4) அம்மா

4. பயனிலையுடன் யார் என்ற வினாவை வினவுவதன் மூலம் பெறப்படுவது

1) எழுவாய் 2) பயனிலை

3) செயற்படுபொருள் 4) அடைமொழி

5. ஒரு வாக்கியத்தில் தொடராக வரும் சொற்களை பிரித்துக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் குறியீடு

1) முக்காற்புள்ளி 2) காற்புள்ளி

3) முற்றுப்புள்ளி 4) வியப்புக்குறி

6. இடையன் நாகுவை மேய்த்தான். நாகு என்பதன் எதிர்ப்பாற் சொல்

1) கன்று 2) எருது 3) பசு 4) மாடு

7. கடலும் கடல் சாந்த நிலமும்

1) நெய்தல் 2) பாலை 3) குறிஞ்சி 4) மருதம்

8. பின்வருவனவற்றுள் உயிர்நெடில் எழுத்து அல்லாதது

1) ஏ 2) ஊ 3) ஒ 4) ஐ

9. பின்வருவனவற்றுள் சிலேடை அணியாக அமைவது

1) ஆலமரம் 2) குறும்பா 3) கவிதை 4) வியாபாரம்

10. மதி போன்ற முகம் என்பது

1) உவமை அணி 2) உருவகஅணி

3) சிலேடை அணி 4) இணைமொழி

**02. பின்வரும் சொற்களுக்கான ஒத்தகருத்துச் சொல்லினை எழுதுக.**

1. சந்தேகம் :- ....................................
2. ஆச்சரியம் :- ....................................
3. தொண்டர் :- ....................................
4. வழி :- ....................................
5. தூக்கம் :- ....................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**03. பின்வரும் சொற்களுக்கான எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுக.**

1. காய் :-..............................................
2. இரகசியம் :-..............................................
3. தண்ணீர் :-..............................................
4. தூரம் :-..............................................
5. வெயில் :-..............................................

**04. பின்வரும் அட்டவணைகளைப் பூரணப்படுத்துங்கள்.**

| வினையாலணையும் பெயர் | தொழிற் பெயர் | கூட்டுப் பெயர் | மாற்றுப்பெயர் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

| தன்மைப் பெயர் | முன்னிலைப் பெயர் | படர்க்கைப் பெயர் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

**05. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. படைப்பின் இரகசியம் என்ற கதையில் இடம்பெறும் பாத்திரங்களைக் குறிப்பிடுக.

..............................................................................................

2. சிகாமணியின் இயல்பு யாது?

..............................................................................................

3. சிகாமணிக்கு ஐயத்தை ஏற்படுத்திய விடயம் யாது?

..............................................................................................

4. உண்ட மயக்கம் தொண்டர்க்கும் உண்டு என்பதன் பொருளை எழுதுக.

..............................................................................................

5. தென்னை மரத்தின் படைப்பின் இரகசியம் பற்றி எழுதுக.

..............................................................................................

..............................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No: 894.811
Acc No 341

6. பெரியவர் சிகாமணிக்குக் கூறிய அறிவுரை யாது?

.......................................................................................................

7. பெரியவரிடம் சிகாமணி தனக்கு ஏற்பட்ட சந்தேகத்தைக் கேட்டான்.

இவ்வாக்கியத்தின் எழுவாய், பயனிலை, செயற்படுபொருளை எழுதுக.

.......................................................................................................

8. சிகாமணி அலறிக்கொண்டு எழும்பிய காரணம் யாது?

.......................................................................................................

9. சிகாமணியும் வழிப்போக்கரும் எத்தகைய இடத்திலிருந்து உணவு உண்டார்கள்?

.......................................................................................................

10. கீழுள்ள வாக்கியங்களில் இடம்பெற்றுள்ள வழுக்களை இனங் -கண்டு திருத்தமாக எழுதுங்கள்.

1. வெய்யிலில் நடந்தமையால் வழிப்போக்கர் கழைப்புடன் இருந்தார்.

.......................................................................................................

2. சிகாமணி தன் உடமைகளுடன் புரப்படத் தயாரானான்.

.......................................................................................................

3. ஒரு நாளியில் அந்தச் சம்பவங்கல் நடைபெற்று முடிந்தது.

.......................................................................................................

11. பின்வரும் கூற்று யாரால், யாருக்கு எச்சந்தர்ப்பத்தில் கூறப் -பட்டது என எழுதுக.

1. "வெயில் மிகக் கடுமையாக அடிக்கிறது. நடந்து வந்த களைப்பு வேறு"

.......................................................................................................

**06. பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்க.**

1. மூக்கை நுழைத்தல்:-.......................................................................

.......................................................................................................

2. உடைமை :-.......................................................................

.......................................................................................................

Arasady Public Library
Municipal Council
Batticaloa.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No. Acc No

3. சிறப்பு :-.............................................................
.............................................................

4. சிறிப்பு :-.............................................................
.............................................................

5. தணி :-.............................................................
.............................................................

6. தனி :-.............................................................
.............................................................

**07. தரப்பட்ட பகுதியை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

"குயில் போன்ற குரல்" இந்த உவமையை இனிய குரல் உடையவர்களுக்குக் கூறுவீர்கள். அந்தளவுக்கு எல்லோரையும் கவ -ரும் தன்மையுடைய குயிலுக்கு கோகிலம் என்றும் பெயருண்டு. மரங் -களில் தளிர்களும் மொட்டுக்களும் தோன்றும் வசந்தகாலத்தில் குயில் கீதம் பாட ஆரம்பிக்கும்.

குயிலின் குரலை அதிகம் கேட்டிருப்போம். ஆனால் அந்தள -வுக்கு அதன் உருவத்தைத் தெரியுமா? பார்ப்பதற்குக் காகத்தைப் போலவே இருக்கும். இரண்டும் ஒரே நிறம்தான். குயிலின் உடல் சற்று மெலிந்து வால் சற்று நீளமாக இருக்கும். ஆண் குயிலுக்கும் பேடைக்கும் தோற்றத்தில் வேறுபாடுண்டு.

தந்திரத்தில் பிரபலமான காக்கையை விட குயிலுக்குச் சாமர்த் -தியம் அதிகம் என்பதை அறிவீர்களா? குயிலுக்குக் கூடுகட்டத் தெரி -யாது. காக்கையின் கூட்டிலேயே முட்டையிடும். இரண்டினதும் முட்டைகள் ஒரே தோற்றமுடையவை. இரு பறவைகளும் சித்திரை ஆடி மாதங்களுக்கிடையில் முட்டையிடுபவை. ஆணும் பெண்ணு -மாக அடைகாக்கும். காக்கை ஒன்று அடைகாக்கும் போது மற்றையது உணவு தேடச்செல்லும். பெண் குயில் முட்டையிடும் தரு -ணம் வந்ததும் ஆண்குயில் காக்கைக் கூடிருக்கும் மரத்தைக் கண்ட -றியும். அந்தக் கூட்டிற்கு அருகே சென்ற குயில் குரலெழுப்ப, கோபம் கொண்ட காகம் குயிலைத் துரத்திச் செல்லும். அடைகாக்கும் காகத்தை ஆண்குயில் நீண்ட நேரம் அலைய வைக்கும். இச்சமயத் -தில் பெண்குயில் காகத்தின் கூட்டில் புகுந்து முட்டை இடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டையிட்டு முடிந்ததும் சமிக்ஞைக் குரல் எழுப்ப ஆண்குயில் வேகமாகப் பறந்துவிடும்.

பிறகென்ன, ஒன்றும் அறியாத காக்கை கூட்டிற்கு வந்து தன் முட்டைகளோடு குயிலின் முட்டைகளையும் அடைகாக்கும்.

1. குயிலும் காகமும் எவ்வாறு உருவத்தில் வேறுபடுகின்றன?

.......................................................................................................

2. குயில் காகத்தின் கூட்டினுள் எவ்வாறு முட்டையிடும்?

.......................................................................................................

3. குயிலின் மறுபெயர் ஒன்றினைக் குறிப்பிடுக.

.......................................................................................................

4. தரப்பட்ட பந்தியில் இடம்பெற்ற உவமை அணியினை இனங் கண்டு எழுதுக.

.......................................................................................................

5. இரு பறவைகளும் முட்டையிடும் காலப்பகுதி எது?

.......................................................................................................

6. குறள், குரல் ஆகிய சொற்களை வைத்து இருவேறு வாக்கியங்கள் எழுதுங்கள்.

.......................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16. பொய் சொல்லாதே

❖ கிராமிய மக்களால் வாய் மொழியாகப் பாடப்படும் பாடல்கள் நாட்டார் பாடல்கள் எனப்படும்.

❖ நாட்டார் பாடலின் மறுபெயர்கள்

- நாட்டுப்பாடல்
- வாய்மொழிப்பாடல்
- கிராமியப்பாடல்

❖ நாட்டார் பாடலின் வகைகள்

- தாலாட்டுப்பாடல்
- தொழிற்பாடல்
- விளையாட்டுப் பாடல்
- ஒப்பாரிப்பாடல்

❖ ஆணும் பெண்ணும் வேலை செய்யும்போது களைப்புத் தெரியாது பாடப்படும் பாடலே தொழிற்பாடலாகும்.

- தொழிற்பாடலானது மீனவப்பாடல், அரிவுவெட்டுப் பாடல் எனப் பல வகைப்படும். வேடிக்கைப்பாடலும் தொழில் செய்யும்போது பாடப்படும் பாடல் ஆகும்.

❖ பொய் சொல்லாதே என்ற கதைப்பாடல் உண்மை பேசும் பழக்கத்தை எடுத்துரைக்கிறது.

❖ நாம் எச்சந்தர்ப்பத்திலும் பொய் பேசுதல் கூடாது.

❖ பாடநூலில் இடம்பெற்றுள்ள வேடிக்கைக் கதைப்பாடலின் வசனநடை

இராசா வீட்டின் முற்றத்தில் நனைந்த சீனி காயும் போது இராமன் வந்தான். அரசனிடம் காயும் பொருள் என்ன? என்று கேட்டான்.

அதற்கு இராசா மலையின் மண்ணென்று கூறியதும் இராமன் எழுந்து சென்றான். எனினும் இராசா தனக்குப் பொய் சொல்லி விட்டதாக இராமன் எண்ணினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது சிந்தை, அந்தச் சீனி முழுவதையும் உண்ணுவதிலேயே நாட்டம் கொண்டிருந்தது. அதற்காக ஒரு வழியைக் கண்டறிந்தான். இதற்காகத் தன் மகனை அழைத்து,

நான் மன்னன் வீட்டில் இருப்பேன். வடக்கன் மாடு செத்ததென்று நீ வந்து கூறவேண்டும் என்று கூறி மன்னன் வீட்டுக்குச் சென்றான்.

அவன் கூறியதுபோலவே, மகனும் அழுதவாறு ஓடிவர, "ஏன் அழுகிறாய்?" என்று இராமன் கேட்டான்.

"எங்கள் எருது வலி வந்து இறந்து போய்விட்டதே. ஐயோ! இனி எனக்கு ஏமாற்றம்தான்" என்று புலம்பி சீனியை அள்ளி வாயினுள் அடைந்தான்.

இறந்தவர்களுக்குக் கடைசியில் வாயில் மண்போடும் வழக்கம் உண்டு. இராமனும் தங்களுக்கு வாய்மண் வேண்டும் என்று சொல்லிக் காயும் சீனியை அள்ளி வாரி அடைந்தான். வயிறும் நிரம்பிவிட்டது. பின் மகனுக்கும் அவனது தாய்க்கும் போடுவதற்கு வேண்டும் என்று கூறி முழுவதையும் அள்ளிக்கொடுத்தான்.

அரசன் சீனியை மலைமண் என இராமனுக்குப் பொய் கூறியதால் முழு சீனியையும் இழக்க நேரிட்டது.

நகைச்சுவைக்காகவேனும் நாம் பொய் சொல்லக் கூடாது.

## மாணவர் செயற்பாடு

**01. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.**

1. எண்சாண் உடம்பிற்குச் சென்னி சிறந்தது. இங்கு சென்னி என்பதன் பொருள்

   1) கண் 2) தலை 3) கால் 4) அழகு

2. பொய் சொல்வதால் பாதகம் உண்டாகும். பாதகம் என்பதன் ஒத்த சொல்

   1) தீமை 2) நன்மை 3) விபரீதம் 4) இழப்பு

3. புத்தி என்ற சொல்லுக்குப் பொருத்தமற்ற சொல்

   1) அறிவு 2) ஞாலம் 3) ஞானம் 4) மதி

4. எங்கள் எருது வலிவந்து இறந்தது. எருது என்பதன் எதிர்ப்பாற் சொல்

   1) நாகு 2) மாடு 3) நாம்பன் 4) கன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பின்வருவனவற்றுள் ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொது வாக வரும் சொல்

1) தாய் 2) ஐயா 3) பிள்ளை 4) வந்தான்

6. பின்வருவனவற்றுள் இறந்தகால பெண்பால் வினைச்சொல்லாக அமைவது

1) வருவாள் 2) ஓடினாள்

3) வாங்குவான் 4) படிக்கிறான்

7. பின்வருவனவற்றுள் தொழிற்பெயர் அல்லாதது

1) ஆடுதல் 2) வாங்கு 3) நடித்தல் 4) பேசுதல்

8. இராசா ஏமாற்றமடைந்தார். இராசா என்பதற்கு பொருத்தமான மாற்றுப் பெயர்

1) நான் 2) அவன் 3) அவர் 4) அவர்கள்

9. விருட்சம், தரு ஆகிய பொருள்களைத் தரும் ஒரு சொல்

1) விருப்பம் 2) மரம் 3) மலர் 4) கொள்ளை

10. பின்வருவனவற்றுள் மெல்லின உயிர்மெய்

1) ங, ஞ, ண 2) ய, ர, ம 3) ந, ங, ன 4) ங, ம, ன

**02. சுருக்கமான விடை எழுதுங்கள்.**

1. முத்தமிழ் வித்தகர் எனப் போற்றப்படுபவர் யார்?

..........................................................................................

2. கொன்றைவேந்தன், மூதுரை ஆகிய நூல்களின் ஆசிரியர் யார்?

..........................................................................................

3. வினைச் சொற்கள் ஐந்து எழுதுங்கள்.

..........................................................................................

4. வினைச்சொற்களின் இயல்புகள் மூன்று தருக.

..........................................................................................

5. கரடுமுரடான பாதையில் கடகடவென வண்டி சென்றது. இவ்வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள இணைமொழி யாது?

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. வேடிக்கைக் கதைப்பாடல் முன்வைக்கும் அறிவுரை யாது?

.................................................................................................

7. வேடிக்கைக் கதைப்பாடலில் இடம்பெறும் பாத்திரங்கள் எவை?

.................................................................................................

8. வெயிலில் காய்ந்த பொருள் யாது? இராசா அது என்ன பொருள் என்று கூறினார்?

.................................................................................................

9. நாட்டார் பாடல் என்றால் என்ன?

.................................................................................................

10. வேடிக்கைக் கதைப்பாடலுடன் தொடர்புடைய பழமொழிகள் 5 எழுதுக.

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

**03. கீழே தரப்பட்டுள்ள கதைப்பாடலை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

ஆக்காண்டி அக்காண்டி
எங்கெங்கே முட்டை வைத்தாய்
கல்லைப் பிளந்து கடலருகே
முட்டை வைத்தேன்
வைத்ததுமோ நாலுமுட்டை
பொரித்ததுவோ மூன்றுமுட்டை
மூத்தகுஞ்சுக்கு இரைதேடி
மூன்றுமலை சுற்றிவந்தேன்
இளைய குஞ்சுக் கிரைதேடி
ஏழுமலை சுற்றிவந்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்திருந்த குஞ்சுக்கிரைதேடி
பவளமலை சுற்றிவந்தேன்
மாயக்குறத்தி மகன்வழிமிறத்துக்
கண்ணி குத்தி
காலிரண்டும் பட்டு
சிறகிரண்டும் மாரடிக்க
நானழுத கண்ணீரும்
குஞ்சழுத கண்ணீரும்
இஞ்சிக்குப் பாய்ந்த இடத்தே
லாமிஞ்சை வேரூன்றி
தாழைக்குப் பாய்ந்த இடத்தே
தளம்பினது கண்ணீர்
வாழைக்குப் பாய்ந்த இடத்தே
வற்றினது கண்ணீர்.

1. இப்பாடலில் இடம்பெற்றுள்ள பறவை எது?

.................................................................................................

2. இப்பறவை எங்கே முட்டை வைத்தது?

.................................................................................................

3. பறவை எத்தனை முட்டை இட்டது? எத்தனை முட்டை பொரித்தது?

.................................................................................................

4. தாய்ப்பறவை இரைதேடி எங்கு சென்றது?

.................................................................................................

5. பறவைக்கு நிகழ்ந்த சம்பவம் யாது?

.................................................................................................

6. பறவைகள் அழுத கண்ணீர் எங்கெங்கு சென்றதாகக் கூறப்படுகிறது?

.................................................................................................

7. கண்ணி, கன்னி ஆகிய சொற்களை வைத்து பொருள் விளங்க இரு வேறு வாக்கியங்கள் எழுதுக.

.................................................................................................

.................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17. வீழ்ந்த ஆலமரம்



- தமிழ்மொழிக்குத் தொண்டாற்றிய முது -பெரும் புலவர்களுள் தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதஐயர் சிறப்பாகப் போற்றப்படுப -வர்.
- இவரது தமிழ்ப்பணி அளவிடற்கரியது. இவரது மரணம் தமிழ் உலகிற்கு ஏற்படுத் -திய பேரிழப்பினை ஒரு பெரிய ஆலமரத்து -டன் ஒப்பிட்டு கல்கி அவர்கள் எழுதியுள் -ளார்.
- முதலில் ஆலமரத்தின் சிறப்புக்களை நோக்குவோம். கிராமப் பாடசாலைக்கு அருகில் பெரிதாக வளர்ந்திருந்த ஆலமரம் நாற் -புறமும் விழுது விட்டு பசுமையான குளிர்நிழல் கொடுத்தது.
  - பட்சிகள் பல தங்கும் மரமாகவும் அது காணப்பட்டது.
  - பெரும் புயற்காற்றில் அந்த மரம் விழுந்தமையால் லோகல் பண்டு இலாகா உத்தியோகத்தர்கள் ஏலம் போட்டனர்.
  - வாங்கியவர் அதனைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டினார்.
- ஆலமரம் இருந்த இடத்தில் ஒரு பெரிய குழி இருந்தது பெரும் கவலையை ஏற்படுத்தியது.
- ஆலமரம் விழுந்ததைப் போன்று தமிழுலகமும் தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதஐயரை இழக்க நேரிட்டது.
- சாமிநாதஐயர் திருவட்டீசுவரன் பேட்டை தியாகராஜ விலாசத் -தின் மேல் மாடியில் எப்போதும் ஓலைச்சுவடியையோ புத்தகத்தையோ பார்த்துக்கொண்டிருந்தார்.
- உ.வே.சாமிநாதஐயரின் தமிழ்த் தொண்டு
  - ஆரம்பத்தில் தமிழ் இலக்கியங்கள் ஓலைச்சுவடிகளிலேயே எழுதப்பட்டன. இவை இயற்கை அனர்த்தங்களாலும் கறை -யானாலும் அழிவுப் பாதைக்குள்ளாயின.
  - ஏட்டில் எழுதப்பட்ட இலக்கியங்களை அச்சில் ஏற்றிப் பதிப்புகளாக வெளியிட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இவர் பதிப்பித்த நூல்களுள் முக்கியமானவை:-

சீவகசிந்தாமணி

சிலப்பதிகாரம்

மணிமேகலை

புறநானூறு

பத்துப்பாட்டு

❖ புகையிரதத்திலோ கட்டை வண்டியிலோ கால்நடையாகவோ சென்று ஓலைச்சுவடி இருக்கும் இடத்தைக் கண்டறிந்து கறையான்களின் ஆதிக்கத்திலிருந்து மீட்டெடுப்பார்.

❖ பெரியவர் ஒருவரின் வீட்டுப் பரணில் ஓலைச்சுவடிகளின் ஓரத் -தில் கறையான் அரித்திருந்தது. சுவடிகள் கிடைத்த மகிழ்ச்சியில் ஆனந்தக்கண்ணீர் வடித்தார்.

❖ சாமிநாதஐயர் மகிழ்ச்சியடைந்ததற்கு மாறாக, ஏமாற்றமே கிடைத்தது. பழந்தமிழ் நூலைத்தேடி வந்தவருக்கு அண்மையில் எழுதப்பட்ட ஸ்தலபுராணத்தின் ஓலைச்சுவடியே கிடைத்தது.

❖ அந்த ஓலைச்சுவடியுடன் பழைய ஓலைச்சுவடியைத் தேடிச் செல்கிறார்.

❖ ஆங்கிலேயர் ஆட்சிசெய்த அக்காலத்தில் தமிழ்ப்பற்றுக் குறைந்து காணப்பட்டமையால் தொண்டு செய்யும் பெரியார்களை ஆதரிப் -பதும் குறைவாகவே இருந்தது.

❖ மடாதிபதி தமிழபிமானம் கொண்டவராக இருப்பின் அவர் தமிழ்த்தொண்டு செய்பவர்களை ஆதரிப்பார்.

❖ ஜமீன்தார் அல்லது ஓரிரு செல்வந்தர்களும் தமிழ்த்தொண்டைப் பாராட்டினர்.

❖ சாமிநாதஐயருக்கு தமிழ் மீதான அன்பும் ஆர்வமும் அவரது சதை நரம்புகளில் கலந்து மூச்சாக இருந்தது.

❖ இத்தகைய தமிழ்த் தொண்டரை இனிமேல் நாம் காணமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாணவர் செயற்பாடு**

**01. பொருத்தமான விடை எழுதி கீறிட்ட இடங்களை நிரப்புக.**

1. தமிழ்த்தாத்தா என ........................................ போற்றப்படுகிறார்.
2. ........................................ தங்கத்தாத்தா எனப் போற்றப்படுகிறார்.
3. புராதன காலத்தில் தமிழ் இலக்கியங்கள் .................................. இல் எழுதப்பட்டன.
4. ஆலங்கனிகள் ........................ நிறத்தில் கீழே விழுந்து கிடந்தன.
5. தமிழ்த்தாத்தா சுவாமிநாதஐயர் ......................... இல் வாழ்ந்தார்.
6. ................................................ காலத்தில் சுவாமிநாதஐயர் தனது தமிழ்த் தொண்டை ஆரம்பித்தார்.

**02. பின்வரும் வாக்கியங்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. வேற்றுமை உருபுகளைக் குறிப்பிடுக.

   ..........................................................................................

2. பெயர்ச்சொற்களின் சிறப்பு யாது?

   ..........................................................................................

3. பின்வரும் வாக்கியங்களில் இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபுகளையும் உருபு ஏற்ற சொற்களையும் இனங்கண்டு எழுதுக.
   1) ஆசிரியர் வந்தார். ..................................................
   2) கறையான் சுவடிகளை அரித்தது..................................................
   3) கல்கியால் வீழ்ந்த ஆலமரம் என்ற கட்டுரை எழுதப்பட்டது.

      ..........................................................................................

   4) சிங்கத்தோடு அதன் குருளை சென்றது. ..................................

4. வேற்றுமை என்றால் என்ன?

   ..........................................................................................

5. முதலாம், இரண்டாம் வேற்றுமைகளின் மறுபெயர்களைக் குறிப்பிடுக.

   ..........................................................................................

6. மூன்றாம் வேற்றுமையின் உருபுகள், சொல்லுருபுகள் என்பன புலப்படும் வகையில் வாக்கியம் அமைக்க.

   .............................. ..........................................................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| வேற்றுமை | உதாரணம் |
|---|---|
| முதலாம் வேற்றுமை | 1. ................................................<br>2. ................................................ |
| இரண்டாம் வேற்றுமை | 1. ................................................<br>2. ................................................ |
| மூன்றாம் வேற்றுமை | 1. ................................................<br>2. ................................................ |

8. மதி போன்றது.
மதியைப் போன்றது.
மேலுள்ள வாக்கியங்களின் வேறுபாட்டினை இனங்கண்டு விளக்குக.

..........................................................................................

..........................................................................................

9. 'பாரதி' என்ற பெயர்ச்சொல்லை முதலாம், இரண்டாம், மூன்றாம் வேற்றுமைகளாக மாற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுக.

..........................................................................................

10. மூன்றாம் வேற்றுமையில் கருவி கருத்தாப் பொருளையும் உடனி -கழ்ச்சிப் பொருளையும் உணர்த்தும் உருபுகளைத் தருக.

..........................................................................................

**03. வீழ்ந்த ஆலமரம் என்ற கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. வீழ்ந்த ஆலமரம் என்ற கட்டுரையின் ஆசிரியர் யார்?

..........................................................................................

2. வீழ்ந்த ஆலமரம் கட்டுரையின் மையக்கருத்து யாது?

..........................................................................................

3. ஆலமரம் எவ்வாறு காட்சியளித்ததாகக் கூறப்படுகிறது?

..........................................................................................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. தமிழுலகிற்கு உ.வே.சாமிநாதஐயர் ஆற்றிய மிகச்சிறந்த பணி யாது?

.................................................................................................

5. சாமிநாதஐயர் பதிப்பித்த நூல்கள் 5 தருக.

.................................................................................................

6. எஜமான் ஒருவரின் வீட்டில் சாமிநாதஐயர் கண்டெடுத்த சுவடி எது?

.................................................................................................

7. ஆங்கிலேயர் காலத்தில் தமிழின் நிலை எவ்வாறு இருந்தது?

.................................................................................................

8. சாமிநாதஐயர் தமிழ் மீது கொண்ட பற்றினை எடுத்துக்காட் -டும் சந்தர்ப்பங்கள் இரண்டினை எழுதுக.

.................................................................................................

.................................................................................................

9. கட்டுரையில் இடம்பெற்றுள்ள உவமைஅணி ஒன்றினை எழுதுக.

.................................................................................................

10. ஐயா உங்கள் வீட்டில் பழைய ஓலைச்சுவடி ஒன்று இருக்கிற தாமே என்று கேட்டார்

தரப்பட்ட வாக்கியத்திற்குப் பொருத்தமான நிறுத்தற்குறியீடு களை இட்டு மீண்டும் எழுதுக.

.................................................................................................

.................................................................................................

**04. பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்க.**

1. பட்சி :- ..........................................................................

.................................................................................................

2. பரண் :- ..........................................................................

.................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கனி :- ........................................................................................
...................................................................................................
4. கணி :- ........................................................................................
...................................................................................................
5. ஸ்தானம் :- ........................................................................................
...................................................................................................
6. இலாகா :- ........................................................................................
...................................................................................................
7. பரந்து :- ........................................................................................
...................................................................................................
8. பறந்து :- ........................................................................................
...................................................................................................
9. விழுது :- ........................................................................................
...................................................................................................
10. சுவடி :- ........................................................................................
...................................................................................................
11. சுவடு :- ........................................................................................
...................................................................................................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18. பிள்ளை அழுத கண்ணீர்

❖ இயல், இசை, நாடகம் என்பன முத்தமிழ் ஆகும்.

❖ இலக்கியம் இயல் ஆகும். இலக்கியத்திற்கு இசையைக் கொடுக்கும்போது அது இசைத்தமிழ் ஆகும். இசையோடு கூடிய இலக்கியத்திற்கு அபிநயம் கொடுக்கும்போது அது நாடகத்தமிழாகின்றது.

❖ பிள்ளை அழுத கண்ணீர் நாடகமானது பேச்சுத்தமிழில் அமைந்துள்ளது.

❖ பிள்ளை அழுத கண்ணீர் நாடகத்தில் முன்வைக்கப்படும் விடயம்:

- பிள்ளைக்கு வைத்த பாலை எலியொன்று குடித்ததும் பிள்ளை பாலுக்காக அழுதுகொண்டிருந்தது எலியின் காதில் கேட்டது. பாலைப் பெற்றுக்கொள்வதற்கு எலி மேற்கொண்ட முயற்சிகள் கூறப்பட்டுள்ளன.

❖ எலி ஆட்டிடம் பால் கேட்டபோது ஆடு கூறிய காரணம் பசுமையான இலைகுழை தின்னவில்லை சருகுகளையே தின்றேன். நல்ல இலைகுழைத் தந்தால் பால் தரலாம் எனக் கூறியது.

❖ எலி புல் எடுத்து வருவதற்காக வயலம்மாவிடம் சென்று உதவி கேட்டது. அப்போது வயலம்மா தண்ணீர் தந்தால் புல் தருவதாகக் கூறியது.

❖ தண்ணீர் பெறுவதற்கு குளத்தாத்தாவிடம் சென்றபோது குளக்கட்டு உடைந்ததால் தண்ணீரெல்லாம் வீணாகிட்டது. குளக்கட்டைத் திருத்தினால் தண்ணீர் தருவதாகக் கூறியது.

❖ குளக்கட்டைத் திருத்துவதற்குக் கொத்தனாரை அழைத்து வரும்படி கூறியதும் கொத்தனாரிடம் எலி சென்றது.

❖ கொத்தனார் குளக்கட்டைத் திருத்துவதற்குக் கல்லுத் தேவை எனக் கூறியதும் மலை மாமாவிடம் சென்று கல்லுக் கேட்டது.

❖ மலை மாமாவோ தம்மிடமிருந்த மரங்களை வீடு கட்டுவதற்கும் விறகிற்கும் தறித்துக் கொண்டு போய்விட்டார்கள். கல்லெல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-லாம் வெளியில் தெரிகிறது. வெப்பம் அதிகம் கற்களையும் எடுத் -தால் நாங்கள் அழிந்து விடுவோம் என்றது.

❖ மழையினால் மண்ணெல்லாம் கரைந்துவிட்டது. இனிமேல் ஒரு புல்பூண்டும் வளரமாட்டாது என மலை கூறியது.

❖ எலி தன் முயற்சியைக் கைவிடாது, அந்தப் பிள்ளை வளர்ந்து பெரியவனானதும் அதிக மரங்களை நட்டு வளர்க்கும். உங்க ளோடு அன்பாய் இருக்கும் எனக் கூறியது.

❖ மலைகள் தேவையான கற்களை உருட்டிவிட்டன.

❖ எலி எல்லோரும் மரங்களை நட்டு காடுகளை வளர்க்க வேண் - டும் என்ற கருத்தை முன்வைத்தது.

❖ கொத்தனாரின் உதவியுடன் குளக்கட்டையும் வாய்க்காலையும் கட்டி முடித்தது.

❖ வயலுக்கு நீர் இறைத்து புல்லு முளைத்ததும் ஆடு புல் தின்றது. குவளை ஒன்றில் ஆடு பால் கொடுத்தது.

❖ எலி ஆட்டிற்கு நன்றி கூறி மகிழ்ச்சியுடன் பாடல் பாடியவாறு பிள்ளையிடம் சென்று பாலைக் கொடுத்தது.

❖ பிள்ளை பாலைக் குடித்து மகிழ்ந்தது.

❖ எல்லோரும் மரங்களை நாட்டவேண்டும் என எலி கூறியது. பிள் -ளையும் மரக்கன்று ஒன்றைக் கொடுத்து உதவியது.

❖ பிள்ளை அழுத கண்ணீர் நாடகத்தில் இடம்பெறும் பாத்திரங்கள்

- எலி
- ஆடு
- வயல்
- குளம், கொக்கு
- மலை
- கொத்தனார்
- பிள்ளை

❖ பிள்ளை அழுத கண்ணீர் என்ற நாடகம் மூலம் இயற்கை வளங் களான வயல், குளம், மலை ஆகியவை பாதிப்படைந்து இருப்ப தையும் மரங்களை நாட்டுவதன் மூலம் மழைவளம் பெருகி இயற்கையைப் பேணமுடியும் என்ற கருத்து வலியுறுத்தப்படுகி றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் செயற்பாடு

**01. பின்வரும் சொற்களுக்குரிய ஒத்தகருத்துச் சொற்களை எழுதுக.**

1. கோபம் :-.......................... 5. குளம் :-..........................
2. மகிழ்ச்சி :-.......................... 6. மரம் :-..........................
3. வயல் :-.......................... 7. தவளை :-..........................
4. மலை :-.......................... 8. பூ :-..........................

**02. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களின் எழுவாய், பயனிலை, செயற்படுபொருளையும் அவற்றின் அடைமொழிகளையும் இனங்கண்டு எழுதுக.**

1. பசுமையான குழைகள் இல்லாமையால் ஆடு வட்டமாக நின்றது.

..........................................................................................

..........................................................................................

2. உயர்ந்த மலைகள் எலிக்குப் பெரிய கற்களைக் கொடுத்தன.

..........................................................................................

..........................................................................................

**03. பின்வரும் வாக்கியங்களில் இடம்பெற்றுள்ள உருபு, பொருள் என்ப -வற்றை எழுதி அவை எத்தனையாம் வேற்றுமை என எழுதுக.**

1. கொத்தனார் குளக்கட்டைக் கட்டினார்.

..........................................................................................

2. பிள்ளை இனிமையான பாலை வைத்திருந்தது.

..........................................................................................

3. கொத்தனாரால் குளக்கட்டு மீண்டும் கட்டப்பட்டது.

..........................................................................................

**04. பின்வரும் கூற்றுக்கள் யாரால், யாருக்கு, எச்சந்தர்ப்பத்தில் கூறப் பட்டன?**

1) "ஓமோம் பிள்ளை என்னிட்டத்தான் வந்தவன்"

யாரால் :- ..............................................

யாருக்கு :- ..............................................

எச்சந்தர்ப்பம் :- ..............................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) "ஐயோ கடவுளே இது பெரிய ஆக்கினையாப்போச்சு"

யாரால் :- .................................................

யாருக்கு :- .................................................

எச்சந்தர்ப்பம் :- .................................................

3) "குளம் குட்டையில தண்ணியில்லை வெயில் வெக்கையால வத்திப்போச்சு"

யாரால் :- .................................................

யாருக்கு :- .................................................

எச்சந்தர்ப்பம் :- .................................................

4) "கட்டிறது பெரிய விசயமில்லை கல்லு, சீமெந்து, மரமொண்டுமில்ல. அதால நானும் வேலவெட்டி இல்லாம இருக்கிறன்"

யாரால் :- .................................................

யாருக்கு :- .................................................

எச்சந்தர்ப்பம் :- .................................................

5) "வயலுக்கு தண்ணீர் இறைப்போம் வாங்கோ
வயலுக்கு தண்ணீர் இறைப்போம் வாங்கோ"

யாரால் :- .................................................

யாருக்கு :- .................................................

எச்சந்தர்ப்பம் :- .................................................

**05. கீழே தரப்பட்டுள்ள பேச்சு வழக்குத் தொடர்களை எழுத்து வழக்கில் மாற்றி எழுதுக.**

1. போவம் .................................................
2. அங்கையொரு பிள்ளை .................................................
3. குழைதிண்டு கனநாளாச்சு .................................................
4. துடிச்சுப் பதைச்சு .................................................
5. குடிச்சிட்டன் .................................................
6. வீணாய்ப்போச்சு .................................................
7. காஞ்சுபோயிற்றன் .................................................
8. ஆரெண்டு .................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. வெயில் வெக்கையில வத்திப்போச்சு

..........................................................................................

10. தண்ணி தந்தியெண்டால் நானுனக்குப் புல்லுத் தாறன்.

..........................................................................................

**06. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. பிள்ளை அழுத கண்ணீர் என்ற நாடகத்தின் ஆசிரியர் யார்?

..........................................................................................

2. இந்நாடகத்தில் இடம்பெறும் பாத்திரங்களைக் குறிப்பிடுக.

..........................................................................................

3. எலி யாரிடம் எத்தகைய உதவிகளைக் கேட்டது என்பதை எழுதுக.

..........................................................................................

4. எலி இழைத்த தவறு யாது?

..........................................................................................

5. நாடகத்தின் இறுதிப் பகுதியில் முன்வைக்கப்படும் அறிவுரை யாது?

..........................................................................................

6. எலிக்கு ஏன் கல் தேவைப்பட்டது? கல்லைப் பெறுவதற்கு யாரிடம் சென்றது?

..........................................................................................

7. எலி குளத்தாத்தாவிடம் வந்தவோது எலியிடம் வந்து கதைத் தவர்கள் யார்?

..........................................................................................

8. எலி ஏன் மலைக்கு வந்ததாக மலை கூறியது?

..........................................................................................

9. குழந்தை ஏன் அழுதது?

..........................................................................................

10. பிள்ளை மடக்மடக்கெனப் பாலைக் குடித்தது. இவ்வாக்கி -யத்தின் செயற்படுபொருள் யாது?

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. கீழே தரப்பட்டுள்ள இணைப்பிடைச் சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை இணைத்து எழுதுக.

ஆகவே, எனினும், ஆனால், அல்லது

1. அர்சவி விளையாட வருவாள்
அர்சிதா விளையாட வருவாள்
உ+ம்:-அர்சவி அல்லது அர்சிதா விளையாட வருவாள்.
2. அர்சிதா தினமும் புதிய விடயங்களை வாசிப்பாள்.
அர்சிதா புத்திசாலி
.......................................................................................................................
3. குமார் கடுமையாக உழைத்தான்.
குமார் பணம் சேமித்தான்.
.......................................................................................................................
4. தம்பி, காலையில் பால் குடிப்பான்.
தம்பி காலையில் கோப்பி குடிப்பான்.
.......................................................................................................................
5. வானம் கறுத்தது.
மழை பெய்யவில்லை
.......................................................................................................................

08. பொருத்தமான இணைப்பிடைச் சொற்களை எழுதி இடைவெளியைப் பூரணப்படுத்துக.

1. அர்சவி கணிதம் நன்றாகச் செய்வாள்.
...................... விஞ்ஞானமும் நன்றாகச் செய்வாள்.
2. அபூரவன் நன்றாகப் படித்தான் ......................
பரீட்சையில் சிறந்த புள்ளி பெற்றான்.
3. நீங்கள் விளையாட வரவேண்டும்.
...................... நானும் வரமாட்டேன்.
4. பிள்ளைகளுக்கு நற்பழக்கம் பழக்கவேண்டும்.
...................... அடிக்கக் கூடாது.
5. தமிழ்மொழி புராதன காலத்திலிருந்தே வழக்கத்தில் உள்ளது.
...................... தமிழ்மொழி ஒரு செம்மொழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**09. 'அத்துடன்' இணைப்பிடைச் சொல்லைப் பயன்படுத்தி ஐந்து வாக்கி -யங்கள் எழுதுக.**

*1.* ..........................................................................................

..........................................................................................

*2.* ..........................................................................................

..........................................................................................

*3.* ..........................................................................................

..........................................................................................

*4.* ..........................................................................................

..........................................................................................

*5.* ..........................................................................................

..........................................................................................

**10. தரப்பட்ட வாக்கியங்களை ஒழுங்குமுறைப்படுத்தி எழுதுக.**

*1)* *விஞ்ஞானப் பட்டதாரி.*

*2)* *விபுலானந்தர் முத்தமிழ் வித்தகராகப் போற்றப்படுகிறார்.*

*3)* *தமிழ் இலக்கியத்திலும் மிகுந்த நாட்டம் கொண்டவர்.*

*4)* *இயல், இசை, நாடகம் சார்ந்த பல நூல்களை எழுதினார்.*

*5)* *விபுலானந்தராகிய மயில்வாகனன் சிறந்த தமிழ்ப்புலவர்.*

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19. வெண்ணிலாவே



❖ வெண்ணிலாவைப் பற்றிப் பல கவிஞர்கள் சங்ககாலத்திலிருந்து இன்றுவரை பல கவிதைகள் பாடி -யுள்ளனர்.

❖ மகாகவி சுப்பிரமணிய பாரதியார், கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை போன்றோர் சந்திரனைப் பற்றிக் கவிதை பாடினர்.

❖ விண்ணில் மின்னும் மீன்களிடை என்ற பாடலின் ஆசிரியர் எம்.ஆதம்லெப்பை ஆவார்.

❖ இப்பாடல் முற்றத்து மல்லிகை என்னும் அவரது நூலில் இடம் பெற்றுள்ளது.

❖ எம்.ஆதம்லெப்பை அவர்கள் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் பொத்துவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

❖ வெண்ணிலாவைப் பற்றி கவிஞர் பின்வருமாறு புகழ்ந்துள்ளார்.

- ஆகாயத்தில் ஒளிவீசும் நட்சத்திரங்களுக்கிடையே காணப் படும் வெண்ணிலா.
- மண்ணிலுள்ள மக்கள் மகிழ்வதற்காக முழுமதியாக தினமும் வரவேண்டும்.
- நீண்ட வானத்தில் காணப்படுவதனால் (நிலவுவதால்) தான் உனக்கு நிலவு என்ற பெயர் வழங்கப்பட்டதோ?
- உலகில் உள்ள மக்கள் மகிழ்ச்சியடைவதற்காக உலவுகின்ற நீ ஏன் உருவத்தில் மாற்றமடைகிறாய்?
- நீ வரும் பாதையில் கரிய மேகம் வந்து உன்னை மறைப்பது அநியாயம்.
- அழகு நிறைந்த குளிர்ச்சியான உன்மீது மேகம் பொறாமை கொண்டதோ?
- நல்ல செயல்கள் செய்ய வேண்டும் என விரும்பி சேவை செய்பவர்களுக்குத் தொல்லை, துன்பம், தடை என்பன தோன்றும். அத்தகையோருக்கு நீ ஒப்பிடப்படுகிறாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் செயற்பாடு

**01. மிகப்பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. "உலகோர் உவக்க ஒளி தந்து" இங்கு உவக்க என்பதன் ஒத்தகருத்துச் சொல்

   1) உழைப்பு 2) மகிழ 3) சிரிக்க 4) இருள்

2. "எழில்மிகு தண்மதி உன்மீது" இங்கு தண்மதி என்பதன் கருத்து

   1) தனிமையான நிலவு 2) பிறைநிலா
   3) குளிர்ச்சியான நிலா 4) வெளிச்சமான நிலா

3. எழில் என்பதன் ஒத்தகருத்து

   1) அழகு 2) அலங்காரம்
   3) ஒளி 4) அவலட்சணம்

4. அநியாயம் என்பதன் எதிர்ச்சொல்

   1) நீதி 2) அநீதி 3) தீது 4) நியாயம்

5. பின்வருவனவற்றுள் பலவின்பாலாக அமைவது

   1) மக்கள் 2) மீன்கள் 3) நிலவு 4) உனக்கு

6. "உலகோர் உவக்க ஒளி தந்து உதவும்" என்ற தொடரின் எழுவாய்

   1) நிலவு 2) உலகோர் 3) ஒளி 4) உலவும்

7. "வழியில் உன்னைக் கார்மேகம்" இங்கு உன்னை என்ற மாற்றுப் பெயர் குறித்து நிற்பது

   1) மேகம் 2) மதி 3) விண்மீன் 4) வானம்

8. அறிவு, சந்திரன் என்பவற்றைக் குறிக்கும் ஒரு சொல்

   1) மதி 2) புத்தி 3) இரவி 4) திங்கள்

9. மின்னஞ்சலின் password ஐ அதீஜயன் மறந்தான். password என்பதன் தமிழ்க் கலைச்சொல்

   1) கடவுச்சொல் 2) கடவுச்சீட்டு
   3) பெயர் 4) முகவரி

10. பின்வருவனவற்றுள் பொருத்தமற்ற சொல்லாக அமைவது

   1) செய்யுள் 2) பா 3) கவிதை 4) கதைப்பாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**02. பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக.**

1. சந்திரனைப் பற்றி கவிதை புனைந்த இரு கவிஞர்களைத் தருக

..............................................................................................................

2. எழுவாய் வேற்றுமை என அழைக்கப்படும் வேற்றுமை எது?

..............................................................................................................

3. மதி என்ற சொல் பெயர்ச்சொல்லாகவும் வினைச்சொல்லாகவும் அமையும் வகையில் இருவேறு வாக்கியங்கள் எழுதுக.

..............................................................................................................

4. ஒரு பொருளை இன்னொரு பொருளுடன் ஒப்பிடும் அணி எவ்வாறு அழைக்கப்படும்?

..............................................................................................................

5. தன், தண் ஆகிய சொற்களை வைத்துப் பொருள் விளங்குமாறு இரு வேறு வாக்கியங்கள் அமைக்க.

..............................................................................................................

..............................................................................................................

**03. வெண்ணிலாவே பாடலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. விண்ணில் மின்னும் மீன்களிடையே விளங்கும் நல்ல வெண் ணிலாவே" என்ற அடியின் பொருளை எழுதுக.

..............................................................................................................

2. "முழுமதியாய் என்றும் வாராயோ" எனக் கவிஞர் கேட்டதன் காரணம் யாது?

..............................................................................................................

3. நிலவு என்ற பெயர் வெண்ணிலாவுக்கு வழங்கப்பட காரணம் யாது?

..............................................................................................................

4. தண்மதி மீது எரிச்சலுற்றது எது?

..............................................................................................................

5. வெண்ணிலாவின் நற்பண்பாக இப்பாடலின் இறுதிப் பகுதியில் கூறப்படுவது யாது?

..............................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. இப்பாடலில் இடம்பெறும் வெண்ணிலாவின் சிறப்புக்கள் மூன்று தருக.

.....................................................................................................

.....................................................................................................

7. நிலா வரும் வழியாகக் கூறப்படுவது எது?

.....................................................................................................

8. வெண்ணிலா என்ற பாடல் இடம்பெறும் நூல் எது? இப்பாடலின் ஆசிரியர் யார்?

.....................................................................................................

**04. தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 1. Exchange | வலைப்பக்கம் |
| 2. Digital | வலைத்தளம் |
| 3. Museum | எண்மானம் |
| 4. webpage | இணைவகம் |
| 5. network | பண்பலை |
| 6. memory | பரிமாற்றம் |
| 7. Fm | அருங்காட்சியகம் |

**05. பின்வரும் கலைச்சொற்களுக்கான ஆங்கில மொழிபெயர்ப்புகளை எழுதுக.**

1. சுட்டி :-...............................................
2. எழுத்துரு :-...............................................
3. வன்தகடு :-...............................................
4. உலாவி :-...............................................
5. கோப்பு :-...............................................

**06. பின்வரும் பாடலை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு பூரணமான விடை எழுதுக.**

எட்டுத்திசையும் பறந்து திரிகுவை
ஏறியக் காற்றில் விரைவோடு நீந்துவை
மட்டுப்படா தெங்கும் கொட்டிக் கிடக்குமிவ்
வானொளி யென்னு மதுவின் சுவையுண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெட்டையி னோடின்பம் பேசிக் களிப்புற்றுப்
பீடையிலா தோர் கூடுகட்டிக் கொண்டு
முட்டை தருங் குஞ்சைக் காத்துமகிழ் வெய்தி
முந்தவுணவு கொடுத் தன்பு செய்திங்கு
முற்றத்திலேயுங் கழனிவெளியிலும்
முன்கண்ட தானியம் தன்னைக் கொணர்ந்துண்டு
மற்றப் பொழுதுகதை சொல்லித் தூங்கி பின்
வைகறை யாகுமுன் பாடிவிழிப் புற்று
விட்டுவிடு தலையாகி நிற்பாய்

- மகாகவி சுப்பிரமணிய பாரதியார் -

1. காற்றில் நீந்துவனவாக கவிஞர் யாரைக் குறிப்பிடுகிறார்?

.................................................................................................

2. இவற்றின் வீடு எவ்வாறு சிறப்பிக்கப்படுகிறது?

.................................................................................................

3. தானியங்களை எங்கிருந்து பெற்றுக்கொள்கின்றன?

.................................................................................................

4. எட்டுத்திசைகளும் எவை?

.................................................................................................

5. இப்பாடலில் இடம்பெற்றுள்ள பெண்பாற்சொல்லினை இனங்கண்டு எழுதுக.

.................................................................................................

6. இப்பாடலின் ஆசிரியர் யார்?

.................................................................................................

7. பின்வரும் சொற்களுக்கான ஒத்தகருத்துச் சொல்லினை எழுதுக.

வைகறை :-..............................................

கழனி :-..............................................

பீடை :-..............................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்திரன்

மீனினம் ஓடிப் பரக்குதம்மா! - ஊடே
வெள்ளி ஓடமொன்று செல்லுதம்மா!
வானும் கடலாக மாறுதம்மா! - இந்த
மாட்சியி லுள்ளம் மூழுதம்மா!

முல்லை மலர்ப்பந்தல் இட்டனரோ? - தேவர்
முத்து விதானம் அமைத்தனரோ?
வெல்லு மதியின் திருமணமோ? - அவன்
விண்ணில் விழாவரும் வேளையிதோ?

சின்னஞ் சிறுவில்லாய்க் கண்டதம்மா! - பின்னர்
செம்பொற் குடம்போலே தோன்றுதம்மா!
என்ன அதிசயம் பாரடியம்மா! - ஈதோர்
இந்திர சாலமோ? கூறாயம்மா!

- கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20. ஒழுக்கம் உடைமை



- ❖ ஒழுக்கம் என்பது மனிதர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நற் பண்பு ஆகும்.
- ❖ ஒழுக்கம் விழுமியம் எனவும் அழைக்கப் -படும்.
- ❖ ஒழுக்கமே மனிதர்களுக்கு உயர்வைக் கொடுக்கும்.
- ❖ நாம் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங் களில் சில
    - உண்மை பேசுதல்
    - பெரியோரை மதித்தல்
    - கற்ற கல்விக்கேற்ப ஒழுகுதல்
    - பிறருக்கு உதவி செய்தல்
    - உலகத்தோடு ஒத்து வாழுதல்
- ❖ ஒழுக்கம் இன்றியமையாததாகையால் நீதிநூல்களும் அதன் முக் -கியத்துவத்தைக் கூறுகின்றன.
- ❖ திருக்குறள் ஒழுக்கமுடைமை என்ற அதிகாரத்தின் பத்துக் குறட் -பாக்களிலும் ஒழுக்கம் பற்றிக் கூறுகிறது.
- ❖ ஒழுக்கத்தின் இன்றியமையாமை
    - ஒழுக்கமானது மனிதர்களுக்குச் சிறப்பைக் கொடுப்பதனால் அது உயிரைவிடவும் மேலானதாகும்.
    - ஒழுக்கம் ஒருவரின் குடிப்பிறப்பையே உயர்த்துவதால் ஒழுக் -கத்தைக் கடைப்பிடிப்பது அவசியமானது.
- ❖ ஒழுக்கம் உள்ளதால் ஏற்படும் சிறப்புகள்
    - ஒழுக்கத்தை அழியாமல் வருந்திக் காக்கும் போது அதுவே துணையாக வரும்.
    - ஒழுக்கத்தால் எல்லோரும் பெரும் சிறப்பை அடைவார்கள்.
    - ஒழுக்கம் எல்லா நன்மைகளுக்கும் காரணமாக அமையும்.
    - ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பவர்கள் எப்போதும் நல்ல வாய்ச்சொற்களையே சொல்வார்கள். இத்தகையோர் மறந்தா -லும் தீய சொற்களைச் சொல்ல மாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ ஒழுக்கம் இல்லாமையால் ஏற்படும் குற்றம்

- ஒழுக்கம் இல்லையேல் வாழ்வில் உயர்வு இருக்கமாட்டாது.
- அந்தணர்கள் ஒழுக்கம் தவறினால் கெட்டுவிடுவார்கள்.
- ஒழுக்கம் தவறுவதால் பெரும் பழியைப் பெறுவர்.
- தீய ஒழுக்கமானது என்றும் துன்பத்தையே கொடுக்கும்.

❖ பல நூல்களைக் கற்ற ஒருவர் உலகத்தோடு பொருந்தி வாழுகின்ற ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்காதுவிடின் அறிவற்றவராகவே விளங்குவார்.

## மாணவர் செயற்பாடு

**01. பின்வரும் சொற்களுக்கான ஒத்தகருத்துச் சொற்களை எழுதுக.**

1. விழுப்பம்:- ......................................
2. பார்ப்பான்:- ......................................
3. அழுக்காறு:- ......................................
4. உரவோர்:- ......................................
5. மேன்மை:- ......................................
6. இடும்பை:- ......................................

**02. பின்வரும் சொற்களைப் பொருள் விளங்க வாக்கியம் அமைக்க.**

1. ஒழுக்கம் :- ......................................................................................
......................................................................................................
2. குடிமை :- ......................................................................................
......................................................................................................
3. பழி :- ......................................................................................
......................................................................................................
4. பலி :- ......................................................................................
......................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**03. பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.**

1. ஒழுக்கமுடைமை ..........................................
2. நல்லொழுக்கம் ..........................................
3. வெந்நீர் ..........................................
4. மட்பாண்டம் ..........................................
5. தண்ணீர் ..........................................

**04. ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களாகப் பிரிக்கமுடியாத சொற்கள் 5 எழுதுக.**

..........................................

..........................................

**05.** i) நிலைமொழியும் வருமொழியும் உள்ள சொற்கள் 10 எழுதுக.

..........................................

ii) நிலைமொழி, வருமொழி என்றால் என்ன?

..........................................

iii) புணர்ச்சி என்றால் என்ன?

..........................................

iv) விகாரப்புணர்ச்சியின் வகைகள் எவை?

..........................................

v) இயல்புப்புணர்ச்சி என்றால் என்ன? உதாரணம் தருக.

..........................................

**06.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**07. பின்வரும் சொற்கள் எவ்வகைப் புணர்ச்சி என்பதை இனங் கண்டு விளக்குக.**

1. கற்கள் :- ..............................................
2. பலாப்பழம் :- ..............................................
3. அணைக்கட்டு :- ..............................................
4. ஆணிவேர் :- ..............................................
5. படவேலை :- ..............................................

**08. பின்வரும் சொற்கள் எவ்வகைப் பெயர்ச்சொற்கள் என எழுதுக.**

1. வேலைக்காரன்:- ..............................................
2. பறந்தவை:- ..............................................
3. நூலகம்:- ..............................................
4. நீவிர்:- ..............................................
5. நீங்கள்:- ..............................................

**09. ஒழுக்கமுடைமை என்ற அதிகாரத்தை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. ஒழுக்கம் உயிரினும் மேலானதாகப் போற்றப்படக் காரணம் யாது?

..............................................

2. செல்வம் இல்லாதவர்கள் யார்?

..............................................

3. ஒழுக்கம் இல்லாவிடின் ஏற்படும் குற்றங்கள் எவை?

..............................................

4. ஒழுக்கமுடைமையால் உண்டாகும் மேன்மை பற்றிக் குறிப் -பிடுக.

..............................................

5. பல நூல்களைக் கற்றவராயினும் அறிவற்றவர்கள் என வள்ளு -வர் யாரைக் குறிப்பிடுகிறார்?

..............................................

**10. பின்வரும் குறட்பாக்களைப் பூரணப்படுத்துக.**

1. அழுக்காறு உடையான்கண் ..............................................
2. ஒழுக்கம் உடைமை குடிமை ..............................................
3. .............................................. வழுக்கியும் வாயால் சொலல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**11. பின்வரும் குறட்பாக்களின் பொருளை உங்கள் உரைநடையில் எழுதுக.**

1. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

..................................................................................................

..................................................................................................

2. ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக்கு அறிந்து.

..................................................................................................

..................................................................................................

3. உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
இல்லார் அறிவிலா தார்.

..................................................................................................

..................................................................................................

4. பரிந்து ஓம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்துஓம்பித்
தேரினும் அஃதே துணை.

..................................................................................................

..................................................................................................

5. நன்றிக்கு வித்தாகும் நல்ஒழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

..................................................................................................

..................................................................................................

**12. பின்வரும் குறட்பாக்களை ஒழுங்குபடுத்தி எழுதுக.**

1. உரவோர் / இழுக்கத்தின் / ஓதம் / ஒழுக்கத்தின்
ஒல்கார் / அறிந்து / படுபாக்கு

..................................................................................................

..................................................................................................

2. பார்ப்பான் / பிறப்பு / மறப்பினும் / குன்றக்
கெடும் / ஒத்துக் / கொள்ளலாகும் / ஒழுக்கம்

..................................................................................................

..................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21. புதிய ஆத்திசூடி



- ❖ புதிய ஆத்திசூடியைப் பாடியவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் ஆவார்.
- ❖ மகாகவி சுப்பிரமணிய பாரதியார் 1882ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ஆம் திகதி இந்தியா -வின் எட்டயபுரத்தில் பிறந்தார்.
- ❖ இவரது தந்தையார் பெயர் சின்னச்சாமி ஐயர் தாயாரின் பெயர் இலக்குமி அம்மாள்.
- ❖ விநாயகர் நான்மணிமாலை, கண்ணம்மா, சுதந்திரப்பள்ளு, பாப்பாப்பாடல் போன்ற பல கவிதைகளைப் பாடினார்.
- ❖ பாரதியாரின் இளமைப்பெயர் சுப்பையா ஆகும்.
- ❖ புதிய ஆத்திசூடியும் பாரதியாரால் பாடப்பட்டது.

**மாணவர்கள் ஆறாம் தரத்தில் கற்றவற்றையும் மீட்டல் செய்யுங்கள்.**

ஆத்திசூடி, இளம்பிறை அணிந்து
மோனத் திருக்கும் முழுவெண் மேனியான்;
கருநிறங் கொண்டுபொற் கடல்மிசைக் கிடப்போன்;
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்;
ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர்
உருவகத் தாலே உணர்ந்துணராது
பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே அதனியல் ஒளியுறும் அறிவாம்;
அதனிலை கண்டார் அல்லலை அகற்றினார்;
அதனருள் வாழ்த்தி அமரவாழ்வு எய்துவோம்;

| | | | |
|---|---|---|---|
| 1. | அச்சம் தவிர் | 2. | ஆண்மை தவறேல் |
| 3. | இளைத்தல் இகழ்ச்சி | 4. | ஈகை திறன் |
| 5. | உடலினை உறுதிசெய் | 6. | ஊண்மிக விரும்பு |
| 7. | எண்ணுவ துயர்வு | 8. | ஏறுபோல் நட |
| 9. | ஐம்பொறி ஆட்சிகொள் | 10. | ஒற்றுமை வலிமையாம் |
| 11. | ஓய்த லொழி | 12. | ஔடதங் குறை |
| 13. | கற்றது ஒழுகு | 14. | காலம் அழியேல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 15. | கிளைபல தாங்கேல் | 16. | கீழோர்க்கு அஞ்சேல் |
| 17. | குன்றென நிமிர்ந்து நில் | 18. | கூடித் தொழில் செய் |
| 19. | கெடுப்பது சோர்வு | 20. | கேட்டிலும் துணிந்து நில் |
| 21. | கைத்தொழில் போற்று | 22. | கொடுமையை எதிர்த்து நில் |
| 23. | கோல்கைக் கொண்டு வாழ் | 24. | கவ்வியதை விடேல் |
| 25. | சரித்திரத் தேர்ச்சிகொள் | 26. | சாவதற்கு அஞ்சேல் |
| 27. | சிதையா நெஞ்சு கொள் | 28. | சீறுவோர்ச் சீறு |
| 29. | சுமையினுக்கு இளைத்திடேல் | 30. | சூரரைப் போற்று |
| 31. | செய்வது துணிந்து செய் | 32. | சேர்க்கை அழியேல் |
| 33. | சைகையில் பொருளுணர் | 34. | சொல்வது தெளிந்து சொல் |
| 35. | சோதிடந்தனை இகழ் | 36. | சௌரியம் தவறேல் |
| 37. | ஞமலிபோல் வாழேல் | 38. | ஞாயிறு போற்று |
| 39. | ஞிமிறென இன்புறு | 40. | ஞெகிழ்வது அருள் |
| 41. | ஞேயம் காத்தல் செய் | 42. | தன்மை இழவேல் |
| 43. | தாழ்ந்து நடவேல் | 44. | திருவினை வென்று வாழ் |
| 45. | தீயோர்க்கு அஞ்சேல் | 46. | துன்பம் மறந்திடு |
| 47. | தூற்றுதல் ஒழி | 48. | தெய்வம் நீ என்று உணர் |
| 49. | தேசத்தைக் காத்தல் செய் | 50. | தையலை உயர்வு செய் |
| 51. | தொன்மைக்கு அஞ்சேல் | 52. | தோல்வியில் கலங்கேல் |
| 53. | தவத்தினை நிதம்புரி | 54. | நன்று கருது |
| 55. | நாளெல்லாம் வினை செய் | 56. | நினைப்பது முடியும் |
| 57. | நீதிநூல் பயில் | 58. | நுனியளவு செல் |
| 59. | நூலினைப் பகுத்துணர் | 60. | நெற்றி சுருக்கிடேல் |
| 61. | நேர்படப் பேசு | 62. | நையப் புடை |
| 63. | நொந்தது சாகும் | 64. | நோற்பது கைவிடேல் |
| 65. | பணத்தினைப் பெருக்கு | 66. | பாட்டினில் அன்பு செய் |
| 67. | பிணத்தினைப் போற்றேல் | 68. | பீழைக்கு இடம் கொடேல் |
| 69. | புதியன விரும்பு | 70. | பூமி இழந்திடேல் |
| 71. | வெரிதினும் வெரிது கொள் | 72. | பேய்களுக்கு அஞ்சேல் |
| 73. | வொய்மை இகழ் | 74. | போர்த்தொழில் பழகு |
| 75. | மந்திரம் வலிமை | 76. | மானம் போற்று |
| 77. | மிடிமையில் அழிந்திடேல் | 78. | மீளுமாறு உணர்ந்து கொள் |
| 79. | முனையிலே முகத்து நில் | 80. | மூப்பினுக்கு இடங்கொடேல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாணவர் செயற்பாடு**

**01. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. "நூலினைப் பகுத்துணர்" என்பதில் நூல் என்பதன் ஒத்தகருத்துச் சொல்
   1) பனுவல் 2) பத்திரிகை 3) உணவு 4) பழமை
2. மானம் போற்று என்பதில் போற்று என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
   1) புகழ் 2) பாராட்டு 3) தூற்று 4) தூற்கு
3. பொய்ம்மை இகழ். இகழ் என்பதன் எதிர்ப்பதம்
   1) புகழ் 2) இழத்தல் 3) வெறுப்பு 4) இகழ்ச்சி
4. போற்று என்ற பதத்தில் இடம்பெற்றுள்ள உயிர்நெடில் எழுத்து
   1) ற் 2) ஓ 3) போ 4) ஒ
5. நீதிநூல் பயில் என்பதில் இடம்பெற்றுள்ள வினைச்சொல்
   1) நீதி 2) நூல் 3) பயில் 4) நூல்பயில்
6. பின்வருவனவற்றுள் எழுத்துப்பிழையான தொடர்
   1) பூமி இழந்திடேல் 2) நூலினைப் பகுத்துணர்
   3) தோல்வியிற் களங்கேல் 4) நாளெலாம் வினைசெய்
7. எப்போதும் நேர்மையாகப் பேசவேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்தும் தொடர்
   1) நன்றுகருது 2) பொய்ம்மை இகழ்
   3) நேர்படப்பேசு 4) மந்திரம் வலிமை
8. பாரதியார் பாப்பாப் பாடல் பாடினார்.
   பாரதியார் ஆத்திசூடி பாடினார்.
   மேலே தரப்பட்ட வாக்கியங்களை இணைப்பதற்குப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்
   1) அல்லது 2) அத்துடன் 3) ஆகவே 4) ஆயினும்
9. பின்வருவனவற்றுள் சிலேடை அணியாக அமைவது
   1) இடங்கொடேல் 2) வியர்வை
   3) மாவிலை 4) பாற்சோறு
10. பாரதியாரால் ஆத்திசூடி பாடப்பட்டது. இவ்வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள பொருள்
   1) கருவிப்பொருள் 2) கருத்தாப்பொருள்
   3) உடனிகழ்ச்சிப்பொருள் 4) ஆக்கல்பொருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**02. பின்வரும் சொற்களுக்கான ஒத்தகருத்துச் சொல்லினை எழுதுக.**

1. தொன்மை:- ..............................................
2. நிதம்:- ..............................................
3. நெற்றி:- ..............................................
4. மிடி:- ..............................................
5. மூப்பு:- ..............................................

**03. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. கற்குவியல் என்பதில் இடம்பெற்றுள்ள புணர்ச்சியை இனங் கண்டு எழுதுக.

   ..............................................................................................

2. பின்வரும் சொற்களின் நிலைமொழியையும் வருமொழியை யும் எழுதுக.
   1. கவிதைகள் ..............................................
   2. இயல்புப்புணர்ச்சி ..............................................
   3. தமிழிலக்கியம் ..............................................
   4. கதைப்புத்தகம் ..............................................
   5. ஆத்திசூடி ..............................................

3. கீழுள்ள வாக்கியங்களில் இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபு களை எழுதுக.
   1. அதீஜயன் பென்சிலால் அழகிய ஓவியம் வரைந்தான்.

      ..............................................................................................
   2. அபூரவன் மைதானத்தை அடைந்தான்.

      ..............................................................................................
   3. புறா கூட்டை விட்டு நீங்கியது.

      ..............................................................................................
   4. ஆடு குட்டியோடு வந்தது.

      ..............................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. புதிய ஆத்திசூடி பாடியவர் யார்?

.......................................................................................................

2. பாரதியாருக்கு முன்பு ஆத்திசூடி பாடியவர் யார்?

.......................................................................................................

3. பாரதியார் பாடிய பாடல்கள் 2 எழுதுக.

.......................................................................................................

.......................................................................................................

4. பாரதியார் புதிய ஆத்திசூடியில் கூறியுள்ள நீதிக்கருத்துக்கள் 5 எழுதுக.

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

5. நாம் எத்தகைய நூல்களைப் பயில வேண்டும் என பாரதி யார் கூறுகிறார்?

.......................................................................................................

**05. பின்வரும் தொடர்களுக்குப் பொருள் எழுதுக.**

1. பேய்களுக்கு அஞ்சேல் ..................................................
2. முளையிலே முகத்து நில் ..................................................
3. பூமி இழந்திடேல் ..................................................
4. மானம் போற்று ..................................................
5. புதியன விரும்பு ..................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி

## ஔவையார் பாடியது

1. அறம் செய விரும்பு
2. ஆறுவது சினம்
3. இயல்வது கரவேல்
4. ஈவது விலக்கேல்
5. உடையது விளம்பேல்
6. ஊக்கமது கைவிடேல்
7. எண் எழுத்து இகழேல்
8. ஏற்பது இகழ்ச்சி
9. ஐயம் இட்டு உண்
10. ஒப்புரவு ஒழுகு
11. ஓதுவது ஒழியேல்
12. ஔவியம் பேசேல்
13. அஃகஞ் சுருக்கேல்
14. கண்டொன்று சொல்லேல்.
15. ஙப் போல் வளை.
16. சனி நீராடு.
17. ஞயம்பட உரை.
18. இடம்பட வீடு எடேல்.
19. இணக்கம் அறிந்து இணங்கு.
20. தந்தை தாய் பேண்.
21. நன்றி மறவேல்.
22. பருவத்தே பயிர் செய்.
23. மண் பறித்து உண்ணேல்.
24. இயல்பு அலாதன செய்யேல்.
25. அரவம் ஆட்டேல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழித்திறன் விருத்தி

## துண்டுப் பிரசுரம்

❋ **துண்டுப் பிரசுரம் எழுதும்போது கவனிக்க வேண்டிய விடயங்கள்**

- எழுதும் விடயத்தை சுருக்கமாகவும் விளக்கமாகவும் எழுத வேண்டும்.
- துண்டுப் பிரசுரத்தை மக்கள் விரும்பி வாசிக்கக் கூடியதாக அமைத்தல் வேண்டும்.
- மக்களுக்கு விடயம் தொடர்பாக விழிப்புணர்வை, கவனத்தை ஏற்படுத்தக் கூடியதாக அமைதல் வேண்டும்.
- கூறும் விடயம் நியாயமானதாக அமைதல் வேண்டும்.

❋ **துண்டுப் பிரசுரத்தில் உள்ளடங்க வேண்டிய விடயங்கள்**

- கவர்ச்சிகரமான தலைப்பு
- பொதுவான விளிப்பு
- விடய விபரிப்பு
- வெளியிடும் அமைப்பின் பெயர் அல்லது தனி நபரின் பெயர், முகவரி, திகதி

❋ **துண்டுப் பிரசுரம் எழுதப்படும் சந்தர்ப்பங்கள்**

- சுகாதாரம் தொடர்பான தகவல்கள்
- குடும்ப நலன் பற்றிய விடயங்கள்
- நோய்த்தடுப்புப் போன்ற விடயங்களைக் கூறுவதற்கு எழுதப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது நகரத்தை தூய்மையாக வைத்திருப்போம்

## திண்மக் கழிவு முகாமைத்துவ வேலைத்திட்டம்

## யாழ்ப்பாண மாநகர சபை

அன்பார்ந்த பொது மக்களே,

உங்கள் கிராமத்தின் நிலை பற்றி உங்களுக்குத் தெரியுமா?

- யாழ்ப்பாண மாநகரசபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் நாளுக்கு ஏறத்தாள 140 தொன் குப்பைகள் அகற்றப்படுகின்றன.
- இன்னும் குறுகிய காலத்தில் குப்பைகளை அதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் கொட்ட முடியாது.
- உங்கள் நகரம் மாசடைந்த சூழலாகிறது.

இதன் விளைவுகளால் பாரிய தொற்று நோய்களுக்கு உள்ளாகப் போவதும் பொதுமக்களாகிய நீங்களே.....

உங்கள் நலன்கருதி மாநகரசபை முன்னெடுக்கும் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்.

உக்கும் குப்பைகளையும், உக்காத குப்பைகளையும் வெவ்வேறாக சேகரிப்பதற்கு ஒத்துழைக்க வேண்டியது உங்கள் பொறுப்பு.






மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பில் நீங்கள் கவனம் செலுத்தாது விடின் அதற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

2015.10.10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

எல்லாத்துறைகளிலும் விளம்பரம் முக்கியம்பெற்று விளங்குகிறது. விளம்பரத்தை உரிய வகையில் முன்வைப்பதும் ஒரு கலைதான். உலகளவில் தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் ஒரு துறையாக விளம்பரம் வளர்ச்சி பெற்றுள்ளது.

**1. விளம்பரம் பல நோக்கங்களுக்காகச் செய்யப்படுகிறது.**

- விற்பனையை அதிகரித்தல்
- அறிமுகம் செய்தல்
- தகவல் தெரிவித்தல்
- பிரசாரப்படுத்துதல்
- பிரசித்திபடுத்துதல்

**2. விளம்பரம் செய்வதன் நன்மைகள்**

- மக்கள் விற்பனைப் பொருட்களைப் பற்றி அறிந்து கொள்வார்கள்.
- மக்கள் ஒரு புதிய பொருளை வாங்குவதற்கு விருப்பம் ஏற்படும்.
- மக்கள் புதிய தகவல்களைத் தெரிந்து கொள்வார்கள்.

**3. விளம்பரம் ஒன்றை மக்கள் கவரக் கூடிய வகையில் தயாரிப்பதற்குக் கவனிக்க வேண்டிய விடயங்கள்**

- கவர்ச்சியான மொழி நடை.
- விடயங்களைச் சுருக்கமாக முன்வைத்தல்.
- வர்ணங்களைப் பயன்படுத்தல்.
- நுகர்வோரின் நம்பகத் தன்மையைப் பெறக் கூடியதாக இருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிவந்துவிட்டது !




### சிறுவர்களுக்கான
### மாதாந்த சஞ்சிகை

**நிலா**

விலை
20/- மட்டுமே

சிறார்களின் அறிவுத் தோழன்



- புதிர்கள்
- செஸ் விளையாடுவோம்
- விஞ்ஞானி ஆகலாம்
- பரிசுக் குவியல்
- ஆரோக்கிய வாழ்வு





**இன்னும் பல**

**சிறப்பான அம்சங்களுடன் நிலவு................**

**இன்றே உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்....**

**ஆசிரியர், இல. 1 பிரதான வீதி, கொழும்பு – 01.**

**தொலைபேசி : 077 6677717**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழைப்பிதழ்

எமது வீட்டிலும் நிறுவனங்களிலும் நிகழும் மங்களகரமான நிகழ்வுகளுக்கு உறவினர், நண்பர், நலன் விரும்பிகள், முக்கியஸ்தர் -களை, ஆர்வலர்களை அழைக்கும் வகையில் எழுதப்படுவது அழைப்பிதழ்.

அழைப்பிதழ் குடும்பம் சார் அழைப்பிதழ்
நிறுவனம் சார் அழைப்பிதழ் என இருவகைப்படும்.

**1. குடும்பம் சார் அழைப்பிதழ்கள்**
பிறந்தநாள் அழைப்பிதழ், புதுமனைப் புகுவிழா அழைப்பிதழ்
திருமண அழைப்பிதழ்

**2. நிறுவனம் சார் அழைப்பிதழ்**
கலை இலக்கிய விழா அழைப்பிதழ், நூல் வெளியீட்டு விழா அழைப்பிதழ், திறப்புவிழா அழைப்பிதழ், விளையாட்டுப் போட்டி அழைப்பிதழ்

**3. அழைப்பிதழ் ஒன்றில் பின்வரும் விடயங்கள் உள்ளடங்குதல் வேண்டும்.**

தலைப்பு, திகதி, நேரம், இடம்
விடயம் : தெளிவாகவும் சுருக்கமாகவும் இனிமையாகவும் எழுதப்படல் வேண்டும்.
விளிப்பு : ஒருவரது பெயரின் முதல் எழுத்து, தேவையேற்படின் அவரின் பட்டம், திரு.திருமதி. செல்வி முதலிய மரியாதை அடைமொழிகள் இடப்படல் வேண்டும்.
அனுப்புபவரின் முகவரி, தொலைபேசி இலக்கம் என்பன குறிப்பிட வேண்டும்.

**விளிப்புக்குரிய குறிப்புகள்**

அழைப்பிதழ்கள் எழுதும் போது அழைக்கப்படுபவரின் பதவி, சமூக அந்தஸ்து ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு உரிய மரியாதைப் பதங்களைப் பயன்படுத்தி அழைப்பு விடுதல் முக்கியமானது.

**உதாரணம் :**

| | |
|---|---|
| ஜனாதிபதி | - அதிமேதகு |
| அமைச்சர்கள் | - மாண்புமிகு |
| இந்து சமயத் தலைவர்கள் | - சுவாமிகள் |
| பௌத்த சமய பிக்குகள் | - அதிசங்கைக்குரிய அல்லது சங்கைக்குரிய |
| கிறிஸ்தவ சமய தலைவர்கள் | - அருட்சகோதரர், அருட் சகோதரி, அருட் தந்தை, வணக்கத்திற்குரிய பிதா, அதிவணக்கத்திற்குரிய ஆயர், பேராயர் |
| இஸ்லாமிய மதத்தலைவர்கள் | - மௌலவி, உலமா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பம் சார் அழைப்பிதழ்

## வசந்தம்

### புதுமனைப் புகுவிழா அழைப்பிதழ்

அன்புடையீர்,

திரு. திருமதி. செல்வி ............................ அவர்களுக்கு,

வணக்கம்,

எமது வசந்தம் புதுமனையானது இலக்கம் 06 முதலாம் குறுக்குத்தெரு, திருநெல்வேலியில் அமைந்துள்ளது. எதிர்வரும் ஐப்பசி வெள்ளி 5ஆம் நாள் மு.ப. 9.30 முதல் 11.15 வரையுள்ள சுப முகூர்த்த வேளையில் எல்லாம் வல்ல இறைவன் துணையுடன் புதுமனை புகுதலுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அவ்வமையம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்டன் அழைக்கின்றோம்.

நன்றி

தங்கள் நல்வரவை நாடும்
திரு. திருமதி. மயூரன்,
வசந்தம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
021-2344400



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறுவனம் சார் அழைப்பிதழ்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதம் எழுதும் முறை

கடிதம் எழுதும் கலை பண்டைக்காலத்திலிருந்தே முக்கியம் பெற்று விளங்குகின்றது. எமது தேவை, விருப்பு, வெறுப்பு, எண்ணம் முதலான பல விடயங்களைத் தொலைவில் உள்ளவர்களுக்குத் தெரிவிப்பதற்கு கடிதம் பயன்படுகிறது.

கடிதம் மடல், திருமுகம் எனவும் அழைக்கப்படுகிறது.

கடிதம் உறவுமுறைக் கடிதம்
தொழில்முறைக் கடிதம் என இருவகையாகக் காணப்படுகிறது.

1. உறவுமுறைக் கடிதம்

இவ்வகைக் கடிதங்கள் நண்பர், உறவினர் தமக்குள் எழுதிக்கொள்வதாகும். உதாரணம் : குடும்பவிடயங்கள்

2. தொழில்முறைக் கடிதங்கள்

சுற்று நிரபங்கள், கட்டளைகள், வியாபாரங்கள் தொழிலுக்கு விண்ணப்பித்தல், கோரிக்கைகள் முன்வைத்தல் தொடர்பாக எழுதப்படும்.

**கடிதத்தின் உறுப்புக்கள்**

| உறவுமுறைக்கடிதம் | தொழில்முறைக்கடிதம் |
|---|---|
| அனுப்புபவரின் முகவரி | அனுப்புபவரின் முகவரி |
| திகதி | திகதி |
| விளிப்பு | பெறுநரின் முகவரி |
| உடல் | விளிப்பு |
| முடிவுரை | தலைப்பு |
| கையொப்பம் | உடல் |
| | முடிவுரை |
| | கையொப்பம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதத்தின் மாதிரி அமைப்பு







1. முகவர்
2. விளிப்பு
3. செய்தி
4. முடிப்பு
5. ஒப்பம்

1. முகவரி : கடிதம் எழுதுபவர் தனது முழுமுகவரியையும் எழுதி அதன் கீழ் கடிதம் எழுதும் திகதியையும் குறிப்பிட வேண்டும்.

உ - ம் : இல. 6,
முதலாம் குறுக்குத் தெரு,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
205.10.10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. விளிப்பு : கடிதம் எழுதுவோருக்கும் எழுதப்படுவோருக்கும் உள்ள தொடர்பை வெளிப்படுத்தும் பகுதி ஆகும்.

உ - ம் : அன்புள்ள ரவி, அன்புள்ள தம்பி,
பெரியவர்கள் - அன்புடையீர்
உறவினர் - அன்புள்ள அப்பா, அன்புள்ள அம்மா
நண்பர் - அன்பு நண்பி, என்னருமை நண்பா

உடல் (செய்தி) : இதுவே கடிதத்தின் முக்கிய பகுதி ஆகும். கடிதம் எழுதுபவரின் கருத்துக்கள், செய்திகள் உள்ளடங்கும். வாசிப்பவர்களுக்கு விளங்கக் கூடியவகையில் எழுதுதல் வேண்டும்.

முடிப்பு : கடிதத்தின் தன்மைக்கேற்ப இங்ஙனம், இப்படிக்கு, தங்கள் பணிவுள்ள, உண்மையுள்ள எனவும் உன் அன்பு நண்பன், பாசமுள்ள மகள் எனவும் எழுதலாம். இதன் இறுதியில் காற்புள்ளி இடப்படல் வேண்டும்.

ஒப்பம் : தொழில்முறைக் கடிதமாயின் கையொப்பம் திருத்தமாக இடல் வேண்டும். பிறர் விளங்க முடியாதவாறு கையொப்பம் இடுவோர் தமது கையொப்பத்தின் அடைப்புக் குறிக்குள் தமது பெயரை விளக்கமாகக் குறப்பிடல் வேண்டும்.

கடித உறையின் வலது பக்கத்தில் அனுப்புபவரின் பெயர், முகவரியும் இடது பக்கத்தில் பெறுநரின் பெயர் முகவரியும் திருத்தமாக எழுதுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபூரவன்,
இல. 6, முதலாம் குறுக்குத்தெரு,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
11.07.2015

அன்புள்ள அப்பா,

எல்லாம் வல்ல இறைவன் துணையால் நாங்கள் நலமாக உள்ளோம். அப்பா உங்கள் நலம் வேண்டியும் இறைவனிடம் பிரார்த்திக்கிறேன். சென்றவாரம் உங்கள் கடிதமும் நீங்கள் அனுப்பிய புகைப்படங்களும் கிடைத்தன. மிக்க மகிழ்ச்சி அடைந்தோம்.

அப்பா, நீங்கள் உங்கள் நிறுவனம் மூலமாகச் சுற்றுலாச் சென்றது போல, நானும் எமது பாடசாலையால் அழைத்துச் சென்ற சுற்றுலாவுக்குச் சென்றேன். ஒரு நாள் சுற்றுலாவாக ஒழுங்கமைக்கப் -பட்ட இச்சுற்றுலாவில் எமது கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், நண்பர்கள் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

நண்பர்களுடன் சுற்றுலாவுக்குச் செல்வது மிகவும் மகிழ்ச்சியான நாளாகும். அந்தவகையில் இச்சுற்றுலாவும் எனக்கு மறக்க முடியாத ஒன்று. இச் சுற்றுலா அதிகாலை ஐந்து மணிக்குக் கல்லூரியிலிருந்து இறை பிரார்த்தனையுடன் ஆரம்பமாகியது.

புறப்படும்போதே நாம் எல்லோரும் ஆடலும் பாடலுமாகவே புறப்பட்டோம்.

முதலில் நாங்கள் கிறாண்ட்பாஸில் அமைந்துள்ள வீரகேசரி பத்திரிகை நிறுவனத்திற்குச் சென்றோம். நாம் நாளாந்தம் வாசிக்கும் பத்திரிகைக்கு செய்திகள் கிடைக்கும்முறை, தட்டச்சுச் செய்வது, பத்திரிகையாக வெளிவருவது, எனப் பல விடயங்களை நேரில் கண்டு தெரிந்து கொண்டோம். அங்குள்ள ஊழியர் ஒருவர் எமக்கு நன்றாக விளக்கமளித்தார். நாம் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெற்று தொல்பொருட் காட்சிச் சாலைக்குச் சென்றோம்.

தொல்பொருட் காட்சிச்சாலையில் மிகவும் தொன்மையான பொருட்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. பழைய நாணயங்கள், பாவனைப் பொருட்கள் ஆரம்பகால வானொலி, தொலைக்காட்சி எனப் பல பொருட்களைக் கண்டுகளித்தோம். இதன்மூலமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய பொருட்கள், பழைய நாணயங்கள் போன்றவற்றைப் பேண வேண்டியதன் அவசியத்தை உணரமுடிந்தது.

தொல்பொருட்காட்சிச்சாலையிலிருந்து புறப்பட்டு தெகிவளையில் அமைந்துள்ள மிருகக்காட்சிச் சாலைக்குச் சென்றோம். எங்களையெல்லாம் வியப்பிலாழ்த்தும் பல விலங்குகளையும் பறவைகளையும் மீன்வகைகளையும் கண்டோம். இவைமட்டுமா? பாம்புகளின் வகைகளும் அதிகம்.

அப்பா யானைகளின் அறிவுக் கூர்மை எங்களையெல்லாம் வியக்கவைத்தது. யானைகளின் சாகச நிகழ்ச்சி அற்புதமாக இருந்தது.

எமது நாட்டில் உள்ள மிருகக் காட்சிச் சாலையைப் பார்வையிடுவதற்கு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் பலரும் வந்திருந்தனர். அவர்கள் எங்களுடன் இணைந்து புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள்.

அப்பா, நீங்கள் விடுமுறையில் வரும்போது மிருகக் காட்சிச் சாலையை மீண்டும் சென்று பார்வையிடலாம்.

மிருகக்காட்சிச் சாலையிலிருந்து புறப்பட்டு கடற்கரைக்குச் சென்று சூரியன் மறையும் காட்சியையும் பார்த்து மகிழ்ந்தோம். அங்கு நாங்கள் எல்லோரும் பழரசம் அருந்தினோம்.

பின்னர் ஏழுமணியளவில் பேரூந்தில் ஏறிப்புறப்பட்டு எமது கல்லூரியை வந்தடைந்தோம். எங்களை எதிர்பார்த்துப் பெற்றோர் ஆவலுடன் காத்திருந்தனர்.

அப்பா, மறக்க முடியாத இந்தச் சுற்றுலாவிற்குச் சென்றதன் மூலம் பல நன்மைகளையும் பெற்றுக் கொண்டோம்.

அப்பா மிகுதி நேரில் கூறலாம் என எண்ணி உங்கள் பதிலுக்காகக் காத்திருக்கிறேன்.

இப்படிக்கு,
உங்கள் பாசமுள்ள மகன்,
த. அபூரவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேடைப் பேச்சு

மேடைப் பேச்சு நிகழ்த்தும் போது பல விடயங்களைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

**1. விடயத்தை தெரிவு செய்தல்**

உரையாற்றுவதற்கு எடுத்துக்கொண்ட விடயம் மற்றவர்களுக்கும் தெரிந்த விடயமாக அமைதல் வேண்டும்.
சபையோருக்கு ஆர்வ மூட்டக்கூடியதாகவும் நடையில் பொருத்தமானதாகவும் இருத்தல் வேண்டும்.

**2. பேச்சை ஆயத்தம் செய்தல்**

பேசுவதற்குத் தெரிவு செய்த தலைப்பிற்குப் பொருத்தமான விடயங்களை உள்ளடக்கி சட்டகம் ஒன்று வரைதல்.

பொருத்தமான உதாரணங்களை இணைத்துக்கொள்ளல், திட்டமிட்டுக் கருத்துக்களை ஒழுங்குபடுத்துதல் சட்டகக் குறிப்புகளுக்கேற்ப கருத்துக்களை மனதில் ஒழுங்கு செய்து பேசுதல்.

**3. பேசுதல்**

1. பேச்சின் ஆரம்பத்திலேயே அவையோரைக் கவரும் வகையில் பேச்சினை ஆரம்பித்தல் முக்கியமானது.
2. கருத்துத் தெளிவுடனும் உறுதியுடனும் பேசுதல்.
3. அவையோரைப் பார்த்துப் பேசுதல், இடையிடையே விளித்துப் பேசுதல்.
4. இடையிடையே வினாக்களை வினவி சபையோரின் கவனத்தை ஈர்த்தல்.
5. மனனஞ் செய்ததை ஒப்புவிப்பது போல் பேசாது தெளிவாகவும் தொனி வேறுபாடுகளை, உணர்ச்சி வெளிப்பாடுகளைப் புலப்படுத்திப் பேசுதல்.
6. உடல் மொழியில் குறிப்பாக முகபாவனையில் கவனம் செலுத்துதல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் பல கல்

எல்லாம் வல்ல இறைவனை மனதிருத்தி, தமிழன்னை தாள் வணங்கி நயம் தரும் நூல் பல பயின்று நடுநிலைகாத்து நிற்கும் நடுவர்களே, ஆசிரியப் பெருந்தகைகளே! பெரியோரே! சான்றோர்களே! என் சகோதர! சகோதரிகளே! யாவருக்கும் சிறியேனின் சிரம் தாழ்ந்த வந்தனங்கள்.

"நூல் பல கல்" எனும் தலைப்பில் சிறியேன் யான் சிற்றுரை ஆற்றக் கிடைத்தமையை எண்ணி மகிழ்வடைகிறேன்.

விலங்கொடு மக்கள் அனையர்

இலங்குநூல் கற்றாரோடு ஏனையவர்" என்ற பொய்யாமொழிப்புலவரின் திருவாக்கில் நூல்களைக் கற்காதவர்கள் விலங்குகள் என்கிறார்.

உண்மைதான் மண்ணுலகில் மானிடராய் அவதரித்து வெறும் விலங்குகளாய் வாழ்ந்து மடிவதில் அர்த்தமுண்டோ.

மரணத்தின் பின்னும் மனிதனுக்கு வாழ்வுண்டு அத்தகைய வாழ்வுக்கு மறையாச் செயலை ஆற்றி வாழ்வாழ்வாங்கு வாழ வழிப்படுத்துவது செல்வத்துள் சிறந்த செல்வமான கல்விச் செல்வமே. இச் செல்வத்தை நூல் பல பயில்வதன் மூலம் நிறைவாகப் பெறமுடியும் என்பதில் ஐயமில்லை.

அன்பான சகோதர! சகோதரிகளே! நூல்கள் பல பயில்வதால் எமது மொழியாற்றல், தேடல், பல்துறை சார்ந்த அறிவு என்பன வளர்ச்சிபெறும். மேலும் சமயம், தத்துவம், இசை, விளையாட்டு, கதைகள் போன்ற பல்சுவை நூல்களை ஆழ்ந்து கற்குந்தோறும் பெருகும் அறிச் செல்வத்தின் அளவினை சொற்களால் வரையறுத்துக் கொள்ளத்தான் இயலுமோ?

"நாவில் தொறும் நவில் தொறும்

நூல் நயம் பயப்பது"

நூல்கள் கற்குந் தோறும் தேனிலும் மிகுந்த சுவை பயப்பவை. திருக்குறள், தொல்காப்பியம், ஐம்பெருங்காப்பியம், இராமாயணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என இலக்கியச் சுவை ததும்பும் தமிழ் நூல்களை அடுக்கிக் கொண்டே செல்லலாம்.

எமக்குள் எழுகின்ற சந்தேகங்களை நீக்கிக் கொள்ளவும் பிறருடன் அறிவு பூர்வமான உரையாடல்களில் ஈடுபடவும் வாழ்வை இன்பமாகக் களிக்கவும் நூல்கள் துணைக்குவரும் நண்பனைப் போல் உதவுவன. இதற்குப் பல நூல்களையும் கற்றுத் தேறுதல் வேண்டும்.

நூல்கள் பல கற்குந்தோறும் மணற்கேணி போன்று எம் அறிவும் ஊற்றெடுக்கும். நூல்கள் பல பயின்று நிலையற்ற இவ்வாழ்வை அறிவுக் கடலால் நிரப்புவோம். அப்போதுதான் உள்ளம் நன்கு பண்பட்ட மனிதராய் மண்ணிலே வாழலாம்.

இதனால்தான் போலும் நம்முன்னோர் "வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்" என எடுத்துரைத்தனர்.

நாம் உணவால் மட்டும் வளர்வதில்லை. உள்ளத்தில் உரமாய் பதியும் நல்லவிடயங்கள் பண்பட்ட உள்ளமுடையவராய் எம்மை மாற்றும் உடனிருந்து எங்களைத் திருத்தும் நண்பனைப்போல் நூல்கள் கற்குந்தோறும் நல்ல விடயங்களை அருகிருந்து போதிக்கும்.

நூல்களை இளமையிற் கற்பது கல் மேல் எழுத்துப் போன்றது. வாழ்வின் முதுமையிலும் பயன்படத்தக்கது.

கசடறக் கல்வியைக் கற்க வேண்டுமாயின் வாசிப்பின் மூலமே அது பூரணத்துவமாகிறது.

கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு என்பதைப் போலவே நாம் கற்றுக்கொண்ட நூல்கள் கைமண்ணளவு. கற்காத நூல்கள் உலகைவிடப் பரந்தது. எல்லா நூல்களையும் கற்று முடித்து விட்டோம் என உலகில் எவராலும் கூறமுடியாது. அதற்காக எதையும் கற்காமலும் வாழ்தல் கூடாது. எம்மால் இயன்ற வரை நூல்களைக் கற்றுக்கொண்டே இருத்தல் வேண்டும் அதுவே எம் வாழ்வை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்லும் என்பதை வலியுறுத்தி எனது சிற்றுரைக்குத் திரையிடுகின்றேன்.

நன்றி

வணக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுரை

உடைந்த கணினி ஒன்று தன் கதை கூறல்.

ஆரம்பம்
தோற்றம்
கணினி அடைந்த சுய அனுபவங்கள்
தற்போதைய நிலை
முடிவுரை

அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நான்கு மணியளில் நான் கடைக்குச் சென்று திரும்பிக்கொண்டிருந்த போது அழுகுரல் ஒன்று சற்றுத் தொலைவில் கேட்க அவ்விடத்திற்கு நெருங்கிச் சென்றேன். உடைந்த கணினியொன்று கண்ணீர் சிந்தியபடி "தம்பி, தம்பி" என என்னை அழைத்தது நானும் ஆவலுடன் அதனருகில் சென்றேன். தேம்பித் தேம்பி அழுத கணினியிடம் ஆறுதல் வார்த்தைகள் கூறினேன். அது தன் உள்ளக்கிடக்கையை எனக்கு எடுத்துரைக்க நானும் ஆர்வமாகக் கேட்டேன்.

மனிதனின் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளில் போற்றப்படுவது எங்களின் வருகையாகும். எங்கள் தந்தையாக சாள்ஸ்பபேஜ் என்ற அறிஞர் விளங்குகின்றார். ஆரம்பகால எமது முன்னோர்களை விடவும், எமது தலைமுறை மனிதர்களுக்குப் பயன்படும் வகையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

ஜப்பானின் கணினி உற்பத்தி நிறுவனம் ஒன்றில் பிறந்த நானும் என் சகோதரர்கள் பலரும் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டோம். இலங்கைக்கு வந்து சேர்ந்த நாம் வெவ்வேறு இடங்களுக்குப் பிரித்து அனுப்பப்பட்டோம்.

நானும் என் சகோதரர்கள் சிலரும் யாழ்ப்பாணத்தின் கணினி உலகம் என்ற விற்பனை நிலையத்தில் தங்க வைக்கப்பட்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் ஒரு கிழமைதான் அந்த விற்பனைநிலையத்தில் தங்கி இருந்தேன். தந்தையொருவர் தன் பத்து வயது மகனுடன் எங்கள் நிலையத்திற்கு வருகை தந்து பல கணனிகளைப் பார்வையிட்டு புதிய வருகை என்பதால் என்னை வாங்கிச் சென்றார். தன் மகன் ஐந்தாம் தரம் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந் - தமைக்காக என்னைப்பரிசாகக் கொடுத்தார். எனக்கும் மிகுந்த மகிழ்ச்சியாக இருந்தது. அவர்களது வாகனத்தில் ஏற்றி, கொண்டு செல்லப் புறப்பட்டார்கள். சிறுவன் அதிஜயன் மிகுந்த மகிழ்ச்சியுடன் வீடுவரை என்னை அணைத்தவாறு கொண்டு சென்றான்.

வீட்டில் என்னை வரவேற்பதற்குப் பலர் மகிழ்வுடன் காத்திருந்தனர். அதிஜயனின் அம்மா, அக்கா, தம்பி எனப் பலர் நின்றனர். எனக்கும் அவர்களைக் கண்டதும் மட்டற்ற மகிழ்ச்சியும் என்னை நன்றாகப் பராமரிப்பார்கள் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டது.

அதிஜயன் இரவு, பகல் என்னுடனே பொழுதைக் கழித்தான். எனது திரையில் அழகிய படங்களைக் காட்சிப் - படுத்தினான். நண்பர்களுடன் விளையாடச் செல்வதையும் நிறுத்தி என் இரகசியங்கள் ஒவ்வொன்றையும் செய்முறை மூலமாக பெற்றுக் கொண்டான்.

அதிஜயனின் அக்கா தன் அலுவலக வேலைகளையும் என்னில் தட்டச்சுச் செய்தாள். பாடல்கள் பல கேட்டவாறு மகிழ்ச்சியாக வேலையில் ஈடுபடுவதைப் பார்த்து நானும் திருப்தி கொள்வேன்.

அதிஜயனின் அப்பா, என்னைக் கையாளும் முறைகளைத் தன் பிள்ளைகளிடம் கேட்டுத் தெரிந்துகொண்டார். அவ்வாறே அவர்களின் அம்மாவும் என் அதிசயங்களைக் கண்டு வியந்தார்.

என்னில் பாடல் கேட்டல், தட்டச்சுச் செய்தல், தட்டச்சு செய்த கோப்புக்களை பாதுகாத்தல், இணையம் மூலம் உலகம் முழுவதையும் அறிந்து கொள்ளல் என என் பணிகளை நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பாக ஆற்ற, ஒரு அட்சயபாத்திரம் என்று என்னை அவர்கள் புகழ்ந்து பேசினார்கள்.

என்னைக் கண்டுபிடித்த மனிதர்களால் கண்டுபிடிக்க முடியாத பல இரகசியங்கள் என்னுள் இருப்பதை அறிந்து நான் பலவேளைகளில் பெருமைப்பட்டது உண்டு.

அதிஜயனின் அக்கா கணினியின் புதியவருகைகளை என்னுள் பதிவேற்றுவாள். அதிஜயனின் அம்மா, லண்டனில் உள்ள தன் தம்பியுடன் முகம் பார்த்துக் கதைப்பதைப் பார்க்கும் போது நானும் என் சகோதரர்கள் பற்றி சிந்தித்துப் பார்ப்பேன். இணையம் மூலம் அவர்களின் பாசம் தொடர்வதற்கு நான் பாலமாக அமைந்தது நான் செய்யும் பெரும் உதவியாகவே எண்ணினேன்.

வருடங்கள் பல மிக மகிழ்ச்சியுடன் பயணித்துக் கொண்டிருந்த என் வாழ்விலும் இடி விழுந்தது. லண்டனிலிருந்து வந்த அதிஜயனின் மாமா அனைவரையும் சுற்றுலாவுக்கு அழைத்துச் சென்றார்.

அதிஜயனும் மாமாவைக் கண்ட மகிழ்ச்சியில் எனக்குத் தகுந்த பாதுகாப்புத்தராது விட்டுச் சென்றான். அவர்கள் சென்ற ஒரு வாரத்தில், வீட்டில் உள்ள எலிகள் இரவு பகலாக என் நரம்புகளான வயர்களை எல்லாம் கடித்துக் குதறின. என் மூளைப் பகுதியான CPU வினுள் ஏராளமான எறும்புகள் நுழைந்து நுண்ணிய பகுதிகளையெல்லாம் துளைத்தன.

நான் என் நிலையை எண்ணி வருந்தினேன். என்னிடம் ஒப்படைக்கப்பட்ட பல முக்கியமான விடயங்களும் அழிக்கப்படுவதை எண்ணிக் கவலையடைந்தேன். என் வாழ்வின் இறுதிக்கட்டத்தை நெருங்கிக் குற்றுயிராகக் கிடந்த வேளையில் அதிஜயன் குடும்பத்தவருடன் வீட்டிற்கு வந்திருந்தான். குடும்பத்தவர்கள் எலிகள் பல பொருட்களை நாசம் செய்திருப்பதை அறிந்து சினத்துடன் காணப்பட்டார்கள். அதிஜயன் என்னைக் கண்டதும் "அப்பா, அம்மா" என ஓலமிட்டு அழுதான். நானும் கண்ணீர் சிந்தினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் சோகமாக நின்றனர். இறுதியாக அதிஜயனின் அப்பா எங்கள் வைத்தியரான கணினித் தொழில்நுட்பவல்லுனரை அழைத்தப் பரிசோதித்தார். அவரும் கையை விரித்துவிட என்னை ஒரு மூலையில் ஒதுக்கி விட்டார்கள். தம் குடும்ப அங்கத்தவர் ஒருவரை இழந்த சோகத்தில் இருந்தவர்களுக்கு அதிஜயனின் மாமா ஒரு மடிக்கணினியைப் பரிசாகக் கொடுத்தார்.

அதிஜயனின் மடியில் செல்லப் பிள்ளையாக இருக்கும் மடிக்கணினியைப் பார்க்கும் போது மூலையில் இருந்த எனக்கும் கவலை எற்படும். காலப்போக்கில் அவர்கள் வீட்டைத் தூய்மையாக்கி பழைய பொருட்களை ஒதுக்கும் போது என்னையும் வேண்டாப் பொருளாக்கி இங்கு கொண்டு வந்து போட்டு-விட்டார்கள்.

என் மகிழ்ச்சியான தருணங்களை எண்ணியவாறு வெயிலிலும் மழையிலும் கிடக்கின்றேன்.

நான் கணினியின் சோகம் மிகுந்த வாழ்க்கையை எண்ணியவாறு வீட்டிற்குச் சென்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாற்றுக் கட்டுரை

# தங்கத்தாத்தா நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

தங்கத்தாத்தா என அனைவராலும் அன்பாக அழைக்கப்படும் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் ஈழத் தமிழன்னையின் இணையில்லாப் புலவர்களுள் ஒருவர். நவாலியூர் சோமசுந்தரப் புலவர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் வளர்த்த புலவர்களுள் ஒருவர் இவர் 1878ஆம் வருடம் வைகாசி மாதம் 25ஆம் திகதி யாழ்ப்பாணத்தின் நவாலியூரிலே கதிர்காமருக்கும் இலக்குமிப் பிள்ளைக்கும் அருந்தவப் புதல்வராய் அவதரித்தார்.

தாய்மொழியாம் தமிழைக் கற்பதில் ஆர்வம் கொண்டிருந்த குழந்தை மானிப்பாய் அருணாசலப் புலவரிடம் பழந்தமிழ் நூல்களை மரபுரீதியான குருகுல முறையில் கற்றுத்தேறியது. இவர் தமிழுடன் நீதி நூல்களான ஆத்திசூடி, கொன்றைவேந்தன் போன்றவற்றையும் நிகண்டு, தேவாரத் திருமுறைகளையும் கசடறக் கற்றார்.

சோமசுந்தரருடைய ஆற்றலைக் கண்டறிந்த ஆசிரியர் அவருக்கு குமரேசர் சதகம், தண்டலையார்சதகம் ஆகிய நூல்களில் உள்ள செய்யுள்களையும் கற்பித்து மனனம் செய்வித்துள்ளார்.

மரபுக்கல்வி முறையில் தமிழைப் பயின்றது போலவே. பாடசாலைக் கல்வி முறையூடாக ஆங்கிலக் கல்வியையும் ஐயந்திரிபறக் கற்றார். பின்பு தம்பையா ஆசிரியரின் பாடசாலையில் இணைந்து கணிதம், இதிகாசம், பூமிசாஸ்திரம் போன்ற பாடங்களையும் கற்றுத் தேர்ந்தார். இவ்வாறு ஆசிரியர்களிடம் கற்றுக் கொண்டவை தவிர தன் சுயமுயற்சியினால் ஞானாமிர்தம், திருக்குறள், பாரதம் ஆகிய நூல்களைக் கற்று ஐயத்திற்கிடமான இடங்களில் ஆசிரியர்களிடம் தீர்வு பெற்றார்.

இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்ற மகுட வாசகத்திற்கிணங்க சோமசுந்தரர் இளமையில் கல்வி மீது கொண்டிருந்த ஈடுபாடு பிற்காலத்தில் யாவரும் அறிந்த இணையற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவராக்கியது. உள்ளத்தில் தேங்கிக் கிடந்த ஆற்றல் ஆரம்பத்தில் கவிதையாகத் துளிர்த்து, பக்திப்பாக்கள், சிறுவர்பாக்கள், நாடகங்கள் எனப் பல கிளைகளாகப் பரவின. அந்தவகையில் இவரது படைப்புக்களை சமயம் சார்ந்தவை, சமூக நன்மை சார்ந்தவை, தேசம் குறித்த பாடல்கள், சிறுவர் பாடல்கள் என நோக்கலாம்.

எமது நாடாகிய இலங்கை வளத்தின் சிறப்பினை,

"எஃகிய பஞ்சினைப் போலத் தமிழ்
எல்லாள மன்னன் இருதயம் போல
வெஃகிய வெண்முகிற் கூட்டம்"

என்ற தொடரில் அழகாகச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

யாப்பிலக்கண வரம்பிற்கு உட்பட்டு செய்யுள் இயற்றிய புலவரவர்கள் கள்ளமிலா உள்ளம் கொண்ட சிறுவர்களுக்காக இலகு தமிழில் இனிய பல பாடல்களைப் பாடியுள்ளார். ஆடிப்பிறப்பு, கத்தரி வெருளி போன்றன அவற்றுள் சிறப்பானவை. கத்தரித்தோட்டத்தில் காவற்கடமையில் ஈடுபடும் வெருளியின் கடமை உயர்வினை,

"கத்தரித்தோட்டத்து மத்தியிலே நின்று
காவல் புரிகின்ற சேவகா! - நன்று
காவல் புரிகின்ற சேவகா!
மெத்தக் கவனமாய்க் கூலியும் வாங்காமல்
வேலை புரிபவன் வேறுயார்?

எனப் பாராட்டுகிறார்.

தேன்தமிழில் பாடல்கள் பல தந்த புலவரவர்கள், உயிரிளங்குமரன், எலியும் சேவலும் என்ற நாடகங்களின் ஆசிரியராகவும் விளங்குகிறார்.

உளங்கவர்ந்த கவிஞராக வலம் வந்த புலவரவர்கள் மாணவர்களின் விருப்புக்குரிய நல்லாசிரியராகவும் விளங்கினார். தமிழ்மொழியை மட்டுமன்றி சமயம், ஆங்கிலம் போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடங்களையும் போதித்து நற்பண்புள்ள மாணாக்கர் பரம்பரையை உருவாக்கினார். பாடசாலையில் கற்பித்தற் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்பும் கூட தன் இல்லம் நாடி வந்த மாணாக்கர்களுக்கு உளமுவந்து கற்பித்தல் சேவையில் ஈடுபட்டார். இவற்றுக்கப்பால் "கந்தபுராணக்கதைகளும் அவைகள் உணர்த்தும் உண்மை நூற்கருத்தும்" என்ற தத்துவ நூலையும் "பாலிய சம்போதனி" என்ற இதழையும் வெளியிட்டுள்ளமை சிறப்பானது.

சிறு குழந்தை முதல் தத்துவ ஆசிரியர்கள் வரை யாவராலும் அறியப்பட்டு இன்றும் என்றும் போற்றப்படும் புலவரவர்கள் 1953ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்வை நிறைவு செய்தார். இயற்கையின் நியதிப்படி புலவரின் உயிர் நீங்கிய போதிலும் அவரது படைப்புப் பணியூடாக இன்று வரை வாழ்ந்து கொண்டிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழி வளம்

## ஒலி வேறுபாடு

* தமிழில் எழுத்துக்களை உச்சரிக்கும் போது அவற்றுக்குரிய முறையில் உச்சரித்துப் பழகுதல் வேண்டும்.
* உச்சரிப்பு முறை திருத்தமாக இருக்குமாயின் எழுத்துப் பிழைகளையும் தவிர்க்க முடியும்.
* ஒலிப்பில் ஒத்த தன்மையுடைய எழுத்துக்கள் இருப்பதனால் அவை பிறக்கும் முறையை அறிந்து உச்சரித்தல் வேண்டும்.
* ஒத்த ஒலியுடைய எழுத்துக்களை மூன்று தொகுதிகளாக வகைப் படுத்தலாம்.
    1) லகர, ழகர, ளகர எழுத்துக்கள் ( ல, ழ, ள)
    2) ரகர, றகர, எழுத்துக்கள் (ர,ற)
    3) ணகர, நகர, னகர எழுத்துக்கள் (ண, ந, ன)

### 01) லகர, ழகர, ளகர எழுத்துக்கள்

* மூன்று எழுத்துக்களும் இடையினம் ஆகும்.
* இவற்றைப் பின்வரும் முறையில் உச்சரித்துப் பழக முடியும்

**லகரம் :** நாவின் விளிம்பு மேல்வாய்ப் பல்லின் அடியை ஒற்றுவதால் பிறக்கும்.

**ழகரம் :** மேல்வாயை நாக்கு நுனி தடவி வர ழகரம் பிறக்கும்

**ளகரம் :** நாவின் விளிம்பு அண்ணத்தை வருடி வருவதால் இவ் எழுத்துப் பிறக்கும்.

### 2) ரகர, றகர, எழுத்துக்கள்

**ரகரம் :** நாவின் நுனி அண்ணத்தை வருடுவதால் பிறக்கும்.

**றகரம் :** நாவின் நுனி அண்ணத்தை அழுத்தி வருவதனால் பிறக்கும்.

### 3) ணகர, நகர, னகர எழுத்துக்கள்

**ணகரம் :** நாவின் நுனிப்பகுதி உள்வளைந்து அடிப்பகுதியால் அண்ணத்தைத் தொட ணகரம் பிறக்கும்.

**நகரம் :** நாவின் நுனி மேல்வாய்ப் பல்லின் அடியைப் பொருந்துவதால் பிறக்கும்.

**னகரம் :** நாக்குநுனி மேல்வாயை மிகவும் பொருந்துவதால் பிறக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எழுத்துக்களின் ஒலிப்பு முறையை மேலும் இலகுவாக விளங்கிக் கொள்வதற்கான வரைபடம்.**




* அண்ணம் என்பது வாயின் மேற்பகுதியைக் குறிக்கும்.

எழுத்துக்களை உச்சரிக்கும் போது குறில், நெடில் ஓசை உடைய எழுத்துக்களுக்கு ஏற்றவாறு உச்சரித்தல் வேண்டும்.

**குறில் எழுத்துக்கள்**

ஒலிக்கும் போது குறுகிய ஓசை உடைய எழுத்துக்கள் குறில் எழுத்துக்கள் ஆகும்.
உதாரணம்:

*உயிர்க் குறில் எழுத்துக்கள்* :- அ,இ,உ,எ

*உயிர் மெய்க் குறில் எழுத்துக்கள்* :- க,கு,கெ

**நெடில் எழுத்துக்கள்**

ஒலிக்கும் போது நீண்ட ஓசையுடைய எழுத்துக்கள் நெடில் எழுத்துக்கள் ஆகும்.

*உயிர் நெடில் எழுத்துக்கள்* :- ஆ, ஈ, ஊ, ஏ

*உயிர் மெய் நெடில் எழுத்துக்கள்* :- கா, கீ, கூ, கே

**லகர, ளகர, ழகர ஓசையுடைய சொற்கள்**

01) *அழகு* :- வடிவு, வனப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளகு :- பெண் பறவை, பேடு
அலகு :- பறவையின் வாய், பறவையின் மூக்கு, பரிவு

02) அழி :- இல்லாமல் செய், கேடு
அளி :- வண்டு, வழங்கு, கொடு
அலி :- பேடு (ஆணோ, பெண்ணோ அற்ற நிலை)

03) ஆழி :- கடல், சக்கரம்
ஆளி :- யானை, யாளி, சிங்கம்
ஆலி :- அமுதம், மழைத்துளி (கட்டிமழை)

04) இழவு :- மரணம், கேடு இலவு :- இலவமரம்.

05) உழவு :- உழுதல், பயிர்த்தொழில்
உளவு :- வேவு
உலவு :- உலவுதல், உலாவு

06) ஒழி :- அழி,நீக்கு
ஒளி :- பிரகாசம், வெளிச்சம்
ஒலி :- ஓசை, சப்தம்

07) கழகம் :- மன்றம்
கலகம் :- குழப்பம்
களகம் :- நெற்கதிர், அன்னம், சுண்ணாம்பு

08) காலை :- முற்பகல் காளை :- இளம் ஆண்மாடு

09) கிழவி :- முதியவள் கிளவி :- சொல்

10) குழவி :- பிள்ளை
குளவி :- கொட்டும் ஈ
குலவி :- உறவாடுதல்

11) கூழம் :- எள்ளு
கூளம் :- தூசி
கூலம் :- பண்டம், தானியம்

12) சூழ் :- சூழ்ந்துகொள், முற்றுகையிடு, ஆராய்வு
சூள் :- சபதம், தீப்பந்தம்
சூல் :- கர்ப்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13) *தழை* :- இலை, குழை, வளர்
*தளை* :- விலங்கு, கட்டு
*தலை* :- சிகரம், தலைமை, முதன்மை

14) *தாழம்* :- ஆழம், தாழ்வு
*தாளம்* :- இசையின் கால அளவு குறிக்கும் அடையாளம்
*தாலம்* :- பனை, பாத்திரம்

15) *தோல்* :- சருமம் *தோள்* :- புயம்

16) *நீளம்* :- தூரம்
*நீலம்* :- ஒரு நிறம், நவரத்தனங்களிலொன்று

17) *பழம்* :- கனி *பலம்* :- வலிமை, உறுதி

18) *புல்* :- புல்லு, சிறுமை, தழுவுதல்
*புள்* :- பறவை

19) *பொழி* :- பெய், ஊற்று
*பொளி* :- வரம்பு, துளையிடல், கொத்து
*பொலி* :- பெருக்குதல், நெல்

20) *மழை* :- மாரி, மேகம் *மலை* :- குன்று, மயங்கு

21) *வழு* :- குற்றம் *வலு* :- பலம்

22) *வாழை* :- வாழை மரம்
*வாளை* :- ஒருவகை மீன்
*வாலை* :- இளம் பெண்

23) *விளக்கு* :- தீபம், தெளிவுபடுத்து
*விலக்கு* :- தவிர், தடை, வழு, தடு

24) *வெள்ளம்* :- தண்ணீர்ப் பெருக்கு
*வெல்லம்* :- சர்க்கரை

25) *வேளை* :- பொழுது *வேலை* :- கடல், பணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரகர, றகர ஓசையுடைய சொற்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1) | *அரி* | :- | அறு, விஷ்ணு, அரித்தல், சிங்கம், வண்டு | | | |
| | *அறி* | :- | தெரிந்து கொள்ளல் | | | |
| 02) | *அரை* | :- | அரைத்து மா ஆக்குதல், இரண்டில் ஒரு பங்கு, இடை | | | |
| | *அறை* | :- | அடி, வீட்டின் ஒரு பகுதி | | | |
| 03) | *இரக்கம்* | :- | மனவுருக்கம் | *இறக்கம்* | :- | சரிவு |
| 04) | *இருத்தல்* | :- | அமர்தல், உட்காருதல் | *இறுத்தல்* | :- | செலுத்துதல் |
| 05) | *இரை* | :- | ஒலியெழுப்பு, பறவை, மிருகங்களின் உணவு | | | |
| | *இறை* | :- | வெளியேற்று, கடவுள், அரசன் | | | |
| 06) | *உரி* | :- | கழற்று, தோல் | | | |
| | *உறி* | :- | பாத்திரங்கள் வைக்க உதவும் தொங்குமிடம் | | | |
| 07) | *ஏரி* | :- | குளம் | *ஏறி* | :- | மேலே தொற்றுதல் |
| 08) | *ஒரு* | :- | ஒன்று | *ஒறு* | :- | தண்டித்தல் |
| 09) | *கரை* | :- | ஓரம் | *கறை* | :- | குற்றம் |
| 10) | *குரவர்* | :- | பெரியோர் | | | |
| | *குறவர்* | :- | மலைவாழ் சமூகத்தவர் | | | |
| 11) | *குரை* | :- | ஒலி | *குறை* | :- | குரைத்தல் |
| 12) | *சிரை* | :- | மொட்டையடித்தல் | *சிறை* | :- | மறியல் |
| 13) | *சொரி* | :- | கொட்டுதல் | *சொறி* | :- | உராய்தல் |
| 14) | *தரை* | :- | அலை | *தறை* | :- | அறைதல் |
| 15) | *திரை* | :- | அலை | *திறை* | :- | கப்பம், வரி |
| 16) | *நிறை* | :- | பாரம், எடை, பூரணப்படுத்து | | | |
| | *நிரை* | :- | வரிசை | | | |
| 17) | *பரவை* | :- | கடல் | *பறவை* | :- | பட்சி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18) *பரி* :- குதிரை *பறி* :- பிடுங்கு, கூடை

19) *மரம்* :- விருட்சம்

*மறம்* :- வீரம், தீயநெறி

20) *மரித்தல்* :- இறத்தல்

*மறித்தல்* :- தடுத்தல்

21) *வருத்தல்* :- துன்புறுத்தல்

*வறுத்தல்* :- வறுவல் செய்தல்

22) *விரல்* :- கை விரல்

*விறல்* :- வறுமை

23) *விரை* :- வேகமாகப் போதல், விதை, வாசனை

*விறை* :- மரத்துப் போதல்

24) *வரை* :- மலை, கீறு

*வறை* :- வறுவல்

25) *விரகு* :- தந்திரம்

*விறகு* :- எரிகொள்ளி

## ணகர, னகர பேதச் சொற்கள்

01) *அண்ணம்* :- மேல்வாய்

*அன்னம்* :- சோறு, ஒரு வகைப்பறவை

02) *அணல்* :- கழுத்து

*அனல்* :- நெருப்பு

03) *அண்மை* :- அருகு, கிட்ட

*அன்மை* :- இன்மை, இல்லாமை

04) *ஆண்* :- ஆண் மகன்

*ஆன்* :- பசு

05) *ஆணி* :- இரும்பாணி, எழுத்தாணி

*ஆனி* :- ஒரு மாதம்

06) *உண்ணல்* :- சாப்பிடுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னல் :- நினைத்தல்

07) எண் :- இலக்கம்
என் :- எனது
08) கணி :- கணக்கிடு
கனி :- பழம்

09) கணை :- அம்பு, ஒரு நோய்
கனை :- ஒலி

10) கண்ணி :- அரும்பு, மாலை, பொறி வைத்தல்
கன்னி :- இளம்பெண்

11) காணல் :- பார்த்தல்
கானல் :- கானல், வெம்மை

12) காண் :- பார்
கான் :- காடு

13) தணி :- குறை
தனி :- தனிமையான

14) நாண் :- கயிறு
நான் :- தன்மை, ஒருமை
15) பணி :- அடங்கு, தொழில், பாம்பு
பனி :- குளிர், அச்சம்

16) பண்ணல் :- செய்தல்
பன்னல் :- சொல்லுதல்

17) பாணம் :- அம்பு
பானம் :- பருகும் நீர்ப் பதார்த்தம்

18) புணை :- மரக்கலம்
புனை :- அணி, சிருஷ்டி

19) மண்ணவன் :- மனிதன்
மன்னவன் :- மன்னன், அரசன்

20) வண்ணம் :- விதம், அழகு
வன்னம் :- நிறம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒத்த கருத்துச் சொற்கள்

| | | |
|---|---|---|
| அகதி | - | கதியற்றவன் |
| அகநகர் | - | நகரின் உட்பகுதி |
| ஆரம்பம் | - | தொடக்கம், அங்குரார்ப்பணம் |
| அச்சம் | - | பயம் |
| அடர்த்தி | - | நெருக்கம், செறிவு |
| அணுகு | - | நெருங்கு |
| அதட்டுதல் | - | பயமுறுத்தல் |
| அதிசயம் | - | நூதனம், அபூர்வம், வியப்பு |
| அநாதி | - | ஆரம்பமற்றது, தொடக்கம் இல்லாதது |
| அந்தரங்கம் | - | இரகசியம் |
| அந்தி | - | மாலை |
| அருந்துதல் | - | குடித்தல் |
| அலவன் | - | ஆண் நண்டு |
| அறம் | - | தருமம் |
| அறிஞன் | - | அறிவாளி |
| அற்பத்தனம் | - | இழிவு, கேவலமான செயல் |
| அகங்காரம் | - | கர்வம், இறுமாப்பு, ஆணவம், அகந்தை |
| அகடவிகடம் | - | தந்திரம், குறும்பு |
| அகவை | - | வயது |
| அகிலம் | - | பூமி, பார், ஞாலம், நானிலம் |
| அக்கிரமம் | - | கொடுமை |
| அங்காடி | - | கடை, சந்தி |
| அஞ்சல் | - | தபால் |
| ஆடுகளம் | - | போர்க்களம் |
| அணிகலன் | - | ஆபரணம் |
| அண்மை | - | கிட்ட, அருகில், சமீபம் |
| அணிந்துரை | - | பாயிரம் |
| அழிவு | - | கேடு |
| அறிவு | - | ஞானம்,கல்வி, புத்தி, விவேகம் |
| அம்பு | - | பாணம் |
| அஞ்சு | - | பயப்படு |
| அஞ்சுகம் | - | கிளி |
| அன்பளிப்பு | - | நன்கொடை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| அருவி | - | ஆறு, நதி, கங்கை |
| அன்பு | - | நேசம், பாசம் |
| அடவி | - | காடு, வனம் |
| அணி | - | நகை, ஆபரணம் |
| அழகு | - | வடிவு, வனப்பு |
| அஹிம்சை | - | அன்பு |
| அன்னை | - | தாய், மாதா, அம்மா |
| ஆடை | - | உடை |
| ஆவி | - | உயிர் |
| ஆகாயம் | - | வானம், விண், விசும்பு, வெட்டவெளி |
| ஆணை | - | கட்டளை, அதிகாரம், சூழுரை |
| இல்லம் | - | வீடு, அகம், மனை |
| இதழ் | - | உதடு, பூவிதழ் |
| இகழ்ச்சி | - | நிந்தை,அவமதிப்பு |
| இறுதி | - | முடிவு |
| இறப்பு | - | சாவு, மரணம் |
| இரத்தம் | - | குருதி |
| இடர் | - | துன்பம், வருத்தம், வறுமை |
| இசைதல் | - | பொருந்துதல், உடன்படுதல் |
| இடபம் | - | நந்தி, எருது |
| இரசனை | - | விருப்பம், சுவை |
| ஈகை | - | கொடை |
| உதயம் | - | காலைப் பொழுது, விடியல், தோற்றம். |
| உண்மை | - | மெய் |
| உளவு | - | வேவு |
| உதரம் | - | வயிறு |
| உபதேசம் | - | போதனை |
| உண்டி | - | உணவு |
| உறுமால் | - | தலைப்பாகை |
| உழவர் | - | விவசாயி, உழுநர் |
| உறக்கம் | - | நித்திரை |
| ஊறு | - | துன்பம் |
| ஊன் | - | உடம்பு, தசை |
| ஊண் | - | உணவு |
| எளிது | - | இலகு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| எழில் | - | அழகு |
| ஐக்கியம் | - | ஒற்றுமை |
| ஒளி | - | வெளிச்சம், மறை |
| ஒலி | - | ஓசை |
| ஒழி | - | அழி, வெட்டு |
| ஒப்பந்தம் | - | உடன்படிக்கை |
| ஔடதம் | - | மருந்து |
| கங்குல் | - | இரவு |
| கபடம் | - | வஞ்சகம், சூது |
| கலக்கம் | - | குழப்பம், சஞ்சலம் |
| களிப்பு | - | மகிழ்ச்சி |
| களங்கம் | - | குற்றம் |
| கடமை | - | பணி |
| குவலயம் | - | உலகம் |
| குணபால் | - | கிழக்கு |
| குழந்தை | - | குழவி |
| கை | - | கரம் |
| கேளிர் | - | உறவினர் |
| கோ | - | அரசன் |
| சிநேகம் | - | நட்பு, நேசம் |
| சீதம் | - | குளிர்ச்சி, அகில், சந்தனம் |
| சைகை | - | சமிக்ஞை |
| சோலை | - | பூங்கா |
| ஞமலி | - | நாய் |
| ஞாலம் | - | பூமி |
| ஞானம் | - | அறிவு |
| ஞாபகம் | - | நினைவு |
| ஞாயிறு | - | சூரியன், கிழமை நாள் ஒன்று |
| தருமம் | - | அறம் |
| திறமை | - | வல்லமை |
| திவலை | - | சிறுதுளி |
| துவிதம் | - | இரண்டு |
| நாணம் | - | வெட்கம் |
| நிரபராதி | - | குற்றமற்றவன் |
| நீசம் | - | தாழ்வு |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நுதல் | - | நெற்றி |
| நூல் | - | புத்தகம் |
| நௌவி | - | மான் |
| பகழி | - | அம்பு |
| பாவலர் | - | கவிஞர் |
| பிளிறுதல் | - | முழங்குதல் |
| பீதி | - | அச்சம் |
| புனல் | - | நீர் |
| புலவர் | - | பாவலர் |
| புத்திரன் | - | மைந்தன், மகன் |
| பேதைமை | - | அறிவின்மை, மடமை |
| மங்கலம் | - | சுபகரும நிகழ்ச்சி |
| மடித்தல் | - | மடக்குதல் |
| மருள் | - | மயக்கம் |
| மித்திரன் | - | நண்பன் |
| முனிதல் | - | சினத்தல், கோபித்தல் |
| மெய்மை | - | உண்மை, வாய்மை |
| மோகம் | - | ஆசை |
| வசை | - | திட்டு, இகழ்ச்சி |
| வழு | - | குற்றம், பிழை |
| வறுமை | - | மிடி |
| வனம் | - | காடு |
| வாளரி | - | சிங்கம் |
| விடம் | - | நஞ்சு |
| விடிதல் | - | உதயமாகுதல் |
| விநியோகம் | - | பரப்புதல் |
| விருட்சம் | - | மரம் |
| விளம்பி | - | கள் |
| விளம்பிதம் | - | தாமதம் |
| விளம்பு | - | சொல் |
| வெற்பு | - | மலை |
| வேதனம் | - | கூலி |
| வேய் | - | மூங்கில் |
| வைகறை | - | விடியல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கருத்துச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| அருமை | எளிமை | அருள் | மருள் |
| அடி | முடி | அச்சம் | துணிவு |
| அகங்கை | புறங்கை | அன்பு | வன்பு |
| அமாவாசை | பௌர்ணமி | அண்மை | சேய்மை |
| அந்தம் | அநந்தம், ஆதி | அரசன் | ஆண்டி |
| அர்த்தம் | அநர்த்தம் | அறம் | மறம் |
| ஆசை | நிராசை | ஆயுதன் | நிராயுதன் |
| ஆதி | அந்தம், அநாதி | இரகசியம் | பரகசியம் |
| இணை | தனி | இகழ் | புகழ் |
| இலட்சணம் | அவலட்சணம் | இலாபம் | நட்டம் |
| ஈதல் | ஏற்றல் | உம்பர் | இம்பர் |
| உள்ளே | வெளியே | உறவு | பகை |
| உயர்வு | தாழ்வு | உவத்தல் | தாழ்த்தல் |
| ஊடல் | கூடல் | ஏகம் | அநேகம் |
| ஏளனம் | புகழ்ச்சி | ஏற்றுமதி | இறக்குமதி |
| ஐக்கியம் | பிளவு | ஒற்றை | இரட்டை |
| ஒன்று | பல | ஒருமை | பன்மை |
| ஐது | செறிவு | ஐயம் | தெளிவு, தேற்றம் |
| கங்குல் | பகல் | கண்டம் | அகண்டம் |
| களங்கம் | நிட்களங்கம் | கசப்பு | இனிப்பு |
| கசிவு | இறுக்கம் | காய்தல் | உவத்தல் |
| காடு | நாடு | காலம் | அகாலம் |
| கிழக்கு | மேற்கு | கிட்ட | எட்ட |
| கீழோர் | மேலோர் | குறைகுடம் | நிறைகுடம் |
| குழிவு | குவிவு | குளிர் | சூடு |
| குணம் | குற்றம் | கூச்சல் | மௌனம் |
| கொடுங்கோல் | செங்கோல் | கொடுஞ்சொல் | இன்சொல் |
| கொடை | இரப்பு | சலம் | அசலம் |
| சந்தோசம் | துக்கம் | சமீபம் | தூரம் |
| சிறிது | பெரிது | சிக்கனம் | ஊதாரித்தனம் |
| சீதம் | வெப்பம் | செங்கோல் | கொடுங்கோல் |
| செல்வன் | ஏழை | சேய்மை | அண்மை |
| சௌக்கியம் | அசௌக்கியம் | ஞானம் | அஞ்ஞானம் |
| தட்பம் | வெட்பம் | தண்ணீர் | வெந்நீர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| தன்னலம் - பிறர்நலம் | | தமர் - பிறர் | |
| தாமதம் - துரிதம் | | தாழ்ப்பு - நயப்பு | |
| தூலம் - சூக்குமம் | | தோல்வி - வெற்றி | |
| நட்டம் - இலாபம் | | நல்லது - கெட்டது | |
| நட்பு - பகை | | நண்பகல் - நள்ளிரவு | |
| நறுநாற்றம் - துர்நாற்றம் | | நாகரிகம் - அநாகரிகம் | |
| நுண்மை - பருமை | | பண்டிதர் - பாமரர் | |
| பருத்தல் - மெலிதல் | | பல - சில | |
| பாலர் - விருத்தர் | | மங்கலம் - அமங்கலம் | |
| மடமை - புலமை | | மறதி - ஞாபகம் | |
| முனிவு - கனிவு | | முன் - பின் | |
| முற்பகல் - பிற்பகல் | | முன்னர் - பின்னர் | |
| மென்மை - கடினம் | | மெல்ல - விரைவாக | |
| மேடு - பள்ளம் | | மேலோர் - கீழோர் | |
| மேன்மை - கீழ்மை | | வல்லினம் - மெல்லினம் | |
| வளர்தல் - தேய்தல் | | வாதி - பிரதிவாதி | |
| வானகம் - வையகம் | | வாட்டம் - மலர்ச்சி | |
| விருப்பு - வெறுப்பு | | விரைதல் - சுணங்கல் | |
| விழிப்பு - உறக்கம் | | விவேகி - அவிவேகி | |
| வினா - விடை | | வீரன் - கோழை | |
| வெப்பம் - தட்பம் | | வெண்மை - கருமை | |
| வெற்றி - தோல்வி | | வேண்டுதல் - வேண்டாமை | |
| வேகம் - மந்தம் | | வேற்றுமை - ஒற்றுமை | |

## எதிர்ப்பாற் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| அரக்கன் | அரக்கி | அண்ணன் | அக்காள் |
| அடியான் | அடியாள் | அப்பா | அம்மா |
| அப்பன் | அம்மை | அம்பட்டன் | அம்பட்டச்சி |
| அழகன் | அழகி | அலவன் | பெடை நண்டு |
| அவரசன்(தம்பி) | அவரசை (தங்கை) | ஆண்டான் | ஆண்டாள் |
| ஆடவன் | பெண்டு | ஆதிரையான் | ஆதிரையாள் |
| ஆயன் | ஆய்ச்சி | இந்திரன் | இந்திராணி |
| இயக்கன் | இயக்கி | இரவலன் | இரவலாள் |
| இரசிகன் | இரசிகை | இடையன் | இடைச்சி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இறைவன் | - | இறைவி | ஈசுவரன் | - | ஈசுவரி |
| உழவன் | - | உழத்தி | உத்தமன் | - | உத்தமி |
| உபாத்தியாயன் | - | உபாத்தியாயினி | உத்தமன் | - | உத்தமி |
| உமணர் (உப்பு விற்கும் ஆண்கள்) | - | உமட்டியர் (உப்பு விற்கும் பெண்கள்) | எசமான் | - | எசமானி |
| | | | எம்பி | - | எங்கை |
| எயினன் | - | எயிற்றி | ஐயன் | - | ஐயை |
| கணவன் | - | மனைவி | கரியன் | - | கரியள் |
| கலை | - | பிணை | காதலன் | - | காதலி |
| காந்தன் | - | காந்தை | கிழவன் | - | கிழவி, கிழத்தி |
| குணவான் | - | குணவதி | குயவன் | - | குயத்தி |
| குருடன் | - | குருடி | கூகை | - | போத்து |
| கூனன் | - | கூனி | கெட்டிக்காரன் | - | கெட்டிக்காரி |
| சகோதரன் | - | சகோதரி | ஞானவான் | - | ஞானவதி |
| தம்பி | - | தங்கை | தந்தை | - | தாய் |
| தச்சன் | - | தச்சி | தட்டான் | - | தட்டாத்தி |
| தபுதாரன் | - | விதவை | தலைவன் | - | தலைவி |
| தமையன் | - | தமக்கை | தனவான் | - | தனவதி |
| தாத்தா | - | பாட்டி | தாதன் | - | தாதி |
| திருமகன் | - | திருமகள் | திருவாளன் | - | திருவாட்டி |
| தூயவன் | - | தூயவள் | தேவன் | - | தேவி |
| தேவராளன் | - | தேவராட்டி | தோட்டக்காரன் | - | தோட்டக்காரி |
| தோழன் | - | தோழி | நம்பி | - | நங்கை |
| நல்லவன் | - | நல்லவள் | நடிகன் | - | நடிகை |
| நாயகன் | - | நாயகி | நான்முகன் | - | கலைமகள் |
| நிபுணன் | - | நிபுணி, நிபுணை | சிவம் | - | சக்தி |
| சிறியவன் | - | சிறியவள் | சிறுவன் | - | சிறுமி |
| சிறுக்கன் | - | சிறுக்கி | சீனன் | - | சீனத்தி |
| சீமான் | - | சீமாட்டி | செல்வன் | - | செல்வி |
| செவிடன் | - | செவிடி | சேவல் | - | பேடு |
| சேவகன் | - | சேவகி | சிறுவன் | - | சிறுமி |
| சித்தப்பா | - | சித்தி | தமிழன் | - | தமிழிச்சி |
| பதி | - | பத்தினி | பறையன் | - | பறைச்சி |
| பண்டிதன் | - | பண்டிதை | பாக்கியவான் | - | பாக்கியவதி |
| பாங்கன் | - | பாங்கி | பாடகன் | - | பாடகி |
| பாலகன் | - | பாலகி | பாதகன் | - | பாதகி |
| பிதா | - | மாதா | பிரியன் | - | பிரியை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| பிக்கு | - பிக்குனி | பிராமணன் | - பிராமணத்தி |
| பிரான் | - பிராட்டி | புதல்வன் | - புதல்வி |
| புருஷன் | - பெண்டாட்டி | புத்திரன் | - புத்திரி |
| புனிதன் | - புனிதை | பூட்டன் | - பூட்டி |
| பெருமகன் | - பெருமகள் | பெருமான் | - பெருமாட்டி |
| பெரியப்பன் | - பெரியம்மை | பேரன் | - பேத்தி |
| பைத்தியக்காரன் | - பைத்தியக்காரி | பொன்னன் | - பொன்னி |
| பௌத்திரன் | - பௌத்திரி | மறவன் | - மறத்தி |
| மருத்துவன் | - மருத்துவிச்சி | மடையன் | - மடைச்சி |
| மச்சினன் | - மச்சினி | மித்திரன் | - மித்திரை |
| மலடன் | - மலடி | மாணவன் | - மாணவி |
| மாணாக்கன் | - மாணாக்கி | மாமா | - மாமி, அத்தை |
| முடவன் | - முடத்தி | மூதாளன் | - மூதாட்டி |
| மைத்துனன் | - மைத்துனி | யுவன் | - யுவதி |
| வஞ்சகன் | - வஞ்சகி | வலைஞன் | - வலைச்சி |
| வணிகன் | - வணிகச்சி | வாலிபன் | - வாலை |
| வீரன் | - வீராங்கனை | வீட்டுக்காரன் | - வீட்டுக்காரி |
| வேடுவன் | - வேடுவிச்சி | வேடன் | - வேடச்சி |

## அஃறிணை ஆண் பெண் மரபுப் பெயர்கள்

| *பிராணி* | *ஆண்* | *பெண்* |
|---|---|---|
| ஆடு | தகர், கடா | மறி |
| பறவைகள் | சேவல் | பேடு, பெட்டை |
| பன்றி | கேழல் | பிணா |
| மயில் | போத்து | அளகு |
| கோழி | சேவல் | பேடு, அளகு |
| யானை | களிறு | பிடி |
| புலி | போத்து | பிணா |
| குதிரை | குண்டு | வடவை, பெட்டை |
| நண்டு | அலவன் | பெடை |
| மான் | கலை | பிணை |
| பூனை | கடுவன் | பெட்டை |
| குரங்கு | கடுவன், திம்மன் | மந்தி |
| நாய் | கடுவன் | பெட்டை |
| எருமை | கடா, கண்டி | நாகு, கிடேரி |
| மாடு | ஏறு. ளை, எருது | நாகு, பசு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருபாற் பொதுப்பெயர்கள்

| | | |
|---|---|---|
| அகதி | அதிதி | அமைச்சர் |
| அறிஞர் | அநாதை | அதிபர் |
| அவர் | அறிவிலி | இவர் |
| உலோபி | எதிரி | ஏழை |
| முட்டாள் | முதலமைச்சர் | மேதை |
| வள்ளல் | வழக்காளி | வாதி |
| விஞ்ஞானி | ஜனாதிபதி | ஒருவர் |
| குழந்தை | கவிஞர் | சட்டத்தரணி |
| செயலாளர் | சோம்பேறி | ஞானி |
| தந்திரி | தளபதி | தலைவர் |
| தனாதிகாரி | நிர்வாகி | நீதிபதி |
| நோயாளி | பாவி | பொருளாளர் |
| பிரதிவாதி | பிரதமர் | மந்திரவாதி |

## பெயராகவும் வினையாகவும் நிற்கும் சொற்கள்

| *சொல்* | *பெயர்* | *வினை* |
|---|---|---|
| அகல் | தகழி | நீங்கு |
| அகழ் | அகழி | அகழுதல் |
| அணி | ஆபரணம் | அணிந்துகொள் |
| அரும்பு | மொட்டு | தோன்று |
| அரை | பாதி | அரைத்தல் |
| ஆடு | ஒரு மிருகம் | (நடனம்) ஆடு |
| ஆறு | இலக்கம், நீர்நிலை | ஆறுதல் |
| இளை | காவற்காடு | மெலிந்து போ |
| உடு | நட்சத்திரம் | உடுத்தல் |
| உடல் | உடம்பு | கோபி, வருத்து |
| உலை | உலைக்களம் | வருத்து |
| ஊர் | கிராமம் | நகர்ந்து செல் |
| எண் | இலக்கம் | நினை |
| கடை | பொருட்கள் விற்குமிடம் | (தயிர்) கடைதல் |
| குலை | பழக்குலை | கட்டவிழ் |
| சோதி | ஒளி | ஆராய்ந்து பார் |
| துணி | ஆடை | வெட்டு |
| பதி | ஊர், தலைவன் | பதித்தல் |
| பாடு | துன்பம், சிரமம் | பாடு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| மலர் | பூ | மலருதல் (விரிதல்) |
| வழி | பாதை | (நிரம்பி) வழிதல் |
| விளக்கு | தீபம் | விளக்கம் கொடு |
| வை | கூர்மை | வைத்திடு |

## இணைமொழிகள்

| | | |
|---|---|---|
| அடிக்கடி | - | உடனுக்குடன் |
| அக்கம் பக்கம் | - | அருகருகே |
| அங்குமிங்கும் | - | பலபக்கமும் |
| அருமை பெருமை | - | சிறப்பு |
| அல்லும் பகலும் | - | நாள்முழுவதும் |
| அரைகுறை | - | முற்றுப் பெறாதது |
| அல்லோல கல்லோலம் | - | கலவரமடைதல் |
| அழுத்தம் திருத்தம் | - | தெளிவு |
| ஆதிஅந்தம் | - | தொடக்கம் முடிவு |
| ஆறஅமர | - | அமைதியாக |
| ஆடி அசைந்து | - | மிகமெதுவாக |
| ஆசாபாசம் | - | தகாதவிருப்பம் |
| இடைஇடை | - | எப்போதாவது |
| இல்லாதது பொல்லாதது | - | பொய்க்காரணம் |
| ஈவிரக்கம் | - | இரக்கம் |
| உள்ளும் புறமும் | - | இருபக்கம் |
| எலும்புந் தோலும் | - | மிகமெலிவு |
| ஏட்டிக்குப் போட்டி | - | எதிருக்கெதிர் |
| ஏழை எளியவர் | - | மிகவறியவர் |
| ஒட்டி உலர்ந்த | - | மிகவும் வாடுதல் |
| ஒளிப்பு மறைப்பு | - | வெளிப்படையின்மை |
| ஓடி ஆடி | - | முயற்சியுடன் |
| கங்குகரை | - | எல்லையற்றது |
| கண்டது கடையது | - | எல்லாம் |
| கண்டதுண்டம் | - | துண்டு துண்டாக |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கையுங்களவுமாக | - | உடன்பிடிபடல் |
| கிட்டத்தட்ட | - | ஏறக்குறைய (அண்ணளவாக) |
| சட்டதிட்டம் | - | ஒழுங்கு |
| சாக்குப் போக்கு | - | வீண்காரணம் |
| சீறிச்சினந்து | - | மிகக்கோபித்து |
| தங்குதடை | - | தாமதம் |
| துணிமணி | - | உடுபுடவை |
| நகைநட்டு | - | ஆபரணம் |
| நாடுநகர் | - | தேசம் |
| நோய்நொடி | - | வருத்தம் |
| மூச்சுப்பேச்சு | - | அமைதி |
| வந்தவன் போனவன் | - | எல்லோரும் |
| வாட்டி வதைத்து | - | துன்புறுத்தல் |
| விதிவிலக்கு | - | சட்டத்திற்குப் புறம்பாக |

# அடுக்குத்தொடர்

| | |
|---|---|
| அணிந்து அணிந்து | அணு அணு |
| ஆங்கு ஆங்கு | ஆண்டு ஆண்டு |
| ஊற்றி ஊற்றி | எடு எடு |
| ஐயோ ஐயோ | கட்டிக் கட்டி |
| கதறிக் கதறி | குளித்துக் குளித்து |
| குவியல் குவியல் | கொதித்துக் கொதித்து |
| கோதிக் கோதி | சிரித்துச் சிரித்து |
| திசை திசை | பயந்து பயந்து |
| பாடிப் பாடி | பாளம் பாளம் |
| பிடி பிடி | விடு விடு |
| கட்டி கட்டி | ஓடி ஓடி |
| எடு எடு | நெடுத்து நெடுத்து |
| பெரிய பெரிய | கோதிக் கோதி |
| திசை திசை | தொங்கித் தொங்கி |
| வெட்டி வெட்டி | வைத்து வைத்து |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டைக்கிளவி (இரட்டைமொழி)

இரு சொல்லாக இணைந்து ஒலிக்குறிப்பாக அமைவது இரட்டைக்கிளவி ஆகும். இரு சொற்களில் ஒன்றைத் தனியாகப் பிரித்தால் பொருள் தராது.

## இரட்டைமொழி

| | | |
|---|---|---|
| கணீர் கணீர் | பொலு பொலு | பற பற |
| கற கற | கொலு கொலு | நெரு நெரு |
| புறு புறு | மட மட | தக தக |
| சிடு சிடு | கட கட | விதிர் விதிர் |
| குபீர் குபீர் | தன தன | பொரு பொரு |
| சுள் சுள் | திரு திரு | மினு மினு |
| வெடு வெடு | கடு கடு | கம கம |
| தளு தளு | பொடு பொடு | பட பட |
| தழு தழு | விறு விறு | துரு துரு |
| கல கல | கண கண | கொழு கொழு |
| சிலீர் சிலீர் | சல சல | சர சர |
| சுறு சுறு | தொள தொள | மெது மெது |
| வழ வழ | பர பர | கிணு கிணு |
| சட சட | தள தள | பள பள |
| தட தட | பொசு பொசு | சர சர |
| சுர் சுர் | சுரு சுரு | கிசு கிசு |

## அடுக்கிடுக்குத் தொடர்

| | |
|---|---|
| அண்ணணித்து | கன்னங்கரேல் |
| கூனிக்குறுகி | கொதிகொதித்து |
| சின்னஞ்சிறிய | செக்கச் சிவந்து |
| தன்னந்தனியே | தெள்ளத் தெளிந்து |
| நெட்டநெடுத்து | நடுநடுங்கி |
| பச்சைப்பசேல் | பென்னம் பெரிய |
| பிய்த்துப்பிடுங்கி | வெள்ளைவெளேர் |
| வெட்டவெளி | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரபுத்தொடர்கள்

| | | |
|---|---|---|
| *கண்ணாயிருத்தல்* | - | கவனமாயிருத்தல் |
| *அகடவிகடம்* | - | தந்திரம் |
| *ஆறப்போடுதல்* | - | பிற்போடல் |
| *கைகூடுதல்* | - | சித்தியடைதல் |
| *கட்டுக்கதை* | - | பொய்க் கதை |
| *நாக்குப் புரளுதல்* | - | சொல்லுத் தவறுதல் |
| *அரக்கப்பரக்க* | - | விரைவாக |
| *தாளம் போடல்* | - | வறுமையால் வாடல் |
| *முகம் மலர்ந்து* | - | மகிழ்ச்சியடைதல் |
| *காது குத்துதல்* | - | ஏமாற்றுதல் |
| *ஏட்டுச்சுரக்காய்* | - | அனுபவமில்லாத கல்வியறிவு |
| *இலவுகாத்த கிளி* | - | காத்திருந்து ஏமாறுதல் |
| *இரண்டுங் கெட்டான்* | - | நன்மை, தீமை அறியாதவன் |
| *அடியொற்றல்* | - | பின்பற்றுதல் |
| *அடிவிளக்குதல்* | - | பாதங்கழுவி உபசரித்தல் |
| *அடிபடுதல்* | - | கீழ்ப்படிதல், பழமையாகுதல் |
| *அடிபிறகிடுதல்* | - | பின்வாங்குதல், தோற்றோடுதல் |
| *கண்கலத்தல்* | - | ஒருவரையொருவர் பார்த்தல், எதிர்பார்த்தல் |
| *கண்கனலுதல்* | - | கோபத்தால் கண் சிவத்தல் |
| *கண்கெடச் செய்தல்* | - | அறிந்திருந்து தீமை செய்தல் |
| *கண் சுருட்டுதல்* | - | அழகினால் வசீகரித்தல், தூக்கமயமாதல் |
| *கண்ணுறைதல்* | - | அன்பு குறைதல் |
| *கண்ணெச்சில் கழித்தல்* | - | திருஷ்டி பரிகாரம் செய்தல். |
| *கண்படுதல்* | - | தூங்குதல், திருஷ்டிபடுதல் |
| *கண்முகிழ்த்தல்* | - | கண்மூடுதல், தூங்குதல் |
| *கண்வாங்குதல்* | - | கண்ணைக் கவர்தல் |
| *கண்கலத்தல்* | - | ஒருவரையொருவர் விரும்புதல் |
| *கழுத்திற் கட்டுதல்* | - | வலிந்து பொறுப்பளித்தல் |
| *கழுத்துக் கொடுத்தல்* | - | தம்வருத்தம் பாராமற் பிறர் காரியத்தை ஏற்று நிற்றல், வாழ்க்கைப்படுதல். |
| *காதிலடிபடுதல்* | - | ஒரு செய்தி அடிக்கடி கேட்டல் |
| *காது குத்துதல்* | - | வஞ்சித்தல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| காதைக்கடித்தல் | - | காதோரமாக முகத்தை வைத்து மறைபொருள் சொல்லால் கோள் சொல்லுதல் |
| கை நீட்டுதல் | - | அடித்தல், இரத்தல், கொடுத்தல், திருடுதல் |
| கைம்மறித்தல் | - | கையால் தடுத்தல் |
| கைம்முகிழ்தல் | - | கைகூப்புதல் |
| கைமாறுதல் | - | ஒருவர் கையினின்று மற்றொருவர் கைக்கு போதல் |
| கையறுதல் | - | ஒன்றும் செய்யாமல் தடுத்தல் |
| கை வருதல் | - | ஒன்றைச் செய்யக் கையெழுதல், தேர்ச்சி பெறுதல் |
| கை கூடல் | - | அனுகூலமாதல் |
| காலூன்றுதல் | - | நிலைபெறுதல் |
| காலைச்சுற்றுதல் | - | பற்றித் தொடர்தல், தொடர்ந்து பற்றுதல் |
| கால் கொள்ளுதல் | - | விழாவிற்குத் தொடக்கம் செய்தல் |
| கால் பின்னுதல் | - | நோயினாற் கால்கள் ஒன்றுக்கொன்று குறுக்காதல் |
| காலாறுதல் | - | நடை ஓய்ந்து இளைப்பாறுதல் |
| காலூன்றுதல் | - | பந்தற்கால் நடுதல், நிலைத்தல் |
| காலைச் சுற்றுதல் | - | தொடர்ந்து பற்றுதல் |
| நாக்கு வளைத்தல் | - | பழித்தல் |
| நாக்கடைத்தல் | - | பேசமுடியாதிருத்தல் |
| நாக்கு நீளுதல் | - | அக்கமின்றிப் பேசுதல் |
| நாக்குத் தவறுதல் | - | பேச்சுறுதி தவறுதல், பொய் சொல்லுதல் |
| நாக்குப் புரளுதல் | - | பேச்சுறுதி தவறுதல், பொய் சொல்லுதல் |
| கை தளர்தல் | - | வறுமையுறல் |
| கை மிகுதல் | - | அளவு கடத்தல் |
| செவிப்படுத்தல் | - | கேட்கப்படுதல் |
| செவியறிவுறுத்தல் | - | நல்லறிவு புகட்டல் |
| காது குத்துதல் | - | ஏமாற்றுதல் |
| வயிறு வளர்த்தல் | - | எவ்வாறோ பிழைத்துக் கொள்ளல் |
| தலைப்படுதல் | - | மேற்கொள்ளல் |
| தலை காட்டுதல் | - | வெளிவருதல் |
| தலைப் படுதல் | - | தலையிடுதல், பங்குபற்றல், வெளிப்படுதல் |
| தலை மயங்குதல் | - | கலந்திருத்தல் |
| முகஞ்செய்தல் | - | நோக்குதல், தோன்றுதல் |
| முகம்புகுதல் | - | அருளுக்காக எதிர்ச்சென்று நிற்றல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*முகம் பார்த்தல்* - இரக்கம் காட்டுதல், அன்பு காட்டுதல்
*பல்லைக் கடித்தல்* - சகித்தல்
*தோள்மாற்றுதல்* - பிறர்சுமையைத் தான் சுமத்தல்
*வாலாட்டுதல்* - சேட்டை பண்ணுதல்
*வாய் புலம்பல்* - பிதற்றுதல்
*வாயில் மண் போடுதல்* - கேடு விளைவித்தல்

# உவமைச் சொற்றொடர்

அச்சாணியற்ற தேர் போல (உயிர் நாடியற்றது)
அடிவயிற்றில் இடி விழுந்தது போல (கொடுந்துன்பம்)
அடுத்தது காட்டும் பளிங்கு போல (பிரதிபலிப்பு)
அத்தி பூத்தாற் போல (மிக அரிது)
அம்புபட்ட மான் போல (உயிர்த்துடிப்பு)
அழகுக்கழகு செய்வது போல (பேரழகு)
அற்ற குளத்தில் அறுநீர்ப்பறவை போல (கூடா நட்பு)
ஆண்டிகள் கூடி மடம் கட்டினது போல (உருவாகாத் திட்டம்)
ஆயிரம் காக்கைக்கு ஒரு கல்லுப் போல (நன்மையை எதிர்க்க முடியாத தீமைகள்)
ஆழ்கடல் முத்துப் போல (அரிய நிதி)
ஆற்றில் கரைத்த புளிபோல (பயனின் அழிவு)
ஆனைவாய்க் கரும்பு போல (மீளா அழிவு)
இருதலைக் கொள்ளி எறும்பு போல (கரையேற முடியாத துயர்)
இனம் பிரிந்த மான் போல (பிரிவுத்துயர்)
இலவுகாத்த கிளிபோல (ஏமாற்றமடைதல்)
உட்சுவர் இருக்கப் புறச்சுவர் தீற்றுதல் போல (வெளிப்பகட்டு)
உரிக்கு மாரடிப்பது போல (போலிநடிப்பு)
உருவும் நிழலும் போல (பிரியா நட்பு)
உள்ளங்கை நெல்லிக்கனி போல (தெட்டத் தெளிவு)
ஊமை கண்ட கனவு போல (உரைக்க முடியாத நிலை)
ஊழித்தீ போல (பயங்கர அழிவு)
எட்டி பழுத்தாற் போல (பயனற்றது)
எரிமுன்னர் வைத்தூறு போல (அழிவு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளியைக் கண்ட இருள் போல (உடன் மறைவு)
ஓடும் புளியம்பழமும் போல (ஒற்றுமையின் வேற்றுமை)
கட்டுக்கடங்காக் காளை போல (தன்னிட்டம்)
கடற்கரை மணலைக் கணக்கிட முடியாதது போல (முடியா முயற்சி)
கண்ணிலான் கண் பெற்றிழந்தாற் போல (பறிக்கப்பட்ட இன்பம்)
கருடனைக் கண்ட பாம்பு போல (பயம்)
களை பறியா விளைநிலம் போல (தீமையை வளர்த்தல்)
கனியிருப்பக் காய்கவர்வது போல (நன்மை இருக்க தீயதை நாடுவது)
காலத்திற்குப் பெய்த மழைபோல (தருணத்திலுதவி)
கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல (ஏமாற்றம்)
குருடனுக்குக் குருடன் வழிகாட்டியது போல (தீமையினிரட்டிப்பு)
குன்று முட்டிய குருவி போல (இடர்பாடு)
கூலிக்கு மாரடிப்பது போல (போலி நடிப்பு)
சர்க்கரைப் பந்தலிற் தேன்மாரி பொழிந்தது போல (இனிமையில் இனிமை)
சிவபூசையில் கரடி புகுந்தது போல (நன்மைக்கிடையூறு)
சிறுதுளி பெருவெள்ளம் போல (சேமிப்பின் முக்கியத்துவம்)
சூரியனைக் கண்ட தாமரை போல (மகிழ்ச்சி)
சூரியன் முன் மின்மினி போல (மங்குதல்)
நீறுபூத்த நெருப்புப் போல (சினம் தணியாது அடங்கியிருத்தல்)
முயற்கொம்பு போல (இல்லை)
செவிடன் காதில் ஊதிய சங்கு போல (பயனில்லாத செயல்)
தேடிய பூண்டு காலில் சிக்கியது போல (எளிதில் நிறைவேற்றுதல்)
மணலிலே கயிறு திரிப்பது போல (வீண்முயற்சி)
முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டாற் போல (வீண்ஆசை)
மேடும் மடுவும் போல (உயர்வும் தாழ்வும்)
வளர்த்த கடா மார்பிற் பாய்ந்தது போல (நன்மைக்குத் தீமை)
விழலுக்கு இறைத்த நீர் போல (வீண் வேலை)
விளக்கில் விழுந்த விட்டில் போல (ஆசையும் அழிவும்)
வெந்த புண்ணில் வேல் பாய்ந்தது போல (துன்பத்தில் துன்பம்)
வெள்ளிடை மலை போல (தெட்டத் தெளிவு)
வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை போல (வெளி அலங்காரம்)
வைக்கோற்பட்டடை நாய் போல (பலன் பெறாப் பாதுகாப்பு)
வெயிலிற்பட்ட புழு போல (பெரும் துன்பத்தை அனுபவித்தல்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல பொருள் ஒரு சொல்

வீடு, மனம், உள்ளம் - ***அகம்***

போர்க்களம், சபை, கல்விச்சாலை, படைக்கொட்டில் - ***அரங்கம்***

கடல், சக்கரம், தேருருளை, அட்டம், மோதிரம் - ***ஆழி***

அழகு, ஆபரணம் - ***அணி***

உதடு, பூவிதழ், கண்ணிமை, மாலை - ***இதழ்***

சங்கீதம், புகழ், பாட்டிசை - ***இசை***

ஆபரணம், மரக்கலம், மண்பாத்திரம், உண்கலம், அணிகலம் - ***கலம்***

துன்பம், கடல், ஒலி, கலியுகம், வறுமை, சனி - ***கலி***

வேதம், ஒலி, சுதி, மந்திரம், இசை - ***சுருதி***

உறவு,கட்டு, கயிறு, மலம், பாசம், தொடர்பு, பற்று, முடிச்சு - ***பந்தம்***

பொறுமை, மலை, அடக்கம், கல், பூமி, வலிமை - ***பொறை***

மேகம், அழகு, வலிமை, ஆபரணம் - ***மஞ்சு***

கலகலப்பு, புல்பூண்டு, முகவெளிப்பாடு - ***களை***

தகுதி, தடவை, வகுப்பு - ***தரம்***

சிரம், பக்கம், மேற்பகுதி - ***தலை***

அடைமொழி, இலட்சுமி, செல்வம் - ***திரு***

கூட்டுத்தொகை, பணம், தொகுப்பு - ***தொகை***

கடமைக்கூறு,தொகுதி / பாகம், வியாபார மூலதனபங்கு - ***பங்கு***

கடல், சம்பளப்பணி, முடிக்க வேண்டிய காரியம் - ***வேலை***

அருணன், இரவி, சூரியன், கதிரவன், வெய்யோன், பரிதி - ***ஆதவன்***

முயற்சி, மனக்கிளர்ச்சி, வலிமை, உறுதியான எண்ணம்
உயற்சி, குறிக்கோள், உண்மை;மிகுதி - ***ஊக்கம்***

எரு, மார்பு, வலிமை - ***உரம்***

பிச்சை, சந்தேகம் - ***ஐயம்***

முடிவு, அங்காடி, வாயில் - ***கடை***

களிப்பு, கள், வெறி, களிமண் - ***களி***

உறுப்பு, பூவின் அரும்பு, கருப்பம், முட்டை, மரக்கொம்பு - ***சினை***

சந்திரன், அறிவு, மாதம் - ***மதி***

கிரீடம், மகுடம், குடுமி, முற்றுவி - ***முடி***

கரும்பு, நாணல், மூங்கில், யானை - ***வேழம்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பொருள் பல சொல்

*அடி* - பாதம், தாள், கால்

*அணிதல்* - தரித்தல். சூடுதல், புனைதல், அலங்கரித்தல்

*குடித்தல்* - அருந்துதல்,பருகுதல், சுவைத்தல்

*ஞானம்* - அறிவு, ஆற்றல், விவேகம், புத்தி, வித்தை

*காதணி* - தோடு, குழை,குண்டலம்

*ஒளி* - சுடர், கதிர், சோதி, காந்தி, வெளிச்சம், பிரகாசம்

*உடல்* - உடம்பு, சரீரம், மெய், மேனி, உடலம்

*இரத்தம்* - குருதி, செந்நீர், உதிரம், கறை

*அபாயம்* - ஆபத்து, இடையூறு, இடர்

*காடு* - அடவி, கானகம், வனம், ஆரணியம்

*ஒலி* - ஓசை, அரவம், தொனி, சத்தம்

*இனம்* - உறவு, கிளை, சுற்றம்

*கல்வி* - கலை, படிப்பு, வித்தை

*இகழ்தல்* - பழித்தல், நிந்தித்தல், எள்ளல்

*அம்பு* - கணை, சரம், பாணம்

*கணவன்* - கொழுநன்,தலைவன், நாயகன், பதி

*அருள்* - இரக்கம், கருணை, கிருபை

*ஆற்றல்* - வலிமை, சக்தி, உரம், திண்மை

*அழகு* - எழில், வனப்பு, கவின்,வடிவு, அணி

*இன்பம்* - மகிழ்ச்சி, களிப்பு, உவகை, உவப்பு

*ஆபரணம்* - நகை, இழை, அரம், அணி

*குற்றம்* - தவறு, பிழை, களங்கம், தப்பு, மாசு, கசடு

*சாதல்* - இறத்தல், மடிதல், மாய்தல், மாளல்

*சினம்* - கோபம், சீற்றம், வெகுளி, காய்தல்

*செல்வம்* - பொருள், நிதி, திரு

*தடாகம்* - ஏரி, குளம், பொய்கை, வாவி, கயம்

*தமையன்* - அண்ணன், முன்னவன், முன்னோன்

*தாய்* - அன்னை, ஆய், மாதா

*அந்திப்பொழுது* - சாய்பொழுது, சாயங்காலம், மாலை நேரம், செக்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| *சூரியன்* | - | ஞாயிறு, பகலவன், பரிதி, வெய்யோன், கதிரவன் |
| *தோழன்* | - | சிநேகிதன், துணைவன், நண்பன், பாங்கன், சகாயன் |
| *ஆசிரியன்* | - | குரவன், ஆசான், தேசிகன், உபாத்தியாயன் |
| *ஆசை* | - | ஆவல், ஆர்வம், விருப்பம், வேட்கை |
| *ஆரம்பம்* | - | ஆதி, தொடக்கம், முதல் |
| *ஆடு* | - | மேடம், தகர், கடா |
| *ஈகை* | - | கொடை, அளி, வண்மை, உபகாரம், தானம், நன்கொடை |
| *உடல்* | - | உடம்பு, மெய், சரீரம், சடம் |
| *உணவு* | - | ஆகாரம், உண்டி, போசனம் |
| *உதயம்* | - | வைகறை, காலைப்பொழுது, புலர், விடியல், தோற்றம், காலம், வெளிச்சம், பிறப்பு |
| *கடல்* | - | உவர், சாகரம், சமுத்திரம், பாவை, ஆழி |
| *களிப்பு* | - | மகிழ்ச்சி, உவகை, ஆனந்தம், இன்பம் |
| *காரணம்* | - | ஏது, நிமித்தம், மூலம்,வழி |
| *காற்று* | - | கால், பவளம், மாருதம், வளி, தென்றல் |
| *குதிரை* | - | அசுவம், அயம், பரி, புரவி |
| *நாள்* | - | தினம், பகல் |
| *துன்பம்* | - | இடர், அல்லல், இடும்பை, இன்னல், இடுக்கண் |
| *அரசி* | - | இராணி, தலைவி, இறைவி |
| *அமைச்சர்* | - | மந்திரியார், மந்திரர் |
| *அறிவு* | - | உணர்வு, உரம், ஞானம், மதி, மேதை, விவேகம் |
| *அன்பு* | - | நேசம், நேயம், பரிவு, பற்று |
| *ஆகாயம்* | - | அண்டம், விண், வானம், விசும்பு, வான், உம்பர் |
| *பாட்டு* | - | கவி, கவிதை, செய்யுள், பா |
| *மனம்* | - | அகம், உள்ளம், உள், உளம், சித்தம், நெஞ்சு |
| *காலன்* | - | இயமன், மறலி, கூற்றுவன் |
| *சிரிப்பு* | - | முறுவல், மூரல், நகை |
| *சிநேகம்* | - | நட்பு, கேண்மை, நேயம் |
| *தாமரை* | - | கமலம், முளரி, அம்புயம் |
| *தரித்திரம்* | - | வறுமை, மிடி, நல்குரவு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நித்திரை* - உறக்கம், துயில், அனந்தல், சயனம்

*புகழ்* - கீர்த்தி, இசை, சீர்

*மலை* - பருவதம், கிரி, குன்று

*பெண்* - மங்கை, பாவை, தையல்

*மேகம்* - கொண்டல், கார், முகில்

*வண்டு* - அளி, கரும்பு, மதுரகம்

*வயல்* - பழனம், செய், கழனி, புலம்

*வாசனை* - சுகந்தம், நாற்றம், விரை, மணம்

*வில்* - சிலை, தனு, சாபம்

*வேதம்* - மறை, சுருதி, ஆரணம்

*அடக்கம்* - கீழ்ப்படிதல், கீழ்ப்படிவு, பணிவு

*ஆண்மை* - பலம், வலி, வலிமை

*குழந்தை* - சிசு, சேய், பிள்ளை, குழவி

*சூரர்* - தீரர், தைரியசாலி, வீரர்

*தூசு* - துகள், தூள், புழுதி

*தொழில்* - ஊழியம், பணி, வேலை

*நூல்* - ஏடு, பனுவல், புத்தகம்

*நட்பு* - சிநேகம், நேயம், தோழமை

*பெருமை* - பீடு, மாட்சி, மாண்பு

*யோசனை* - அபிப்பிராயம், ஆலோசனை, சிந்தனை

*வண்ணம்* - சாயல், நிறம், வர்ணம்

*கூட்டம்* - அவை, சபை, குழாம், சமூகம்

*கேடு* - அழிவு, சிதை, சேதம், நட்டம்

*சத்தியம்* - ஆணை, சபதம், சூழ், பிரமாணம், உண்மை

*சிங்கம்* - அரி, ஆளி, கேசரி, கோளரி, சீயம்

*சொல்* - கிளவி, கூற்று, மாற்றம், மொழி, வாக்கு

*சோலை* - கா, பொழில், நந்தவனம், தண்டலை

*சோறு* - அடிசில், அமுது, அன்னம், சாதம், பருக்கை

*தேன்* - மது, நறவு, தேறல், கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொகைநிலைத் தொடர்கள்

| | | |
|---|---|---|
| ஒருவர் | - | கடவுள் |
| இருசுடர் | - | சூரியன், சந்திரர் |
| இருதிணை | - | உயர்திணை, அஃறிணை |
| இருகுரவர் | - | தாய், தந்தையர் |
| இரு மரபு | - | தாய்மரபு, தந்தைமரபு |
| இருநிதி | - | சங்கநிதி, பதுமநிதி |
| இருபொருள் | - | கல்வி , செல்வம் |
| இருபற்று | - | அகப்பற்று, புறப்பற்று |
| இருமை | - | இம்மை, மறுமை |
| முக்கனி | - | மா, பலா, வாழை |
| முத்தமிழ் | - | இயல், இசை, நாடகம் |
| முப்பிணி | - | வாதம், பித்தம், சிலேட்டுமம் |
| முப்பொறி | - | மனம், வாக்கு, காயம் |
| முச்சுடர் | - | சூரியன், சந்திரன், அக்கினி |
| முத்தொழில் | - | படைத்தல், காத்தல், அழித்தல் |
| முக்குணம் | - | இராட்சசம், தாமசம், சாத்வீகம் |
| மும்மலம் | - | ஆணவம், கன்மம், மாயை |
| முக்குற்றம் | - | காமம், வெகுளி, மயக்கம் |
| மும்முரசு | - | வீரமுரசு, கொடைமுரசு, மங்களமுரசு |
| நால்வகைப்பா | - | ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா, வெண்பா |
| நால்வகைப்பூ | - | கோட்டுப்பூ, கொடிப்பூ, நிலப்பூ, நீர்ப்பூ |
| நானிலம் | - | குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் |
| நால்வர்ணத்தவர் | - | பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் |
| நாற்குணம் | - | அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு (பெண்கள்) அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி (ஆண்கள்) |
| நாற்படை | - | தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை |
| நாற்பொருள் | - | அறம், பொருள், இன்பம், வீடு |
| ஐம்பொறி | - | மெய், வாய், கண், மூக்கு, செவி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஐம்பூதம் | - | நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் |
| ஐம்புலன் | - | சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் |
| ஐந்நிலம் | - | குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை |
| ஐம்பால் | - | ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் |
| ஐம்பெரும் காப்பியம் | - | சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, சீவகசிந்தாமணி |
| ஐஞ்சிறுகாப்பியம் | - | சூளாமணி, உதயணகுமார காவியம், நீலகேசி நாககுமார காவியம், யசோதர காவியம். |
| பஞ்சாங்கம் | - | கரணம், திதி, நட்சத்திரம், யோகம், வரம் |
| பஞ்சபாண்டவர் | - | தருமர், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவர் |
| பஞ்சமாபாதகம் | - | கொலை, களவு, கள், சூது, காமம் |
| பஞ்சாமிர்தம் | - | சர்க்கரை, தயிர், தேன், நெய், பால் |
| பஞ்சாயுதம் | - | சக்கரம், தண்டு, சங்கு, தனு, வாள் |
| பஞ்ச கௌவியம் | - | பால், தயிர், நெய், கோசலம், கோமியம் |
| அறுசுவை | - | இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு, கைப்பு |
| ஆறறிவு | - | பார்வை, கேள்வி, முகர்தல், சுவைத்தல், தொடுகை, பகுத்தல் |
| ஆறுகுணம் | - | ஐஸ்வரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் |
| ஆறுதொழில் | - | ஈதல், ஏற்றல், ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்டுவித்தல் |
| ஆறுபருவம் | - | கார், கூதிர், முன்பனி, பின்பனி முதுவேனில், இளவேனில், |
| ஏழுஸ்வரங்கள் | - | ஸ, ரி, க, ம, ப, த, நி |
| எண்திசை | - | வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, வடமேற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு |
| நவரத்தினம் | - | பவளம், நீலம், மரகதம், பதுமராகம், வச்சிரம், முத்து, கோமேதகம், புஸ்பராகம், வைடூரியம். |
| நவதானியம் | - | நெல், எள்,கடலை, உழுந்து, கொள்ளு, திணை, துவரை, பயறு, கோதுமை |
| தசஅவதாரம் | - | மீன், ஆமை, பன்றி, நரசிங்கம், வாமணன், பரசுராமன், இராமன், கிருஷ்ணன், பலதேவன், கல்கி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரபுப் பெயர்கள்

## இளமைப் பெயர்கள்

| | | |
|---|---|---|
| *கன்று* | :- | தென்னை, யானை, மான், வாழை, பசு, எருமை |
| *குட்டி* | :- | ஆடு, புலி, குதிரை, பாம்பு, வாழை, குரங்கு, பூனை, யானை, சிங்கம், நாய், மான் |
| *குருளை* | :- | சிங்கம், நாய், புலி |
| *பறழ்* | :- | குரங்கு, பூனை, பன்றி |
| *பிள்ளை* | :- | கீரி, அணில், கிளி, கமுகு, தென்னை |
| *மறி* | :- | ஆடு, குதிரை, புள்ளிமான் |
| *குஞ்சு* | :- | அணில், மீன், கோழி, கிளி |
| *பேத்தை* | :- | தவளை |
| *வடலி* | :- | பனை |
| *போதகம்* | :- | யானை |
| *நாற்று* | :- | புகையிலை, நெல், குரக்கன் |

## கூட்டத்தைக் குறிக்கும் மரபுச் சொற்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆடு | :- | மந்தை | ஆ | :- | நிரை |
| பல் | :- | வரிசை | கல் | :- | குவியல் |
| மலர் | :- | கொத்து | கடை | :- | தொகுதி |
| ஆறு | :- | தொகுதி | சனம் | :- | திரள், கூட்டம் |
| நெல் | :- | குவியல் | வாழை | :- | தோப்பு |
| தென்னை | :- | தோப்பு | ஆசிரியர் | :- | குழாம் |
| வைக்கோல் | :- | போர் | | | |

## சினைப்பெயர்கள்

இலைகள்

| | | |
|---|---|---|
| இலை | :- | மா, பலா, வாழை |
| ஓலை | :- | தென்னை, பனை, கமுகு |
| தாள் | :- | நெல், புல் |
| தோகை | :- | கரும்பு, சோளம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வித்துப் பெயர்

| | | |
|---|---|---|
| விதை | :- | மிளகாய், கத்தரி |
| மணி | :- | நெல், சோளம், தினை |
| முத்து | :- | ஆமணக்கு, மாதுளை |
| கொட்டை | :- | மா, பலா, தாமரை |
| பொகுட்டு | :- | தாமரை, ஆமணக்கு |

### இளங்காயின் பெயர்

| | | |
|---|---|---|
| குரும்பை | :- | தென்னையின் இளங்காய் |
| நுங்கு | :- | பனையின் இளங்காய் |
| மூசு | :- | பலாவின் பிஞ்சு |
| வடு | :- | மாவின் இளம் பிஞ்சு |
| கச்சல் | :- | வாழையின் இளம் பிஞ்சு |

### உள்ளீட்டுப் பெயர்

| | | |
|---|---|---|
| நெல் | :- | அரிசி, தினை, வரகு |
| சதை | :- | வாழை, மா |
| சோறு | :- | முருங்கை, கற்றாளை |
| சுளை | :- | பலா, தோடை |
| பருப்பு | :- | அவரை, துவரை, பயறு |

### குலைக்குரிய மரபுப்பெயர்

| | | |
|---|---|---|
| குலை | :- | வாழை, முந்திரி, ஈச்சை |
| கொத்து | :- | மா, புளி, முதலியவற்றின் காய்த்தொகுதி |
| கதிர் | :- | சோளம், நெல், வரகு |

### தொனியைக் குறிக்கும் சொற்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கரடி | :- | கத்தும் | பசு | :- | கதறும், கத்தும் |
| குயில் | :- | கூவும் | காகம் | :- | கரையும் |
| யானை | :- | பிளிறும் | நாய் | :- | குரைக்கும் |
| ஆந்தை | :- | அலறும் | தேனீ | :- | ரீங்காரம் செய்யும் |
| பாம்பு | :- | சீறும் | கோழி | :- | கொக்கரிக்கும் |
| சேவல் | :- | கூவும் | குதிரை | :- | கனைக்கும் |
| நரி | :- | ஊளையிடும் | எருது | :- | முக்காரமிடும் |
| கழுதை | :- | கத்தும் | எலி | :- | கீச்சிடும் |
| கிளி | :- | பேசும், மிழற்றும் | தவளை | :- | கத்தும் |
| பன்றி | :- | உறுமும் | பூனை | :- | கத்தும் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மயில் | :- | அகவும் | வண்டு | :- | இரையும் |
| பல்லி | :- | சொல்லும் | அணில் | :- | கீச்சிடும் |
| ஆடு | :- | கத்தும் | பாம்பு | :- | சீறும் |
| எருமை | :- | எக்காளமிடும் | ஓநாய் | :- | ஊளையிடும் |
| வானம்பாடி | :- | பாடும் | தேவாங்கு | :- | அழும் |
| ஒட்டகம் | :- | உறுமும் | மைனா | :- | கொஞ்சும் |
| குரங்கு | :- | அலம்பும் | | | |

## பிறமரபுப் பெயர்கள்

யானையின் மலம் - இலத்தி
பறவையின் மலம் - எச்சம்
ஆட்டு மலம் - பிழுக்கை
மாடு, எருமைகளின் மலம் - சாணம்
கழுதையின் மலம் - விட்டை
வண்டி செலுத்துவோன் - சாரதி
விமானம் செலுத்துவான் - மீகாமன், மாலும்
குதிரை, யானை, தேர் செலுத்துவோன் - பாகன்
ஆடு, மாடு மேய்ப்பவன் - இடையன்
வைக்கோல் அடுக்கப்பட்டிருப்பதைக் கூறுவது - போர்
புகையிலை அடுக்கப்பட்டிருப்பதைக் கூறுவது - பாடம்
புத்தகம், வெற்றிலை முதலியவற்றின் கட்டு - கவளி, கவளிகை
ஆடு மேய்ப்பவன் - இடையன்
வாகனம் ஓட்டுபவன் - சாரதி
தேர் செலுத்துபவன் - பாகன்
விமானம் செலுத்துபவன் - வலவன் / விமானி
யானை செலுத்துபவன் - பாகன்
கப்பல் ஓட்டுபவன் - மீகாமன் / மாலுமி
மட்பாண்ட வேலை செய்பவன் - குயவன்
கட்டட வேலை செய்பவன் - கொத்தன்
மரத்தளபாடம் செய்பவன் - தச்சன்
மீன் பிடிப்பவன் - மீனவன் / செம்படவன்
சிலை வடிப்பவன் - சிற்பி
தன்நாட்டை நேசிப்பவன் - தேசாபிமானி, தேசப்பற்றாளர்
படகு ஓட்டுபவன் - படகோட்டி, ஓடக்காரன்
விவசாயம் செய்பவன் - உழவன் / விவசாயி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்மொழிக்கு ஒருமொழி

*அகராதி* :– சொற்களை அகர வரிசைப்படி குறிப்பிட்டு அவற்றின் பொருளைக் கூறும் நூல்

*அகாலமரணம்* :– வயோதிபம் அடைந்து இறக்காமல் எதிர்பாராத சந்தர்ப்பத்தில் இடையிலே மரணம் சம்பவித்தல்

*அங்கதம்* :– வெளிப்படையான பொருளில் புகழ்ந்தும் மறைபொருளில் இகழ்ந்தும் கூறுவது

*அஞ்ஞாதவாசம்* :– பிறர் தம்மை இன்னார் என்று அறியாதவாறு மாறுவேடம் பூண்டு மக்கள் மத்தியில் வசித்தல்

*அட்டாவதானி* :– ஒரேசமயத்தில் எட்டுவிடயங்களை அவதானிக்கும் ஆற்றல் படைத்தவன்.

*அணிந்துரை* :– ஒரு நூலுக்கு நூலாசிரியர் தவிர்ந்த பிறர் வழங்கும் புகழுரை

*ஆதனம்* :– ஒருவருக்குரிய நிலம் முதலிய சொத்துக்கள்

*இடக்கரடக்கல்* :– சபையிற் சொல்லத்தகாத சொல்லை மறைத்து வேறு வகையிற் சொல்லுதல்

*இரட்டுறமொழிதல்* :– இரண்டு பொருள்படும்படி சொல்லுதல்

*ஈமக்கிரியை* :– ஒருவர் இறந்த பின்னர் செய்யப்படுகின்ற சமயச் சடங்குகள்

*ஏகபோகம்* :– ஒருவர் முழுப்பொருளையும் தாமே தனித்து அனுபவித்தல்

*ஐம்புலன்* :– சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்து உணர்வுகள்

*ஒட்டுண்ணி* :– மற்றோர் உயிர் பொருளில் இருந்து தன் உணவை உறிஞ்சி வாழும் பிராணி அல்லது தாவரம்.

*ஓம்படை* :– பேணிப்பாதுகாத்துத் தருமாறு ஒருவரை இன்னொருவரிடம் ஒப்படைத்தல்.

*கட்டுக்கதை* :– ஆதாரமற்ற செய்திகளைக் கொண்டு புனையப்பட்ட கற்பனைக் கதை

*குருகுலவாசம்* :– மாணாக்கர் ஆசிரியருடன் தங்கியிருந்து கல்வி பயிலுதல்.

*கூலிப்படை* :– ஒரு பகுதியினருக்காக கூலி பெற்றுக்கொண்டு போரிடும் படை.

*கையுறை* :– குரு, பெரியோர், குழந்தைகள் ஆகியோரைக் காணச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வோர் கொண்டு செல்லும் உபகாரப் பொருள்.

*கையூட்டு* :- ஒரு கருமத்தை எளிதில் நிறைவேற்றும் பொருட்டு அதனோடு தொடர்புடையவருக்கு வழங்கப்படும் இலஞ்சப் பணம்.

*சகாப்தம்* :- நூறாண்டுகள் கொண்ட காலப்பகுதி

*சதாவதானி* :- ஒரே நேரத்தில் நூறு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் உடையவன்.

*ஜயந்தி விழா* :- வருடம் தோறும் ஒருவர் பிறந்த நாளன்று எடுக்கப்படும் விழா

*சரணாகதி* :- வேறு துணையில்லாதவிடத்து ஒருவரிடம் தன்னை ஒப்படைத்தல்.

*சிரஞ்சீவி* :- நெடுங்காலம் வாழ்பவன்

*சிலேடை* :- ஒரு சொல்லையோ சொற்றொடரையோ இரு பொருள்படத் தொடுப்பது.

*செங்கோன்மை* :- அரசனுடைய நீதி தவறாத ஆட்சி

*தசாவதானி* :- ஒரே சமயத்தில் பத்து விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் உள்ளவன்.

*தற்சமம்* :- ஆரியத்துக்கும், தமிழுக்கும் பொது எழுத்துக்களாகி விகாரமின்றித் தமிழில் வழங்கும் வடசொல்.

*தீர்க்கதரிசி* :- எதிர்கால நிகழ்ச்சிகளை அறியும் ஆற்றல் படைத்தவன்.

*நாத்திகன்* :- கடவுள் இல்லை என்ற கொள்கையுடையவன்.

*நிந்தகம்* :- அரசரும், செல்வரும் தமக்குக் கீழ் சேவை புரிவோருக்கு வழங்கும் நிலம்

*நூற்றாண்டு* :- நூறாவது ஆண்டில் எடுக்கப்படும் விழா

*நெடுங்கணக்கு* :- தமிழிலுள்ள இருநூற்று நாற்பத்தியேழு எழுத்துக்களும் ஒழுங்கு முறைப்படி அமையப்பெற்றது.

*பஞ்சமாபாதகம்* :- கொலை, களவு, கள், பொய், குரு நிந்தை என்னும் பாவங்கள்

*பதிப்புரை* :- ஒரு நூலை அச்சிட்டு வெளியிடுவோர் அந்நூலைப் பற்றி எழுதும் உரை.

*நோபல் பரிசு* :- உலகிலே சிறந்த ஆற்றலுடையாரைப் பாராட்டி நோபல் என்பவரின் நினைவாக வழங்கப்படும் உபகாரம்.

*சத்திரம்* :- துறவிகள், வயோதிபர், வழிப்போக்கர் ஆகியோர் தங்குவதற்கும் அவர்களுக்கு உணவு கொடுப்பதற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிய நிலையம்.

பகற்கனவு :- மனம் ஒருவழிப்படாது இன்பமயமான கற்பனை உலகில் சஞ்சரிக்கும் நிலை

பரிசம் :- மணமகன், மணமகளின் பெற்றோருக்குக் கொடுக்கும் பரிசு

பன்னசாலை :- முனிவர் வசிப்பதற்கு இலைகுழை கொண்டு வேய்ந்த குடிசை

மலடி :- திருமணம் புரிந்தும் பிள்ளையில்லாது இருப்பவள்.

மானியம் :- அரசர் தம் கீழ் வாழ்பவருக்குச் சன்மானமாக வழங்கும் நிலம்

வரகவி :- இறையருள் பெற்று எடுத்த எடுப்பிலே கவிதைபாடும் ஆற்றலுடையவன்.

வள்ளல் :- யாவருக்கும் வரையறாது வாரி வழங்கும் தன்மை உள்ளவர்.

தலைப்பாகை :- தலையை மூடித்தரித்துக் கொள்வதற்காகத் துணியினால் செய்யப்பட்ட விசேட அணி.

மருத்து நீர் :- தாளம்பூ, தாமரைப்பூ, துளசி முதலிய சில பூக்களையும் வேறு சில பொருட்களையும் இட்டுக்காய்ச்சிய நீர்.

அட்டவதானி :- எட்டு விடயங்களை ஒரே நேரத்தில் அவதானிக்கும் வல்லமை படைத்தோன்.

உலோபி :- பொருளைத்தேடி எவர்க்கும் ஈயாது வைத்திருப்பவன்.

ஏகபோகம் :- முழுப்பொருளையும் தனக்கே உரிமை என எண்ணி அனுபவித்தல்.

கட்டியம் :- அரசர் முதலானோர் எழுந்தருளும் போது அவர்களது சிறப்பு, வெற்றி முதலியவற்றை எடுத்துக் கூறுதல்.

கானல்நீர் :- கடும் வெயிற் காலத்தே வெளிகளில் நீர் ஓடுவது போல தெரியும் ஒரு வகைத் தோற்றம்.

சினம் :- கோபத்தின் பின் சிறிய பொழுது நிற்பது

தலைமுறை :- ஒருவர் தோன்றி மறையும் வரையுள்ள காலம்

தாலாட்டு :- குழந்தையை உறங்கச் செய்ய அன்னை முதலியோர் பாடும் பாட்டு.

திணைக்களம் :- ஒரு துறைப்பட்ட வேலைத்தொகுதிகள் நடைபெறும் இடம்

மஞ்சரி :- மலர்ந்துள்ள பூங்கொத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*முற்றுகை* :– ஒரு நாட்டைப் படை கொண்டு நாற்புறமும் சூழ்ந்து நின்று உணவு முதலிய ஒன்றும் கிடைக்காதவாறு தடுத்து நிற்றல்.

*வெள்ளோட்டம்* :– புதிதாக அமைத்த கப்பல், தேர் முதலியவற்றை முதன் முதலாகச் செலுத்திப் பார்த்தல்.

*வடக்கிருத்தல்* :– உயிர் துறக்கும் எண்ணத்துடன் வடதிசை நோக்கி உண்ணாதிருத்தல்.

*குத்தகை* :– பயிர்ச்செய்கைக்குப் பெற்ற நிலத்துக்காக நிலச் சொந்தக்காரனுக்குக் கொடுப்பது.

*சுங்கம்* :– துறைமுகங்களில் ஏற்றுமதி செய்யும் பண்டங்களின் மீது விதிக்கப்படுவது.

*இலக்கணப்போலி* :– இலக்கணம் இல்லாததாயினும் இலக்கணம் உடையது போலச் சான்றோரால் தொன்றுதொட்டு வழங்கப்படுவது.

*ஆதீனம்* :– சமயப்பணி புரியும் இடம்

*கருத்தரங்கு* :– ஒரு பொருளைப் பற்றி பலர் கருத்துத் தெரிவிக்க ஒழுங்கு செய்யப்படும் இடம்.

*காணிக்கை* :– கடவுளுக்கேனும், பெரியோர்களுக்கேனும் சமர்ப்பிக்கப் படும் பொருள்

# நிறுத்தற் குறியீடுகள்

வாக்கியங்களை, பந்தியை இலகுவில் விளங்கிக் கொள்ளவும் விளக்கவும் நிறுத்தற் குறியீடுகள் பயன்படுகின்றன.

*நிறுத்தற் குறியீடுகள்*

| | |
|---|---|
| வினாக்குறி / வினாவிசைக்குறி | ? |
| வியப்புக்குறி / மெய்ப்பாட்டுக் குறி | ! |
| காற்புள்ளி / உறுப்பிசைக் குறி | , |
| முக்காற்புள்ளி / விளக்கிசைக் குறி | : |
| அரைப்புள்ளி / தொடரிசைக் குறி | ; |
| சிறுகோடு / விட்டிசைக் குறி | - |
| அடைப்புக்குறி | ( ) |
| முற்றுப்புள்ளி | . |
| மேற்கோள் குறி | " " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்தற் குறியீடுகள் வாக்கியங்களில் பிரயோகிக்கப்படுவதை பின்வருமாறு நோக்கலாம்.

❖ வினாவாக்கியங்களுக்குப் பயன்படுவது வினாக்குறி

உதாரணம்: நந்தினி பாடசாலை சென்றாளா?

உனது பெற்றோரின் பெயர் என்ன?

❖ வியப்புக்குறியானது உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் குறியீடு! இதனை வாக்கியங்களில் பிரயோகிப்பதால் எமது உடம்பின் (மெய்) உணர்ச்சி வெளிப்பாடுகளை தெரிவிக்கலாம்.

வியப்பு, துன்பம், விருப்பம், உற்சாகம், துக்கம், போன்றவற்றை வெளிப்படுத்தி நிற்கும்.

*உதாரணம்* :- பெரியோர்களே! வணக்கம் !

ஆகா! நாட்டில் மக்கள் மகிழ்ச்சியாக வாழ்கின்றார்கள்!

❖ காற்புள்ளியை பின்வரும் சந்தர்ப்பங்களில் பயன்படுத்திக் கொள்கிறோம்.

☆ புலி, யானை, சிங்கம், மான் போன்ற விலங்குகள் வனங்களில் வசிக்கின்றன.

இங்கு சொற்களைப் பிரித்துக் காட்டுவதற்கு இக்குறியீடு பிரயோகிக்கப்பட்டுள்ளது.

☆ மரங்களைக் குறிப்பாக, பயன்தரு மரங்களை வளர்ப்போம்.

இவ்வாக்கியத்தில் தொகுதியாகக் குறிப்பிட்டு அதனை மேலும் தெளிவாக குறிப்பிட்டுச் சொல்வதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

☆ கீரி, பாம்பைக் கடித்ததை அவள் தாமதித்தே அறிந்து கொண்டாள்.

பொருள் மயக்கங்களை தெளிவுபடுத்துவதற்கு இங்கு பயன் படுத்தப்படுகின்றது.

☆ மூட்டைப் பூச்சி பயணியிடம், "நல்லா இருக்கே எல்லார் உடம்பிலும் இரத்தம் தான் ஓடுது" என்று கூறியது.

கூற்று வாக்கியத்திலிருந்து ஏனைய வாக்கியத்தை வேறுபடுத்திக் காட்டப் பயன்படுகின்றது.

☆ மதிப்புக்குரிய ஆசிரியைக்கு,

இங்கு ஒருவரை அல்லது ஒரு பொருளை விளித்துக் கூறு வதற்கு அந்தப் பெயரை அடுத்துக் காற்புள்ளி பயன்படுகிறது.

☆ இல 15, முதலாம் குறுக்குத்தெரு,வெள்ளவத்தை, கொழும்பு-6.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு முகவரி ஒன்றினை எழுதுவதற்கு காற்புள்ளி உபயோகிக்கப் பட்டுள்ளது.

☆ 1948, மாசி, 04ஆம் திகதி இலங்கை சுதந்திரம் அடைந்தது.

இங்கு ஆண்டு, மாதம், திகதி என்பவற்றைக் காட்டுவதற்கு பயன்படுகின்றது.

☆ இப்படிக்கு,

உண்மையுள்ள,

சாருஜா.

இங்கு கடிதம் ஒன்றின் முடிப்புத் தொடருக்குப் பின் காற்புள்ளி இடப்பட்டுள்ளது.

❖ முக்காற்புள்ளி பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

☆ தமிழ்மொழி தொன்மையான மொழி : உலகிலுள்ள தொன்மை யான மொழிகளில் தமிழ்மொழியும் ஒன்றாகும்.

இங்கு பிரதான கூற்றினை விளக்கி இன்னொரு கூற்று அமைந் துள்ளது. பிரதான கூற்றின்பின் இக்குறியீடு பயன்படுத்தப்பட் டுள்ளது.

☆ உயிர்க்குறில் எழுத்துக்களாவன : அ, இ, உ, எ, ஒ இங்கு ஒரு பட்டியலை அறிவிப்பதற்குப் பயன்படுகிறது. உதாரணமாக வருமாறு, பின்வருமாறு என்பவற்றுக்குப் பின் இப்புள்ளி இடப்படும்.

உயிர்நெடில் எழுத்துக்களாவன : ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ

❖ அரைப்புள்ளியானது ஒரே தன்மையுடைய பல உட்றொடர்களை இணைக்கப் பயன்படுகின்றது.

அது யானை; தன் தந்தங்களால் பள்ளத்தின் ஒரு பக்கத்தை இடித்துத் தகர்க்கும் மண் சரிந்து விழுந்த பின்; அந்த வழியே மலைச் சரிவில் ஏறிப்போவது போல ஏறி வெளியே வந்துவிடும்.

❖ விட்டிசைக்குறி (-)

☆ சார் பார்த்த கள்ளனடா - செல்லன்

தாய் வார்த்தை கேளண்டா

சில செய்யுள்களில் விட்டிசைக் குறி இடப்படும்.

☆ உ-ம்

சொற்களைச் சுருக்கி எழுதுவதற்கு இடப்படும்.

☆ ஆரம்பப் பிரிவு, இடைநிலைப்பிரிவு, உயர்தரப்பிரிவு அனைத்தை -யும் அந்தப் பாடசாலை உள்ளடக்கியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு வெவ்வேறுபட்ட பொருள்களைத் தொகுத்துக் கூறுவதற்கு விட்டிசைக்குறி பயன்படுகின்றது.

❖ அடைப்புக்குறி ( )

☆ வல்லின மெய் (க், ச், ட், த், ப், ற்) எழுத்துக்களின் இன எழுத்துக்கள் மெல்லின மெய்கள் (ஞ், ங்,ண், ந், ம், ன்) ஆகும்.

அடைப்புக் குறியானது விளக்கம், வரைவிலக்கணம், சான்றாதாரம், மொழிபெயர்ப்புச் சொற்களைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும்.

☆ (அது பகல் நேரம் தான். வெயில் ஒளிமயமாய்ப் படிந்து கிடந்தது) மலைப்பகுதிகள், மரங்கள் உயர் வானம் எல்லாம் பளீரெனப் பிரகாசித்தன.

இடைச் செருகல்கள், குறிப்புரைகளை வைக்கும் பகுதிகளை வேறுபடுத்திக் காட்டுவதற்கு அடைப்புக்குறி பயன்படும்.

❖ முற்றுப்புள்ளி (.)

☆ முற்றுப்புள்ளியானது கூற்றுவாக்கியம், வியங்கோள் வாக்கியம், ஏவல் வாக்கியம் என்பவற்றின் நிறைவில் இடப்படும்.

☆ வாக்கியம் நிறைவு பெற்றதை வெளிப்படுத்தும் குறியீடாகும்.

☆ கடித முகவரியின் இறுதியிலும் இது இடப்படும்.

☆ முற்றுத்தரிப்பு, முடிப்பிசைக் குறி எனவும் இது அழைக்கப்படும்

உ-ம் :- இல-19, பிரதான வீதி,யாழ்ப்பாணம்.

❖ மேற்கோட்குறி ("..................")

☆ ஒருவருடைய கூற்றை உள்ளவாறே மேற்கொண்டு எழுதும் போது மேற்கோட்குறி பயன்படும்.

உ-ம் : "இராமா ! நீ காட்டை ஆள்: உன் தம்பி பரதன் நாட்டை ஆளட்டும். இது உன் தந்தையின் விருப்பம்" என கைகேயி எடுத்துரைத்தாள்.

இங்கு கைகேயியின் கூற்று மேற்கோட்குறிக்குள் இடம்பெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழுச்சொற்களும் அவற்றுக்குரிய திருத்தமும்

| பிழை | | திருத்தம் | பிழை | | திருத்தம் |
|---|---|---|---|---|---|
| அருவாள் | - | அரிவாள் | அவுங்க | - | அவர்கள் |
| அவனோட | - | அவனுடன் | அடமழை | - | அடைமழை |
| அப்ப | - | அப்பொழுது | மாத்து | - | மாற்று |
| சேதி | - | செய்தி | கொரவு | - | குறைவு |
| ஒலை | - | உலை | மம்புட்டி | - | மண்வெட்டி |
| சுடுதண்ணி | - | வெந்நீர் | தாப்பாள் | - | தாழ்வாரம் |
| கைமாத்து | - | கைமாற்று | எங்கனம் | - | எங்ஙனம் |
| பைத்தங்காய் | - | பயிற்றங்காய் | சீயாக்காய் | - | சிகைக்காய் |
| உக்காந்தான் | - | உட்கார்ந்தான் | எரக்கம் | - | இரக்கம் |
| புடவை | - | பிடவை | சிலவு | - | செலவு |
| கத்திரிக்கோல் | - | கத்தரிக்கோல் | ஈக்கு | - | ஈர்க்கு |
| பாச்சல் | - | பாய்ச்சல் | சமயல் | - | சமையல் |
| கழட்டு | - | கழற்று | ஆத்தங்கரை | - | ஆற்றங்கரை |
| இருக்குது | - | இருக்கின்றது | பனமரம் | - | பனைமரம் |
| கோத்து | - | கோர்த்து | சதை | - | தசை |
| கடக்கரை | - | கடற்கரை | இறைசி | - | இறைச்சி |
| ஒத்தடம் | - | ஒற்றடம் | ஆளுங்க | - | ஆட்கள் |
| கெழவி | - | கிழவி | ஒம்பது | - | ஒன்பது |
| ஆம்பிளை | - | ஆண்பிள்ளை | அமக்களம் | - | அமர்க்களம் |
| எடஞ்சல் | - | இடைஞ்சல் | எலை | - | இலை |
| அருமந்த | - | அருமருந்தன்ன | | | |

## பேச்சு மொழியும் நியம மொழியும்

| | | |
|---|---|---|
| அங்க | - | அங்கே |
| அசிங்கம் | - | அழகின்மை |
| அடுப்படி | - | சமையலறை |
| அப்பேக்க | - | அப்போது |
| ஆம்புள | - | ஆண் |
| இங்க | - | இங்கே |
| இன்னம் | - | மேலதிகமாக |
| இரவைக்கு | - | இரவிற்கு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| இருப்பினம் | - | இருப்பார்கள் |
| உடுப்பு | - | ஆடை |
| எதால | - | எதனால், எந்த இடத்தால் |
| கரச்சல் | - | கஷ்டம் , தொல்லை |
| காணாது | - | போதாது |
| காதுக்குச்சி | - | காதணி |
| கூதல் | - | குளிர் |
| கோடி | - | வீட்டின் பின்புறம் |
| சொக்க | - | கன்னம் |
| தேத்தண்ணி | - | தேநீர் |
| நீத்துப்பெட்டி | - | புட்டு அவிப்பதற்காக பனை ஓலையால் செய்யப்பட்ட ஒரு உபகரணம். |
| நேத்து | - | நேற்று |
| பேசுதல் | - | ஏசுதல் |
| மத்தியானம் | - | மதிய நேரம் |
| முசுப்பாத்தி | - | கேளிக்கை |
| மூஞ்சி | - | முகம் |
| வேர்வ | - | வியர்வை |
| அம்புட்டு | - | அவ்வளவு |
| உட்டு | - | விட்டு |
| என்னத்துக்கு | - | எதற்கு |
| ஏலுமோ | - | இயலுமா? |
| காணாது | - | போதாது |
| கெனா | - | கனவு |
| நாத்து | - | நாற்று |
| நாத்தம் | - | நாற்றம் |
| நோ | - | வலி |
| புறுபுறுத்தல் | - | மனதிற்குள் ஏசுதல் |
| போயில | - | புகையிலை |
| மறுகா, மறுக | - | திரும்பத்திரும்ப |
| மறுவா | - | மீண்டும் |
| வட்டா | - | திருமண அன்பளிப்பு |
| வெக்கை | - | வியர்வை |
| வெலத்து | - | விலகு |

Class No: 894.811
Acc No 341

...ady Public Library
Municipal Council
Batticaloa.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| வைக்கல் | - | வைக்கோல் |
| அல்பனாத்தி | - | குண்டுசி |
| கடையப்பம் | - | காலை உணவு |
| கிச்சடி | - | பொங்கற் சோறு |
| கொசு | - | நுளம்பு |
| முசுப்பு | - | சோம்பல் |
| ராவு | - | இரவு |
| ஆப்ப | - | அகப்பை |
| எரிச்சல் | - | குழப்பம் |
| ஒருத்தருமில்லை | - | ஒருவருமில்லை |
| கரத்தை | - | மாட்டுவண்டி |
| ஒசக்க | - | மேலே |
| பொடவ | - | சேலை |
| ராங்கி | - | அகங்காரம் |
| லயன் | - | அடுக்கடுக்கான வீட்டுத்தொடர் |

# திசைச் சொற்கள்

## போர்த்துக்கேய மொழிச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| அலவாங்கு | அலுப்புநேத்தி | அலுமாரி | அன்னாசி |
| ஆயா | ஏலம் | கடுதாசி | கதிரை |
| கிறாதி | கொறடா | கோப்பை | சப்பாத்து |
| சாவி | தவறணை | துப்பாக்கி | நங்கூரம் |
| பாதிரி | பீங்கான் | பீப்பாய் | மேசை |
| மேத்திரி | யன்னல் | வாங்கு | விறாந்தை |

## ஒல்லாந்த மொழிச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| இலாச்சி | கேத்தல் | தொலுங்கு | உலாந்தை |
| சக்கடத்தார் | தோம்பு | கக்கூசு | சாக்கு |
| நொத்தாரிசு | கந்தோர் | துட்டு | பிசுக்கால் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரெஞ்சு மொழிச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| இலாந்தர் | குசினி | துருப்பு | பட்டாளம் |

## அரபு மொழிச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| இலாகா | சைத்தான் | தகவல் | வசூல் |

## தெலுங்கு மொழிச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| விருது | கலப்படம் | இடாப்பு | கொலு |
| கொலுசு | சந்தடி | சலவை | ரவிக்கை |
| ராணுவம் | கம்மல் | | |

## மராட்டி மொழிச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| அட்டவணை | குண்டான் | சாவடி | வில்லங்கம் |
| அபாண்டம் | சாம்பார் | பட்டாணி | |

## ஆங்கில மொழிச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| ஆப்பில் | ஆர்மோனியம் | கோப்பி | பென்சில் |
| இஞ்சினியர் | சவரன் | பொலிஸ் | இறப்பர் |
| சீமெந்து | சைக்கிள் | உயில் | சினிமா |
| மைனர் | ஏக்கர் | தார் | மோட்டார் |
| கொக்கோ | நோட்டு | விசுக்கோத்து | யார் (அளவை) |

## பாரசீக மொழிச் சொற்கள்.

| | | | |
|---|---|---|---|
| சபாசு | சர்க்கார் | சிப்பந்தி | சமுக்காளம் |
| சால்வை | சுமார் | துப்பாக்கி | முலாம் |

## இந்துஸ்தானி மொழிச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| ஆசாமி | பேட்டி | பாக்கி | சொக்காய் |
| தாசில் | மகஜர் | உசார் | தாலுகா |
| மஹால் | கறார் | பஞ்சாயத்து | மகூதி |
| கசானா | பயில்வான் | மசோதா | சிபாரிசு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்த்திரிப்பெட்டி

### சிங்கள மொழிச் சொற்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| தோடை | வற்றாளை | முருங்கை | சல்லி | புட்டுவம் |

### பாளி மொழிச் சொற்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| ஆணை | துக்கம் | விகாரை | உபாசகர் | தூபி |
| வேதிகை | சதுக்கம் | நட்டம் | சமணம் | பிக்கு |
| சீலம் | பிக்குணி | சேதியம் | போதி | |

### உருது மொழிச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| உண்டியல் | ரத்து | கப்பி | மாஜி |
| சந்தா | மனு | சாமான் | மசோதா |
| கெடுபிடி | பாக்கி | உறுமால் | ஆசாமி |
| அசல் | அமுல் | கச்சேரி | பல்லக்கு |
| பேட்டி | வக்கீல் | | |

## கலைச் சொற்கள்

Application - விண்ணப்பப் படிவம்
Academic Year - கல்வியாண்டு
Agency - முகவர்
Budget - பாதீடு
Blog - வலைப்பதிவு
Capacity - உலாவுதல்
Citizen ship - பிரஜாவுரிமை
Communication - தொடர்பாடல்
Calculator - கணிப்பான் / கணிகருவி
Compact Disk (CD) - இறுவட்டு
Census - தொகை மதிப்பு
Click - சொடுக்கு
Download - பதிவிறக்கம்
Digital - எண்மானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Department | - திணைக்களம் |
| Encyclopedia | - கலைக்களஞ்சியம் |
| E-mail | - மின்னஞ்சல் |
| Electronic | - இலத்திரனியல் |
| Envelope | - கடித உறை |
| E-Library | - இலத்திரனியல் நூலகம் |
| Floppy | - நெகிழ் தட்டு |
| Fax | - தொலைநகல் |
| Feed back | - பின்னூட்டல் |
| Globalization | - பூகோள மயமாக்கல் |
| Hardware | - வன்பொருள் |
| Icon | - உருவச் சின்னம் / படவுரு |
| Internet | - இணையம் |
| Interview | - நேர்முகம் |
| Interest | - ஆர்வம் |
| Insert | - உட்செலுத்து / செருகு |
| Install | - நிறுவு |
| Key board | - விசைப்பலகை |
| Keypad | - விசைத்தளம் |
| Letter | - கடிதம் |
| Light pen | - எழுதுகோல் |
| Log in | - புகுபதி / உட்புகு |
| Log out | - விடுபதி / வெளியேறு |
| Monitoring | - கண்காணித்தல் |
| Media | - ஊடகம் |
| Multi Media | - பல்லூடகம் |
| Mass Media | - வெகுஜன ஊடகம் |
| Message | - தகவல் |
| Magnetic Disk | - காந்தவட்டு |
| News | - செய்தி |
| Online | - இணைப்பில் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Paste - ஒட்டுதல்
Printer - அச்சுப்பொறி
Photo Copy - நிழற்பிரதி
Passport - கடவுச் சீட்டு
Password - கடவுச் சொல்
Ram - தற்காலிக நினைவகம்
Seminar - கருத்தரங்கு
Species - இனம்
Sign in - புகுபதிகை
Sign off - விடுபதிகை
Sign out - வெளியேறு
Shutdown - அணை / மூடு
Scanner - வருடு பொறி
Software - மென்பொருள்
Search - தேடல்
Save - சேமிப்பு
Telex - பெயர்த்தஞ்சல்
Telegram - தந்தி
User - பயனர்
Virus - நச்சுநிரல்
Video - காணொளி
Vibrator - அதிரி
Vote - வாக்கு
www (Word Wide Web)- வையக விரிவு வலை
Website - வலைத்தளம்
Wireless - கம்பியில்லா
Window - சாளரம்

## சுருக்கக் குறியீடுகளும் அவற்றுக்கான விரிவும்

*இ.ம.வ* – இலங்கை மத்திய வங்கி
*கி.மு* – கிறிஸ்துவுக்கு முன்
*கி.பி* – கிறிஸ்துவுக்குப் பின்
*மு.ப* – முற்பகல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பி.ப | – | பிற்பகல் |
| இ.போ.ச | – | இலங்கை போக்குவரத்துச் சபை |
| ம.ப.பா | – | மறுபக்கம் பார்க்க |
| கூ.மொ.வி.நி | – | கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் |
| இ.ஒ.கூ | – | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் |
| க.பொ.த | – | கல்விப் பொதுத் தராதரம் |
| தே.க.நி | – | தேசிய கல்வி நிறுவகம் |
| அ.ப | – | அரச பணி |
| பி.கு | – | பிற்குறிப்பு |
| வெ.நோ.பி | – | வெளிநோயாளர் பிரிவு |
| இ.கா.கூ | – | இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் |
| இ.மி.ச | – | இலங்கை மின்சார சபை |
| பா.அ.ச | – | பாடசாலை அபிவிருத்திச் சங்கம் |
| பா.ம.க | – | பாடசாலை மட்டக் கணிப்பீடு |
| ப.நோ.கூ.ச | – | பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் |
| வ.கி.மா | – | வடக்குக் கிழக்கு மாகாணம் |
| தே.அ.அ | – | தேசிய அடையாள அட்டை |
| ப.த | – | பதிவுத் தபால் |
| இ.பெ.கூ | – | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் |
| இ.ரூ.கூ | – | இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாபனம் |
| இ.பு.தி | – | இலங்கைப் புகையிரத திணைக்களம் |
| அ.சே | – | அரச சேவை |
| த.பெ.இ | – | தபாற் பெட்டி இலக்கம் |
| கூ.மொ.வி.நி | – | கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் |
| கி.சே.பி | – | கிராம சேவையாளர் பிரிவு |
| பி.செ.பி | – | பிரதேச செயலாளர் பிரிவு |
| பா.அ.ச | – | பாடசாலை அபிவிருத்திச் சங்கம் |
| கி.அ.ச | – | கிராம அபிவிருத்திச் சங்கம் |
| ந.ச | – | நகர சபை |
| மா.ந.ச | – | மாநகர சபை |
| வீ.அ.அ.ச | – | வீதி அபிவிருத்தி அதிகார சபை |
| பா.உ | – | பாராளுமன்ற உறுப்பினர் |
| இ.அ.தி | – | இலங்கை அபிவிருத்தி அதிகார சபை |
| இ.அ.த.நி | – | இலங்கை அரச தகவல் திணைக்களம் |

## ஆண்டு நிறைவு விழாக்கள்

1st வருடம் - காகித விழா

2nd வருடம் - பருத்தி விழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| $3^{வது}$ வருடம் | - | தோல் விழா |
| $4^{வது}$ வருடம் | - | பூ. படி விழா |
| $5^{வது}$ வருடம் | - | மா விழா |
| $6^{வது}$ வருடம் | - | இரும்பு விழா |
| $7^{வது}$ வருடம் | - | செம்பு விழா |
| $8^{வது}$ வருடம் | - | வெண்கல விழா |
| $9^{வது}$ வருடம் | - | மண்கலச விழா |
| $10^{வது}$ வருடம் | - | தகர விழா |
| $11^{வது}$ வருடம் | - | எஃகு விழா |
| $12^{வது}$ வருடம் | - | லினன் விழா |
| $13^{வது}$ வருடம் | - | பின்னல் விழா |
| $14^{வது}$ வருடம் | - | தந்த விழா |
| $15^{வது}$ வருடம் | - | படிக விழா |
| $20^{வது}$ வருடம் | - | பீங்கான் விழா |
| $25^{வது}$ வருடம் | - | வெள்ளி விழா |
| $30^{வது}$ வருடம் | - | முத்து விழா |
| $40^{வது}$ வருடம் | - | மாணிக்க விழா |
| $45^{வது}$ வருடம் | - | இரத்தின விழா |
| $50^{வது}$ வருடம் | - | பொன் விழா |
| $55^{வது}$ வருடம் | - | மரகத விழா |
| $60^{வது}$ வருடம் | - | வைர விழா, மணி விழா |
| $75^{வது}$ வருடம் | - | பவள விழா |
| $80^{வது}$ வருடம் | - | அமுத விழா |
| $100^{வது}$ வருடம் | - | நூற்றாண்டு விழா |

# பழமொழிகள்

| | |
|---|---|
| அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் | ***விடாமுயற்சி*** |
| அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு | ***ஒற்றுமையே பலம்*** |
| அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம் | ***உண்மையான நட்பு*** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஆனைக்கொருகாலம் பூனைக்கொருகாலம் | *காலம் மாறிமாறி வரும்* |
| இட்டுக் கெட்டார் எங்குமில்லை | *தர்மம் செய்தல் சிறந்தது* |
| இளமையிற் கல்வி சிலையில் எழுத்து | *இளமையின் சிறப்பு* |
| எய்தவன் இருக்க அம்பை நோவான் ஏன்? | *தப்பபிப்பிராயம்* |
| ஒரு கை தட்டினால் ஓசை உண்டாகுமா | *கூட்டு முயற்சி* |
| கந்தையானாலும் கசக்கிக் கட்டு | *வறுமையிற் செம்மை* |
| கரும்பு தின்னக் கைக் கூலியா | *நல்லதை விரும்புவர்* |
| அவனின்றி அணுவும் அசையாது | *இறைவன் வல்லமை* |
| அற்ப ஆசை கோடி தரித்திரம் | *தகாத ஆசை* |
| ஆறிலும் சாவு நூறிலும் சாவு | *மரணத்திற்குக் காலம் இல்லை* |
| இரக்கப் போனாலும் சிறக்கப் போ | *வறுமையிலும் செம்மை* |
| உப்பிட்டவரை உள்ளளவும் நினை | *நன்றி மறவேல்* |
| குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர் | *வீண்பெருமை கொள்ளல்* |
| குப்பையிற் கிடந்தாலும் குன்றுமணி மங்காது | *புகழ் மங்காது* |
| கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை | *பேராசை* |
| கெடுவான் கேடு நினைப்பான் | *அழிவு அழிவைத் தேடும்* |
| கோவிற் பூனை தேவரை மதியாது | *பழக்கத்தின் புளிப்பு* |
| தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் | *பிழையான பிடிவாதம்* |
| சிறுதுரும்பும் பல் குத்த உதவும் | *சிறுபொருளையும் பேண வேண்டும்* |
| ஆழ அமுக்கினாலும் நாழி முகவாது | *கொள்ளக் கூடிய அளவே கொள்ளும்* |
| உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும் | *உலோபம் கூடாது அது வீணாகும்* |
| சாணேற முழம் சறுக்கும் | *உயர்ச்சியை மிஞ்சிய தளர்ச்சி* |
| ஆனைக்கும் அடி சறுக்கும் | *பெரியோரும் தவறுவிடுவர்* |

கண்கெட்டபின் சூரிய நமஸ்காரமா?
*காலம் தவறிய பின் எதையும் செய்தல் கூடாது*

கேள்விச் செவியன் ஊரைக் கெடுத்தான்
*பிறர் பேச்சைக் கேட்பவனால் தீமையே விளையும்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்காத கடனும் பார்க்காத பயிரும் பாழ்
*நம்மையின்றி நம்மொருக்க பாதுகாப்பானவர் இல்லை*

சாகத்துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்கால் மட்டும்
*துணிவின் முன் யாவும் தூசும்பு*

சுண்டைக்காய் காற்பணம் சுமை கூலி முக்காற் பணம்
*கூடிய முயற்சியிற் குறைந்த பயன்*

சுவர் இருந்தாற்தான் சித்திரம் வரையலாம்
*உயிரைப் பேண உடலைப் பேணுதல் வேண்டும்*

சூடுகண்ட பூனை அடுப்பங்கரை நாடாது
*அனுபவ அறிவு ஆபத்து வராமல் தடுக்கும்*

திக்கற்றவனுக்குத் தெய்வமே துணையாவான்
*யாருமற்றவனுக்குக் கடவுளே துணையாவான்*

துள்ளுகிற மாடு பொதி சுமக்கும்
*செருக்குடன் நடப்போர் துன்பமடைவார்*

ஆடமாட்டாதவள் அரங்கு பிழையென்றாளாம்
*விடயப் புலமையின்றி வேறொன்றைக் குறை கூறல்*

உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?
*தகுதிக்கு மேல் எண்ணக்கூடாது*

உறியில் வெண்ணெய் இருக்க ஊரெல்லாம் நெய்க்கு அலைவான் ஏன்?
*தன்னிடமிருக்க பிறரிடம் நாடல் கூடாது*

உடையவன் பாரா வேலை ஒரு முழம் கட்டை
*உரியவன் இல்லாக் கருமம் குறைப்படுதல்*

ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்
*ஒற்றுமையின்மை*

ஊசி போகுமிடம் பார்ப்பார் உலக்கை போகுமிடம் பாரார்
*சிறு விடயங்களில் கவனமும் பெரிய விடயங்களில் கவனயீனமும்*
அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
*ஒருவனது மனவுணர்வு அவனது முகத்தில் தெரியும்*

அகத்தி ஆயிரம் காய் காய்த்தாலும் புறத்தி புறத்தியே - ***பயனற்றது***

கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னமாகுமா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தகுதிக்கு மேல் பண்ணுதல்*

ஐந்து பணத்திற்கு குதிரையும் வேண்டும் ஆறு கடக்கப் பாயவும் வேண்டும்
*பேராசை*

எச்சில் கையால் காக்கை ஓட்டாதவன் பிச்சை கொடுப்பானா? - *உலோபி*

அரசன் அன்று கொல்லும் தெய்வம் நின்று கொல்லும் - ***இறைவன் இரக்கம்***

அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்
*உண்மையான நண்பனின் செயலை ஆபத்து வேளையில் அறியலாம்*

அரைக்காசுக்கு அழிந்த கற்பு ஆயிரம் பொன் கொடுத்தாலும் வராது
*கற்பின் பெருமை*

உலைவாயை மூடலாம் ஊர்வாயை மூட முடியாது
*பலரும் அறிந்த விடயத்தை மறைத்தல் இயலாது*

இரவற் சீலையை நம்பி இடுப்பிற் கந்தையை எறியாதே
*பிறரை நம்பி உனது உடமையைக் கை விடாதே*

ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது
*அனுபவம் இல்லாத கல்வி பயன்தராது*

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
*சிறுவயதுப் பழக்கம் பெரிதானாலும் திருத்த முடியாது*

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்
*ஒருவனது இயல்பை அவனது செயலே உயர்த்தி விடும்*

தேள் நெருப்பில் விழுந்தால் எடுத்து விட்டவனுக்கே கொட்டும்
*உதவி செய்தவருக்கு தீங்கிழைத்தல்*

சேற்றில் கிடந்த யானையை காகமும் கொத்தும்
*தன்னிலையிலிருந்து நீங்குதல் கூடாது*

போனது போகட்டும் புத்திக்குக் கொள்முதல்
*அழிவிலிருந்து அனுபவம் பெறுதல்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுகதைகள்

1. ஐந்து வீட்டிற்கு ஒரு முற்றம், அது என்ன?

2. வெட்டவெட்டத் தளைக்கும் அது என்ன?

3. நீரிலே கொண்டாட்டம் நிலத்திலே திண்டாட்டம் அது என்ன?

4. ஒழுங்கான நீதி வழங்கும் உயிரில்லா நீதிபதி அது என்ன?

5. தலையில் கிரீடம் வைத்த தங்கப்பழம் அது என்ன?

6. நான் உணவாக எதையும் உண்பேன் ஆனால் நீரைக் குடித்தால் இறந்து விடுவேன் நான் யார்?

7. வாயிலிருந்து நூல் போடுவான். மந்திரவாதியும் இல்லை. கிளைக்குக் கிளை தாவுவான் குரங்கும் இல்லை. வலைவிரித்துப் பதுங்கியிருப்பான் வேடனும் இல்லை அவர் யார்?

8. பச்சைப் பெட்டிக்குள் வெள்ளை முத்துக்கள் அது என்ன?

9. வெள்ளை ஆடை உடுத்திய மஞ்சள் மகாராணி அது என்ன?

10. உடம்பெல்லாம் பல். ஆனால் கடிக்காது அது என்ன?

11. காதைத் திருகினால் தகவல்களைக் கூறும் அது என்ன?

12. செய்திவரும் பின்னே மணியோசை வரும் முன்னே அது என்ன?

13. இடிஇடிக்கும் மின்னல் மின்னும் மழை பெய்யாது அது என்ன?

14. அரைச்சாண் ராணிக்கு வயிற்றில் ஆயிரம் முத்துக்கள் அது என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15.பாலாற்றின் நடுவே கறுப்பு மீன் தெரியுது அது என்ன?

16. கையில்லாமல் நீந்துவான் கால் இல்லாமல் ஓடுவான் அவன் யார்?

17. தூங்கும் அறை தேடுவார். சங்கீதம் பாடுவார். ஊசி போடுவார் அது என்ன?

18. கூட்டுக்குள் குடியிருக்கும் அது குருவி அல்ல. கொலை செய்யும், பாயும் ஆனால் வீரனுமல்ல அது என்ன?

19. ஆயிரம்பேர் அணிவகுத்தாலும் ஆரவாரம் செய்யமாட்டார்கள் அவர்கள் யார் அது யார்?

20. வட்ட வட்ட நிலவில் வரைந்திருக்கு. எழுத்திருக்கு அது என்ன?

21. சொன்ன நேரத்திற்குத் தொண்டைகிழிய அலறுவான் அது என்ன?

22. ஊர் சுற்றக் கூடவருவான் ஆனால் வீட்டுக்குள்ளே வரமாட்டான். அவன் யார்?

23. கீழே ஊற்றிய தண்ணீர் மேலே தொங்கி இனிக்குது அது என்ன?

24. மூவராய்ச் சேர்வார்கள் சிவப்பு வர்ணம் தருவார்கள். அவர்கள் யார்?

25. பச்சை வீட்டுக்கு சிவப்பு வாசல் அது என்ன?

26. நீல வண்ண வயலிலே பருத்திப் பஞ்சு படருது அது என்ன?

27. தன்னை உருக்கி ஒளி கொடுப்பவன் அது என்ன?

28. கல் எறிந்தால் போதும் அரண்மனையே காலியாகிவிடும். அது என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. மரக்கிளையில் தறியோட்டும் சின்னப்பெண் நான் யார்?

30. மழையைக் கண்டால் பூமி விரிக்கும் குடையாம் அது என்ன?

31. காம்பு இல்லாத வட்ட இலை அது என்ன?

32. நீல நிறப் புடவையில் மஞ்சள் நிறப் பொத்தான்கள் அது என்ன?

33. தொப்பிபோட்ட காவல்காரன் உரசிவிட்டால் சாம்பலாவான் அவன் யார்?

34. பாட்டி வீட்டுத் தோட்டத்தில் தொங்குகின்ற பாம்புகள் அது என்ன?

35. தேய்ந்து போகும் தங்கத்தட்டம் அது என்ன?

36. காலையில் தோன்றி மாலையில் மறையும் மன்னன், அவன் யார்?

37. காய்ப்பார் பூப்பார் கலகலப்பார் காகம் இருக்கக் கொப்பில்லை அது என்ன?

38. வாலிபத்தில் நான் பச்சை நிறம் முதுமையில் மஞ்சள் நிறம் வீழ்ந்த பின் பழுப்பு நிறம் நான் யார்?

39. கூரை வீட்டைப் பிரித்தால் ஓட்டு வீடு, ஓட்டு வீட்டைப் பிரித்தால் நீர் நிறைந்த வெள்ளை மாளிகை அது என்ன?

40. பட்டை உண்டு கட்டை இல்லை, இலையுண்டு, கிளை இல்லை, பூ உண்டு விதையில்லை, கன்று உண்டு பசு இல்லை அது என்ன?

41. மூலையிலே இருப்பேன், முழு உலகும் சுற்றுவேன், நான் யார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. நாடு உண்டு நகரம் இல்லை, காடு உண்டு மிருகம் இல்லை, கடல் உண்டு மீன் இல்லை, அது என்ன?

43. கண்ணால் பார்க்கலாம் கையால் பிடிக்க முடியாது அது என்ன?

44. அண்ணன் தம்பி மூன்று பேர் ஒருவர் கடலில் மற்றவர் காட்டில் இன்னொருவர் வீட்டில் அவர்கள் யார்?

45. ஊரெல்லாம் சுற்றி உரியவரிடம் சேருவான் அவன் யார்?

46. எங்கும் பரந்திருக்கும் என்னை எவராலும் பிடிக்க முடியாது, நான் யார்?

47. பஞ்சைத்தின்று படுத்துக் கிடக்கும் அது என்ன?
48. மணியடித்தால் மலைப்பாம்பு நகரும் அது என்ன?

49. வெயிலில் மலந்து காற்றில் உலரும் பூ அது என்ன?

50. எட்டுக்கால் ஊன்றி இருகால் படமெடுக்க வட்டக்குடை பிடித்துவாறாராம் வன்னியனார் அவர் யார்?

51. பாடிப்பாடி அழைக்கும் தேடியாரும் செல்வதில்லை அது என்ன?

52. தண்ணீரில்லாத பொட்டலிலே தாவிச் செல்லும் கப்பல் எது?

53. மூன்று எழுத்தில் பெயர், வெள்ளை நிறம் அது என்ன?

54. அண்ணனின் தயவால் அழகாய் ஆட்சி புரியும் தம்பி அவன் யார்?

55. எமக்குச் சொந்தமானதை மற்றவர்களே அதிகம் பயன்படுத்துவார்கள் அது என்ன?

56. உடம்பெல்லாம் சி ப்பு அதன் குடுமி பச்சை அது என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

57. விரல் இல்லாத ஒரு கை. ஆனால் இது ஒருகுறையுமில்லை அது என்ன?

58. எத்தனை தரம் சுற்றினாலும் தலை சுற்றாது அது என்ன?

59. மதிப்போடு பேணப்படும் தாள் அது என்ன?

60. அரிவாளால் வெட்டி வெட்டி அடுப்பில் வைத்தாலும் கத்தாது அது என்ன?

61. கடல் நீரில் வளர்ந்து நன்னீரில் மடியும் அது என்ன?

62. பார்க்கத்தான் கறுப்பு உள்ளமோ சிவப்பு நமக்கு சுறுசுறுப்பு தரும் அது என்ன?

63. வெட்டிக் கொள்வான் ஆனாலும் ஒட்டிக்கொள்வான் அது என்ன?

64. உயர எறிந்தால் தரையில் விழுவான். தரையில் எறிந்தால் உயர எழுவான் அவன் யார்?

65. நான்கு கால்கள் உண்டு நடக்கத் தெரியாது நான் யார்?

66. உரிக்க உரிக்கத் தோல் அது என்ன?

67. இதயம் போல் துடிப்பிருக்கும் இரவு பகல் விழித்திருக்கும் அது என்ன?

68. தூய்மையானால் கறுப்பாவேன். அழுக்கானால் வெள்ளையாவேன் நான் யார்?

69. மழையில் நனைவேன் வெயிலில் காய்வேன் வெளியில் விரிவேன் வீட்டில் சுருங்குவேன் நான் யார்?

70. மேல் ஏறிச் செல்லும். விமானம் அல்ல. தண்ணீர் உண்டு குளமும் அல்ல. அது என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

71. விடிய விடியப் பூந்தோட்டம் விடிந்து பார்த்தால் வெறுந்தோட்டம் அது என்ன?

72. ஊசி போல் இருப்பான் ஊரையே எரிப்பான் அவன் யார்?

73. இரத்தத்தில் வளரும் ஆனால் இரத்தம் இல்லாதது அது என்ன?

74. குளம்படிச் சத்தக்காரன் போருக்குக் கெட்டிக்காரன் அவன் யார்?

75. பச்சையாய் விரிந்திருக்கும் பருவம் கழிந்தால் மணிகள் குவியும் அது என்ன?

76. நாக்கு இல்லாதவன் நல்லது சொல்வான்?

77. ஆவணி பிறப்பது எதனால்? நடனம் முடிவது எதனால்?

78. சிவப்புப் பெண்ணுக்கு முப்பத்திரண்டு காவலாளிகள் அது என்ன?

79. மூடாத தொட்டியிலே எடுக்க எடுக்கத் தண்ணீர் அது என்ன?
80. பிறப்புடன் வரும் இறப்புடன் நிற்கும் அது என்ன?

81. என்னைப் பார்த்தால் உன்னைக் காட்டுவேன் அது என்ன?

82. காட்டில் கிடைத்த கட்டை கானமழை பொழிகிறது அது என்ன?

83. கந்தல்துணி கட்டியவனுக்கு முத்துப் போன்ற பிள்ளைகள் அது என்ன?

84. வெள்ளை முத்துக்குக் கறுப்புக் கவசம் அது என்ன?

85. அடிமேல் அடி வாங்கி மற்றையோரை மகிழ்விக்கும் அது என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

86. ஒளி கொடுக்கும் விளக்கும் அல்ல, சூடு கொடுக்கும் தீயும் அல்ல, பளபளக்கும் தங்கமும் அல்ல, அது என்ன?

87. அடித்து நொறுக்கித் தணலில் போட்டால் ஆவியாகத் தோன்றி அழகாய் மணம் கொடுக்கும் அது என்ன?

88. மேலே மட்டும் போவேன் கீழே வரமாட்டேன் நான் யார்?

89. என் உடம்பு முழுவது காற்று ஆனாலும் நான் சுவாசிக்க மாட்டேன் நான் யார்?

90. இலை இல்லை, பூ இல்லை, கொடி உண்டு அது என்ன?

91. அதிவேகக் குதிரை ஆடியாடிச் செல்லும் குதிரை போட்ட கோட்டைத் தாண்டாமல் ஓடும் குதிரை அது என்ன?

92. அசையும் வீட்டிற்குக் கறுப்பு வேலி அது என்ன?

93. வலை பின்னும் ஆனால் மீன் பிடிக்கத் தெரியாது அது என்ன?

94. எங்கள் அம்மா போட்ட சிக்கலை எவராலும் பிரிக்க முடியாது அது என்ன?

95. வால் உள்ள பையன் காற்றில் பறக்கிறான் அவன் யார்?

96. ஒரே கிணற்றில் ஒரே தவளை அது என்ன?

97. முள்ளுள்ள கவசம் அதைத் தாண்டினால் இனிப்புக் கூடு அது என்ன?

98. கொத்துக் கொத்தாய் குட்டிப் பந்துகள் கொஞ்சம் இனிக்கும் கொஞ்சம் புளிக்கும் அது என்ன?

99. ஒற்றைக்காலால் சுற்றுபவனுக்கு அடிக்கடி மயக்கம் அது என்ன?

100. தொட்டால் நமக்கு நடுக்கம் தரும், சூரியனைக் கண்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுகதையின் விடைகள்

1. உள்ளங்கை
2. தலைமுடி / மரம்
3. மீன்
4. தராசு
5. அன்னாசி
6. நெருப்பு
7. சிலந்தி
8. வெண்டிக்காய்
9. முட்டை
10. சீப்பு
11. வானொலி
12. தொலைபேசி
13. பட்டாசு
14. வெண்டிக்காய்
15. கண்
16. கப்பல்
17. நுளம்பு
18. அம்பு
19. எறும்பு
20. நாணயக்குற்றி
21. அலாரம்
22. செருப்பு
23. இளநீர்
24. வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு
25. கிளி
26. மேகக்கூட்டம்
27. மெழுகுதிரி
28. தேன்கூடு
29. தூக்கணாங்குருவி
30. காளான்
31. அப்பளம்
32. வானம், நட்சத்திரங்கள்
33. தீக்குச்சி
34. புடலங்காய்
35. தேய்பிறை
36. சூரியன்
37. நெற்பயிர்
38. இலை
39. தேங்காய்
40. வாழைமரம்
41. முத்திரை
42. உலகவரைபடம்
43. நிழல்
44. முதலை, உடும்பு, பல்லி
45. கடிதம்
46. காற்று
47. தலையணை
48. புகையிரதம்
49. வியர்வை
50. நண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 51. தவளை | 52. ஒட்டகம் |
| 53. பஞ்சு | 54. சந்திரன் |
| 55. பெயர் | 56. தக்காளி |
| 57. தும்பிகை | 58. மின்விசிறி |
| 59. தாள் நாணயம் | 60. விறகு |
| 61. மீன் | 62. தேயிலை |
| 63. கண் இமை | 64. பந்து |
| 65. நாற்காலி, மேசை | 66. வெங்காயம் |
| 67. கடிகாரம் | 68. கரும்பலகை |
| 69. குடை | 70. மேகம் |
| 71. நட்சத்திரங்கள் | 72. தீக்குச்சி |
| 73. நகம் | 74. குதிரை |
| 75. நெற்கதிர் | 76. புத்தகம் |
| 77. ஆடி முடிவதால் | 78. பற்கள் |
| 79. கிணறு | 80. மூச்சு |
| 81. கண்ணாடி | 82. புல்லாங்குழல் |
| 83. சோளக்கதிர் | 84. உழுந்து |
| 85. மிருதங்கம் | 86. சூரியன் |
| 87. சாம்பிராணி | 88. வயது |
| 89. பலூன் | 90. கைரேகை |
| 91. புகை வண்டி | 92. கண் இமை |
| 93. சிலந்தி | 94. இடியப்பம் |
| 95. பட்டம் | 96. நாக்கு |
| 97. பலாப்பழம் | 98. திராட்சைப்பழம் |
| 99. பம்பரம் | 100. ஐஸ்கட்டி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. 1. அ 2. ஆ 3. ஆ 4. இ 5. ஆ

02. 1. அப்பா / பிதா 2. கருத்து
3. மிகுந்த மகிழ்ச்சி 4. புத்திசாலித்தனம் / கெட்டித்தனம்
5. கடினம் 6. ஆணை 7. அறிவுரை
8. எண்ணம் 9. பிறர்க்குதவி
10. பாராட்டினார் 11. ஐயம் 12. சாந்தம் 13. நிதானம்
14. நையாண்டி 15. உணவு

03 1. தெனாலிராமன் 2. நஸ்ருதீன் அவந்தி
3. புருட்கோவ் 4. அந்தரே 5. எம்.எம்.பி.மொஹிதீன்

04. 1. பணியாரம் 2. நிரூபித்தான் 3. பரோபகார 4. உற்சாகமாக
5. எக்களிப்போடு

05. தரப்பட்ட வாக்கியங்களை உறுப்பாக எழுதுங்கள்.

06. அந்தரே, முகத்தை அனுதாபத் தோரணையில் சுளித்துக்கொண்டே "ஓ, அதையா கேட்கிறீகள்! பசியோடிருந்த ஒரு பிள்ளைக்குப் பயன்படச் செய்தேன்" என்றான்.

07. 1. எம்.எம்.பி.மொஹைறதீன்
2. பணியாரம் ஒன்று, பணியாரம் இரண்டு, ஒன்றும் இரண்டும் மூன்று பணியாரம் என அந்தரே நிரூபித்தான்.
3. எங்கள் வீட்டில் நான், நீ, உன்தாய் ஆகிய மூவரும் இருக்கிறோம். நீ கணக் கிட்ட மூன்று பணியாரங்களையும் மூன்று பேரும் பிரித்துச் சாப்பிடு வோம். இது உன் அம்மாவுக்கு இது எனக்கு மூன்றாவதை நீ சாப்பிடு என்று கூறியதும் அந்தரே தலை குனிந்தான். இவ்வாறாக அந்தரேயின் சாமர்த்தியத்தை தந்தை வெற்றி கொண்டார்.
4. கதைகள் சொல்லி நேரத்தை இன்பமாகக் கழித்தார்.
5. பொல்லாத்தனம் செய்கிற மாட்டைக் கட்டிப் போடவேண்டும் எனக் கூறினாள்.
6. அந்தரே
7. 1. இரண்டு பணியாரங்களை வைத்துக்கொண்டு மூன்று எனக் கூறியமை.
2. திருமண வீட்டில் மாடு போல் கதைக்காது இருக்க வேண்டும் என்று தாயார் கூறியதற்காக மாடுபோல் நின்று அங்கிருந்தவரை முட்டியமை.
3. தாயார் செய்துவைத்த சீனிரொட்டியை உண்ட பின் பசியோடிருந்த பிள்ளைக்குப் பயன்படச் செய்ததாகக் கூறியமை.
8. அந்தரேயின் தாயார்
அந்தரே
9. தெனாலிராமன்
அந்தரே, புரட்கோவ், நஸ்ருதீன் அவந்தி
10. 1. அந்தரே மிகுந்த புத்திசாலித்தனம் கொண்ட சிறுவன்.
2. சிறுவயதிலேயே மிகுந்த துடுக்குத் தனம் நிறைந்தவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. தனது சாமர்த்தியப் புத்தியால் பிறரை வெற்றி கொண்டவன்.
4. குறும்பு செய்தாலும் தாயின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடப்பவன்.
5. பொய் கூறாத நற்பண்பு கொண்டவன்.

11. அந்தரேயின் சுட்டித்தனங்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என எண்ணி கண் டிப்புடன் அவனை வளர்ப்பவள்.

08. 1. நாம் பரோபகார சிந்தை உடையவர்களாக இருக்க வேண்டும்.
2. தெனாலிராமன் மிகுந்த சாமர்த்தியம் உடையவன்.
3. அந்தரே தன் குறும்புத் தனங்களால் பிறரை மகிழ்விப்பான்..
4. நாடோடிக் கதைகளில் இன்றும் வாய்மொழியாகப் பேணப்பட்டு வருகின்றன.
5. அந்தரே தான் கூறிய கூற்றுச் சரியென நிரூபித்தான்.
6. குமார் கணினியின் பிழையைத் திருத்துவதற்குப் பல உத்திகளைக் கண்டறிந்தான்.
7. வீட்டிற்கு வந்த விருந்தினர்களுக்கு விருந்து கொடுக்கப்பட்டது.

09. 1. சாந்தம் 2. துணிவு 3. சோர்வு 4. முடிவு
5. சிறுமை 6. குழப்பம்

பாடம் – 2

01. 1. 1 2. 2 3. 3 4. 3 5. 3
6. 2 7. 4 8. 1 9. 4 10. 2

02. 1. மேடு 2. நிலத்தின் வெப்பம் 3. சோலை
4. கடல் 5. ஆறு

03. 1. மலையும் மலைசார்ந்த நிலமும் குறிஞ்சி நிலம் ஆகும்.
2. விவசாயிகள் மழையை நம்பிப் பயிர்செய்கின்றனர்.
3. நாங்கள் சுற்றுலாச் சென்றபோது ஏரியில் குளித்து மகிழ்ந்தோம்.
4. குட்டித்தம்பி படிகளில் மெதுவாக ஏறினான்.
5. இறைவழிபாடு எம்மனதுக்கு அமைதியைத் தரும் / அப்பா தோட்டத்திற்கு நீர் இறைத்தார்.
6. நள்ளிரவில் வீதியில் வாகனங்கள் இரைந்தன.
7. தேனும் தினைமாவும் சுவையான உணவு ஆகும்.
8. திணை உயர்திணை, அஃறிணை என வகைப்படுகிறது.
9. மீனவர்கள் ஆழிக்குச் (கடல்) சென்று மீன் பிடித்தனர்.
10. பாடசாலை விட்டு வரும் வழியில் களைப்புடனிருந்த முதியவரைக் கண்டேன்.
11. உயிரினங்கள் சுவாசிப்பதற்குச் சுத்தமான வளி இன்றியமையாதது.
12. குழந்தை நிலத்தில் விழுந்ததும் வலியால் அழுதது.

04. 1. கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை
2. மலரும் மாலையும், குழந்தைச் செல்வம், கவிமணியின் உவமைகள், உமர் கையாம்பாடல்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஆறு மலர்கள் நிறைந்த சோலையில் விளையாடியது.
4. ஆறு பெரும் காடும் செடியும் கடந்து வந்தது.
5. நிலத்தின் வெப்பம் தீர்த்தது, ஏரி குளங்களை நிரப்பியது, தரிசுநிலத்திலும் நீர் இறைத்தது, நகர்ப்புறத்தில் குழாய் நீராய் பயன்பட்டது.
6. வெப்பமான நிலத்தில் கண்டது.
7. ஆறு வரும்போது மாங்கனி, தேங்கனி, வாசமலர்கள், இனிய கரும்புகள், தேன், திணை என்பவற்றைக் கொண்டுவந்தது.
8. தனது இறைவனாகிய கடலைக் காண வந்ததாகக் கூறுகின்றது.
9. கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை
நவாலியூர் சோமசுந்தரப்புலவர்
அழ. வள்ளியப்பா
10. இனிமையான கரும்பு ஆயிரம் என்பதாகும்.

05. 1. குதித்து வந்தது 2. நீர் இறைத்தது 3. நிரப்பி வந்தது
4. சுற்றிப் பார்த்தது 5. விளையாடி வந்தது

06 1. , 2. ! 3. ? 4. . 5) :

07. 1. ஆகா! ஆறு அழகாகப் பாய்ந்து வருகிறது.
2. நீங்கள் சுற்றுலாச் செல்கிறீர்களா?
3. இல. 05,
முதலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு - 01.
4. அன்புள்ள அம்மா, நான் நலம் நீங்கள் சுகமாக இருக்கிறீர்களா?
5. ஆறின் பயன்: ஆறானது மக்களின் பல்வேறுபட்ட தேவைகளுக்குப் பயன்படுகின்றது.
6. நிலம், நீர், காற்று, ஆகாயம் போன்றவை இயற்கை வளங்கள் ஆகும்.
7. மன்னன் வாழ்க!

08. 1. 247 2. தீ, பூ, வா, போ
3. உண், படி, வா 4. ஃ
5. கை, தே, 6. முற்றுப்புள்ளி - ., காற்புள்ளி - ,
7. மேசை, கதிரை, மனிதன் 8. நவாலியூர் சோமசுந்தரப் புலவர்
9. நிலம், நீர், காற்று, ஆகாயம் 10. ஆறு, பசு, தாலாட்டு

09 1. நவாலியூர் சோமசுந்தரப் புலவர், தங்கத்தாத்தா
2. கூலி வாங்காமல் நித்திரை செய்யாது கண்ணிமைக்காது காவல் புரிகின்றது.
3. தலையில் மஞ்சள் நிறத் தலைப்பாகை, கட்டியிறுக்கிய சட்டை, கைகளில் அம்புவில்லோடு தோற்றமளித்தது.
4. சிங்கத்தின் தோலைப் போர்த்த கழுதைகள் போன்று போலிவேடம் தரித்தவர்களைக் கண்டு ஏமாந்து போகாத அறிவைப் பெற்றதாகக் கூறப்படுகிறது.
5. தலைப்பாகை வட்டமான பெரும் பூசணிக்காய்க்கு ஒப்பிடப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. 1. துன்பம் 2. நம்பிக்கை 3. தடை 4. பயம் / பீதி 5. செயல்

02. 1. நாணயம் 2. புகழ் 3. உடைமைகளை
4. பேணுதல், கடமை 5. கண்காட்சி

03. 1. அதர்மம் 2. இகழ் 3. நண்பர் 4. தமர்
5. ஆதரவு 6. துணிவு 7. பொதுநலம் 8. கடினம்
9. மறம் 10. மகிழ்ச்சி (தரப்பட்டுள்ள எதிர்க்கருத்துச் சொற்களை வைத்து வாக்கியம் அமையுங்கள்)

04. 1. திருலோகசீதாராம், இலக்கியப்படகு
2. உடல், உள்ளம், உயிர். உடலை நோய் வராமலும், உள்ளம் வேதனைப்படாமலும், உயிரை நீண்டகாலம் தங்கியிருக்கும்படியும் பாதுகாக்க வேண்டும்.
3. எமது தாய், தந்தையருக்கும் ஆசானுக்கும் கடமையாற்ற வேண்டும்.
4. சுயநலம் தவறானது என எண்ணம் உள்ளது.
5. நாம் பெற்ற இன்பத்திற்கு அல்லது நன்மைக்காக நாம் செலுத்தியாக வேண்டிய விலை ஒன்று இருந்தால் அதுவே கடமை ஆகும்.
6. வாங்கிய கடனை ஒழுங்காகத் திருப்பிக் கொடுத்தால் தான் மறுபடியும் வரவு செலவு செய்வதற்குத் தகுதியானவர்களென்று நம்பச் செய்யமுடியும்.
7. சிறிய தொகைகளைத் திருப்பிக் கொடுத்து நம்பிக்கையைப் பெருக்கி பெரிய தொகையைக் கடனாகப் பெற்று திருப்பிக் கொடுக்காது ஏமாற்றுபவர்களும் இருக்கிறார்கள் என்பதை ஆசிரியர் உணர்த்துகிறார்.
8. பிறருக்கு ஒழுங்காகக் கடமைகளைச் செய்கிறவன் புகழும் மதிப்பும் பெறுவதுகூட தன்சுகம் பொருட்டாகத்தான்.
9. ஒவ்வொருவரும் பிறருக்குத் தீங்கு வராமல் தத்தமது நலனைக் கவனிக்கும்போது ஊர் முழுவதும் நலமாக அமைவதால் சுயநலம் மேலான தத்துவமாகவே காணப்படுகிறது.
10. ஒருவரது சுயநலம் பிறருக்கு ஆபத்தாக அமையும் என்ற சந்தேகம் / அச்சம் ஏற்பட இடம்கொடுத்து விட்டால் அவருக்கு எதிரான பகைவர் தோற்றம் பெறுகிறார். தாம் சுகப்படுவதைச் சகித்துக் கொண்டுள்ள நம்மைச் சூழ்ந்துள்ள யாரும் நன்மை பெறுவதில் எந்தவொரு எதிர்ப்பும் இல்லை என்பதை சொல்லாலும் செயலாலும் தெளிவுபடுத்தும்போது இப்பகைமையைப் போக்கலாம்.
11. பிறர்நலம் பேணுதல் மனிதனின் தலையாய கடமையாகும்.
12. தன்னைக் கட்டுப்படுத்துதல், பிறர் துன்பங்களைத் தீர்த்தல்,
பிறர் நலத்தினை வேண்டுதல்.
உலகமெலாம் காக்கும் ஒருவனாகிய இறைவனைப் போற்றுல் ஆகியன யாவர்க்கும் பொதுவான கடமைகளாகும்.
13. அறம், பொருள், இன்பம், வீடு
14. புகழ் வரும், சுகம் வரும், சுயநலம் பெருகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. பிறரது பிள்ளையை உணவு கொடுத்து வளர்க்கும்போது தமது பிள்ளை தானாக வளரும் என்பதாகும். அதாவது கணவனின் குடும்பத்தவர்கள் அக்கணவனின் மனைவிக்கு நன்றாக உணவுகொடுத்துப் பராமரிக்கும் போது அவள் வயிற்றில் வளரும் அவர்களது குழந்தை நன்றாக வரும் என் பதாகும்.

05. 1. கடற்கரையில் நின்றபோது அலைகள் எமது கால்களை தழுவிச்சென்றன.
